


# METHODIST GIRLS' COLLEGE
## TRINCOMALEE




# AWARDS DAY
# 2012

UTMOST FOR THE HIGHEST

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MOTTO

**'UTMOST FOR THE HIGHEST'**

## மகுடவாசகம்

"உச்ச உயர்வை அடைய முழு முயற்சி"

## VISION

**'A COMMUNITY WITH SKILLS, VALUES, KNOWLEDGE AND TOTAL PERSONALITY'**

## தூரநோக்கு

"அறிவு, திறன், மேம்பாடுகளுடன்
பூரண ஆளுமையும் கொண்ட சமுதாயம்"

## MISSION

Providing learning facilities guidance and training to students to face the challenges of the 21st century to go out as citizens with values and skills together with a total personality for the development of their community.

## பணிக்கூற்று

"21ம் நூற்றாண்டிற்கான சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களுக்கு கற்றல் வசதிகளையும், வழிகாட்டல்களையும், பயிற்சிகளையும் அளித்தல் மூலம் பெறுமதிமிக்க, திறன்கள் நிறைந்த, பூரண ஆளுமையுடையவர்களாக வெளியேற்றி தமது சமூகத்தின் அபிவிருத்திக்கு உழைப்பவராக்கல்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SCHOOL HYMN

We build our school on Thee O Lord
To Thee we bring our Common need,
The Loving heart the helpful Word
The tender though the kindly deed
With these we pray
Thy Spirit May
Enrich and bless our school always.
We work together in thy Sight,
We live together in thy love,
Guide thou faltering steps a-right,
Dear lord we pray
Thy spirit may
Be present in our school always.
Hold thou each hand to keep it just
Touch thou our lips and make them pure
If thou art with us lord we must
Be faithful friends and comrades sure
Dear lord we pray
Thy spirit may
Be present in our school always.
We change but thou art still the same
The same good Master, Teacher, Friend
We change but lord we bear thy name
To journey with it to the end
And so we pray
Thy spirit may
Be present in our school always.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



“தொலையறிவு (Vision) அற்ற இடுபணிவு(Task) சலிப்பூட்டும் ஒரு இடுபணியாகும். இடுபணி அற்ற தொலையறிவு ஒரு கனவாகும். ஆனால், தொலையறிவோடு கூடிய ஒரு இடுபணி வெற்றியின் பணியாகும்.”

இக்கூற்றுக்கமைய எத்தொலையறிவோடு கூடிய ஒரு இடுபணியின் வெற்றிப் படிக்கல்லாக, மெதடிஸ்த மிஷனரிமார்களினால் இக்கல்வி நிலையம் 1819ல் ஆரம்பிக்கப்பட்டதோ, அதே தொலையறிவோடு இன்றும் வெற்றியின் வீறுநடை போடுகின்ற திருகோணமலை, மெதடிஸ்த மகளிர் கல்லூரியை மனமார வாழ்த்தி நிற்கின்றேன்.

மிஷனரிப் பாடசாலைகளின் வரலாற்றையும் பழமையையும், பாரம்பரியத்தையும் மறைக்கவும் மாற்றவும் முற்படுகின்ற சமகால அடிப்படைவாதம் கொண்ட கல்விமான்கள் மத்தியில், அவ்வரலாறு எப்போதும் பேணிப்பாதுகாக்கப்படவும் வளர்க்கப்படவும் வேண்டும் என்று அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற அதிபர் திருமதி.உ.ஜோதிநாதன் பெருந்தகையை வாழ்த்தி நிற்கின்றேன்.

ஒவ்வொரு நிலையத்தினதும் விழாக்கள் அந்நிலையத்தின் அபிவிருத்தி சார்ந்த திறனாய்வுகளை (Constructive Criticism) மையமாகக் கொண்டது. அவ்வாறான விழாக்காணல்களே எதிர்கால வெற்றிக்கு நம்மை வழிநடத்தும் என்றால் அது மிகையாகாது. அந்த வெற்றிப் பாதையில் இன்றும் இக்கல்லூரியை நடாத்திச் செல்கின்ற ஆசிரியர் குழாம், சிற்றூழியர்கள், எனதன்பான மாணவச் செல்வங்கள் அனைவருக்கும், மெதடிஸ்த திரு அவையின் சார்பில் நன்றிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கிறேன்.

இறையாசி என்றும் நம்மோடு தங்கட்டும்.

**அருட்பணி. சுஜிதர் சிவநாயகம்**
முகாமைக்குரு
மெதடிஸ்த திரு அவை
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Felicitation Message



I am extremely happy to send this message on the occasion of the annual awarding ceremony and launching school magazine of Methodist Girls' Collage, Trincomalee -2012 .

I have come to know that the principal and teachers have worked very hard to uplift the standard of education and achieved educational goals. The school has attained the remarkable achievements in the GCE Ordinary level examination, GCE Advanced level examination and Grade 5 Scholarship examination and co curricular activities. These achievements have been highly appreciated by all.

I congratulate the principal and her staff for their commitment, dedication, loyalty and joint efforts towards the development of school as a fine team for the betterment of children in this region.

**N.A.A. Pushpakumara**
Secretary
Ministry of Education, Cultural Affairs,
Land &Land Administration Transport Authority,
Eastern Province



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from Sundaram Divakalala



It is with great pleasure that I contribute this message to felicitate the Annual Prize Giving of T/Methodist Girls' College, Trincomalee.

T/Methodist Girls' College, Trincomalee is situated in the heart of the town but the children come from poor families and the parents are under poverty line and daily bread winners. The home environment is not conducive for the promotion of education and also hardly any people to encourage them in education.

The background of the school was realized by me when I had been the Secretary of Education for five years. The proper guidance and perseverance of the Ministry and the Departmental staff, and the past and the present principals with the co-operation of the staff this school is providing exemplary services in education and facilitate the children to learn and develop the leadership which leads to a society with balanced personality.

This is in a way keeping the International Motto "Education for all", "Equity in Education" and the National Motto "Quality of Education towards the Social Development". The instrumental roles of schooling will help individuals to achieve their own economic, social and cultural objectives and help society to be better protected if the education is of high quality.

Today, the role of a school is not only to pursue academic excellence but also to motivate and empower its students to be lifelong learners, critical thinkers and productive members of an ever changing global society. The talents, skills and abilities of each student need to be identified, nurtured and encouraged so that they are able to reach greater heights. Students need to be provided with a platform to think, express and exhibit their skills. This enables the child to develop personality and equips the child to face the challenges of life.

*At this juncture I express my good wishes to the principal and the school community.*

In teaching others we teach ourselves. - **Proverb**

**Mr.Sundaram Divakalala**
Former Secretary, Ministry of Education,
Cultural Affairs & Sports,
North East Province



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



புனித பூமியாம் திருகோணமலையில் புகழ் பூத்து நிற்கும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வியின் பிரதான இலக்கு பிள்ளைகளின் உள்ளார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்தலாகும். கல்வியை வழங்கும் பிரதானமான நிறுவனமாக விளங்குவது பாடசாலையாகும். நிகழ்கால தேவைகள் கருதிய இலக்குகளுடன் மாணவனின் பூரண வளர்ச்சிக்கு வித்திடுகின்றது. முழுமையான கலைத்திட்டத்தை ஒழுங்கமைத்து வழங்குகின்றது. பிள்ளைகள் பாடசாலையிலும் வெளியிலும் பெறும் கற்றல் அனுபவங்களே இவற்றிற்கான வழிகாட்டிகளாகும்.

கல்வி மதிப்பீட்டிற்கு பிரதான பங்காற்றிய பெஞ்ஜமின் புலுமஸ் (Benjamin Blooms) அவர்களின் வகுப்பு தொகுப்பு முறையியல் (Taxonomy) கருவூலமாக கொண்டதே பாடசாலை பரிசளிப்பு வைபவங்கள். மாணவர்களது கற்றல் அனுபவப் பிரதிபலிப்புக்களை காட்டுபவை. அதிபர், ஆசிரியர்களது ஊக்குவிப்பானது மாணவர்களின் ஆற்றுகையை வளப்படுத்தி உயர் நிலைக்கு இட்டுச் செல்கின்றது. அவற்றை தக்க வைத்துக் கொள்வதிலும் மேன்மேலும் வளப்படுத்துவதிலும் பரிசளிப்பு விழாக்கள் பெரும்பங்களிப்புச் செய்கின்றன. வழங்கப்பபடும் வெகுமதிகள் மாணவனையும் பெற்றாரையும் மகிழ்ச்சிப்படுத்துகின்றன. எனவேதான் பரிசளிப்பு விழாக்கள் பெற்றார் விழாக்களாக கொண்டாடப்படுகின்றன. பாடசாலைகளும் பிள்ளை நேயப் பாடசாலைகளாகின்றன.

மெதடிஸ்த பெண்கள் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழாக்களை கிரமமாக நடாத்துவதானது பாடசாலைகளின் சீரிய வளர்ச்சிப்போக்கினை கோடிட்டு காட்டுகின்ற ஓர் சிறப்பு அம்சமாகும். அதிபர், ஆசிரியர், பாடசாலைச் சமூகம் ஆகியவற்றின் இணைந்த செயற்பாடுகளே இதற்கு காரணமாகும். உயர்கல்வித் தராதரங்களும், தொழிற் தகைமைகளும் பெற்ற ஆசிரியர்கள் இப்பாடசாலையில் இருப்பதும் ஓர் வரப்பிரசாதமாகும்.

இப்பாடசாலையின் அதிபர் திருமதி உ. ரோகினி ஜோதிநாதன் அவர்கள் கல்வி முகாமைத்துவ துறையில் சிறப்பு தேர்ச்சி பெற்ற ஒருவராவார். தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி முகாமைத்துவ கற்கை நெறியில் அதிசிறப்பு தேர்ச்சி பெற்றவர். இவரின் தந்திரோபாய திட்டமிடல் மற்றும் ஆசிரிய திறன் விருத்தி நடவடிக்கைகள் பாடசாலையின் நிலைத்த வளர்ச்சிக்கும் நுண்கல்வியறிவுத் திறத்திற்கும் இட்டுச் சென்றுள்ளன.

மெதடிஸ்த பெண்கள் பாடசாலையானது புதிய சிந்தனைகளை நடைமுறைப்படுத்தி மேம்பாடு கண்டுவருவது மகிழ்ச்சியை தருகின்றது. இப்பாடசாலை மென்மேலும் உயர்ந்து பல ஏற்றங்களைக் காணவேண்டும், உச்சங்களைத் தொடவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**க.சாம்பசிவம்**

கல்வி முகாமைத்துவ நிபுணத்துவ ஆலோசகர

EKSP



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message of Felicitation



It gives me great pleasure to send this felicitation message to the Souvenir that is to be published at the Awarding Ceremony of Methodist Girls' College which was graded as the 1st. 1AB school with the hostel facilities in Trincomalee district.

The publication of this magazine is not only bringing out the talents of children but also to prepare them to face the challenges due to the global changes. This College continues to make progress in curricular, co-curricular and extra curricular activities which is relevant in acquiring considerable number of winning awards in provincial and national level.

I extend my sincere appreciation to those who have taken active part in the development of this College.


I congradulate the principal and her active staff for their dedication and joint efforts towards the upliftment of this institution. I wish God's mighty blessings be upon them for more success and achievements in future.

**A.M.E. Paul,**
Provincial Director of Education,
Provincial Education Office,
Eastern Province



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



தி/மெதடிஸ் பெண்கள் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வின் வரலாற்று ரீதியான ஆவணமாகவும் பாடசாலையின் பெருமையை. மாணவர்களின் சாதனைகளை அவர்களது பெற்றோர்கள் மத்தியிலே

**"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க்கு எல்லாம் இனிது"**

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க பறை சாற்றும் சிறப்பு மிகு விடயங்களைத் தாங்கி வருகின்ற இம்மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் உள மகிழ்வடைகின்றேன்.

தரமான சமூகத்தை உருவாக்கும் பணியிலே நகர்ப்புற மாணவர்கள் மட்டுமல்ல, கிராமப்புற மாணவர்களையும் உள்வாங்கி கல்வியறிவுடன் மட்டும் நின்று விடாது. அது மட்டும் போதாது இணைப்பாடவிதானச் செயற்பாடுகளினூடாகவும் பெற்றுக் கொள்கின்ற திறன்கள், மனப்பாங்கு பயிற்சிகள் அனைத்தும் இணைந்து தான் நல்ல தொரு சமூகப் பிரஜையை தோற்றுவிக்கலாம் என்ற நல்ல செய்தியை சமூகத்திற்கு தெரியப்படுத்துகின்றதொரு சிறப்பு மிக்க நிகழ்வாகவும் இதனைப் பார்க்க முடிகின்றது.

இந் நிகழ்வு கோலாகலமாக நிகழ்வதற்கு காரணகர்த்தாக்களாக விளங்குகின்ற ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் பகுதித்தலைவர்கள், பிரதி அதிபர், அதிபர் ஆகியோருடன் இணைந்து செயற்பட்டு வருகின்ற பாடசாலைச் சமூகத்தினருக்கும் எனது வாழ்த்துக்களும், இறைவனது ஆசியும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**ந.விஜேந்திரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Felicitation Message



It is with pleasure that I pen a few lines to this magazine, initiated by Mrs.U.Jothinathan, the Principal of Methodist Girls' College, Trincomalee to publish the magazine for the Awarding ceremony 2012.

The institution has become conspicuous by the performance by its students, who took part in the purpose of the awarding ceremony is to encourage the students to improve their interest in studies further and further and also to appreciate the students for their best performances in their studies and the efforts, hardwork they have put in towards in Studies as well as in other sports and cultural, school curricular and co – curricular activities in the recent past.

Congratulations on all your academic, artistic, and athletic achievements. I know the standard of Methodist Girls' College is very high. It's a great thing that a few years back, one of your graduates presented herself for an interview for a position at my hospital in the United States. These are very competitive positions and only the best and the brightest are selected. You therefore can do well anywhere in the world Continue to work hard and achieve higher level. I look forward to meeting some of you in the US or Trinco.

I wish you all

**Naresh T. Gunaratnam MD**
Director of Research
Huron Gastro
President Michigan GI Society
U.S.A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message of Felicitation



I am honoured to have the opportunity to give this message in support and appreciation to Methodist Girls' College on the day of its awarding ceremony 2012.

This school which was established more than one hundred and eighty years by the Methodist missionaries from England has blossomed and is spreading its fragrance as the years go by.

At this moment I must mention that I was one of the staff of Methodist College in 1973 when Mrs.M. Arumainayagam was the principal and Mrs. E.R. Gunaretnam who followed her. During my time here and even thereafter I have heard and seen and followed the achievements of the school both in studies and extra curricular activities.

I congratulate the principal Mrs. U. Jothinathan whom I have known from my school days as well as a teacher at St. Mary's College where both of us were teaching together. I admire her vigour and dedication to uphold the school at the same time appreciate the staff who joining, hands give their fullest support to their principal and the care they show towards students' upliftment.

The past students of this school and the School Development Committee and all the well wishers should be mentioned at this event for their untiring support for the school and the principal Mrs. U. Jothinathan.

I congratulate all the students who are being awarded today for their achievements.

**Mrs. M.T. Thomas**

Secretary

School Development Committee



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரி ஏறக்குறைய 193 ஆண்டு கால சேவையை நிறைவு செய்யும் இவ்வேளையில், இப்பாடசாலையின் பரிசளிப்பு விழா மலரிற்கு கருத்துக் கூறும் வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு பெருமை அடைகின்றேன். கடந்த சில ஆண்டுகளில் மட்டுமல்லாது இவ்வாண்டிலும் கூட பாடசாலை மாணவர்கள் பல சாதனைகளைப் புரிந்துள்ளார்கள். தேசிய உற்பத்தி திறன் போட்டியில் 2ம் இடத்தையும், ஆரம்பப்பிரிவில் முதல் நிலையினையும் பெற்றுள்ளார்கள். தேசிய ரீதியிலான பலபோட்டிகளிலும் மாணவர்கள் பங்கு கொண்டு சாதனைகள் புரிந்துள்ளார்கள். வகுப்புக்களின் கல்வி அடைவுப் பெறுபேறுகளிலும் வளர்ச்சி கண்டுள்ளார்கள்.

பாடசாலை வளர்ந்து வருகின்றது என்பது இன்றைய சமூகக்கணிப்பாக உள்ளது. பாடசாலையை வளர்த்துக் கொண்டு வரும் அதிபர் அம்மணி உரோகினிதேவி ஜோதிநாதன் அவர்கள் மிகுந்த கடமையுணர்வுடன் செயலாற்றி வருகின்றார். தேவை உள்ளவர்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்து வருகின்றார். எம்போன்ற வெளி மாகாண பாடசாலைகளுக்கும் அவ்வப்போது வழங்கும் உதவிகளிற்கும் நன்றி கூறுவது கடமையாகும். செயலூக்கம் மிகுந்த அதிபருடன் இணைந்து பணியாற்றும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், பழைய மாணவர் சங்கத்தினர், பெற்றோர் நலன் விரும்பிகளும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர். எல்லோரது கூட்டு வெற்றியாக பல்வேறு நிகழ்வுகள் கல்லூரியில் நடைபெறுவதனை நாம் தூரதேசத்தில் இருந்து ஊடகங்கள் வாயிலாக கண்டும் கேட்டும் வருகின்றோம். குறிப்பாக மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற மாணவ தலைவிகளுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வைப் பிரதிபலிக்கும் படங்கள், செய்திகளை பத்திரிகைகளில் பார்த்து பெருமை அடைந்தேன். கல்லூரியின் அனைத்து நிகழ்வுகளும் இவ்வாறே பிரமாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை. கல்லூரி மேலும் பல சாதனைகளைப் பெற வேண்டுமென வாழ்த்துவதோடு எனக்கு இச்சந்தர்ப்பத்தை அளித்த பாடசாலை சமூகத்திற்கும் நன்றி கூறுகின்றேன்.

**திருமதி. R. கனகசிங்கம்,**
அதிபர்,
மட்/மகாஜனாக் கல்லூரி,
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



இலங்கைத்திருநாட்டின் பழம் பெருமை மிகு திருகோணமலைதனில் தன்னிகரற்ற பழம்பாரம்பரியத்துடன் ஒளிருகின்ற மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் பழைய மாணவர்களில்ஒருவராகிய நான், வேறொரு பழைய மாணவியின் தலைமைத்துவத்தின் கீழ் வீறுநடை போட்டு தனக்கென தனித்தடம் பதித்து வருகின்ற நமது பாடசாலையின் பரிசளிப்பு விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

இக்கல்லூரி மாணவர்களின் தேவைகளைத் தேடி அறிந்து அவற்றை நிறைவேற்றிக் கொடுப்பதிலும், விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினப்போட்டி போன்ற செயற்பாடுகளிலும் மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் எமது கல்லூரியின் மாணவிகள், திருகோணமலையில் மட்டுமன்றி இலங்கையின் பல பாகங்களிலும் தமது தடங்களைப் பதிப்பதற்கு அல்லும் பகலும் அயராது அதிபருடன் ஆசிரியர்களும் தோளொடு தோள்நின்று உழைத்து வருகின்றனர். இச்சிறப்புகளை உடைய இப்பாடசாலைக்கு வாழ்த்துக்களை வழங்குவதில் நான் பெருமையும் மகிழச்சியும் அடைகிறேன்.

மேலும் இப்பரிசளிப்பு விழாவில் பரிசுபெறும் மாணவிகள் தொடர்ந்து பல்வேறு வெற்றிகளில் பரிசினைப் பெற்று கல்லூரிக்கும் நாட்டிற்கும் நற்பெயரை பெற்றுத்தர வேண்டும் என வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

அத்துடன் இப்பாடசாலையின் அபிவிருத்திக்குழு, அதிபர் ஆசிரியர், மாணவர்களுடன் சேர்ந்து பாடசாலையின் அபிவிருத்திக்கு ஆற்றும் நற்பணிகள் மேலும், மேலும் தொடர்ந்து செல்லவும், பழைய மாணவிகள் மற்றையவர்களுக்கு முன்மாதிரியாக, அதிபர், ஆசிரியர் மாணவர்களுடன் என்றும் நட்புறவோடு பாடசாலை உயர்வுகளுக்கு பங்கு பற்றி ஆற்றும் செயற்பாடுகள் மேலும் சிறப்புப்பெற எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.


வாழ்க தமது பணி
வளர்க எமது மாணவர்கள்
ஓங்குக எமது கல்லூரி சிறப்புக்கள்
என கூறி மேலும் மேலும் வாழ்த்துக் கூறி விடைபெறுகிறேன்.
* நன்றி *

**திருமதி. இராஜலக்சுமி இரவிந்திரகுமார்**
ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்,
செயலாளர், பழைய மாணவர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



எமது மெதடிஸ்த மகளிர் கல்லூரி வரலாற்றுசிறப்புகளையும், நினைவால் மட்டுமல்ல, சாதனைகளையும் நிகழ்த்தி நூற்றாண்டுகளையும் கடந்து கல்வி நடவடிக்கைகளுடன், இணைப்பாடவிதானங்கள், விளையாட்டு, சமூக செயற்பாட்டில், ஏனைய முன்னணி கல்லூரிகளுக்கும் நிகராக செயற்பட்டு வருகிறது என்றால், கல்லூரியின் அதிபர் திருமதி.உ.ஜோதிநாதன் அவர்களது அர்ப்பணிப்புச் சேவையும் சீரிய நிர்வாக கட்டமைப்புகளுடன் கல்லூரி நிர்வாகத்துடன் கல்லூரி சமூகம் இணைந்து செயல்படுவதும் காரணங்கள் ஆகும். இன்றைய நவீன உலக போக்கோடு எமது கல்லூரி மாணவர்களையும் இணைத்து எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலுடைய மாணவ சமுதாயத்தை மாற்றியமைத்து அவர்களுக்கு ஏற்ற தூர நோக்குத்துறைகளை தெரிவு செய்து வழிகாட்டுதல் எமது கல்லூரியின் அதிபர் திருமதி.உ.ஜோதிநாதன் அவர்களது ஆளுமையுடன் கல்லூரி நிர்வாககட்டமைப்புடனுமான மாணவ சமுதாயத்தை கல்வி சமூக விழுமியங்களுடன், இணைப்பாடவிதானங்கள் விளையாட்டுகளில் அவர்களது திறமைகளை வெளிக்கொணர அயராது பாடுபடுகின்றனர். கல்லூரி நிர்வாகத்தினருக்கு பக்க பலமாக பாடசாலை அபிவிருத்தி குழு எப்போதும் இருந்து தனது பங்களிப்பை திறம்பட செய்து கொண்டுவருகின்றது.

பாடசாலை அபிவிருத்தி குழுவின் செயற்பாட்டுக்கும், கல்லூரி நிர்வாகத்தினருக்கும் கல்வித் திணைக்களம் உதவியாகவும், பலமாகவும் இருந்து வருகின்றது. சாதனைகளை தன்னகத்தே கொண்டுள்ள இக்கல்லூரிச் சமூகத்தினால் வெளியிடப்படும் சிறப்புக்களை கொண்டுள்ள இச்சஞ்சிகையில் வாழ்த்து செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வு கொள்ளுவதுடன், மேலும் பல்வேறு வகையான சாதனைகளை எம் மாணவர்கள் சாதிக்கவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

**திரு. G. கயிலாயநாதன்,**
உதவி – செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Felicitation Message

**Mrs.U.Jothinathan**
Principal,
T/Methodist Girls' College


I am very happy to deliver my felicitation message to this Prize giving ceremony and launching of the magazine of Methodist Girls' College, which is the first 1AB school started by the Methodist missionaries about 180 years ago in Trincomalee.



But first of all I wish to write a short account of the History of Methodist Girls' College. The year 1814 was the milestone in the history of Sri Lanka. It is due to the fact that the Methodist Missionaries from England landed in the shores of Beligama in Sri Lanka. One of the vision of this missionaries was to uplift the educational needs of the people of Sri Lanka, With this in view several schools were established throughout the country. In 1819 an English School (Methodist High School) was established at the Methodist Mission house in Trincomalee. In 1921 the school with further facilities continued to function in the same place. During the period 1821 – 1823 three schools were run by the Methodist Mission under the leadership of Robert Haver(Founder). In the 1856 during the leadership of John Walton this school was shifted to an adjoining compound and a separate building was put up. This is the location where the school is now. In 1859 further buildings were put up and the school was named as Methodist Girls' School with the boarding facilities. By 1902 the School has reached very high growth in the district. As a result additional buildings were put up to meet the needs of population of the students. Further the buildings were put up after 1930 under the leadership of Miss Everett. She was succeeded by Miss Gardiner another Missionary. In 1938 Miss Greenwood took over the Principalship. During the Second World War (1942 – 1945) Children were vacated from Trincomalee and this affected the smooth functioning of the school. 1949 Mrs.Arumanayagam (nee Miss Marimuthu) an old girl and a teacher took over as principal of the school. She was the first Sri Lankan Principal. During her stewardship the School developed to a greater extent in all extra curricular activities.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Mrs.U.Jothinathan

## S.L.P.S - I

### Dip.in.Sch Management (Merit)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VICE PRINCIPAL



Mrs.T.Roshanmurali - S.L.P.S III

## SECTIONEL HEADS



Miss.Y.Sivathasan



Mrs.V.Natkunam



Mrs.K.Paranitharan



Mrs.B.Gnanavel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thereafter the Principal ship was taken over by the following Sri Lankan Principals.

| | | |
|---|---|---|
| 1950 – 1974 | | Mrs.M.Arumainayagam |
| 1st Feb 1975 | – 8th Oct 1985 | Mrs.E.R.Gunaretnam |
| 9th Oct 1985 | – 8th June 1986 | Mr.N.Chandrakanthan |
| 9th June 1986 | – 31st Dec 1990 | Mrs.M.Somasundaram |
| 1st Jan 1991 | – 23rd Aug 2001 | Miss.K.Ponnampalam |
| 24th Aug 2001 | – Up to date | Mrs.U.Jothinathan |

We are very proud to say that our college was the first 1AB school with the Hostel facilities in the Trincomalee district.

When achievements of people are not felicitated, history never remembers them. Therefore keeping this in mind the achievement reached by the students of this College, their feelings, contribution through writings the activities of the school are packed here in this magazine, which in put forward to you to be appreciated and remembered.

With the vision of facing the challenges of the 21st Century the school tries hard to build up educational values and results and discipline among the students for a future healthy generation. This is in keeping with the long history of this educational institution.

This is the moment that I have to say that the school travels to develop and improve the sharp intelligence in students together with clear thinking and workable skills and Education realizing. The needs of the time to use the knowledge they have received, to follow the culture and go forward with courage into the world is the fullness of the skill they are learning and achieving.

- Every year the number of the students entering to the university on the results of the A/L Examination is increasing especially to faculties of Engineering, Medical, Arts and Commerce and Fine Arts. This fact is substantiated by the presence of undergraduates in most of the universities.
- In the Productivity Evaluation 2011, conducted by the Zonal Education Office among the nine 1AB schools in the Trincomalee district. Our school had been placed second and received their appreciation and certificates from the Zonal and Provincial Directors of Education. At the same time our school has received the 1st place in the primary unit.
- The school also had participated in the Basket ball tournament and obtained second place at provincial level qualifying to participate in the national level competition.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our students have also taken part in the oratory, recitation at national levels. There by showing their talents in both curricular and co-curricular activities of the school.

Therefore disciplinary administration taking into consideration the cultural values of the society, the untiring co- operation by the staff, who work with me as one family to uphold the standard and success of the school, the vibrating service rendered by the S.D.C members, the full strength giving by the past students, the assistance of the parents and well wishers, helps and strengthens the smooth running of the school.

In this context I am very proud to say that this prize giving magazine brings out the values of the student population of the school also is a document which sustains the standard of the school.

I congratulate the students who are being awarded at this prize giving and also thank and appreciate all who contributed to the success of releasing this school magazine.

May god bless us to improve and go forward in education and co curricular activities.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Particulars of our College

| | |
|---|---|
| • Name | : T/Methodist Girls' College (D.S.D School) |
| • Postal Address | : Dockyard Road, Trincomalee. |
| • Phone/Fax | : 026-2222437 |
| • E-Mail Address | : trincomgc@yahoo.com |
| • Founded | : 1819 |
| • School No | : 29102 |
| • School ID | : 1701016 |
| • School census No | : 16066 |
| • Present Grade | : 1 AB |
| • College Day | : 29th June |
| • Past Student Association day | : 21st July |
| • Education Zone | : Trincomalee |
| • G.S Division | : Villundy |
| • District | : Trincomalee |
| • School Colours | : Maroon & Yellow |
| • House | : Gardinner<br>Greenwood<br>Arumainayagam<br>Everett |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

### ஆலோசகர்கள்

திருமதி.உ.ஜோதிநாதன்

திரு.ஏ.டபிள்யூ.முஹ்சீன்

திருமதி.ச.சௌந்தரராஜன்

### இணை ஆசிரியர்கள்

திருமதி.த.வசந்தகுமார்

திரு.ரி.புவனேந்திரன்

திருமதி.க.பரணிதரன்

திருமதி.இ.ராஜ்மோகன்

### குழு உறுப்பினர்கள்

செல்வி.யோ.சிவதாசன்

திருமதி.பு.குணசேகரம்

திருமதி.வா.நற்குணம்

திருமதி.பா.ஞானவேல்

### கணினி வடிவமைப்பு

திருமதி. ஸ்ரீ. சிவகுமார்

### அச்சுப்பதிப்பு

லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்

கொழும்பு - 13





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Special Achievements



**Productivity Development Programme - 2011**
**Best Performance & First Runner Up**





**National Level Basket ball Team - 2011**



**Winner of "pratheepa Praba" Award-Mrs.K.Jeyabalini**



**District Third - Grade 5 Scholarship**



**National Award - Best Announcer**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் ஒரு சில வரிகள்...

கல்வி என்பது மனிதனை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்தும் ஒன்றல்ல. அது மனிதனை மனிதனிலிருந்து வேறுபடுத்தும் ஒன்றாகும். எனவேதான் அக்கல்வியை ஒழுக்க கல்வி என்கிறோம். அக்கல்வி மாணவனது மனப்பாங்கு, நடத்தை என்பவற்றில் மாற்றங்கண்டு மாண்புடையவன் ஆக்குகின்றது. பூரண ஆளுமை நிறைந்த ஒரு சமூகம் தோன்ற காரணமாகின்றது. இத்தகையதொரு சமூக உருவாக்கத்தினை நோக்கமாகக் கொண்டு இயங்கும் எமது கல்லூரி மாணவர்களினது தகைமைகள் பெறுகைகள் என்பவற்றை பாராட்டும் நோக்கில் மலரும் இப்பரிசளிப்பு விழா மலர் எமது கல்லூரியின் பல்வேறு சுவையான தகவல்களைச் சுமந்து வருகின்றது என்றால் அது மிகையாகாது.

கல்லூரியின் வெற்றிக்காக உழைத்த, உழைக்கின்ற ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடனான சேவைகள், கல்லூரி தனது வளர்ச்சிப் பாதையில் கண்டு வரும் மாற்றங்கள், கல்லூரிக்கு மாணவிகள் பெற்றுக்கொடுத்த சாதனைகள், என்பவற்றையும் இம்மலர் சுமந்து வருகின்றது.

தவிரவும், பல அறிவாளர்களது தரமான கட்டுரைகளையும், ஆசிரியர்களது ஆக்கங்களையும், மாணவர்களது தகவல்களையும், இம்மலரில் படித்து சுவைக்க கூடியதாக இருக்கின்றது. ஒவ்வொரு பாடசாலையும் தனக்கென தனியானதொரு கலாசாரத்தையும் கொள்கைகளையும் நோக்கங்களையும் கொண்டு இயங்கும். அந்த வகையில் எமது கல்லூரிக்கேயான தனித்துவமான அம்சங்களையும் மலர் சுமந்து வர தவறவில்லை. மிலேனிய உலகின் அறிவியல் வளர்ச்சியின் விளைவாக கண்டு வரும் புதிய சிந்தனைகள், புதிய மாற்றங்கள் என்பவற்றை உள்வாங்கி வெளிவரும் பதிய ஆக்கங்களும் மலரின் பக்கங்களை அலங்கரித்து நிற்பதால் வாசகர்களின் மனங்களில் என்றும் நிலைத்து நிற்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றது.

நேற்றைய மழைக்கு குடைபிடிக்கும் காளான்களாய் இல்லாமல் நாளைய மழையை அறியும் எறும்புகளாய் விளங்கும் எங்கள் கல்லூரி மாணவிகளினது தரிசன நோக்குடனான ஆக்கங்களையும், புத்தம் புதிய தகவல்களையும், சுமந்து வரும் இம்மலரின் வெளியீட்டிற்கு முன்னின்றுழைத்த அனைவரையும் பாராட்டுகின்றோம். நன்றி கூறுகின்றோம். மணம் கமழும் மலரின் பக்கங்களை வாசித்து இன்பமடைவோம் வாருங்கள்.

இதழாசிரியர்கள்
**திரு. ஏ. டபிள்யூ. முஹ்சீன**
**திருமதி. ச. சௌந்தரராஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் குறிப்பேடு

| | | |
|---|---|---|
| 1819 | - | மெதடிஸ் ஆங்கில உயர் பாடசாலை என உருவாக்கப்பட்டது. ஆண், பெண் இருபாலாரும் கல்வி கற்றனர். (திருச்சபையுடன் இணைந்திருந்தது) |
| 1821-1823 | - | ஆங்கிலப் பெண்மணியான Robert Haver ஆல் நிர்வகிக்கப்பட்டது. |
| 1856 | - | John Walton இன் ஏற்பாட்டில் திருச்சபையிலிருந்து தனியாக விலகி இயங்கியது. |
| 1859 | - | தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி என பெயர் மாற்றப்பட்டு விடுதி வசதிகளுடன் உருவாக்கப்பட்டது. |
| 1902 | - | மாவட்டத்தில் அதிவளர்ச்சி கொண்ட பாடசாலையாகப் பதியப்பட்டது. |
| 1930 | - | ஆங்கிலப் பெண்மணிகளான Miss.Everett தலைமை வகித்தல், பின்னர் Miss.Gardinner தலைமை வகித்தல் |
| 1938 | - | Miss.Everett தலைமை வகித்தல். |
| 01.07.45-09.06.46 | - | வருடாந்த மேற்பார்வை அறிக்கையில் கல்லூரியின் வளர்ச்சிநிலை பற்றி பதியப்பட்டது. |
| 1950 | - | Mrs.M.Arumainayakam அதிபராக பதவியேற்றல். |
| 1967 | - | கல்வி அமைச்சர் கல்லூரியை தரிசித்தார். |
| 1975 | - | Mrs.E.R.Gunaretnam அதிபராக பதவியேற்றல். |
| 1985 | - | Mr.N.Chandrakanthan அதிபராக பதவியேற்றல். |
| 1986 | - | Mrs.M.Somasuntharam அதிபராக பதவியேற்றல். |
| 1991 | - | Miss.K.Ponnampalam அதிபராக பதவியேற்றல். |
| 13.05.1996 | - | வடக்கு கிழக்கு கல்விச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா அவர்கள் கல்லூரிக்கு மேலும் காணி சுவீகரிப்பு பற்றி கலந்துரையாடி ஒழுங்கு செய்தல். |
| 24.03.1997 | - | திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை அவர்களினால் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. |
| 09.02.1998 | - | ஒன்று கூடல் மண்டபத்துடன் கூடிய மூன்று மாடிகள் கொண்ட புதிய கட்டிடத்திற்கு வடகிழக்கு மாகாணக்கல்விச் செயலாளர் சுந்தரம டிவகலால் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1998 | - | செல்வி.பிரதீபா துரைராஜா க.பொ.த சா/த பரீட்சையில் 8 பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். |
| 01.03.2001 | - | ரூபவாஹினி ஒளிபரப்புச் சேவையில் எமது மாணவிகள் பங்கு பற்றிய 'மலரும் மல்லிகை' நிகழ்ச்சி ஒளிபரப்புச் செய்யப்பட்டது. |
| 24.08.2001 | - | Mrs.U.Jothinathan அதிபராக பதவியேற்றல். |
| 12.07.2002 | - | கல்லூரியில் ஹற்றன் நெஷனல் வங்கியின் கிளை திறக்கப்பட்டது. |
| 2003 | - | அருமைநாயகம் புலமைப்பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. |
| 13.02.2004 | - | புதிய விடுதிக்கான புதியமாடிக்கட்டிடத் திறப்புவிழா இடம்பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் திரு.இரா.சம்பந்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர். |
| 16.02.2004 | - | "அருமைநாயகம்" புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் பல்கலைகழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. |
| 09.03.2004 | - | மாணவர் தலைவர்களுக்கு சின்னஞ்சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது. |
| 26.06.2004 | - | எமது கல்லூரியினது ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களும் குடும்ப பாடசாலையான புனித சூசையப்பர் கல்லூரி ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களும் இணைந்து "செயல்நிலை ஆய்வு" எனும் 5 நாட்கள் கருத்தரங்கில் ஈடுபட்டனர். |
| 16.07.2004 | - | Light house English project ஆரம்பிக்கப்பட்டது. |
| 26.07.2004 | - | சக்தி தொலைக்காட்சியின் "களம்" விவாத நிகழ்ச்சியில் எமது மாணவர்கள் பங்கு பற்றினர். |
| 09.12.2004 | - | தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த 11 மாணவர்களுக்கான பாராட்டு விழா இடம் பெற்றது. பிரதம விருந்தினராக ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி.இராஜரட்ணம்பிள்ளை கலந்து கொண்டார். |
| 26.12.2004 | - | சுனாமி அனர்த்தம் காரணமாக மனையாவெளி வெள்ள அகதிகள் தஞ்சமடைந்தனர். |
| 25.07.2005 | - | கல்லூரியில் LEO CLUB ஆரம்பிக்கப்பட்டது. |
| 23.06.2006 | - | பாடசாலை புதிய இரண்டு *மாடிக* கட்டடத்திற்கான அடிக்கல் அருட்தந்தை. S.A. சுவர்ணராஜா அவர்களால் நடப்பட்டது. |
| 08.11.2006 | - | MTV தொலைக்காட்சி அலைவரிசையின் "அறிவு" நிகழ்ச்சியில் தரம் 7 மாணவர்கள் கலந்து கொண்டனர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 26.01.2007 | - | கண்காட்சி இடம்பெற்றது. பிரதம விருந்தினராக திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் திருமதி.S.ஜலதீபன் கலந்து கொண்டார். |
| 10.09.2007 | - | பரிசளிப்பு விழாவும், புதிய மாடிக்கட்டடத்திறப்பு விழாவும் இடம் பெற்றது. பிரதம விருந்தினராக திரு.R.தியாகலிங்கம் (செயலாளர், கல்விப் பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சு) கலந்துகொண்டார். |
| 03.12.2007 | - | தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டும் நிகழ்வு இடம் பெற்றது. பிரதம விருந்தினராக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.N. விஜேந்திரன் கலந்து கொண்டார். |
| 03.03.2008 | - | மாணவ தலைவர்களுக்கு சின்னஞ்சூட்டும் நிகழ்வு இடம் பெற்றது. |
| 26.05.2008 | - | மொழிகளுக்கூடாக சமாதான நிகழ்வு இடம்பெற்றது. |
| 11.02.2009 | - | கௌரவ முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், அமைச்சர் M.L.M. ஹிஸ்புல்லா ஆகியோர் வருகை தந்தனர். |
| Feb 2009-19.03.2009 | - | முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகள் ஒன்றரை மாத காலமாக தங்கியிருந்தனர். |
| 22.05.2009 | - | வலயக்கல்விப் பணிப்பாளரது அறிவித்தலுக்கமைய குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. |
| 22.06.2009 | - | ஆரம்பப்பிரிவு மாணவர்களினது பாடசாலைமட்டக் கண்காட்சி இடம்பெற்றது. |
| 23.06.2009 | - | தரம் 6-13 வரை உள்ள மாணவர்களது பாடசாலைமட்டக் கண்காட்சி இடம்பெற்றது. |
| 11.07.2009 | - | வருடாந்த பரிசளிப்பு விழாவும், மலர் வெளியீடும் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு.V.P.பாலசிங்கம் கலந்து கொண்டார். |
| 03.09.2009 | - | மாணவ தலைவர், வகுப்புத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி உப்புவெளி கிறேஸ் இல்லத்தில் இடம்பெற்றது. |
| 22.09.2009 | - | ஆசிரியர் தினத்தை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட "Super Singer 2009" போட்டி இடம்பெற்றது. |
| 06.10.2009 | - | ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் திரு.M.மன்சூர் கலந்து கொண்டார். |
| 26.12.2009 | - | 2004.12.26 அன்று இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் போது இறந்த எமது பாடசாலை மாணவி வைஸ்ணவி ஞானசேகரம் அவர்களின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. S.L.R.C பொறுப்பாளர், Dr.ஞானகுணாளன் தலைமை தாங்கினார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 18.01.2010 | - | முதலாந்தர மாணவர் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக மெதடிஸ்த திருச்சபை அருட்சகோதரி ஜோதினி சீனித்தம்பி கலந்து கொண்டார். |
| 19.02.2010 | - | வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டி இடம் பெற்றது. முதன்மை விருந்தினராக மாகாணக்கல்வித் திணைக்கள பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.கி.முருமுப்பிள்ளை கலந்து கொண்டார். |
| 23.02.2010 | - | நாணயக் கண்காட்சி இடம் பெற்றது. |
| 11.06.2010 | - | மாணவ தலைவிகளுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது. |
| 29.06.2010 | - | கல்லூரி தினம் கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக திருமதி. உ. ஜோதிநாதன் கலந்துகொண்டார். மெதடிஸ்த திருச்சபை போதகர்கள் கௌரவிக்கப்பட்டனர். |
| 04.08.2010 | - | கல்லூரியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை UNICEF உடன் இணைந்து குடிநீர் தினம் கொண்டாடப்பட்டது. |
| 06.10.2010 | - | உலக ஆசிரியர்தினம் கொண்டாடப்பட்டது. |
| 15.11.2010 | - | தொழில்நுட்ப பாட ஆசிரியர் மாணவர்களுக்கான பரிசளிப்புவிழா இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக அமைச்சர் கௌரவ டாக்டர் துரையப்பா நவரெட்ணராஜா (விவசாய,கால்நடை உற்பத்தி, கிராமிய, கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி அமைச்சர்,கிழக்கு மாகாணம்) கலந்துகொண்டார். |
| 07.12.2010 | - | நத்தார் ஒளிவிழா இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக வண.பிதா.ஜோர்ஜ் திஸாநாயக்கா கலந்து கொண்டார். |
| 11.01.2011 - | | |
| 14.01.2011 | - | மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வானொலி அறிவித்தலுக்கமைய கடும் மழை காரணமாக பாடசாலை மூடப்பட்டது. |
| 18.01.2011 | - | முதலாந்தர மாணவர் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. |
| 03.02.2011 - | | |
| 09.02.2011 | - | தொடர்ச்சியான மழைகாரணமாக 4 நாட்கள் பாடசாலை மூடப்பட்டது. |
| 21.02.2011 | - | வருடாந்த இல்லவிளையாட்டுபோட்டி இடம் பெற்றது. முதன்மை விருந்தினராக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.S. யாகூப்யான் கலந்து கொண்டார். |
| 08.04.2011 | - | மாணவர் தலைவர்களுக்கு சின்னஞ்சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது. முதன்மைவிருந்தினராக கனடாவில் வசிக்கும் பழைய மாணவி திருமதி.வளர்மதி தினேஷன் கலந்து கொண்டார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 11.05.2011 | - | சிம்மியா மிசன் திருமலை மட்டக்களப்பு வதிவிட ஆச்சாரியார் "பிரம்மசாரணி மகிமா சைதன்யா" அவர்கள் கல்லூரிக்கு வருகை தந்தார். |
| 26.05.2011 | - | School level English day இடம்பெற்றது |
| 29.05.2011 | - | கல்லூரி தினம் கொண்டாடப்பட்டது. முதன்மை விருந்தினராக மெதடிஸ்த திருச்சபை அருட்சகோதரி ஜோதினி சீனித்தம்பி கலந்து கொண்டார். |
| 08.07.2011 | - | வலயக்கல்வித் திணைக்களத்தின் விருது அளிப்பு நிகழ்வு இடம் பெற்றது. (Best Achievers). பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் திரு.என்.ஏ.ஏ.புஸ்பகுமார கலந்து கொண்டார். |
| 21.07.2011 | - | பழைய மாணவர் தினம் கொண்டாடப்பட்டது. முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. V.P.பாலசிங்கம் கலந்து கொண்டார். |
| 12.10.2011 | - | சர்வதேச ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் திருமதி.ரி.தோமஸ் கலந்து கொண்டார். |
| 05.11.2011 | - | வாணிவிழா நடைபெற்றது. |
| 08.12.2011 | - | ஒளிவிழா கொண்டாடப்பட்டது. முதன்மை விருந்தினராக கல்லூரியின் முன்னை நாள் அதிபர் E.R குணரெட்ணம் கலந்துகொண்டார் |
| 18.01.2012 | - | தரம் 1 மாணவர்களிற்கான வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. பிரதம விருந்தினராக கிழக்கு மாகாணசபை செயலாளர் திருமதி.J.J.முரளிதரன் தலைமை வகித்தார். |
| 08.02.2012 | - | மீலாத் விழா கொண்டாடப்பட்டது. |
| 15.02.2012 | - | வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. பிரதம விருந்தினராக பாடசாலை அபிவிருத்திக் குழுவின் உப செயலாளர் திரு.G.கயிலாயநாதன் கலந்து சிறப்பித்தார். |
| 22.02.2012 | - | மாணவ சாதானையாளர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. பிரதம விருந்தினராக திருகோணமலை வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.கி.முருகுப்பிள்ளை கலந்து கொண்டார். |
| 15.03.2012 | - | மாணவர் தலைவர்களுக்கு சின்னஞ்சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது. பிரதம விருந்தினராக "Greenwich International School" அதிபர் டயானா அன்டனி கலந்து கொண்டார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




STAFF - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



STAFF - 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

கோணைத்தென்றல் வீசி வரும் திருக்கோணமலை மண்ணில் வானை முட்டி நிமிர்ந்து நிற்கும் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியும் சாதனை வீரர்களை மடி சுமக்கும் ஏகாம்பரம் விளையாட்டரங்கும் அருகருகே அமைந்து அழகு சேர்க்க தொன்மை மிகு மெதடிஸ்த திருச்சபை ஆலய மணியே ஆதார மணியாகக் கொண்ட மாணவ மணிகளுடன் தனக்கே தக்கதான தனித்துவ மிடுக்குடன் விளங்கும் எமது மெதடிஸ்த பெண்கள் கல்லூரியினைப் பற்றி ஒரு சில வரிகள் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் பெருமையிலும் பெருமை அடைகின்றேன்.

கல்விச்சாலைகளின் பணி மிகவும் பரந்துபட்டது. இவை வெறுமனே அறிவினைப் போதிக்கும் நிறுவனங்களாக தமது பணிகளை வரையறுத்துக் கொள்ள முடியாது. பாடசாலைக் காலந்தான் பசுமை நிறைந்த காலம். இக்காலத்தில் தான் மாணவர்கள் பல்வேறுபட்ட ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்து கொள்ளக் கூடிய காலம் சமூகத்திற்கு சாலவும் பொருத்தப்பாடுடைவர்களை உருவாக்குவதில் பாடசாலைகளின் பங்கு காத்திரமானதாகும். அந்த வகையில் **"தரமான கல்வி மூலம் தரமான சமூகம்"** (Quality Education for Quality Society) எனும் நோக்கை அடைந்து கொள்ளும் முகமாக வெறுமனே கல்விப் போதனைகளை மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும் ஒருங்கு சேர்த்து ஊக்குவித்து பண்பாடு பேசும் ஒரு மேம்பட்ட சமூகத்தை உருவாக்க தன்னாலான பணிகளை ஆற்றி வருகின்றது.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மூலம் மாணவிகள் அனைத்து வகைப் போட்டிகளிலும் கலந்து கொள்ளச் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. மாணவிகளை 21ம் நூற்றாண்டுக்கான சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய தேர்ச்சிகளை அடையக்கூடிய நிலைக்கு தரம் உயர்த்தும் நோக்குடன் பாடசாலை மட்டத்திலும் கூட சமயம் சார்ந்த, மொழி சார்ந்த, விளையாட்டுகள் சார்ந்த போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்குவது திட்டமிடப்பட்ட செயற்பாடுகளாகும்.

இவற்றிற்கு மேலாகக் கல்வித் திணைக்களங்கள், கல்விசாராத் திணைக்களங்கள், கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு பேணுகின்ற அமைப்புகள் நடாத்துகின்ற பல்வேறு வகையான போட்டிகளில் கூட எமது கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பல வெற்றிகளையும் சாதனைகளையும் பெற்று தமது கல்லூரியின் புகழ் இலங்கைத்தீவில் மட்டுமின்றி கடல் கடந்து பரவ காரணகர்த்தாக்களாக விளங்குகிறார்கள். ஐக்கிய அமெரிக்காவில் வசிக்கும் வைத்தியகலாநிதி நரேஷ், ரீ.குணரெட்ணம் அவர்கள் எமது பரிசளிப்பு விழா மலருக்கு வழங்கி உள்ள வாழ்த்துச் செய்தியின் வரிகளிலிருந்து நன்கு புலனாகின்றது.

பாடவிதானத்துடன் இணைப்பாடவிதானத்திலும் எமது மாணவிகள் காட்டும் ஆர்வ மேலீட்டால் அவர்களது வெளியீடுகளும் உச்சமாகவே இருக்கின்றன. **"முயலாமை என்பது மூடத்தனம் முடியும் என்பதே மூலதனம்"** எனக் கொண்டு உறங்கும் கல்லூரியாகவன்றி சதாகாலமும் இயங்கும் கல்லூரியாக மிளிர்வதற்கு இந்த மாணவிகளினதும், மகத்தான ஆசிரியர்களினதும் பங்களிப்புகள் தான் முக்கிய காரணங்களாகும். எனவேதான் வருடந்தோறும் பல்கலைக்கழகத்திற்கும், கல்வியியல் கல்லூரிக்கும், தொழிநுட்பக் கல்லூரிக்கும் தவிர பல்வேறு கல்வி நிறுவனங்களுக்கும், தொழில் சந்தைக்கும் எமது கல்லூரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மாணவர்களை வழங்கிக் கொண்டிருக்கின்றது எமது கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில்தான் உச்ச உயர்வை நோக்கிய முழு முயற்சியுடனான வெளிப் படுத்துகையின் காரணமாக 2010, 2011 இரண்டாண்டுகளின் பெறுகைகளான பாட அடைவுகளை மையமாகக் கொண்டும், இணைப்பாட விதான வெளியீடுகளை மையமாகக் கொண்டும் ஒவ்வொரு தரத்திலும் முதன்மையும் தகைமையும் பெற்ற மாணவர்களையும் ஏனைய கல்லூரி சார்ந்த விடயங்களினூடாக கல்லூரிக்குப்புகழ் சேர்த்துக் கொடுத்த மாணவிகளையும் பாராட்டி ஊக்குவிக்கும் ஒரு பெரு விழாவாகவே எமது இந்தப் பரிசளிப்புவிழா அமைகின்றது. எனவே இதனை முன்னிட்டு பல்வேறு தகவல்களை சுமந்து வரும் ஒரு ஆவணமாக இந்த **"பரிசளிப்பு விழா மலர்"** வெளி வருவது எம் கல்லூரிக்கு மேலும் பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும்.

**கல்லூரியின் வரலாற்றுச் சுருக்கம்**

மெதடிஸ்த பெண்கள் கல்லூரி முதன் முறையாக 1819ல் ஆண்டு அமெரிக்க மிசனரிமாரால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து பல ஆண்டுகள் ஆங்கிலப் பெண்மணிகளே அதிபர்களாக இப்பாடசாலையை நிர்வகித்துள்ளனர். 1949ல் இலங்கை அரசாங்கம் எமது கல்லூரியினைப் பொறுப்பேற்றது. அதனைத் தொடர்ந்தே சுதேச அதிகாரிகளினால் பாடசாலை நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. திருகோணமலை மாவட்டத்திலேயே மாணவிகளுக்கான விடுதி வசதிகளைக் கொண்ட முதலாவது 1AB பாடசாலை எனும் பெருமையும் இக்கல்லூரியினையே சேர்ந்ததாகும். எமது பாடசாலையின் அதி உன்னத நோக்கத்திற்கேற்ப கல்வி சார் நடவடிக்கைகளில் மட்டுமன்றி மனிதநேயச் செயற்பாடுகளிலும் தளர்ச்சியற்ற சீரான வளர்ச்சியினைக் கொண்டிருப்பது இக்கல்லூரியுடன் இணைந்திருக்கின்ற அனைவரையும் பெருமைப்படுத்தவதாகும்.

**நோக்கமும் பணிகளும்**

**"அறிவு, திறன் மேம்பாடுகளுடன் பூரண ஆளுமையும் கொண்ட சமுதாயம்"** எனும் ஒரு உன்னத சமுதாயத்தினை கட்டியெழுப்பும் மகோன்னத தூர நோக்கினைக் கொண்டு கல்லூரியின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன. இத்தகைய சகல செயற்பாடுகளிலும் "**உச்ச உயர்வை அடைய முழு முயற்சி**" (Ut most for the highest) எனும் கல்லுரியின் மகுட வாசகம் மணிமுடியாய் இருப்பதும் சிறப்பம்சம் எனலாம். கல்லூரியின் சகல வளங்களும் உச்ச உயர்வை அடைவதையே நோக்காகக் கொண்டு பயன்படுத்தப்படுவதன் காரணமாக செயலாளிகளும், பயனாளிகளுமே பெறுகைகளாகக் கிடைக்கின்றனர். "21ம் நூற்றாண்டிற்கான சவால்களை எதிர் கொள்ளும் வகையில் மாணவர்களுக்குக் கற்றல் வசதிகளையும், வழிகாட்டல்களையும், பயிற்சிகளையும் அளித்தல் மூலம் பெறுமதி மிக்க திறன்கள் நிறைந்த பூரண ஆளுமை உடையவர்களாக வெளியேற்றி தமது சமுகத்தின் அபிவிருத்திக்கு உழைப்பவராக்கல்" எனும் காத்திரமான பணிக்கூற்றினூடாக பூரண ஆளுமை உடைய நற்பிரசைகளை உருவாக்குவதனை கொள்கையாகக் கொண்டு கல்லூரி தனது நாளாந்த பணிகளை முன்னெடுக்கின்றதென்றால் அது கல்லூரியின் உள்ளக அங்கத்தவர்களை மட்டுமன்றி கல்லூரியுடன் இணைந்திருக்கின்ற ஏனைய வெளியக அங்கத்தவர்களையும் சார்ந்ததாகும்.

வெறுமனே மதிப்பெண்களை மாத்திரம் மையமாகக் கொண்ட கல்வி நடவடிக்கைகளை மாத்திரமன்றி பெறுமதிமிக்க விழுமியப் பண்புகள் நிறைந்த மானிடநேயம் மிக்க மாணவப் பரம்பரையை உருவாக்குவதே கல்லூரியின் கொள்கையாகும். எனவேதான் சகல மாணவிகளினதும் கல்லூரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால நடவடிக்கைகள் மாத்திரமன்றி கல்லூரி நேரம் தவிர்ந்த காலங்களிலும் கண்காணிப்பினை மேற்கொள்ளவதும், பண்பாடு போற்றும் ஒரு பண்பட்ட பெண் சமுதாயத்தை தேசத்திற்கு வழங்குவதும் கல்லூரியின் சிறப்பான கொள்கையாகும். அறிவை அளவீடாகக் கொண்ட அறிவுமைய நூற்றாண்டில் பெற்றோர் அதீத நம்பிக்கையுடன் கல்லூரிக்கு கையளிக்கும் அனைத்து மாணவிகளையும் அதியுன்னத நிலைக்கு உயர்த்தி அவர்களிடம் மீளக்கையளிப்பதே எம் கல்லூரியின் மற்றுமொரு கொள்கையாகும்.

எனவே மேற்கூறப்பட்ட நோக்கங்களையும், கொள்கைகளையும் ஈட்டிக்கொள்ளும் பொருட்டு நாளாந்த கல்விச்செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கல்லூரி மட்டத்தில் பல்வேறு ஒன்றியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவத் தலைவிகளின் குழு, தமிழ், ஆங்கில கலை இலக்கிய மன்றங்கள், இந்து மாணவர் மன்றம், கணித விஞ்ஞான மன்றம், சென்ஜோன்ஸ் படையணி, இன்ரறெட் கிளப், பெண்கள் சாரணியம் போன்றவைகள் உரிய பயிற்சி பெற்ற பொறுப்பாசிரியர்களின் வழிகாட்டல்களின் கீழ் வழிநடத்தப்பட்டு வருகின்றன.

இவை தவிர வருடாந்த செயற்பாடுகளாக விளையாட்டுப்போட்டிகள், ஆக்கத்திறன் போட்டிகள், கல்விக் கண்காட்சிகள், சமய அறிவுப் போட்டிகள், மொழித்திறன் போட்டிகள், கையெழுத்து சஞ்சிகைப் போட்டிகள் என்பன நடாத்தப்பட்டு முதன்மை நிலை பெறுவோர் வலய, மாவட்ட, தேசிய மட்டங்களில் பங்கு பற்றி வெற்றிகளைப் பெறுவதற்கும் வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

ஜூன் 29ம் திகதி கல்லூரி தினம், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், ஆசிரியர்களையும் கௌரவித்தல், மாணவத்தலைவிகளுக்கு சின்னம் அணிவித்தல் என்பவற்றோடு ஒளி விழா, நவராத்திரி விழா, ஆன்மீகச் சொற்பொழிவுகள் என்பனவும் வருடாவருடம் இடம்பெறுகின்றன. இச் செயற்பாடுகள் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை முழுமையடையச் செய்வதுடன் சவால்களுக்கு முகம் கொடுக்கும் பூரண ஆளுமை நிறைந்தவர்களாயும் உருவாக்குகின்றது.

**நவோதயா பாடசாலை**

எமது கல்லூரி நவோதாயாப்பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. எனவே இதனை மையமாகக் கொண்டு கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக வருடந்தோறும் பல்வேறு தொனிப்பொருள்களில் யூலை 17 – யூலை 21ம் திகதி வரை நவோதயா வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்த வாரத்தில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. குறிப்பாக குறித்த தொனிப்பொருளுடன் தொடர்புடைய வளவாளர்களின் உதவியுடன் மாணவர்களுக்கு கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. நவோதய வாரத்தில் குறித்த ஒரு நாளில் பெற்றோர்கள் அழைக்கப்பட்டு வகுப்பறைகள் வர்ணம் பூசி கவின்நிலைப்படுத்தும் செயற்பாடுகள் இடம் பெறுவதும் வழக்கமாகும்.

மேலும் 2011ல் உயர்கல்வி அமைச்சின் 1.8மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு நிலத்திற்கு கீழான நீர்த்தொட்டி ஒன்று அமைக்கவும் விடுதிக்கட்டிடத்திற்கு புதிய தூண்கள் அமைத்தல் ஆகிய திருத்த வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. அத்துடன் பாடசாலையின் முன்புறத்தோற்றம் வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்தப்பட்டது. பிரதான மண்டபத்தின் நிலப்பகுதிக்கு பளிங்குகற்கள்(மாபிள்) பதிக்கப்பட்டன.

**மாணவர் விடுதி**

பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கென விடுதி வசதிகள் காணப்படுவது எமது கல்லூரி பெற்றுக் கொண்ட மற்றுமொரு கொடையெனலாம். மூதூர், தம்பலகாமம், நிலாவெளி, சாம்பல்தீவு, ஹொரவப்பொத்தான போன்ற தூர இடங்களைச் சேர்ந்த மாணவிகளையும், குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவேறு அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்து மனவலிமை இழந்து ஆதரவற்றிருக்கின்ற எண்ணற்ற மாணவிகளுக்கு உதவிக்கரம் நீட்டும் ஒன்றாகவுமே கல்லூரியின் விடுதி வசதிகள் காணப்படுகின்றன. பாடசாலை அபிவிருத்திக் சங்கத்தினரும், பழைய மாணவர் சங்கத்தினரும் இணைந்து விடுதியினை மேற்பார்வை செய்வதற்கென நியமித்த ஊழியர்களும் இளைப்பாறியுள்ளனர். எனவே அரசாங்கத்தினால் நியமனம் பெற்ற நிரந்தர ஆளணியினர் தொடர்ச்சியாக இல்லாதிருப்பது பெரும் குறையாகவே இருந்து வருகின்றது.

**பாடசாலை அபிவிருத்திச் குழுவும் பழைய மாணவர் சங்கமும்**

எமது கல்லூரி காலந்தோறும் ஈட்டிக்கொள்ளும் வெற்றிகள், வெளியீடுகள் அனைத்தும் ஒரு கூட்டுமுயற்சியின் வெளிப்பாடு என்பது நாம் கூற வேண்டிய உண்மையாகும். கல்லூரியின் தகைமைகள், பெறுகைகள் என்பவற்றின் பங்காளிகளாக ஆசிரியர், மாணவர்கள், பேரன்பு மிக்க பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என்போரைக் கடந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரதும், பழைய மாணவர் சங்கத்தினரதும் பங்களிப்புகளே மிக மிக காத்திரமானதெனலாம். கல்லூரியின் வளர்ச்சி கருதி தேவையேற்படும் போதெல்லாம் கல்லூரி நிர்வாகத்தினருடன் கலந்தாலோசித்தும், உதவி ஒத்துழைப்புகளை வழங்கியும் வரும் இச்சங்கங்கள் நிர்வாகத்தில் தலையிடாக் கொள்கையினை மிக இறுக்கமாக கடைப்பிடித்து மிகக் கண்ணியமாகச் சேவையாற்றுவது கல்லூரியின் வெற்றிகளுக்கான பின்புலமெனலாம்.

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பாடசாலை முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு உச்சப் பங்களிப்பினை செய்து வருகின்றது. பழைய மாணவர்கள் தாமாக முன் வந்து பல்வேறு செயற்பாடுகளைச் செய்து வருகின்றனர். தேசிய ரீதியாக ஆற்றல்களை வெளிப்படுத்தி பரிசில் பெறும் மாணவிகளுக்கு நிதி உதவிகளைச் செய்து வருகின்றார்கள். சென்ற பரிசளிப்பு விழாவின் போது **"பரிசளிப்பு விழா மலர"** அச்சிடுவதற்காக நிதிஉதவி அளித்துள்ளார்கள். வெளிநாட்டிலிருந்து வருகை தரும் பழைய மாணவிகள் ஒரு சிலர் வந்து கல்லூரியில் காணப்படும் பௌதீகவளக்குறைபாடுகளுள் சிலவற்றையேனும் கேட்டறிந்து நிவர்த்தி செய்து வருகின்றார்கள். அத்துடன் பொருளாதார வசதி குறைந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைளுக்கும் தம்மாலான உதவிகளைச் செய்து வருகின்றார்கள். அதேவேளை வெளிநாட்டிலிருந்து பழைய மாணவிகள் வரும் போது விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு அவர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். இந்தவேளை விசேடமாக கூறக்கூடியது என்னவென்றால் பழைய மாணவி பாலயோகினி அவர்கள் தலைமையில் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் இணைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் மாணவிகளுக்கு தலா ரூ25000 அவர்களது வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டு வருவதாகும். இதனை கல்லூரி என்றும் நன்றியுடன் நினைவுகூறும். அந்த வகையில் யூலை 21ம் திகதி பழைய மாணவர்தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நிகழ்விற்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழும் பழைய மாணவிகள் அழைக்கப்பட்டு பல்வேறு சுவையான அம்சங்களுடன் பிரமாதமான முறையில் விழா நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் 2011ம் ஆண்டு யூலை 21ம் திகதி இடம்பெற்ற பழைய மாணவர்தினவிழாவானது மிக மிக சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டமையானது பலம் வாய்ந்த பழைய மாணவர் பரம்பரை உருவாக்கப் பட்டுள்ளமையையே காட்டுகின்றது. இந்நிகழ்வைப் பாராட்டி வீரகேசரி ஊடகத்தில் வெளிவந்த செய்திகள் நிகழ்வை மேலும் சிறப்படையச் செய்கின்றது. இத்தகைய பலம்மிக்க பழைய மாணவர்களின் ஒத்துழைப்பிற்கு கல்லூரி என்று நன்றி கூறுவதுடன் தொடர்ந்தும் ஒத்துழைப்புக்களை கல்லூரி எதிர்பார்த்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுப்பரீட்சை அடைவுகள் :-**

கல்லூரியினை அடையாளப்படுத்தும் ஆவணங்களாக காணப்படும் பொதுப்பரீட்சை அடைவுகள் மீதான பார்வையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய தொன்றாகும். கல்லூரியின் நோக்கங்களை அடைந்து கொள்ளுவதற்கான அடித்தளமாக காணப்படும் ஆரம்பபிரிவு மாணவர்களில் ஒரு சாராராகிய 5ம் தர மாணவர்களது புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் படிக்கற்களாக காணப்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. வருடந்தோறும் சித்தி வீதமானது அதிகரித்துக் காணப்படுவதோடு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோரின் வீதமும் முறையே 2010,2011ம் ஆண்டுகளில் 61%, 81% ஆகக் காணப்படுகின்றது. அத்துடன் பரீட்சைத் திணைக்களம் சான்றிதழுக்கான தகைமைப் புள்ளியாக அறிவித்துள்ள 70 புள்ளிகளை 2010, 2011ஆம் ஆண்டுகளில் 93%, 96% வீதமானோர் பெற்றிருந்தனர். அம்மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களது அர்ப்பணிப்பும், பெற்றோரது தளரா முயற்சியும், மாணவர்களது ஆக்கவூக்கமும் பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

இவ்வாறே க.பொ.த சா/தர மாணவர்களது பரீட்சைப் பெறுபேறுகளும் வளர்ச்சி நிலையில் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. 2010, 2011ம் ஆண்டுகளில் க.பொ.த உயர்தர வகுப்புகளுக்கு கலை, வர்த்தகத் துறைகளுக்கு மட்டுமன்றி கணித, விஞ்ஞான துறைகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது. தமிழ்மொழி, சைவசமயம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம், சங்கீதம், நடனம், சுகாதாரமும் உடற்கல்வி போன்ற பாடங்களில் 100% சித்தி நிலை எட்டப்பட்டுள்ளது. அதேவேளை ஏனைய பாடங்களான வரலாறு, வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும், புவியியல், மனைப்பொருளியல், தமிழ்இலக்கியம் போன்ற பாடங்களில் 75% க்கு அதிகமான சித்தியினையும் கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களில் 50% க்கு மேற்பட்ட சித்தியினையும் பெற்றிருக்கின்றார்கள். இப்பெறுகைகளுக்கான பின்புலங்களாக தேர்ச்சி பெற்ற வளவாளர்களினால் நடாத்தப்படும் கருத்தரங்குகளும் அலகுப்பரீட்சைகளும் மாதாந்த, தவணைப்பரீட்சைகளும் காணப்படுகின்றன. அலகுப்பரீட்சைகள் பாடசாலைக்கல்வி நடவடிக்கை தவிர்ந்த நேரங்களில் திட்டமிடப்பட்ட நேரசூசிக்கேற்ப காலையில் பாடசாலை தொடங்குவதற்கு முன்பும் பிற்பகலில் பாடசாலை முடிந்த பின்பும் ஒரு மணத்தியாலத்திற்கான வினாத்தாள்கள் வழங்கப்படுகின்றன. விடைத்தாள்கள் துரிதமாக மதிப்பீடு செய்யப்பட்டு பின்னூட்டல் செய்யப்படுவதுடன் பின்தங்கிய மாணவர்களுக்கு பரிகார கற்பித்தல்களும் உரிய ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் க.பொ.த சா/த பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களது பெற்றோர்களுடன் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை அலகுப்பரீட்சை பெறுபேறுகள் வழங்கப்பட்டுக் கலந்துரையாடல்களும் இடம் பெற்று வருகின்றன. இது கல்லூரியின் புதியதொரு பரிணாம முயற்சியும், வளர்ச்சியுமாகும். வாண்மை நிறைந்த வினைத்திறன்மிக்க எமது கல்லூரி ஆசிரியப் பெருந்தகைகளின் காலமறிந்து வழங்கும் செயலூக்கமே மேற்படி எங்கள் மாணவர்களின் வெளியீடுகளின் அடிநாதம் என்று கூறுவதில் பெருமை அடைகின்றோம்.

கல்லூரி பெற்றுக் கொள்ளுகின்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளும் கணிசமான ஒரு வளர்ச்சிப் போக்கினையே காட்டுகின்றது. கலை, வர்த்தகத்துறைகள் மட்டுமன்றி கணித,விஞ்ஞானத்துறைகளுக்கும் மாணவர் பல்கலைக்கழக அனுமதி பெறுவது அதிகரித்துச் செல்கின்றது. 2010ல் விஞ்ஞானத்துறையில் இரசாயனவியல், உயிரியல், பௌதீகவியல் என்பன முறையே 100%,80%, 20% அடைவுகளைக் காட்டுகின்றன. 2011ல் இப்பாடங்கள் 40% மேற்பட்ட அடைவு மட்டத்தையே காட்டி நிற்கின்றன. வர்த்தகத்துறையில் எல்லாப்பாடங்களும் 80% க்கு மேற்பட்ட சித்தி வீதத்தினையே காட்டுகின்றன. பொருளியல், கணக்கியல், வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும் என்பன முறையே 100%, 85%, 85% சித்தி நிலையினைக் காட்டுகின்றன. கலைத்துறையில் இந்துநாகரிகம், கிறிஸ்தவநாகரிகம், அரசியல் விஞ்ஞானம், நடனம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியநாகரிகம் என்பன 100% சித்தியினையும் தமிழ், புவியியல் பாடங்கள் 90% க்கு மேற்பட்ட சித்தியினையும் ஏனைய பாடங்கள் 40%க்கு குறையாத சித்தி வீதத்தினைக் கொண்டுள்ளன. கல்லூரியின் இத்தகைய பெறுகைகளுக்கும் பெறுமானங்களுக்கும் காரணமாக பெருமைக்குரியவர்கள் எங்கள் வரங்களாகிய ஆசிரியர் குழாமேயாகும். தரமான கல்வி என்பதன் அடையாளங்களாகும். அந்த வகையில் எங்கள் ஆசிரியர்களை இந்த வேளையில் பாராட்டுகின்றோம்.

**இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்** :-

கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் பாடமேம்பாடுகள் மட்டுமன்றி மாணவர்களது வாண்மைவிருத்திக்கான செயற்பாடுகளும் வருடந்தோறும் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. சுயதிறனியல் விருத்தியுடன் கூடிய பூரண ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்கும் வகையிலான இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் வெளியீடுகளின் மற்றொரு வடிவங்களாகும். ஒவ்வொரு மாணவியினது ஆற்றல்களும் இனங்காணப்பட்டு அவர்களது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான களங்கள் அமைத்துக் கொடுப்பதில் கல்லூரி நிர்வாகம் மிகுந்த கரிசனை காட்டுகின்றது. அந்தவகையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் திருகோணமலைக் கிளையினர் நடாத்திய பொருளாதார வளம் குறைந்த மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டத்தில் எமது கல்லூரியினால் வரையப்பட்ட செயற்றிட்டம் திருகோணமலை மாவட்டத்தில் சிறந்த அந்தஸ்த்தைப் பெற்றது. அத்துடன் சுமார் 25 ஆரம்பக்கல்வி மாணவர்கள் குறிப்பாக எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்கள் செயற்றிட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட பயிற்சியின் விளைவாக 5ம்தர புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேற்றை அதிகரிக்க கூடியதாக இருந்தது.

விளையாட்டுத்துறையிலும் எமது மாணவிகள் மிகச்சிறப்பான ஆற்றல்களைக் காட்டி வருகின்றார்கள். 2010ம் ஆண்டில் திருகோணமலை மாவட்ட பாடசாலை வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றி சிறப்பாக தமது திறமைகளைக் காட்டி உள்ளனர். அதே ஆண்டில் 13 வயதிற்கு கீழ்ப்பட்ட மாணவிகளுக்கான 400m ஓட்ட நிகழ்ச்சியிலும், உயரம் பாய்தலிலும் மாவட்ட மட்டத்தில் முதலாம்,இரண்டாம் நிலைகளைப் பெற்றுள்ளனர். 2011ல் பதினைந்து வயதிற்குக் கீழ்ப்பட்டோருக்கான 100m தடைதாண்டும் ஓட்ட நிகழ்ச்சியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், 19 வயதிற்கு கீழ்ப்பட்டோருக்கான கூடைப்பந்தாட்ட நிகழ்ச்சியில் மாகாணத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துக் கொடுத்துள்ளார்கள்.

இவை தவிரவும் The international Association of Lions club நடாத்திய Inter School Quiz Contest, All Island Dance Competition போன்ற போட்டிகளிலும் எமது மாணவிகள் கலந்து கொண்டு மிகச்சிறப்பாக தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி உள்ளனர். 2011ல் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற தேசிய இளைஞர் விருது வழங்கல் விழாவில் சிறந்த அறிவிப்பாளருக்கான முதல்நிலை விருது எமது மாணவிக்கு கிடைத்துள்ளது. 2011ல் திருகோணமலை வலயக்கல்வி அலுவலகம் பாடசாலைகளுக்கிடையே நடாத்திய பாடசாலைச் செயற்பாடுகளில் வெளியீடுகள் பற்றிய மதிப்பீட்டில் 1AB தரத்திலான பாடசாலைகளுக்கிடையில் எமது கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை கல்லூரியின் நோக்கங்களுக்கும், கொள்கைகளுக்கும் கிடைத்த வெற்றியெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேவைகளைப் பாராட்டுகின்றோம்**

எமது கல்லூரியில் மிகச்சிறப்பான முறையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்களையும் நாம் பாராட்டுகின்றோம்.

**ஓய்வு பெற்றோர்**

1) திருமதி.கோ. லிங்கரெட்ணம்
2) திருமதி.வி. ரவீந்திரன்
3) திருமதி.பு. மகாலிங்கம்
4) திருமதி.ம. நடேசலிங்கம்
5) திருமதி.பு. கலைவரதன்

**பதவி உயர்வு பெற்றோர்**

01. திருமதி.பத்மஸ்ரீ ஜெயகாந்தன் (I.S.A)
02. செல்வி.T.ஜெயகௌரி (S.L.A.S)

கல்லூரிப்பயணத்தில் மிக நீண்டகாலமாக சேவையிலிருந்து தேர்ச்சிமிக்க, ஒழுக்கம் நிறைந்த உன்னத மாணவ பரம்பரையினரை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வந்த ஆசிரியர்கள் ஒரே பாடசாலையில் 08 வருடங்கள் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான இடமாற்றம் என்ற வகையில் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்று சென்றிருக்கின்றார்கள், அவர்களையும் நாம் இந்த வேளையில் பாராட்டுகின்றோம். இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த போதும் தேவையேற்படும் போதெல்லாம் எமது பாடசாலைக்கு வருகை தந்து ஒத்துழைப்புக்களை வழங்கிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இடமாற்றம் பெற்றோர்**

**2009 ஆண்டு**

1) திருமதி.பு.கணேஸ்வரன்
2) திருமதி.S.வில்வநாதன்
3) செல்வி.S.சிவதேவி
4) திருமதி.M.சிவகுமார்

**2010 ஆண்டு**

1. திருமதி.H.M.மர்சூக்

**2011 ஆண்டு**

1. திருமதி.J.சந்திரன்
2. திருமதி.G.A.பென்ஞமின்
3. திருமதி.R.முரளிதரன்
4. திருமதி.S.N.S..அருள்நேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. திருமதி.P.ஆறுமுகஜோதி
6. திருமதி.S.ரவிந்திரன்
7. செல்வி.J.சிவதர்சினி
8. திருமதி.P.ஸ்ரீகாந்தா
9. திருமதி.S.கோகிலன்
10. திருமதி.N.வரதராஜா
11. திருமதி.K.கிருஷ்ணராஜா
12. திருமதி.H.M.மர்சூக்
13. திருமதி.K.சரீஸ்குமார்
14. திருமதி.M.கைலாயநாதன்
15. திருமதி.L.நிரோஷன்



**2012 ஆண்டு**

1) திரு.V.மோகன்ராஜ்
2) திரு.T.கிருபாகரன்
3) திருமதி.Y.உமாஜினி
4) திருமதி.R.சதாசிவம்
5) திரு.K.கங்காதரன்

சீரிய சமூதாயத்தை கட்டியெழுப்பும் நன்மதிப்புமிக்க கல்விப் பணியில் பயணிக்கும் எம் கல்லூரியின் பயணத்தில் என்றும் இணைந்திருக்கும் மெதடிஸ்த திருச்சபையினரது ஒத்துழைப்புக்களை நன்றியுடன் நினைவு கூறும் கல்லூரி தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றது. அத்துடன் எமது முன்னேற்றச் செயற்பாடுகளுடன் ஆலோசனைகளை வழங்கி வரும் கல்விப்புல அதிகாரிகளுக்கும் நன்றி கூறுகின்றோம். தளராத முயற்சியுடன் அயராது உழைத்த ஓய்வுபெற்ற அதிபர்களதும், ஆசிரியர்களதும், உழைத்துக்கொண்டிருக்கும் ஆசிரியப் பெருந்தகைகளதும், பாடசாலை அபிவிருத்திக் குழுவினரதும், பழைய மாணவர்களதும், பெற்றோர்களதும், நலன்விரும்பிகளினதும் சேவையை பாராட்டுகின்றோம். கூட்டு முயற்சியின் விளைவாக மலரும் இப்பரிசளிப்பு விழா மலருக்கு எல்லாவகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றிகளும் பாராட்டுகளும் உரித்தாகட்டும் அனைவரது உதவிகளை மேலும் வேண்டி நிற்கின்றது எமது கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



MAGAZINE COMMITTEE




BAND IN ACTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் உலகுதழுவிய பார்வை

பேராசிரியர் அ. சண்முகதாஸ்,
Ph.D. (Edin.), D.Litt. (Hon. UJ)
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

## 1. உலகப் பொதுமையும் சிறந்த இயல்புகளும்

செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் உலகுதழுவிய கருத்துக்கள் பல இடங்களிலே பதிவுசெய்யப்பட்டுள்ளன. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" (புறம்: 192) என்னும் கணியன் பூங்குன்றனரின் பாடல் உலகறிந்ததாகும். 'உலகத்திலுள்ள எல்லா ஊர்களும் நம்முடைய ஊர்களே! எல்லா மக்களும் நம்முடைய உறவினர்களே!' என்று கூறும் இச்செய்யுளடிகள் சோவியத் ரஷ்யாவின் கிரெம்ளின் நகர் நடுவிலே ஒரு வளைவில் பொறிக்கப்பட்டுள்ளன. இது போன்ற உலகு தழுவிய பார்வை செம்மொழித் தமிழரிடையே பெரிதும் நிலவியது. "உண்டாலம்ம இவ்வுலகம்" (புறம்: 182) என்னும் கடலுள் மாய்ந்த இளம்வழுதியின் பாடலில் உலகு அறியவேண்டிய விழுமியங்கள் கூறப்படுகின்றன:

*உண்டா லம்ம இவ்வுலகம் இந்திரர்*
*அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்*
*தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;*
*துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்*
*புகழ்எனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்*
*உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;*
*அன்ன மாட்சி அனைய ராகித்*
*தமக்கென முயலா நோன்தாள்*
*பிறர்க்கென முயலுநர் உண்மை யானே*

நாம் வாழுகின்ற இந்த உலகம் இது வரையும் நிலைபெற்று நிற்பதற்கான காரணம் பின்வரும் பெரு மக்கள் இந்த உலகத்திலே வாழ்கின்றமையேயாகும் என இப்பாடல் கூறுகின்றது:

1. இந்திரன் முதலாய தேவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சாகா மருந்தாகிய அமிழ்தம் கிடைத்தாலும் அதனைத்தனியாகத் தாமே உண்ணாதவர்;
2. சினம் கொள்ளாதவர்;
3. சோம்பலுடன் நித்திரை கொள்ளாதவர்;
4. மற்றவர்கள் அஞ்சுகின்ற துன்பத்துக்குத் தாமும் அஞ்சுபவர்கள்;
5. புகழ் என்றால் உயிரையும் கொடுப்பவர்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பழி என்றால் உலகத்தையே தருவதென்றாலும் அதனைக் கொள்ளாதார்;

7. தமக்கென்று எதுவும் செய்யாது பிறர்க்கென உழைக்கும் உண்மையான இயல்புடையவர்.

இத்தகையோர் வாழ்கின்ற காரணத்தினாலேயே இந்த உலகம் இன்றும் நிலைத்திருக்கின்றது என்னும் அருமையான கருத்தினைப் புலவர் கூறியுள்ளார்.

உலக வாழ்வின் இயல்புகள் கூறும் இரண்டு பாடல்கள் புறநானூற்றில் உள்ளன. அவற்றுள் ஓர் உழவர் பாடிய பாடலில் (193) இந்த உலக வாழ்விலிருந்து நாம் தப்பி ஓடிவிட முடியாது என்பதை ஓர் உவமைமூலம் காட்டுகிறார். நெடிய களர்நிலத்திலே ஒரு மானை வேடன் கலைத்துச் செல்கிறான். அந்நிலத்தில்கூட அம்மான் தப்பிச் சென்றுவிடலாம். ஆனால் உலக வாழ்விலிருந்து நாம் தப்பிவிட முடியாது எனக் கூறுகின்றார்.

*அதள்ஏறித் தன்ன நெடுவெண் களரின்*
*ஒருவன் ஆட்டும் புல்வாய் போல*
*ஓடிஉய்தலும் கூடும்மன்*
*ஒக்கல் வாழ்க்கை தட்கும்மாகா*

என அப்பாடல் அமைகின்றது. இவ்வாறான உலகத்தின் இயற்கை எவ்வாறுள்ளது என்று அடுத்த பாடலிலே (194) சொல்லப்படுகின்றது. ஒரு வீதியிலே உள்ள ஒரு வீட்டிலே இறப்பைக் குறிக்கும் நெய்தல் பறை முழங்குகின்றது. அதேவேளை அதே வீதியிலுள்ள இன்னொரு வீட்டிலே மங்கலப் பறை முழங்குகின்றது. கணவனுடன் சேர்ந்திருப்போர் பூவணிந்து மகிழ்ச்சியுடன் உள்ளனர். அப்படி இல்லாதோர் கண்ணீர் சிந்துகின்றனர். அந்நிலையுள்ள உலகத்தைப் படைத்த இறைவனைப் புலவர் பண்பிலாளன் என்கிறார். ஆனால் அதேவேளை இத்தகைய இயல்பு உடைய உலகத்தினை உணர்ந்து கொண்டு இனிய காண்க என நம்பிக்கையும் ஊட்டுகிறார். அப்பாடல் வருமாறு

*ஓரில் நெய்தல் கறங்க, ஓர்இல்*
*ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப,*
*புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்*
*பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்,*
*படைந்தோன் மன்ற, அப்பண்பிலாளன்*
*இன்னாது அம்ம, இவ்வுலகம்*
*இனியகாண்க, இதன் இயல் புணர்ந்தோரே*

உலகத்துவாழ் மக்கள் செய்யவேண்டிய நல்லதொரு செயற்பாட்டை நரிவெரூஉத்தலையார் "பல்சான்றீரே! பல்சான்றீரே!" என்று கற்றவரையும் மூத்தவரையும் விளித்து (195):

*நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்*
*அல்லது செய்தல் ஓம்புமின், ஆதால்*
*எல்லாரும் உவப்பது, அன்றியும்*
*நல்லாற்றுப் படுஉம் நெறியுமார் அதுவே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார். உங்களால் நல்லது செய்ய முடியாவிட்டாலும் நல்லது அல்லாத எவ்வித செயலையும் செய்யாதிருங்கள். அதுதான் எல்லோரையும் மகிழ்விக்கும்; அதுதான் எல்லோரையும் நல்வழிப்படுத்தக்கூடிய நெறிமுறையுமாகும். உலகம் முழுவதுமே பின்பற்ற வேண்டிய கருத்தினைப் புறநானூற்றுப் புலவன் இங்கு தந்துள்ளான்.

எல்லோரும் கல்வி கற்க வேண்டுமென்பதில் உலகமெங்கும் இரு வேறுபட்ட கருத்து இல்லை. செம்மொழித் தமிழரும் இக்கருத்தினை நன்கு வலியுறுத்துகின்றனர். புறம். 183 ஆம் பாடலில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்,

*உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,*
*பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே*
*பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்*
*சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்*
*ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்,*
*மூத்தோன் வருக என்னாது, அவருள்*
*அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்*
*வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்*
*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்*

என்று கூறுவதைக் காணலாம். கல்வி பற்றிய உயர்ந்த எண்ணம் பண்டைத் தமிழரிடையே இருந்துள்ளதை இது போன்ற பாடல்களுடாக அறிய முடிகின்றது.

**1. பெயர் சுட்டாத உலகப் பொதுமை**

சங்க அகத்திணைப் பாடல்களிலே பின்பற்றப்படும் ஓர் இலக்கிய மரபு அப்பாடல்களை உலகு தழுவியனவாக அமையவைக்கின்றது. தொல்காப்பியர் அகத்திணையியல் 57ஆவது சூத்திரத்திலே,

*மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்*
*சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப்பெறாஅர்*

என்று குறிப்பிடுகிறார். அதாவது, அகத்திணைப் பாடல்களிலே இடம்பெறும் மாந்தர்களின் பெயர்கள் சுட்டப்படுவதில்லை. உலகிலே வாழும் மக்கள் எல்லோருக்கும் பொதுவான காதல் உணர்வு பற்றிப் பாடும்பொழுது தனிப்பட்டவர்களின் பெயர்கள் சுட்டப்படக்கூடாது என சங்கப் பாட்டு மரபு அமைந்துள்ளது. ஆனால், புறத்திணைப்பாடல்களிலே இடம்பெறும் மாந்தர்களின் பெயர்கள் அகத்திணைப் பாடல்களிலே வரலாற்றடிப்படைக்காகச் சுட்டப்படலாம் என்பதை

*புறத்திணை மருங்கின் பொருந்தின அல்லது*
*அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே*

என 58ஆவது சூத்திரம் கூறுகின்றது. எடுத்துக்காட்டாக, அகநானூறு 25ஆம் பாடலில், திதியன் தித்தனுடைய பெயர் இடம்பெறுவதைக் குறிப்பிடலாம். புறத்திணை சார்ந்த இப்பெயர் அகத்திணைப் பாடலிலே வரலாற்று நிகழ்வாக இடம்பெறுகின்றது. அகப்பாட்டில் இடம்பெறும் தலைவனையோ தலைவியையோ தோழியையோ செவிலியையோ ஓரிடத்தைச் சேர்ந்தவர்களாகவோ, ஒரு காலத்தில் வாழ்ந்தவர்களென்றோ, குறிப்பிட்ட சமூகத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவர்களென்றோ சுட்டாது உலகுதழுவிய நிலையிலே அவர்களைக் குறிப்பிடும் அகப்பாடல் மரபு செவ்வியல் தமிழின் தனித்துவமான பண்பாக அமைகின்றது.

**2. மூவுலகு பற்றிய நம்பிக்கை**

மேல் உலகு, நடு உலகு, கீழ் உலகு என மூன்று அடுக்கு உலகு பற்றிய எண்ணம் பண்டைத் தமிழரிடேயே நிலவியது. மேல் உலகு ஏழு, நடு உலகு ஏழு, கீழ் உலகு ஏழு என இருபத்தொரு உலகு இருப்பதாகவும் நம்பிக்கை இருந்தது பற்றிச் செம்மொழி இலக்கிய உரைகளாலே அறிகிறோம். எனினும் மூவுலகு பற்றிய நம்பிக்கையே பண்டைத்தமிழரிடம் பெரிதும் நிலவியது. மூன்று உலகக் கருத்தினை செம்மொழி இலக்கியமாகிய புறநானூறு பின்வருமாறு கூறுகின்றது:

*"......முப்புணர் அடுக்கிய முறைமுதல் கட்டின்*
*நீர்நிலை நிவப்பின் கீழும், மேலது*
*ஆனிலை உலகத்தானும்,.........."* (புறம்.: 6)

நிலம், பாதாளம், சுவர்க்கம் என மூன்றாக அடுக்கப்பட்ட மூவுலகக் கட்டினுள் முதலாவதான நிலத்தின் நீர்நிலைக்குக் கீழான உலகமும், அதன் மேல்நிலையிலுள்ள ஆனிலை உலகமும் பற்றி மேற் குறிப்பிட்ட செய்யுளடிகள் கூறுகின்றன. எனவே நாம் வாழும் உலகம் நடுவிலும், அதற்குக் கீழுள்ளது பாதாளம் எனவும், மேலுள்ளது சுவர்க்கம் அல்லது ஆனிலையுலகம் எனவும் கொள்ளப்பட்டன. "மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடிய" என்று சிலப்பதிகாரம் (மதுரைக்காண்டம்: கொலைக்களக்காதை) மூவுலகு பற்றிக் கூறுகின்றது. நாலடியார் (100),

*கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்*
*இடித்து முழங்கியதுஓர் யோசனையோர் கேட்பர்*
*அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர்*
*கொடுத்தார் எனப்படுஞ் சொல்.*

குறுந்தடியினாலே அடிக்கப்படும் முரசினுடைய ஒலி ஒரு காதம் வரையும் கேட்கும். மழை இடித்து முழங்கிய ஓசை ஒரு யோசனை (ஓர் தூர அளவு) வரை கேட்கும். ஆனால், இன்னார் கொடை செய்தார் எனச் சான்றோர் கூறும் சொல் அடுக்கப்பட்ட மூன்றுலகுக்கும் கேட்கும். இங்கு அடுக்கப்பட்ட மூவுலகு பற்றிய குறிப்பு இடம்பெறுவதைக் காணலாம்.

இம்மூவுலகங்களும் தனித்தனியாக செம்மொழித் தமிழ் இலக்கியங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளன. நடுவுலகம் பற்றிப் பத்துப்பாட்டினுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படை (1-2),

*"உலகம் உவப்ப வலனேர்பு திரிவரு*
*புலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு"*

என்று குறிப்பிடுகின்றது. "உலகம் ஆனது மகிழும்படியாக மேருமலையினை வலம்வரும் எல்லாச் சமயத்தாரும் புகழும் ஞாயிற்றினை கடலிடத்தே கண்டாற்போல" எனக் கூறும் செய்யுட் பகுதியில் நாம் வாழும் இவ்வுலகம் குறிப்பிடப்படுகிறது. மேலே தரப்பட்டுள்ள "உண்டாலம்ம இவ்வுலகம்..", "இன்னாதம்ம இவ்வுலகம்........" என்னும் பாடலடிகளும் நாம் வாழும் நடுவணுலகையே குறிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலுலகம் பாடல்களிலே "உயர்நிலை உலகம்", ."உயர்ந்தோர் உலகம்" என்று குறிப்பிடப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, பின்வரும் செய்யுளடிகளை நோக்கலாம். பத்துப்பாட்டினுள் ஒன்றாகிய மதுரைக் காஞ்சி (197): "உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்" என்று கூறுகின்றது. 'உயர்ந்த உலகமாகிய சுவர்க்கம் அமிழ்தத்தோடு பெற்றாலும்' என்பது அச்செய்யுளடியின் பொருளாகும். மேலும்,

*"பரந்துபடு நல்லிசை எய்தி மற்றுநீ*
*உயர்ந்தோர் உலகம் எய்திப் பின்னும்"* (புறம்,: 213)

'(இவ்வுலகில்) உன் புகழை நிறுத்தி உயர் உலகுக்குச் சென்ற பின்பும்' என்பது பாடலடிகளின் பொருளாகும்.

பாதாளம் என்னும் இடத்திலேயுள்ள உலகம் 'பாதளம்' எனப்பட்டது. பூமியை உடைய நம்முடைய உலகம் 'பூதலம்' எனப்பட்டது. கீழ் உலகம் பற்றி மணிமேகலை (9:22) பின்வருமாறு கூறுகின்றது:

*"......................................................இந்நகர்*
*நாகநன் னாட்டு நானூறு யோசனை*
*வியன்பா தலத்து வீழ்ந்து கேடெய்தும்"*

பூமியதிர்வு ஏற்படும்பொழுது இந்த நகரமும் நாகநாடும் அகன்ற பாதாளத்தினிடத்தே வீழ்ந்து அழிவு எய்தும் என்னும் செய்தி இப்பாடலடிகளாலே கூறப்படுகின்றது.

மூவுலகு பற்றிய நம்பிக்கை பண்டைய தமிழரிடையே இருந்து வந்ததை செம்மொழித் தமிழ் இலக்கியங்கள் பலவாறு கூறியுள்ளன.

# வஜனாமிர்தம்

இறைவன் என்பது மத விசுவாசிகளால் உருவாக்கப்பட்ட ஒரு கற்பனைப் பொருளன்று. மன உணர்வுகளுக்கு அப்பால் சென்றவர்களால், நன்றாக உணர்ந்து அனுபவிக்கக்கூடிய ஒரு சம்பூரண சத்தியம். அப்பியாசத்தினாலும், ஆராய்வினாலும் அதைத் தெளிவாக அறிகின்றவர்கள் இன்னல் அகன்று நிலையான சுகத்தை அடைகின்றனர்.

மனதை சரியான முறையில் கட்டுப்படுத்துவதற்குரிய பயிற்சியும், மனிதசக்திகளுக்கெல்லாம் ஆதாரமாயிருக்கின்ற கடவுள் சக்தியில் முழு நம்பிக்கையும் இல்லாதவிடத்தில் மற்றெல்லாம் இருந்தாலும் நிலையான சுகமும் சாந்தியும் உண்டாவதில்லை.

சுவாமி. கெங்காதரானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PARENTS DO NOT EAT SOUR GRAPES

Dr. Lalith Mendis

**Because Children's Teeth & Morals Are Set on Edge**

Morals on the edge concern everybody. Digital input sets the moral & spiritual tone of the child very young. Children exposed to fast & loud music grow more neuronal synapses in the prefrontal cortex. Same happens with watching violent movies, fast games such as motor racing and with an overdose of digital games. These have become baby sitters in homes where both parents work and have their own things to do while the child is attended by others. Those who have "over wired" prefrontal cortex are predisposed to sudden provocation and unpremeditated violence (knee jerk reactions).

The overstimulation by digital input is mediated in the brain via chemo-transmitters such as serotonin. These children develop mechanical responses to life based on chemical stimulation of the brain. They later become victims to heroin addiction and other substance abuse. In this chemically stimulated life, food or other appetites are needed only to maintain the machine like person that the digital machines created – especially digital games. Addictions become a part of their life. This includes aberrations of sex, pornography & gambling for gain. This is why many youngsters play the Stock Market On Line. Beating the credit card is also a self defeating debt binding addiction.

At the age of 14 years, the brain edits down all synaptic connections to 50%. This means whatever the child's brain was fed will be present in preponderance. When fed with digital images, the left brain functions are synaptically woven more than right brain functions of analysis. We produce dreamers. We need to provide our children a better balanced mental, moral & spiritual diet. There are parts of brain that respond to spiritual input that can be activated even after brain damage may short circuit other parts of the brain. This is why parents should concentrate on a wholesome life for the child without driving him to run their rat races.

Some research suggests that the Corpus callosum area (bridge between right & left cerebral hemispheres) is closely connected to hippocampus & limbic areas associated with spiritual phenomena. It may be able to develop this area by spiritual worship. A better developed corpus callosum provides for greater interaction between L/brain & R/brain function which can lead to brilliance – multifaceted ability. After damage to one side or an area of the brain, spiritual boot up may help in recovery of function, since the spiritual memory works on other pathways. This does not mean that all spirituality is a brain function. Rather that a certain part of the brain responds to spiritual activity.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iY Generation

You are already familiar with Generation Y. May we introduce you to Generation iY. These are the young people born since 1990. We call them the iY Generation because of the impact of iPods, iPhones, iChat, iTunes, iMovies, iMacs... and the fact that life for them is often about "i."

They are a new breed of student. They are different than the Baby Boomers and Generation X before them. The Boomers asked: Why? Generation X asked: Why ask why? This new generation asks: Why not? They are confident, tech savvy, opinionated, bold, and social. The earlier research on them, however, is now inaccurate. Due to technology, the parenting styles of their mom and dad, teaching methods, and the chemicals in their foods, they display a new set of characteristics:

- They are self absorbed.
- They are postponing maturation.
- They are addicted to media.
- They are medicated
- They feel entitled

## A new kind of a leader

They are surfacing everywhere today. In business, in government, in the military, in non-profits, in schools and in churches. They are a new breed of leader who empowers teams and accomplishes their mission in fundamentally different ways than past leaders.

Over the last fifty years, the world has seen at least five different approaches to leadership. Good leaders seldom change in substance, but they always change in style, based on the culture and the people they attempt to influence. The substance of good leadership involves ingredients such as integrity, vision, delegation, proper priorities and good planning. However, the style of good leadership reflects the times. For instance...

1. 1950s – The acceptable style was the Military Commander
2. 1960s-1970s – The acceptable style was the CEO
3. 1980s – The acceptable style was the Entrepreneur
4. 1990s – The acceptable style was the Coach
5. Today – The emerging style is the leader as a "Poet-Gardener."

## Bridging the Gap

- Gap between expectation & Reality
- Disappointment & Hurt
- Defeat & Failure
- Rope Trick or Ladder or slippery pole
- Rat Race
- Cut him down to size
- Defame – throw stone or Mud

## Atom Bomb

- Einstein & Moral Relativism
- Einstein's Descent into Atheism



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Manhattan Project & Robert Oppenheimer
- Nazis fail to produce Bomb
- 1945 July 15 test explosion
- 1945 – Aug 6th Little Boy on Hiroshima
- 1945 – Aug 9th Fat man on Nagasaki

**Violence & Sex**

- Family & Marriage violated
- Shortening of time
- Homosexualism
- Abortion – 1970
- Pornography
- Revolution of Art & Music
- Violence & Indecency in Entertainment
- Digital Revolution
- Desktop to laptop to palmtop & mobiles

**Consumerism - World's top turnover industries**

- Armament
- Motor Industry
- Confectionaries
- Cosmetics
- Toys
- Fashion

**"Woe to those who call evil good", but that is exactly what we have done. We have lost our spiritual equilibrium and reversed our values.**

- **We have exploited the poor and called it the lottery.**
- **We have rewarded laziness and called it welfare.**
- **We have killed our unborn and called it choice.**
- **We have shot anti-abortionists and called it justifiable.**
- **We have neglected to discipline our children and called it building self esteem.**
- **We have abused power and called it politics.**
- **We have coveted our neighbor's possessions and called it ambition.**
- **We have polluted the air with profanity and pornography and called it freedom of expression.**
- **We have ridiculed the time-honored values of our forefathers and called it enlightenment.**

**Home – Child's Nest**

Children thrive on four things: attention, affection, affirmation, and acceptance. They crave affection and loving care; they desire recognition, affirmation, encouragement, and support; they must be accepted as a whole with their foibles and failures, their weaknesses as well as their strengths. This is the sort of nurture children need in their struggle toward maturity. It is their fundamental right.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spiritual nurture is absolutely essential in a child's life. Children deserve to be brought up in the nurture and discipline of the godly values. Fathers must take the lead in matters spiritual. But in our time fathers have largely turned this task over to mothers. Greg Walcott, the veteran movie and TV star, once told that he played the role of priest in his home. Then it was understood why he and his family were different from the typical Hollywood family.

Some mothers also desert their responsibility of raising their offspring. The ostrich hatches its young without incubation, depositing her eggs in the sand to be hatched by the sun's heat. Here her function as a mother ends. Like the ostrich, some mothers drop their responsibility for their children at birth. Or like the cowbird that does not build a nest but lays her eggs in the nest of other birds, some mothers want others to raise their children.

Child like man has spirit, soul & body. Most parents train the child's body with sports & soul with study neglecting the most potent third of the child – his spirit. Also parents write the wrongs of others, show envy & ask children to do right. Father forgive – is the way forward for all generational gaps. Life without the Good Shepherd is like a sail boat without the compass. We make the way & write our rules. When children come of age, they do as we do – what seems right in their eyes to impress their peers.

**www.apeksha-lanka.org**

# FLOWER OF KNOWLEDGE

No gardener can make even one flower. The flower must come from the plant. The gardener can shake up the roots a little, feed it properly, water it, protect it from animals, expose it to the sun or put it in the shade when nearby. This outside service can be done, but the flower cannot come from the gardener. In the same way the text books, the masters and the sages are all gardeners. The flower of knowledge must come from you.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறை நூலகங்களினூடாக மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்துதல்

**நடராஜா அனந்தராஜ்**
B.A.(Hons).M.A Dip-In-Ed.,Dip-In.Journalism SLPS-1,SLEAS-111

மாணவர்களில் பலர் வாசிப்பில் இடர்ப்படுவதாக அண்மைக்கால ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. பாடசாலைகள் தமது ஒன்றிணைந்த செயற்பாடுகளினூடாக வாசிப்புமேம்பாடு தொடர்பாக பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து மிகக் குறுகிய காலத்தினுள் வாசிப்புத்திறனை மேம்படுத்த வேண்டும். மாணவர்களிடையே தொடர் பயிற்சிகளை வழங்குவதனூடாக வாசிப்பின் வீதத்தை உயர்த்திக் கொள்ளமுடியும்.இதற்கு வகுப்பறை, நூலகங்கள், வாசிப்பு மற்றும் எழுத்தாக்க முகாம்கள் போன்ற செயற்பாடுகளை பாடசாலைகளில் அறிமுகப்படுத்த வேண்டும்.

**வகுப்பறை நூலகம் :**

"மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அந்த வகுப்பு மாணவர்களின் பெற்றோர் ஆகியோர் ஒவ்வொருவருக்கும் சேவையாற்றக்கூடியவகையில் வகுப்பறையில் ஒழுங்கமைக்கப்பட்டு வகுப்பு மாணவர்களால் நிர்வகிக்கப்படும் ஒரு நூலகமே வகுப்பறை நூலகமாகும்."

**நூலகப் பிரகடனம் :**

2000 ஆம் ஆண்டில் பாடசாலை நூலகங்கள் தொடர்பாக UNESCO நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட விஞ்ஞாபனம் பின்வருமாறு: **"ஒவ்வொருவரினதும் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் ஒரு அங்கமே பாடசாலை நூலகங்களாகும்"** இப்பிரகடனம் வகுப்பறை நூலகங்களுக்கும் பொருந்துவதாகும்.

பாடசாலைகளில் மாணவர்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்தக்கூடிய வகையில் வகுப்பறை நூலகங்களை அமைப்பதை முக்கியமான ஒரு செயற்றிட்டமாக அதிபர்கள் முன்னெடுக்கவேண்டும். மாணவர்களில் பலர் வாசிப்பில் இடர்ப்படுவதாக அண்மைக்கால ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. பயிற்சிகளினூடாக வாசிப்பின் வீதத்தை உயர்த்திக் கொள்ளமுடியும்.

மாணவர்களிடையே வாசிப்புத்திறன் குறைவடைவதால் பின்வரும் குறைபாடுகள் ஏற்படுகின்றன:

- மாணவர்களின் ஆக்கத்திறன் செயற்பாடுகள் குறைந்து செல்லும். இதனால் அவர்களால் படைப்பாக்க முயற்சிகளில் ஈடுபடமுடியாதிருத்தல்
- நிகழ்கால வரலாற்றுச் சம்பவங்களை எதிர்கால சந்ததியினருக்குக் கையளிக்கக் கூடிய வகையில் ஆவணப்படுத்த (Documentation) முடியாது இருத்தல்.
- ஆக்க இலக்கியங்களை நயக்கும் தன்மை குறைவு.
- விவாத ஆற்றல், நல்வாழ்க்கைப் பழக்கவழக்கங்கள் என்பனவும் குறைவடைந்து செல்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தமிழ் மொழித்தினப் போட்டிகள், மற்றும் பாடசாலைகளில் நடைபெறுகின்ற பல்வேறு மன்ற நிகழ்ச்சிகள், கல்லூரியின் ஆண்டுமலர்கள், சஞ்சிகை போன்றவற்றில் மாணவர்கள் குறைவாகப் பங்கு பற்றுவதனைப் பெரும்பாலான பாடசாலைகளில் காணலாம்..
- மாணவர்கள், கற்றல் செயற்பாட்டில் ஆசிரியர்களிலேயே தங்கியிருப்பதால், தமது கற்றலுக்குத் தேவையான மேலதிக விடயங்களைத் தேடி அறிய முடியாது இருத்தல்.

இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாது இருக்கும் வகையில் வகுப்பறை நூலகத்தை உருவாக்கி, மாணவர்களின் நூலகப் பாவனையை மேம்படுத்துவதுடன், அவர்களின் தேடலுக்கான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக வகுப்பறை நூலகங்கள் அமைக்கப்பட்டு, நூல்களின் மீது ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் பல்வேறு செயற்றிட்டங்களை ஆசிரியர்கள் தமது நாளாந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளினூடாக முன்னெடுக்கவேண்டும்.

ஒரு நூலின் சின்னங்களையோ அல்லது குறியீடுகளையோ பார்க்கும் பொழுது எமது எண்ணங்களும், சிந்தனைகளும் அவற்றில் உள்ள கோலங்களையும், அவற்றிற்கான அர்த்தங்களையும் விளங்கிக் கொள்ளும் வகையில் மூளையின் செயற்பாடுகள் இருக்கும். எனவே வாசிப்புத் திறன் மேம்படுத்தப்படும் பொழுது ஒவ்வொருவரினதும் எதிர்கால வாழ்வின் உயர்வுக்கு உதவியாக இருக்கும்.

**வாசிப்புத் திறன் குறைந்தமைக்கான காரணங்கள்:**

- மாணவர்களும், பெற்றோரும் வேறு பொழுது போக்குகளில் அதிகளவு நேரத்தைச் செலவிடுதல். மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் ஒன்றாக இருந்து கூடியளவு நேரம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நேரத்தைக் கழிப்பதால், நூல்கள், செய்தித் தாள்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிப்பதில் நாட்டமற்றுக் காணப்படுகின்றனர்.
- நேரமின்மையை ஒரு வழமையான காரணமாகச் சொல்லிக் கொள்வது. எவர் ஒருவர் தனது பணிகளைச் செய்வதற்காக நேரமின்மையை ஒரு காரணமாகச் சொல்லிக் கொள்கின்றாரோ அவரது முன்னேற்றமும் முயற்சிகளும் தடைப்பட்டுக் கொண்டே செல்லும்.
- ஆசிரியர்கள் வகுப்பறைக் கற்பித்தலின் பொழுது, மாணவர்களைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தாது, தாமாகவே தயாரித்துக் கொண்டு வரும் குறிப்புக்களை எழுதவைத்து அவற்றை மனனம் செய்யவைத்தல்.
- வாசிப்பை ஒரு பழக்கமாக அல்லது நாளாந்த நடவடிக்கைகளில் ஒன்றாகக் கொள்ளாமையும் வீட்டில் உள்ள பெரியவர்கள் தமது பிள்ளைகளுடன் குறிப்பிட்டளவு நேரத்திற்காவது உரையாடலை மேற்கொள்ளாது விடுவதாலும், பிள்ளைகளிடையே சொற்களைப் பயன்படுத்தும் தன்மையும் வேறுபடுவதாக Hart and Risley (1996) ஆகிய மொழியியலாளர்கள் குறிப்பிட்டுள்ளமையானது, ஒவ்வொரு பெற்றோரையும் சிந்திக்கத் தூண்டும்.
- செல்லிடத் தொலைபேசிப் பாவனையால் அதிகளவில் நேரத்தை விரயமாக்குவதால் பொறுமையாக இருந்து வாசிப்பை மேற்கொள்ளமுடியாது இருத்தல்.
- மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் நீண்ட நேரத்தைச் செலவிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நல்ல நூல்கள் கிடைக்காமையும்,அவற்றை உசாவுதல் செய்யாமையும்.
* பாடசாலை நூலகங்களுக்கு நூல் கொள்வனவின் பொழுது உசாத்துணை நூல்களுக்கு ஒதுக்கும் பணத்திலும் பார்க்க பயிற்சி நூல்களுக்கும், வினா விடைப் புத்தகங்களுக்கும் அதிகளவிலான பணம் ஒதுக்கப்பட்டு நூலக அலுமாரிகளை நிரப்புவதால் மாணவர்களின் தேடலுக்கான சந்தர்ப்பம் குறைகின்றது.
* பொதுவாக பாடசாலைகளில் பெரும் பணச் செலவில் உருவாக்கப்பட்டுள்ள நூலகங்களை பெரும்பாலான அதிபர்கள் வெறும் காட்சிப் பொருளாக மட்டுமே வைத்திருக்க விரும்புகின்றனர். அதே வேளை நூலகக் கலாசாரத்தை மேம்படுத்துவதில் அதிகளவில் நாட்டத்தைக் காட்டுவதில்லை.

**மௌன வாசிப்பின் வீதம்:**

தரம் 1 இல் இருந்து 12 ஆம் வகுப்பு வரை மாணவர்கள் மௌனமாக வாசிக்கும் பொழுது, எவ்வளவு சொற்களைக் கிரகித்துக் கொள்கின்றனர் என பின்வருமாறு இனங்காணப்பட்டுள்ளது.

* தரம் - 1 60-90
* தரம் - 2 85-120
* தரம் - 3 115-140
* தரம் - 4 140-170
* தரம் - 5 170-195
* தரம் - 6 195-220
* தரம் - 7 215-245
* தரம் - 8 235-270
* தரம் - 9 250-270
* தரம் - 12 250-300

வாசிப்பதில் இடர்பாடு அடைதல் என்பது பிள்ளையின் சூழலுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. அதாவது உண்மையான வேறுபாடு என்பது பிள்ளைகள் எவ்வளவு அளவிலான சொற்களைத் தினமும் செவி மடுத்துக் கிரகிக்கின்றனர் என்பதிலேயே தங்கியுள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் சாதாரணமாக ஒரு பிள்ளை செவிமடுக்கக்கூடிய சொற்களின் எண்ணிக்கையானது பின்வரும் குடும்பச் சூழலில் தங்கியுள்ளது:

- சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் - 615 சொற்கள்
- உழைப்பாளர் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் - 1250 சொற்கள்
- படித்த தொழில் பார்க்கும் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் - 2153



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ இதற்கமைய மிகச் சிறப்பான தொடர்பாடலை மேற்கொண்டுள்ள வீடுகளில் வளரும் பிள்ளைகள், தமது நான்கு வயதை அடையும் முன்னர் 45 மில்லியன் சொற்களை அறிந்த கொள்வார்கள் என்றும், தமது பிள்ளைகளுடன் குறைவான தொடர்பாடலை மேற்கொள்ளும் வீடுகளில் உள்ள பிள்ளைகள் தமது நான்கு வயதை அடையுமுன்னர் 13 மில்லியன் சொற்களையே கேட்டறிந்து கொள்வர். சொற்களைச் செவிமடுத்தலுக்கும்,வாசிப்புத் திறனுக்கும் இடையில் நேர்க் கணியத் தொடர்பு இருப்பதால், இரண்டு திறன்களையும் வளர்த்தெடுக்கும் செயற்பாட்டில் ஆசிரியர்களுடன்,பெற்றோரும் சேர்ந்து ஈடுபடவேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு இச்செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

"பல்வகைத் தன்மையான கற்றல் மற்றும் குறைவான சொற்களஞ்சிய விருத்தி ஆகியவற்றைக் கொண்டுள்ள மாணவர்களுக்கு வலுவான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட கல்விச் செயற்பாட்டினூடாக அவர்களை வெற்றிபெற்ற சுயாதீனமாகச் சொற்களைக் கற்போராக உருவாக்கலாம்". (Baker, Simmons, Akmeenui-1995)

இதன் அடிப்படையில் பிள்ளைகளிடையே 7 வயதுக்குள் பெருமளவு சொற்களை வாசித்துக் கிரகிக்கக்கூடிய வகையில் வாசிப்புத் திறனை மேம்படுத்தவேண்டும்.

**நூல்கள் சேகரித்தல் திட்டம்**

நூல்கள் சேகரித்தல் என்பது,ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக இருக்கும் வகையில் திட்டமிடப்பட்ட பின்வருவன போன்ற செயல்திட்டங்களை பெற்றோர்,பழைய மாணவர்கள் மற்றும் ஆசிரியர், மாணவர்களின் பங்கு பற்றுகைகளுடன் நடைமுறைப் படுத்துதல் வேண்டும்.

1. மாணவர்களின் பிறந்த நாள் நினைவாக இனிப்பு வகைகள், கேக் போன்றவற்றை வழங்குவதை ஊக்குவிக்காது, நூல் ஒன்றைப் பரிசாக வழங்குவதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல்.

2. பொதுப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்ற மாணவர்களின் பெற்றோர்களிடம் இருந்து நூல்களை அன்பளிப்பாகப் பெறுதல்

3. புதுவருட ஞாபகார்த்த அன்பளிப்பாக நல்ல நூல் ஒன்றைப் பரிசாக வழங்குவதற்காக மாணவர்களை வழிப்படுத்துதல்.

4. வீடுகளில் இடம்பெறும் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளின் நினைவாக நூல்களை அன்பளிப்புச் செய்தல்.

5. வகுப்பு நூலக வாரத்தைப் பிரகடனப்படுத்தி வர்த்தக நிறுவனங்கள் மற்றும் நலன் விரும்பிகளிடம் இருந்து நூல் சேகரிப்புத்திட்டத்தை ஆரம்பித்தல்.

6. தர உள்ளீட்டு நிதி, பாடசாலையில் சேகரிக்கப்படும் வசதிகள் வேலைகள் கட்டணம் போன்றவற்றில் இருந்து நூல்களைக் கொள்வனவு செய்தல்.

7. பழைய மாணவர்களிடம் இருந்து நூல்களை அன்பளிப்பாகப் பெறுதல்.

8. அதிபர் ஊடாக வெளிநாட்டுத் தூதுவராலயங்கள், இந்து பண்பாட்டுத் திணைக்களம், ஆசியா பவுண்டேசன் (Asia Foundation), இலங்கை புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, தேசிய நூலகம் போன்ற நிறுவனங்களிடம் இருந்து முன் அனுமதி பெற்று நூல்களை இலவசமாகப் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சேகரிக்கப்பட்ட நூல்களை மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் ஆசிரிய நூலகர்கள் அல்லது நூலகர்கள் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

- ❖ நூல் சேகரிப்புத் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட நூல்களை ஏனைய வகுப்பு மாணவர்களும், பெற்றார்களும் பார்வையிடக் கூடிய வகையில் நூல் கண்காட்சியை ஒழுங்கு செய்தல். பல்வேறு தலைப்புக்களிலான கவரக்கூடிய நூல்களைப் பார்க்கும் பொழுது, அவற்றைத் திறந்து மேலோட்டமாகவாவது பார்க்கவேண்டுமென்ற ஆர்வம் பிறக்கும். அதே வேளை நூல் கண்காட்சிகளைப் பார்வையிடுவதால், எவ்வெவ் வகையான நூல்கள் உள்ளன என்பன போன்ற தகவல்களையும் அறிந்து கொள்ளலாம்.
- ❖ சேகரிக்கப்பட்ட நூல்களை, அனைத்து மாணவர்களும் வாசித்துக் கிரகித்து வெளிப்படுத்தக்கூடிய வகையில் நூல்கள் தொடர்பான வினாவிடைப் போட்டிகள் மற்றும் பேச்சுப் போட்டிகள், விவாதப் போட்டிகள் போன்றவற்றை ஒழுங்கு செய்தல்.
- ❖ மாணவர்கள் வாசித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு,குறிப்பிட்ட ஒழுங்குக்கு அமைய 'சுவர்ச் சொற்கள்' கொண்ட பதாதைகளைத் தயாரித்துத் தொங்க விடுதல்.

*"வகுப்பறையில் சுவரில் தொங்கவிடும் சொற்கள் வாசிப்பு ஆற்றலை மேம்படுத்துவதற்கு அத்தியாவசியமானவை"*
- Janet Allen

- ❖ மாணவர்களும், பெற்றார்களும் நூல்களைத் தமது வீடுகளுக்கு எடுத்துச் சென்று ஓய்வு நேர வாசிப்பில் ஈடுபடக்கூடிய வகையில் நூல்களை இரவல் வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்தல். இச் செயற்பாட்டை இலகு படுத்துவதற்காக ஒரு குறித்த நேரத்தை ஒதுக்கி, அப் பணிகளை மேற் கொள்வதற்காக பழைய மாணவிகளையோ அல்லது ஓய்வாக இருக்கும் நேரங்களில் பெற்றோர்களில் எவராவது ஒருவரையோ சுழற்சி முறையில் பயன்படுத்தலாம்.
- ❖ ஆக்கத்திறன் விருத்தியையும் கூட்டுச் செயற்பாடுகளையும் ஊக்குவிக்கும் வகையில் பெற்றோரின் பங்களிப்புடன் "எழுத்தாக்க ஊக்குவிப்பு முகாம்" (Writing Promotion Camp), வாசிப்பு ஊக்குவிப்பு முகாம் (Reading Promotion Camp) என்பவற்றை மாதம் இரு தடவை என்ற அடிப்படையில் பாடசாலையில் நடைமுறைப்படுத்துதல்.
- ❖ வாசகர் வட்டத்தை மாணவர்களிடையே அறிமுகப்படுத்தி, வாரம் ஒரு தடவையாவது,நூல் அறிமுகம் மற்றும் விமர்சனங்களை மேற்கொள்ள வழிப்படுத்துதல்.
- ❖ மாணவர்களால் ஆக்கப்பட்ட சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள், துணுக்குகள் போன்ற பல்வேறு ஆக்கத்திறன் முயற்சிகளைக் காட்சிப் படுத்தி அவற்றுள் மிகச் சிறந்த ஆக்கங்களுக்குப் பரிசுகள் வழங்குதல்.



- ❖ எழுத்தாக்க முகாம்களினூடாகத் தயாரிக்கப்படும் சிறந்த ஆக்கங்களைத் தெரிவு செய்து கையெழுத்துச் சஞ்சிகையாக மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை என்ற அடிப்படையில் வெளியிடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவற்றுள் மிகச் சிறந்தவற்றைத் தெரிவு செய்து அச்சிடப்பட்ட நூல்வடிவில் வெளியிட நடவடிக்கைகளை எடுப்பதுடன், அவற்றை ஏனைய அயல் பாடசாலைகளுக்கும் வழங்கும் வகையில், வெளியீட்டு விழாவை ஒழுங்கு செய்தல்.



*மாதிரி வகுப்பறை நூலகம் - 1*



*மாதிரி வகுப்பறை நூலகம் - 2*

**வகுப்பறை நூலகத்தை மாணவி ஒருவர் ஆர்வத்துடன் பார்க்கின்றார்.**

வாசிப்புத் திறனை மாணவர்களிடம் வளர்த்தெடுப்பதற்கு வகுப்பு மாணவர்களிடையே வாசிப்பு மற்றும் எழுத்தாக்கத் திறன் முகாம்களை ஒழுங்கு செய்தல் வேண்டும். எழுத்தாக்கத் திறன் முகாம்களினூடக மாணவர்கள் அடைந்து கொள்ளும் தேர்ச்சிகள்:

- **சொற்களஞ்சிய விருத்தியைப் பெருக்கிக் கொள்வர். (Vocabulary):**

அதிக அளவிலான நூல்களை வாசிப்பதன் மூலம் புதிய புதிய சொற்களை அறிந்து கொள்ளும் ஆற்றலை அடைந்து கொள்வர். இதன் மூலம் சொற்களஞ்சிய விருத்தி அதிகரிப்பதால், நினைத்தவுடன் எதையும் பேசவோ அல்லது எழுதவோ ஒருவரால் முடியும். அதிகளவிலான வாசிப்பு ஆற்றல் உள்ளவர்களிடமே ஆழ்ந்த அறிவும்,புலமையும் இருக்கும்.

- **பல்வேறு நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில் வெவ்வேறு வகையான நூல்களை வாசிக்கும் திறனைப் பெற்றுக்கொள்வர்:**

ஒவ்வொருவரின் இரசனையும்,தேவைகளும் ஆளுக்கு ஆள் வேறுபடும்.வாசிப்புத் திறனில் நன்கு தேரச்சி பெற்ற ஒருவராலேயே தனது இரசனை அல்லது தேவைக்கு ஏற்ற நூல்களையும் தெரிவு செய்ய முடியும். இத்தகைய முகாம் செயற்பாடுகளினூடாக ஒரு மாணவன் தன்னிடம் உள்ள ஆற்றலுக்கு ஏற்ற வகையிலான செயற்பாடுகளைத் தெரிவு செய்வதுடன்,அந்த ஆற்றலை விருத்தி செய்வதற்கு உதவக்கூடிய உசாத்துணை நூல்களையும் பெற்றுக் கொள்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➤ **நினைவாற்றலை வளர்த்துக் கொள்வர்** -

அதிகளவிலான நூல்களை வாசிப்பதன் மூலமும் அவற்றைக் கிரகித்து உள்வாங்கிக் கொள்வதன் மூலமும் ஒருவரின் நினைவாற்றல் அதிகரிப்பதாக ஆய்வுகள் எடுத்துக் காட்டு கின்றன. எனவே சிறுவர்களிடம் நூல்களின் மீது ஆசையையும், படிக்கவேண்டுமென்ற ஆர்வத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

➤ **படைப்பாற்றலில் விருத்தியடைந்து கொள்வர் (Creative writing):**

வாசிப்புத் திறன் அதிகரிக்க பிழையற எழுதக்கூடிய எழுத்தாற்றல் அதிகரிக்கும். (Reading Improves Writing Skills) ஒருவரிடம் வாசிப்புத் திறனும் எழுத்தாற்றலும் அதிகளவில் இருக்கும் பொழுது சொற்களஞ்சியப் பெருக்கம் அதிகரிக்கும். அதனூடாகவே ஒருவரின் படைப்பாற்றல் விருத்தி செய்யப்படும். இதன் மூலம் சிறுகதை, ஆக்கம், கவிதை, கட்டுரை,நாடக எழுத்துரு ஆக்கம் போன்ற புத்தாக்க முயற்சிகளில் ஈடுபடமுடியும்.

➤ **வினைத்திறன் மிக்க தொடர்பாடலை விருத்தி செய்வர். (Effective Communication)**

நல்ல நூல்களை வாசிக்கும் பொழுதும், அவற்றைக் கிரகிக்கும் பொழுதும் பண்பான வார்த்தைகளைப் பேசவும் கற்றுக் கொள்வர்.மிகச் சிறந்த தொடர்பாடலின் மூலம் மிகச் சிறந்த மாணவன் என்ற பாராட்டுக்களையும் பெற்றுக் கொள்ளலாம். வாழ்க்கையில் வெற்றி பெற்ற பலருடைய வாழ்க்கையைப் பார்த்தால் அவர் மிகச் சிறந்த தொடர்பாடல் திறன் உள்ளவராக இருப்பதைக் காணலாம்.

➤ **பிரச்சினைகளுக்கான சரியான தீர்வை அடையக்கூடிய வகையில் பொருத்தமான தீர்மானம் எடுக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர். (Decision Making):**

அதிகளவிலான நூல்களை வாசித்து அவற்றைக் கிரகித்துப் பயிற்சி பெற்றவர்கள் பல்வேறு வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுக் கொள்வர். இதனால் அத்தகைய நூலறிவு வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் பகுத்தாராயும் தன்மையைக் கொடுக்கும். இதனால் நூலறிவு குறைந்தவர்களை விட இவர்களால் இலகுவில் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் காணமுடியும்.

➤ **பகிர்ந்து வாசித்தல், உரத்து வாசித்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளின் மூலம் மொழி விருத்தியில் உயர்ந்த அடைவு மட்டத்தைப் பெற்றுக் கொள்வர்:**

பகிர்ந்து வாசித்தல் என்பது ஆசிரியர் அல்லது ஒரு மாணவன் நூலின் பகுதிகளை மேலோட்டமாகக் காட்டி, அவை தொடர்பாக நூலின் முழுப்பகுதியையும் கலந்துரையாடிய பின்னர் நூலின் பகுதிகளை வாசித்தல் பின்னர் இரண்டாவது தடவையாக நூலை வாசிக்கத் தொடங்கும் பொழுது,அதே நேரத்தில் சமாந்தரமாக ஏனைய மாணவர்களும் சேர்ந்து வாசித்தலைக் குறிக்கும். இம்முயற்சியில் நன்கு பழக்கப்பட்ட மாணவர்கள் பின்னர், உரத்து வாசித்தல் (Loud Reading) பயிற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரத்து வாசித்தல் பயிற்சியின் அனுகூலங்கள

01. குரல் நாண் விரிவடையும்

02. மனதை ஒருமுகப்படுத்துதல்

03. சொற்களின் உச்சரிப்புக்கள் தெளிவாக இருக்கும்.

➢ **அதிகளவிலான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் (More opportunities):**

உயர்ந்த வாசிப்பு மட்டத்தையும், எழுத்தாக்கத் திறனையும் கொண்டவர்கள், இத் திறன்களை விருத்தி செய்யாத ஏனையவர்களைவிட பாடசாலைகளிலோ அல்லது பணியிடங்களிலோ அதிக அளவிலான வாய்புக்களை உடையவர்களாகக் காணப்படுவதாக வாசிப்பு மேம்பாடு தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகள் காட்டுகின்றன.

➢ **நுணுக்கமாகச் சிந்தித்துச் செயற்படும் ஆற்றலைக் கொண்டிருப்பர் (Critical Thinking)**

சிறுவர்களுக்கான டிஜிற்றல் மீடியா நிறுவனத்தின் பணிப்பாளாராக இருக்கும் பேராசிரியர் பற்றீசியா கிறீன்பீல்ட் அவர்கள்,

(**Professor** Patricia Greenfield, director of the Children's Digital Media Center at UCLA)

"டிஜிற்றல் ஊடகத்துறையின் வளர்ச்சியானது சிறுவர்களின் நுணுக்கமாகவும் கருத்தூன்றியும் சிந்தித்து மதிப்பிடக்கூடிய அனைத்துத் தகவல் மூலங்களையும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆற்றல்களைக் குறைத்துவிடுகின்றன.நுணுக்கமாகச் சிந்திக்கும் ஆற்றலானது எந்த ஒரு விடயத்தையும் விரைவாக விளங்கிக் கொள்ளவும்,சொந்த அபிப்பிராயத்தை எடுத்துக் கூறவும் உதவும். எவ்வளவுக்குக் குழந்தைகளிடம் வாசிப்புத் திறனை அதிகரிக்கின்றோமோ,அந்த அளவுக்கு அவர்களின் விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் அதிகரிக்கும்" என்று குறிப்பிட்டதானது, சிறுவர்களிடையே சிந்திக்கும் திறனை வளர்க்கவேண்டுமானால், அவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

➢ **கூட்டாகச் செயற்படும் தன்மையை வளர்த்துக் கொள்வர்.**

பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணும் பொழுதும், ஆக்க முயற்சிகளில் ஈடுபடும் பொழுதும் குழுவாகச் சேர்ந்து இயங்குவதால்,ஒருவருக் கொருவர் கூட்டாகச் சேர்ந்து இயங்கும் தன்மையை வளர்த்துக் கொள்வர்.

➢ **வாசிப்பு மற்றும் படைப்பிலக்கியம் என்பவற்றில் மாணவர்களும், பெற்றார்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் பயனுள்ள பொழுது போக்குகளில் நேரத்தைக் கழிப்பர்.**

வாசிப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் ஒருவர் எப்பொழுதும் புத்தகங்களுடன் இருப்பதால், அவர் தனிமையாக இருப்பதாகக் கருதமாட்டார்.பல்வேறு விடயங்களை வாசிப்பின் மூலமும்,எழுதுவதன் மூலமும் பெற்றுக் கொள்வதால்,அவருடைய ஒவ்வொரு நிமிடமும் பயனுள்ள பொழுதாகக் கழியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **சமூகத்தில் நன்மதிப்புடன் வாழும் நிலையை அடைந்து கொள்வர்:**

சமூகத்தில் இடம் பெறும் பொது நிகழ்ச்சிகள் மற்றும் வைபவங்கள், கருத்தரங்குகளில் கற்றவர்களை அல்லது வாசித்தலினூடாகத் தனது அறிவை வளர்த்துக் கொண்டவர்களை சமூகம் எப்பொழுதும் கௌரவிக்க முன்வரும்.இது அவருக்குச் சமூகத்தில் இருக்கும் நன்மதிப்பையும் கௌரவத்தையும் காட்டுகின்றது.

- **ஒருவரின் தர்க்கிக்கும் ஆற்றலையும், நியாயப்படுத்தும் தன்மையையும் மேம்படுத்தும்:**

பல்வேறு வகையான நூல்களை வாசிக்கும் ஒருவரிடம் மற்றையவர்களைவிட, ஒவ்வொரு துறை சார்ந்த விடயம் தொடர்பாக தர்க்கிக்கும் திறனும், நியாயப்படுத்தும் தன்மையும் அதிகளவில் காணப்படும்.

- **வாசிப்புக்கள் மன அழுத்தத்தைக் குறைக்கும்:**

நூல்களை வாசிப்பவர்களிடம் மனஅழுத்தத்தைக் (Tension) குறைக்கும் சக்தி இயல்பாவே காணப்படும் அலுவலகத்தில் இருந்தோ அல்லது பாடசாலையில் இருந்தோ வீட்டிற்கு வந்தவுடன் சிலர் தொலைக் காட்சி அலைவரிசைகளைப் போட்டுப் பார்த்தபடி அன்றைய வேலைகளில் ஈடுபடுவர். வேலைத்தளங்களில் அல்லது பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள மன அழுத்தங் களில் இருந்தும் விடைபெற்று வந்து அதை விட மிகக் கொடூரமான மன அழுத்த்திற்குள் தாமாகவே தள்ளப்படுகின்றனர். தொலைக்காட்சிகள்; சில நேரங்களில் மனதுக்கு ஒரு ஓய்வை ஏற்படுத்துகின்றன என்றாலும் அவற்றில் ஒளிபரப்பாகும் சில நிகழ்ச்சிகள் குறிப்பாக சில வர்த்தக விளம்பர நிகழ்ச்சிகள்மற்றும் நீண்ட தொடர் நாடகங்கள், (Mega series) வன்முறையைத் தூண்டும் காட்சிகள் ஆகியவை மேலும், மேலும் மன அழுத்தத்தை அதிகரிப்பதுடன், மனதில் கொடூரத் தன்மையையுமல்லவா ஏற்படுத்துகின்றன. உண்மையாகவே மன ஆறுதலை வேண்டி நிற்கும் ஓருவரை தொலைக் காட்சியை நிறுத்தி நல்ல நூலை வாசிப்பதற்கு வழிப்படுத்தும் பொழுது சுகமான அனுபவத்தை நூல்களுடன் பகிர்ந்து கொள்வார்.

வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி காலம் காலமாக பலர் எழுதிக்கொண்டும், பேசிக்கொண்டும் வருகின்றார்கள். இதற்காக மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் மத்திய கல்வி அமைச்சு போன்றவை பெருமளவிலான நிதி ஒதுக்கீடுகளைச் மேற்கொண்டுவருகின்ற போதிலும், மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் வாசிப்பு மற்றும் ஆக்கத்திறன் செயற்பாடுகளில் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியவில்லை. இதற்கான குறைபாடுகள் எங்கே அல்லது யாரிடம் என்று பரிசோதனை செய்து ஒருவர் மீது ஒருவர் குறை காண்பதை விட எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவதனூடாக வாசிப்புத் திறனை வினைத்திறனுடையதாக்கலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bhagavad Gita on Aspects of Education

***Mrs. Prabahari Rajagopalasingam***
*BSc,BA,PGDip(Ed),MEd*

*The Bhagavad-Gita (Gitai) is one of the greatest scriptures in the world and is one of the most translated religious classics of the present day. It has eternal messages given from various angles that a human wants to live a life of meaning and fulfilment. It teaches one how to counter problems and challenges of life and also how to be preventive with regard to various crisis and emergencies of life. It has an immense and timeless relevance to education.*




*According to Bhagavad Gita, education is sacred and makes a person perfect. Sri Krishna in Gita says "Education is a training of the body and mind of a person to help him gain through lawful means, work efficiency, prosperity, self-esteem, self-possession, objective and clear thinking, gradually leading the person towards gaining a sense of fulfilment and abiding love for God".*

*Compared to this, Swami Vivekananda defines education as follows: "Education is the manifestation of the perfection already in man". What is the goal of education? He answers, "We want education by which character is formed, strength of mind is increased, the intellect is expanded and by which one can stand on one's own feet. What we need is to study the different branches of knowledge that is our own culture and with it English language and western science; we need technical education that will develop industries. He continues "The end of all education and all training should be man-making: The end and aim of all training is to make the men and women grow". He says "Education is not the amount of information that is put into your brain and runs riot there, undigested, all your life. We must have life-building, man making, character making assimilation of ideas". What a beautiful idea? Most of the present views on education are silent on the ultimate goal of education, and are centred on bread-earning, skill learning and secular knowledge-gathering.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*A child receives a quarter of its knowledge from its parents, the second from its teachers, the third through experience as it grows, and the last with the passage of time. Therefore, the teacher has an important role to play in the development of a person's life; the personal life of the teacher, in particular. Swami Vivekananda says "Without the personal life of the teacher, there would be no education".*

*The Gita indicates some qualities of a good teacher, as personified by Sri Krishna, which are keeping with the traditional or time-tested views: Gita says; a good teacher is one who is:-*

*(i) Straight forward, frank, guileless, contented, not greedy, impossible to be swayed by worldly ambitions and desires.*

*(ii) Who is trustworthy, has mastered his subject, clarity of mind, and ability to present a subject in a systematic way, avoiding redundancy and unnecessary digression merely to show off scholarship.*

*(iii) A good teacher should have great patience and self control, at no time getting annoyed or disappointed with a student, no matter how ordinary or challenging a student's questions.*

*(iv) A good teacher creates self-confidence in students; keep them alert and energetic*

*(v) The best teacher is one who, besides imparting to the students temporal life skills, secular knowledge and means to mundane success, deepens their vision to perceive the existence of God.*

*(vi) The teacher must be able to create the power of discrimination or critical thinking of students. Without this power, education is incomplete. This is the power that grows each person's individuality, uniqueness. Once this power of discrimination is aroused, the teacher may as well stand back and watch the new 'ship' sailing out in its human and spiritual journey. Critical thinking power of discrimination, or power of making the right choice become possible to practice when one has control over ones emotions such as personal ambitions, jealousy and egotism. A good teacher should first possess this quality. The students follow the teacher's life. Gita says: "Whatsoever the superior person does, that very thing is followed by others".*

***Reference:*** *Gita for everyday living, The Vedanta Kesary, Vol. 95, No. 12, December 2008.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Different Styles In Bharatha



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதியாக நம்புங்கள்

**தி. சுபாஜினி** (பழைய மாணவி)
பொறியியல் பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

வெற்றிகரமாக வாழும் மனிதர்களின் வெற்றி இரகசியங்களுள் ஒன்று அவர்களின் தீவிர நம்பிக்கை. ஒரு தனி மனிதனின் அசைக்க முடியாத நம்பிக்கையால் உலக சரித்திரத்தையே மாற்றி அமைக்கலாம். அசைக்க முடியாத தன்நம்பிக்கை என்பது "நினைப்பது நிறைவேறும்! இந்த முடிவிலிருந்து பின்வாங்க மாட்டேன்", என்பது தான்

நம்பிக்கை உறுதியாக இருக்கும் போது தொடர்ந்து செயல்படுவோம் வெற்றி தோல்வி பாதிக்காது. குறிப்பாக அடுத்தடுத்து சில தோல்விகள் வந்தாலும் அசைக்க முடியாத மன உறுதியால் மீண்டும் முயற்சி செய்வோம். ஆழ்ந்து சிந்தித்து மீண்டும் குறிப்பிட்ட காரியத்தை செய்து முடிக்க முயற்சி செய்வோம். செயலில் தோல்வி ஏற்பட்டாலும் நம்பிக்கை பலமாக இருந்தால் நமது அடுத்த முயற்சியை எவராலும் தடுக்க முடியாது.

ஒவ்வொரு தனி மனிதனின் வெற்றியும் எங்கே தெரியுமா இருக்கிறது? அவனது உள்ளத்தில் தான் வேறு எங்குமே இல்லை. அனைத்தும் அவன் மனதில் இருந்து தான் பிறக்கின்றது. எந்த அளவு நம்புகிறானோ எந்த அளவு மனவுறுதியுடையவனாக இருக்கின்றானோ அந்த அளவிற்கு அவன் வாழ்வில் வெற்றியும் கிட்டுகிறது முக்கியமாக நலமும் வளமும் தொடர்ந்து கிடைக்கும்.

வெற்றியை நமது நினைப்பில் உறுதியாக வைத்துக் கொண்டு தேடினால். எளிதில் கிடைத்து விடும்! ஒருமுறை வெற்றி பெற்றவர் தொடர்ந்து வெற்றி பெறுகிறார். அதே நேரத்தில் எங்காவது எதிர் பாராத தடையோ சறுக்கலையோ நம்பிக்கைத் துரோகத்தையோ சந்தித்தால் என்ன செய்கிறார்கள்? கொஞ்சம் நிதானித்து மீண்டும் மனதை நம்பிக்கையின் பக்கமோ அல்லது வெற்றியின் பக்கமோ ஒருமுகமாகச் சிந்தித்து செயற்பட்டு வெற்றி பெற்று விடுகிறார்கள். இவ்வாறு மனதை சரியாக வைத்துக் கொண்டதால் சிக்கலான சூழ்நிலையிலும் உற்சாகத்துடன் எழுந்து செயற்பட முடிந்தது.

இதிலிருந்து தோல்வி பற்றியோ தனது தவறான முடிவுகள் பற்றியோ சிந்திக்காமல் மீண்டும் வெற்றியைப் பற்றி சிந்தித்ததால் தான் தோற்றவர் மீண்டும் வீறு கொண்டு எழுந்து வாழ முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே எல்லா சூழ்நிலைகளிலும் வெற்றி, மகிழ்ச்சி பற்றிய நம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் ஒருமுகச் சிந்தனையுடன் உறுதியாக சிந்தியுங்கள்.

வெற்றியைத் தேடினால் எளிதில் கிடைத்து விடும் என்பது உண்மையா? உமிழ்நீர் வேண்டும் என்றால் என்ன செய்கின்றோம்? உடனே அது நம் வாயில் இருப்பதாக கற்பனை செய்த படியே உமிழ்நீரை கொஞ்சம் கொஞ்சமாகச் சுரக்க செய்து விடுகிறோம்.வாயினுள் உமிழ்நீர் இருப்பது போல உடனடியாக கற்பனை செய்து கொண்டு தேவையான உமிழ்நீரை அடுத்த சில வினாடிகளில் வாயில் கொண்டு வந்து விடுவது போலவே நாம் விரும்பும் வெற்றியும் மகிழ்ச்சியும் நமக்கும்(ள்) இருக்கிறது என்று நம்பி முயற்சி செய்தால் நாம் அடைய வேண்டியதை அடைந்தே தீருவோம்.

இதே போலத்தான் நமது வாழ்க்கையில் எதை முதலில் செய்து முடிக்க வேண்டுமோ அதை உடனே ஆரம்பித்து விட வேண்டும்.எவ்வளவு தடைகள் பிரச்சினைகள் என்று யோசித்துக் கொண்டிருப்பதால் இலட்சியத்தை அடைய முடியாது.நமது உள்ளம் எந்த அளவு நம்பிக்கையுடன் இருக்கிறதோ அந்த அளவிற்கு ஆர்வத்துடன் தேடும் பொழுது தடைகளை எளிதாகத் தாண்டலாம்.

எதையும் தள்ளிப் போடாமல் உடனுக்குடன் முடிவெடுத்து செய்து முடிக்க முயற்சி செய்ய வேண்டும். உடல் உழைப்பை விட அறிவைப் பயன்படுத்தி செயற்பட வேண்டிய பணிகள் அதிகரித்து விட்டன. இதனால் தான் காலத்தைப் போற்றி நேரப்படி வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

நம்முடைய கடமைகளையும் இலட்சியங்களையும் செய்து முடிக்கவும், பிரச்சினைகளை சமாளிக்கவும் மனதாலும் அறிவாலும் யோசித்தும் பல கோணங்களில் சிந்தித்தும் முடிவெடுத்து அதன்படி எதையும் தள்ளிப் போடாமல் உடனுக்குடன் முடிவெடுத்து செய்து முடிக்க முயற்சியுடன் செயற்பட வேண்டியுள்ளது.

இதன்படி மனதில் வெற்றிச் சித்திரத்தை-திட்டத்தை உருவாக்க அதிக நேரம் தேவைப்படுகின்றதோ அந்த அளவிற்கு ஆர்வத்துடன்தேடும். அப்பொழுது தடைகளை எளிதாகிறது. ஆழ்ந்து சிந்தித்தால் நமது அனைத்துப் பணிகளையும் குறைந்த நேரத்தில் மிகுந்த திறமையுடன் செய்ய வழி கண்டுபிடித்து விடலாம். மக்கள் தொகை வளர்ச்சி, விலைவாசி ஏற்றம் முதலியவைகளால் மிகவும் திறமையுடன் நமது கடமையை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு ஒரே வழி நேரப்படி ஒழுங்கு முறை தவறாமல் வாழ்வதுதான்.கால வரையறைக்குள் வேலைகளைச் செய்து வந்தால் எமது ஒவ்வொரு பணியையும் முடிக்கும் திறமையும் மனக்கட்டுப்பாடும் வளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்நம்பிக்கை இல்லாதவர்களும், தோல்வி ஏற்பட்டுவிடுமோ என்று பயப்படுபவர்களும் பல விடயங்கள் தெரியாதே என்றும் வசதிகள் குறைவாக உள்ளதே என்றும் அஞ்சுபவர்களுமே எந்த ஒன்றையும் தள்ளிப் போடுகின்றார்கள். "தாமதத்தின் முடிவுகள் மிகவும் ஆபத்தானவை" என்பார்கள்.

தன்நம்பிக்கையுடன் வாழ முயற்சி செய்தால் போதும் இலட்சியத்தை உறுதியாக உருவாக்கிக் கொள்ள முடியும்.எதையும் நேரப்படி ஒழுங்கு முறை தவறாமல் செய்யமுடியும்.

முக்கியமான நேரங்களில் விரைவாக முடிவெடுத்து செயற்பட வேண்டிய கட்டாயம் எல்லோருக்குமே உள்ளது. ஏற்கனவே தள்ளிப் போட்டு வருபவர்களால் அவசரமான சூழ்நிலையில் சிந்தித்து செயற்பட முடியாது.நம்பிக்கை உள்ளவர்கள் ஒழுங்கு முறை தவறாமல் அவசரமான சூழ்நிலைகளிலும் விரைவான நல்ல முடிவையே எடுத்து செயற்படுத்தி வெற்றி பெற்று வருவார்கள்.

நமது மனம் நம்பிக்கையில் உறுதியாக இருக்கும் போது விடா முயற்சியுடன் வெற்றி பெற முயற்சி செய்கின்றோம். விடா முயற்சியான நம்பிக்கை பலமாகிற போது சில முயற்சிகள் பலன் தராத போதும் மீண்டும் விடா முயற்சி செய்து விரும்பியதை விரும்பிய படி அடைந்து விடுகிறோம்.

எனவே நமது மனோ பாவத்தை நம்பிக்கை மீது நம்பிக்கை வைக்கும் மனோபாவமாக மாற்றுவதுதான் முக்கியமான வெற்றியாகும்.

- பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளிவிட்டால், அவை வட்டியும், முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்து விடும்.
- தள்ளிப் போடும் பழக்கம் உன் வெற்றிகளையெல்லாம் அள்ளிக் கொண்டு போகிறது என்பதை மனதில் அடிக்கடி நினைத்துக்கொள்.
- எளிய கனவுகளை அழுத்தமாக சொல்லிப் பழகுங்கள்.

**- அன்னை தெரேசா -**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் கணினிகள்

**V. Rarajaratnam.**
*Computer Resource Center Manager.*
*Trincomalee.*

மனிதனின் கண்டுபிடிப்புகளில் கணினிகள் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. மனிதனால் உருவாக்கப்பட்ட கணினிகள் இன்று மனிதனை மாற்றி அமைக்கின்றது என்று கூறினால் அது மிகையான ஒன்றாக கருதமுடியாது. மனிதனின் சிந்தித்தல், தீர்மானம் எடுத்தல், செயற்படுத்தல் போன்றவற்றில் கணினிகள் செல்வாக்கு செலுத்தி வருகின்றன. நவீன கணினிகள் மனிதனின் அனைத்து துறைகளிலும் தனது தேவையை உணர்த்தி வருவதை நாம் இன்று காண்கின்றோம். நவீன கணினிகள் அதிசயிக்கத்தக்க வகையில் சிக்கலான பிரச்சினைகளுக்கு வேகமாகவும், திருத்தமாகவும் தீர்வுகள் தருகின்றன. கணினிகள் வன்பொருள் (Hard ware), மென்பொருள் (Soft ware) என இரண்டு வேறுபட்ட அம்சங்களை உள்ளடக்கி உள்ளன. கணினியில் தொட்டுணரக் கூடிய பகுதிகள் யாவும் வன்பொருட்கள் எனவும், அவற்றின் இயக்கத்திற்குக் காரணமான கட்டளைத் தொகுதிகள் மென்பொருட்கள் எனவும், கொள்ளப்படுகின்றன. இவை இரண்டிலும் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்கள் நவீன கணினிகளின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தன.



1981ல் அமெரிக்காவின் IBM நிறுவனம் முதல் தனிநபர் கணினியை (Personal computer) உலகிற்கு அறிமுகம் செய்தது. 1983ல் ஆறு மில்லியன் கணினிகளை விற்பனை செய்து சாதனை படைத்தது. எனினும் இக் கணினிகள் சாதாரண மக்களால் இலகுவாகப் பயன்படுத்தக் கூடியவையாக இருக்கவில்லை.

கணினியை இயக்குவதற்கான கட்டளையைப் பயன்படுத்தும் முறையும் அவற்றை ஞாபகத்தில் வைத்திருப்பதும் கடினமான வேலையாக இருந்தது. 1984ல் அப்பிள் (Apple) நிறுவனம் சாதாரண பயன்பாட்டாளர்கள் இலகுவாக கையாளக் கூடியவாறு கணினியை உருவாக்கி உலகிற்கு அறிமுகம் செய்து விற்பனையில் IBM நிறுவனத்தின் சாதனையை முறியடித்தது. இங்கு கட்டளைகளை ஒருவர் மனனம் செய்ய வேண்டிய தேவை இருக்கவில்லை. கணினித் திரையின் பொருத்தமான இடத்தில் சுட்டியை (Mouse) வைத்து கிளிக் (Click) செய்வதன் மூலம் தேவையான கட்டளைகளை கணினியூடு செலுத்தக் கூடியதாக இருந்தது. Graphical User Interface(GUI) எனும் புதிய தொழினுட்பம் ஒன்றைப் பயன்படுத்தியதின் மூலம் இது சாத்தியப்பட்டது. இன்று நாம் பயன்படுத்தும் தனிநபர் கணினிகள் அனைத்திலும் இத் தொழினுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினிகள் அதனுள் அனுப்புகின்ற தரவுகளை (Data) ஒழுங்குபடுத்தி (Processing) தகவல்களாக (Information) வெளித்தருகின்றன (Output). எண்கள், எழுத்துக்கள், உருக்கள், ஒலி..... போன்ற கணினியுள் செலுத்தக் கூடிய அனைத்தும் தரவுகளாகும். தரவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு பயனாளி ஒருவருக்கு பயன்படக் கூடியவாறு தகவல்களாகத் தரப்படுகின்றன. கணினிகள் தகவல்களை விரைவாகவும் திருத்தமாகவும் வழங்குகின்றன. மனிதர்களைப் போன்று களைப்படையாமல் தொடர்ந்து இயங்கக் கூடியனவாக இருக்கின்றன. மனிதன் செயற்பட முடியாத சூழலில் நன்கு செயற்படுகின்றன. இது போன்ற காரணிகள் கணினிகளின் பயன்பாடு அனைத்துத் துறைகளிலும் வேகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான காரணங்களாக அமைந்தன.

ஒருவருடன் ஒரு கணினி என்றிருந்த நிலைமை கணினி வலைப் பின்னல் (Computer Network) இன் வருகையுடன் கணினிகள் அடுத்த படிமுறை வளர்ச்சியைப் பெற்றுக் கொண்டது. புதிய வலைப்பின்னல் கருவிகள் உருவாக்கப்பட்டன. வன்பொருள், மென்பொருள் இரண்டிலும் கணினிகள் புதிய வடிவெடுத்தன. கணினிகள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு அவை ஒன்றுக்கொன்று தகவல் பரிமாற்றம் செய்யக் கூடியவாறு அமைந்த தொகுதி கணினி வலைப்பின்னல் எனப்படும். கணினி வலைப்பின்னல்கள் தேவைக்கேற்றவாறாகவும் இடத்திற்கேற்றவாறாகவும் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம் பருமன் என்ற அடிப்படைகளில் வெவ்வேறு வகையில் காணப்படுகின்றன. வலைப்பின்னல் தொழில் நுட்பத்தில் (Network Technology) ஏற்பட்ட அபரிதமான வளர்ச்சியின் காரணமாக உலகில் எந்தவொரு கணினியையும் ஒன்றுடன் ஒன்று இணைக்கக் கூடியவாறான சர்வதேச வலைப்பின்னல் (world wide web-www) தோற்றம் பெற்றது. உலகில் பரவலாக உள்ள சிறிய வலைப்பின்னல்களை ஒன்றுடன் ஒன்று இணைக்கக் கூடியவாறு தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது. வலைப்பின்னலில் உள்ள ஒரு கணினி பயன்பாட்டாளர் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பது முக்கியமான அம்சமாகும்.

வேண்டிய தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதில் கணினிகளும், தகவல்களை ஓரிடத்தில் இருந்து இன்னுமொரு இடத்திற்கு உடன் அனுப்புவதில் வலைப்பின்னலும் பெரும்பங்கு வகிக்கின்றன. இவை முறையே தகவல் தொழில் நுட்பம், தொடர்பாடல் தொழில் நுட்பம் என்ற துறைகளாக நோக்கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் அவற்றின் தனித்துவம் தொடர்பில் தனித்தனி துறைகளாக வளர்ச்சி பெற்று வந்தாலும் அவை ஒன்றையொன்று பிரித்துப்பார்க்க முடியாதவாறு ஒன்றாக வளர்ச்சி பெற்று மக்களுக்கு சேவையாற்றி வருகின்றன. இதனால் இவை ஒன்றிணைந்த துறையாகத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் (Information and Communication Technology- ICT) துறையாக நோக்கப்படுகின்றது.

பாடசாலைக் கல்வியிலும் இதற்கென ஒருபாடத்திட்டம் உட்புகுத்தப்பட்டுள்ளது. கணினி வலைப்பின்னலினூடாக தகவல்களைப் பரிமாறிக் கொள்வதென்பது பல படிமுறைகளை உள்ளடக்கியது. மனிதன் தனது மொழியில் தகவல்களை ஒரு முனையில் வழங்குவதையும் மறுமுனையில் அதே மொழியில் பெற்றுக்கொள்வதையும் மட்டும் தான் பயன்பாட்டாளர்கள் உணர்ந்து கொள்கின்றனர். ஆனால் அதற்கிடையில் அத்தகவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினியில் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறான கணினி மொழிக்கு மாற்றம் பெறுதல், ஊடகத்தில் கடத்தப்படும் வேகத்தை பேணுதல் தகவல்களுக்கான பாதுகாப்பு (security) வலைப்பின்னலில சரியான பாதையைத் தெரிவு செய்தல், தகவல்களின் ஒருங்கிசைவு (Sincronization) போன்ற பல சிக்கலான இடைநிலை அம்சங்களுடன் தொடர்புபட்டுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியில் பல சவால்கள் எதிர்நோக்கப்பட்டன. எண்கள், வரிவடிவங்கள், படம், ஒலி போன்றவற்றை ஒரேவேகத்தில் அனுப்புதல், இவற்றை ஊடகங்களில் அனுப்புவதற்கான பொது முறையைப் பெற்றுக்கொள்ளல் என்பன இவற்றில் சில. இவ்வாறான கேள்விகளுக்கு விடையாக இணையம் (Internet) என்கின்ற தொழில் நுட்பம் உதயம் பெற்றது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஒரு புதிய சகாப்தமாக இணையம் வளர்ச்சி கண்டது. உலகளாவிய பலதரப்பட்ட வலைப்பின்னல்களை ஒன்றிணைத்துக் கொண்டு கோடிக்கணக்கான பாவனையாளர்களுக்கிடையில் தொடர்பாடல் மற்றும் சேவைகளை வழங்கிவருகின்றது. இணையத்தில் தனியார், வியாபாரம், கல்வி, அரச வைத்தியம் எனப்பலதரப்பட்ட வலைப்பின்னல்கள் இணைந்து காணப்படுகின்றன.. இணையத்தின் வருகை ஏற்கனவே இருந்து வந்த ஊடகங்களான தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தியது. பத்திரிகை, புத்தகங்களை ஓரிடத்திலிருந்து ஓரிடத்திற்கு அனுப்புவதற்கும் அச்செடுப்பதற்கும் வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. இணையம் என்ற எண்ணக்கரு 1960ல் அமெரிக்காவில் உருப்பெற்றதிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட தொடர் ஆய்வுகளின் பயனாக 1990ல் உலகவலைப்பின்னலில் இயங்கி மனித வர்க்கத்தின் வாழ்க்கை அங்கமாக மாறிவிட்டது.

மனிதனின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் கணினிகள் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன. மென்மேலும் அவற்றின் ஈடுபாடு இறுக்கமடைந்து வருகின்றது. கணினிகள் இயங்க மறுத்தலால் உணரப்பட்டுள்ளது.

குறிப்பாக எதிர்கால சமூகத்தை வடிவமைக்கும் இன்றைய கல்வித்துறையில் கணினிகள் பாரிய செல்வாக்கைச் செலுத்துகின்றன. போட்டி மிகுந்த இவ்வுலகின் ஒவ்வொரு மாணவனும் தான் பெற வேண்டிய கல்வியை உரியகாலத்தில் பெறவேண்டியது அவனது முக்கிய கடமையும் உரிமையுமாகும். புதிய தகவல் யுகத்தின் சவால்களை தைரியமாக முகம் கொடுப்பதற்கு விரைவான கற்றல் அவசியமாகும். இல்லாவிடின் பல எதிர் விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும். இந்த விடயம் 1983ல் அமெரிக்க அரசினால் அமைக்கப்பட்ட commission on excellence in education என்ற ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 'A Nation at risk' என்ற அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இன்று பொதுக்கல்வியில் கணினிகளின் பயன்பாடு அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

வளர்ந்த நாடுகள் கல்வித்துறையை வளர்த்தெடுப்பதில் கணினிகளின் உச்சப்பயன்பாட்டைப் பெற்றுக்கொள்கின்றன. மாணவர்கள் சிரமமின்றி விரைவாகக் கற்றுக்கொள்கின்றனர். வேண்டிய நேரத்தில் விரும்பிய கல்வித்துறையைத் தெரிவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதற்கு இன்றைய கணினியுகம் வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. அமெரிக்காவில் இன்றைய கல்வித்துறையின் வளர்ச்சி நிலையில் கடந்த காலத்தில் கணினித்துறையின் கல்வியில் கொண்டிருந்த ஈடுபாட்டைச் சான்றாகக் கூறலாம். 1981 தொடக்கம் 1991 வரையான 10 ஆண்டுகளில் கணினிகளைப் பயன்படுத்திய பாடசாலைகளின் எண்ணிக்கை 18% இலிருந்து 98%மாக அதிகரித்தது. அத்துடன் கணினிக்கு 125 மாணவர்கள் என்ற நிலையில் இருந்து 18 மாணவர்கள் என்ற நிலைக்கு மாற்றமடைந்தது. இது போல் ஸ்டார் (paul Star) என்ற அறிஞரின் கருத்தாகும். மேலும் மாணவர் கல்வி விருத்தியில் ஆசிரியரால் முன்னெடுக்கப்படும் மாணவர்மையச் செயற்பாடுகளில் பல் ஊடகக் கற்பித்தல் கூடிய வினைத்திறனை வழங்கும் என்பது அவரின் எதிர்பார்ப்பாக இருந்தது.

ஊடகங்கள் எனும் போது புதினத்தாள் (News paper), சஞ்சிகைகள் (Magazines), திரைப்படங்கள (Films), வானொலி (Radio), தொலைக்காட்சி (Television), என்பவற்றைக் குறிப்பிடலாம். ஒருவருக்கு ஒருவர் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் இவை தமது பங்களிப்பை வழங்குகின்றன. கற்றல் கற்பித்தலில் இவ் ஊடகங்கள் தமது பங்களிப்பை வழங்குகின்றன. வகுப்பறைக் கற்பித்தலில் இவ் ஊடகங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்துத் தேவைக்கேற்றவாறு கற்பித்தல் பல் ஊடாகக் கற்பித்தல் எனப்படுகின்றது. இவ்வாறு பல ஊடகங்களைப் பயன்படுத்திக் கற்பிக்கும் போது மாணவர்களால் இலகுவாகக் கற்கமுடிவதுடன் விடயங்களை ஞாபகத்திலும் வைத்திருக்க முடிகின்றது.

தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் எழுத்துக்கள் (Characton), சொற்கள் (Words), ஒளிப்படங்கள் (Photos), வரைவியல்கள் (Graphics), ஒளித்தோற்றங்கள் (Videos), அசைவூட்டங்கள் என்பன பயன்படுகின்றன. இவற்றை இலகுவாகவும் சிறந்தமுறையிலும் பயன்படுத்தக்கூடியவாறான சிறந்த தொழில் நுட்பங்கள் கணினிகளில் பயன்படுத்தப்படுகின்றன. மாணவர்களுக்கேற்றவாறு கற்பித்தல் சாதனத்தை உருவாக்கவும் இணையவசதிகளை அத்துடன் இணைத்துக்கொள்ளவும் இவை உதவுகின்றன. Ms power point இதற்கு சிறந்த உதாரணமாகும். இதை பயன்படுத்தி மேற்காட்டப்பட்டவாறு சிறந்த கற்பித்தல் சாதனத்தை உருவாக்க முடியும். இணையவசதிகளையும் இணைத்து சிறந்த நிகழ்த்துகை (presentation) ஒன்றைத்தயார்செய்து கொள்ளமுடியும். கணினியின் ஊடாக வசதிகள் யாவற்றையும் ஒன்றிணைத்து சிறந்த நிகழ்த்துகை ஒன்றைத் தயார் செய்துகொள்வது ஆசிரியரின் முன்னுள்ள சவாலாகும். இதில் ஆசிரியர்கள் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

கல்விக்காக கணினிகளின் பயன்பாடு என்பது இரண்டு பிரதான பகுதிகளை உள்ளடக்கியது.

1. கணினிகளை இயக்குவது தொடர்பான அறிவைப் பெற்றிருத்தல்.
2. ஏனைய பாடங்களைக் கற்பிப்பதற்குக் கணினிகளைச் சிறப்பாகப் பயன்படுத்துவது தொடர்பான அறிவைப் பெற்றிருத்தல்.

கணினிகளை பாடங்களைக் கற்பிப்பதற்காக கணினிகளைப் பயன்படுத்துதல் கல்விப்புலத்தில் முக்கியமான விடயமாக இருப்பினும் அதற்குக் கணினிகளில் உள்ள பயன்படுத்தக்கூடிய அனைத்து அம்சங்களையும் சிறப்பாகக் கையாளும் ஆற்றலை ஒரு ஆசிரியர் பெற்றிருக்க வேண்டும். கற்பித்தலில் பயன்படுத்தக்கூடிய பல மென்பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனையில் உள்ளன. இவற்றில் சிறந்தவற்றைத் தெரிவுசெய்தல், அவற்றைப் பயன்படுத்துதல், வரும் புதிய வசதிகளை அறிந்து கொள்ளுதல் என்பன சிறந்த ஆசிரியரின் சிறப்பியல்புகளாகும். அத்துடன் வரும் புதிய மென்பொருட்கள் பற்றி அறியும் ஆர்வம் அவருக்கு இருக்கும். குறிப்பிட்ட பாட எண்ணக்கருக்களை இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடியவாறு வடிவமைக்கப்பட்ட மென்பொருட்கள் சந்தையிலும் இணையத்திலும் பெற்றுக் கொள்ள முடியும். இவற்றைத் தேடிப் பெற்று ஆசிரியர் தனது கற்பித்தல் சாதனத்தில் இணைத்துக் கொள்ளலாம்.தனது மாணவர்களின் தேவையை உணர்ந்து கொண்டு ஆசிரியர் அர்ப்பணிப்புடன் இயங்கும் போது மாணவர்களின் வெற்றிக்குக் கணினிகள உறுதுணை புரியும்.

ஒரு மாணவனைச் சுயகற்றலில் ஈடுபடுத்துவதற்கு வழிப்படுத்த முடியும். இணையம் இதற்கு சிறந்த உதவியாக இருக்க முடியும். சந்தையில் பொருத்தமான மென்பொருட்களைப் பெற்றுப் பயன்படுத்த முடியும். பாடசாலைகளில் இவற்றைச் சேமித்து வைத்துப்பயன்படுத்த முடியும். மாணவர்கள் தாம் கற்றவற்றை மீள வலியுறுத்திக் கொள்வதற்கு இவை மிகுந்த உதவியாக இருக்கும். கணினிகளின் உதவியுடன் கற்றல் இலத்திரனியற்கல்வி (e-learning) எனப்படுகின்றது. வகுப்பறைக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த கற்றல்-கற்பித்தல் நிகழ்ச்சி பரந்து பட்ட பிரதேசத்தில் நடத்தக்கூடிய வசதியை இலத்திரனியல்க் கல்வி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. ஒரு மாணவன் தான் விரும்பிய இடத்தில் இருந்து கற்கக்கூடிய நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது கல்வியில் தொடர்பாடல் தொழில் நுட்பம் ஏற்படுத்திய பெரும் புரட்சியாகும்.

வளர்ந்த நாடுகள் கல்விக்காகக் கணினி வசதியை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில், வளர்முக நாடுகளின் நிலமை முற்றிலும் வேறுப்பட்டுக் காணப்படுகின்றது. தேவை உணரப்பட்டாலும் அதை நடைமுறைப்படுத்துவதில் பல இடர்பாடுகளைச் சந்திக்கின்றன. இவற்றில் பிரதேசவாரியாகக் காணப்படுகின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், அடிப்படைத் தேவைகளில் நிறைவின்மை என்பன முக்கியமானவை. மின்சாரவசதியற்ற பிரதேசங்கள் இன்றும் காணப்படுகின்றன. இந்த நாடுகளில் கணினிகளின் பயன்பாடு கல்வியில் சமத்துவமின்மை மற்றும் இளைஞர்களைத் தவறான வழிகளில் இட்டுச்செல்லுதல், என்ற எதிர்மறை விளைவுகளுக்குக் காரணமாகவும் அமைகின்றது.

இலங்கை போன்ற நாடுகளும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றன. அடிப்படைக் கணினி அறிவை (Computer literacy) இன்னும் முழுமையாக இலங்கை அடைந்துவிடவில்லை. அடிப்படைக் கணினிஅறிவு என்பது ஒருவர் கணினியை சாதாரணமாகக் கையாளும் திறனாகும். இலங்கையில் இது தொடர்பாகச் செய்யப்பட்ட ஆய்வுகள் பின்வருமாறு தகவல்களைத் தருகின்றது.

2004ல் 9.7%, 2006ல 16.7%, 2008ல் 20.3% , 2011ல் 30% ஆக அடிப்படை கணினி அறிவு காணப்பட்டது. அடுத்துவரும் ஆண்டுகளில் 75% என்ற இலக்கை அடைவதற்கு பல திட்டங்களை இலங்கை அரசு செயற்படுத்தி வருகின்றது பாடசாலை மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் கணினி வழங்குதல் என்பது முக்கியமான இலக்காகும். நாட்டின் கல்வி வளர்ச்சியில் கனிணிப் பயன்பாட்டின் முக்கியத்துவம் உணரப்பட்டமையினாலேயே இது போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நவீன கணினியுகத்துடன் மாணவர்கள் தம்மை இணைத்துக்கொண்டு தமது கற்றல் செயற்பாட்டை முன்னெடுப்பது இன்றியமையாததாகும். இது கற்றலை இலகுபடுத்துவதுடன் உலக கல்வித்தரத்தில் தம்மை மதிப்பீடு செய்யவும் உதவும். ஆசிரியர்கள் நவீன கற்றல்- கற்பித்தல் நுட்பங்களை ஏற்றுக் கொண்டு மாணவர்கள்களை வழி நடத்துவதும் புதிய கற்பித்தல் நுட்பங்களை அறிய ஆவலாக இருப்பதும் இன்றியமையாததொன்றாகும். ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு இதில் பெரும் பங்கு வகிக்கும். ஆசிரியர்களை இத்திசை நோக்கி ஊக்குவிப்பது அனைவரினதும் கடமையாகும். கணினிகளை இணைத்துக்கொண்டு அடுத்த அடியை எடுத்து வைப்பது வளர்ந்து வரும் சமூகத்திற்கு அவசியமான ஒன்றாகும்.

* தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் இன்றைய கல்வியில் பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்ற போதும் இது தொடர்பான விமர்சனங்களும் இருந்து வருகின்றன. அவையாவன:

1. பாரம்பரிய புத்தகக் கல்வியிலிருந்து வேறுப்பட்டிருந்தாலும் கணினிகளை எல்லோராலும் எப்போதும் பயன்படுத்த முடிவதில்லை. காரணம் அனைத்து வீட்டிலும் கணினிகள் கிடைக்கப்பெறவில்லை.
2. கணினியைப் பயன்படுத்திக் கற்பிக்கக்கூடிய பயிற்றப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை.
3. பல பிரச்சினைகளுக்குக் கணினிகள் விடை கொடுத்தாலும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் விடை கொடுக்கக் கூடிய நுண்ணறிவைக் கணினிகள் கொண்டிருக்கவில்லை.
4. கணினிகளைப் பெற்றுக் கொள்வதற்கான பொருளாதார வலு எல்லோருக்கும் இருக்கவில்லை.



இவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்ற போதும் கணினிகளின் தேவை இன்றைய உலகில் தவிர்க்க முடியாத ஒன்றாகும். முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்களை கருத்தில் எடுத்து அவற்றிற்கான பரிகாரங்களைக் கண்டு நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு கணினிகளை ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்துவதே ஒரே வழி. அனைத்து சமூகமும் கணினிகளின் பயன்பாட்டை ஒரே அளவில் பெற வைப்பது நாட்டின் அவசரமான தேவை. கல்வியில், குறிப்பாகப் பாடசாலைக் கல்வியில் கணினிகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பது உகந்த மார்க்கமாகக் கொள்ளலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The needs of the teacher of English

***Mrs. I. Rajmohan***
Teacher,
T/Methodist Girls' College

The three things that a teacher of English needs for his language lessons are: knowledge of the best and most effective methods to use, an understanding of the purpose and aim of each method he uses and confidence and skill in his handling of them with perseverence and courage to carry on the work with good humour and enjoyment.

The teacher should study many books on language teaching. Some of these will certainly will help him to see his problems more clearly but above all he needs to renew and refresh his determination continually to improve in skill and efficiency. Then he will gradually acquire a greater mastery of the techniques and methods of language teaching and with this a fresh interest in his work.




It is no easy task either to teach or to help a teacher to teach a foreign language. There is a special difficulty and it is the difficulty, of overcoming the barrier of the pupils' mother tongue. For, the mother tongue acts as a block in all the learners' language reactions and impedes the learning of the new language because it is firmly seated as the first language. So, when we speak or listen or write in the mother tongue, our minds concentrate only on meaning, not on words or symbols. But in using a new language we cannot at first avoid being aware of language symbols and of attending to words, sentence patterns and grammatical forms, instead of meanings. Thus we see that using the mother tongue is a somewhat different linguistic process from first making use of a foreign language. This makes the task of the foreign language teacher, a task that requires special procedure and technical methods.

Therefore special exercises, certain kinds of language drill and carefully devised methods are necessary to help the pupils to form new language habits. There also have to be very many repetitions at first in order to establish these new linguistic responses and to ensure their re-occurance when needed, and especially to increase the availability of all the elements of the new language, as these are learnt: words, structural patterns, inflections,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tones, rhythms and pronunciations. Then later there needed the constant use of the language in a variety of contexts and for a variety of purposes: in dialogues, stories, plays, questions etc.

This is necessary so that a new language may become a manageable medium of thought, communication and expression.

There is yet another aspect of this subject. That is how to make the foreign language learning contribute to the pupils' education.If the language is taught in a way that is psychologically sound, it must contribute to the pupil's general growth because it is sharpening his intellect &making it play over many kinds of knowledge & experience. But to promote this the teacher has to use methods that foster intelligent thought, wider understanding & deeper sympathies as well as linguistic skills. So the urgent & difficult question for the teacher is "what methods shall I use? Above all the values of understanding & sympathy must always be kept in mind, in order that, the foreign language teaching may bring something of permanent value to the pupil.

So, we see that the task is highly complicated, & that the training that a language teacher should have is by no means simple, or easy to carry out. Infact, the trainer of language teachers needs to have special gifts of mind & personality.

---

# Auto Biography of A Hundred Rupee Note

I narrate my story from a steel box in the strong room of central bank of Ceylon. Where I came a month ago in the company of millions of my companions. I am now awaiting my end. My end has come all too sudden and it is going to be a very pathetic one. It is strongly rumoured that all in my tribe and I would soon be burnt to ashes on the orders of the Government. Such is my bitter fate and I cannot blame any one for it.

I belong to the great family of money. The members of my family are highly valued and honoured by all. This is not a proud boast everyone will admit it. I was born to this family 25 year ago. My place of birth was a reputed English establishment where currency notes of many lands take life. I never expected that a day would come when I would be thrown into the fire for no crime of mine. I am not the only one who is distined to this end. Even millions of others in my group await this tragic end.

When I was born in the year 1987 with million of others, we thought that we had come into the world to play a big part in increasing the prosperity of mankind. Besides my appearance and that of my friends were so lovely and so bright that everyone envied us.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Everyone hailed me as a hundred rupee note of Ceylon and spoke of my colour and grace as if I were a Prince Royal. Such a glorious start in my life filled me with high notions of my importance and of a happy prospect of my futures. Within a week of my birth, I was bundled with millions of my tribe and was put into a strong box. We were given a royal send-off to Ceylon. We flew to Ceylon by a special plane under strict security.

On arrival, we were met by the official of the central bank of Ceylon. A few days after our arrival, I was passed on in the salary packet of a big officer. The big officer carried me home and introduced me to his wife. His wife was so admired of me that she snatched me away from her husband, she had me with her for a few days and then she exchanged me for a lovely sari. The merchant who sold her the sari accepted me and passed me on the next day to another customer of his. This customer in turn gave me to another who gave me to a doctor. In this way I changed hands a hundred times or more and toured almost every part of the country. Everyone cared for me tenderly and treated me with love and respect until five years ago I went into the hands of a cruel miser who imprisoned me with several others of my rank in a dirty, old rusty box. It was only then that I realised that all my rosy visions had been dashed. Once a month or two he would open the box where I was and would stare at me and my companions with the look of a hungry, old jew.

While we were thus resigned to our fate, the old man took us out one midnight and looked at us pathetically. It was a look of utter helplessness. We thought the old man was going to release us at last. He separated us in groups of ten and gave us to one of his friend. The friend took us in his pocket and a day later presented us that the counter of a bank. At the counter I saw thousands of my brethren. I was very glad at this unexpected reunion of all my friends, some of whom had grown very old and looked rather weather-beaten. LO! The man at the counter again chained us in bundles and send us under strong escort to the central bank where I stayed 25 years ago on my arrival from England.

I still remain in a strong room at the central bank and every one here say that we are condemned to be burnt for no fault of us. I dread the very thought of being burnt in the prime of my youth. Such is fate. There is no escape from it. It is only now that I realize that life is but an empty dream. The path of glory leads but to the grave. Let my sad story and miserable end not move your hearts. Let my life be an object lesson for you all. Most of you think that beauty, youth, power and fame shall last forever. Remember that all these are impostors. One cannot remain the object of adoration for long. Every beginning has an end and my end has come all too sudden.

**Samsath banu Rocksan**
2013 COMMERCE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009



Peradeniya University
(T.Subajani & B.Venusha)



Jaffna University
(S.Tharshika, S.Brammya & R.Gayathara)



Eastern University
M.Nitharshan, S.Premapriya & T.Thevatharshini



South Eastern University
K.Thaksalini

# 2010 Jaffna University



(K.Thamilini, P.Pirapothini, P.sagika, S.Krishnaveni & K.Brammya)



S.Thurshanthini

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Best Result in O/L



2009



2010



2011

# Best Result in A/L



2009





2010

2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள்

- அன்பு ஜவஹர்ஷா

இலங்கையில் உள்ள 9675 அரச பாடசாலைகளில் 2910 தமிழ் மூலப் பாடசாலைகள் உள்ளன. 2,15,638 என்ற மொத்த ஆசிரியர் தொகையில் 51,044 பேர்கள் தமிழில் போதிப்பவர்களாவர். பாடசாலை வீதம் 30.08 ஆக இருந்தாலும் ஆசிரியர்கள் வீதம் 23.67 ஆகவே இருப்பதாக 2010 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

ஒரு காலத்தில் பலரின் இலட்சியத் தொழிலாக ஆசிரியர் தொழில் இருந்தது. ஆனால் இன்று க.பொ.த உயர்தர வகுப்புக்கு மேல் கல்வி கற்றவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தொழிலாக இருப்பதால் குறிப்பிடத்தக்க வீதத்தினர் இதை தங்குமிட ஜீவனோபாயத் தொழிலாக கொண்டு கடமையாற்றி வருகின்றார்கள்.

1994.10.06 வரை உதவி ஆசிரியராக தொழிலில் சேர்கின்ற ஒருவர் 30 அல்லது 40 வருட சேவையாற்றி அதே நிலையில் ஓய்வு பெறும் நிலையே இருந்து வந்தது. மேல் சொல்லப்பட்ட திகதி முதல் இலங்கை ஆசிரியர் சேவை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் , சில முரண்பாடுகள் இருந்தாலும் இன்று ஆசிரியர்கள் ஓரளவு நல்ல நிலைக்கு மற்றய சேவைகளோடு ஒப்பிடும் போது கொண்டு வரப்பட்டுள்ளார்கள் என்றே சொல்ல வேண்டும்.

இலங்கை நிருவாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை போன்ற உயர் முகாமைத்துவ சமாந்தர சேவை பதவி அணிகளில் இருப்பவர்களை ஆராய்ந்து பார்த்தால் பெரும்பாலானவர்கள் ஆரம்பத்தில் ஆசிரியர் தொழில் பார்த்தவர்களாகவே இருக்கின்றார்கள். இலங்கை சுங்க சேவை, இறைவரி உத்தியோகஸ்தர்கள் போன்ற பதவிகளிலும் போட்டிப் பரீட்சைகள் மூலம் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு கடமையாற்றி வருகின்றனர்.

இவைகள் பெரும்பாலும் கல்விச் சேவையோடு தொடர்பில்லாத சேவைகளாகும். இலங்கை கல்விச் சேவையில் பின்வரும் நான்கு சேவைகள் அடங்குகின்றன.

1. இலங்கை ஆசிரியர் சேவை
2. இலங்கை அதிபர் சேவை
3. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை
4. இலங்கை கல்வி நிருவாக சேவை

மேல் சொன்ன நான்கு சேவைகளில் மூன்று சேவைகளுக்கு செல்ல ஆசிரியர்களுக்கு வாய்ப்புண்டு. 1994.10.06 தொடக்கம் பிரமாணக்குறிப்பு ஒழுங்காக செயற்படாமை காரணமாக 95/7, 97/5, 98/6, 99/1, 99/19(i),99/(i)(ii),99/1(iii),2000/14,2001/12,2001/12(i),2004/1,2005/4,2008/45,2008/50,2009/4,2009/25,2009/27,2011/30 ஆகிய இலக்கங்களைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றறிக்கைகளின் உதவியால் பதவி உயர்வு பெற்று 2,15,638 பேர்களில் பல ஆயிரக்கணக்கானவர்கள் கொடுப்பனவு இல்லாமல் 33,900 ரூபா வரை அடிப்படை சம்பளம் பெற்று வருகின்றார்கள். வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவோடு 42000 ரூபாக்கு மேல் இவர்களுக்குச் சம்பளம் கிடைக்கின்றது. இவைகள் சேவைக்காலத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டதாக வருகின்றது.

06/2006(viii) இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையில் உள்ள சம்பளத்துடன் கூடிய புதிய பிரமாணக் குறிப்பு 2011.01.01 தொடக்கம் அமுலுக்கு வந்தால் முயற்சியுள்ள திறமையான ஆசிரியர்கள் 15 அல்லது 20 வருடங்களிலேயே இதை விட அதிகச் சம்பளத்தைப் பெறக் கூடியதாக இருக்கும். சிறந்த, திறமையுள்ள ஆசிரியர்களை கற்பித்தல் பணிகளில் வைத்துக்கொள்ளவும் ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் ஏற்பாடுகள் உள்ளன. ஆனால் இவை கிரமமாக, கால அட்டவணைப்படி செயற்படாமை காரணமாகவே இதன் பெறுமதி உணரப்படுவதாகவே இல்லை.

மற்றைய மூன்று சேவைகளுக்கும் ஆசிரியர்கள் போட்டிப் பரீட்சைகளின் மூலம் செல்ல முடியும். இலங்கை கல்வி நிருவாக சேவையின் மூன்றாம் வகுப்பில் 410 வெற்றிடங்களும், இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் மூன்றாம் வகுப்பில் 208 வெற்றிடங்களும் இலங்கை அதிபர் சேவையில் பின்வருமாறு 8,787 வெற்றிடங்களும் உள்ளன.

| அதிபர் சேவை வெற்றிடங்கள் | | |
|---|---|---|
| வகுப்பு | வெற்றிடங்கள் | பரீட்சை மூலம் |
| 1 | 988 | 592 |
| 2-1 | 3,429 | 2,050 |
| 2-11 | 2,611 | 1,567 |
| 3 | 1,759 | 1,759 |
| மொத்தம் | 8,787 | 5,976 |

இலங்கை அதிபர் சேவையில் மூன்றாம் வகுப்பைத்தவிர மற்றைய வகுப்பு வெற்றிடங்களில் 60% வீதமே பரீட்சை மூலம் நிரப்பப்படும். 3ஆம் வகுப்பில் 100 வீதமும் போட்டிப்பரீட்சை அடிப்படையிலேயே நிரப்பப்படவேண்டும்.

சிலர் பெரிய பதவிகளில் இருந்து சேவையாற்ற வேண்டும். என்று ஆசையற்றவர்களாக இருப்பார்கள். அனேகமானவர் பொருளாதார இலாபத்தை நாடி அல்லது இருக்கும் பதவி பிடிக்காமல் வேறு சேவைகளுக்குச் செல்ல விரும்புவார்கள். நோக்கமும், குறிக்கோளும் எதுவாக இருந்தாலும் உள்ள வாய்ப்புகளைப் பற்றி ஆசிரியர்களுக்கு தகவல்களைத் தருவதே எனது நிலைப்பாடாகும். முதலில் மேற்சொல்லப்பட்ட சேவைகளின் ஆரம்பச் சம்பளங்களைப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கல்விச் சேவைகளின் ஆரம்பச் சம்பளம் | | |
|---|---|---|
| **சேவை** | **வகுப்பு/தரம்** | **ஆரம்பச்சம்பளம்** |
| ஆசிரியர் சேவை | 2-11 | 15,995/= |
| | 2-1 | 18,845/= |
| | 1 | 21,645/= |
| அதிபர் சேவை | 3 | 15,995/= |
| | 2-11 | 18,845/= |
| | 2-1 | 21,645/= |
| | 1 | 22,290/= |
| கல்வி நிர்வாக சேவை | 111 | 22,935/= |
| | 11 | 30,175/= |
| | 1 | 36,755/= |
| ஆசிரியர் கல்வியியலாளர் சேவை | 111 | 22,935/= |
| | 2 | 30,175/= |
| | 1 | 36,755/= |

இங்கு காட்டப்பட்டுள்ள கல்விச் சேவைகளின் சம்பளத் திட்டங்கள் 06/2006, 06/2006(iv) இலக்கச் சுற்றறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். இலங்கை அதிபர் சேவை, ஆசிரியர் சேவை சம்பளத் திட்டங்கள் 2011.01.01 தொடக்கம் 06/2006(viii) இலக்கச் சுற்றறிக்கை அமுலானால் அதிகரிக்கும் என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

ஆசிரியர் சேவையில் உள்ள ஒருவர் இலங்கை அதிபர் சேவை, ஆசிரியர் கல்வியியலாளர் சேவை, கல்வி நிர்வாக சேவைகளுக்கு விண்ணப்பிக்கும் போது ஆரம்ப சம்பளத்தில் இருப்பது இல்லை. சேவைக் காலத்தைப் பொறுத்து சம்பளங்கள் மாறுபட்டு இருக்கும். அதிபர் சேவையில் பின்வரும் தகைமைகளைக் கொண்டவர்கள் எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கலாம். ஆனால் கல்வி நிருவாக சேவை, ஆசிரியர் கல்வியியலாளர் சேவை ஆகியவற்றிற்கு மூன்றாம் வகுப்புக்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம். முதலில் அதிபர் சேவையைப் பார்ப்போம்.

இச்சேவையின் 3ஆம் வகுப்பிற்கு மட்டுமே விண்ணப்பிக்க பயிற்சிக்குப் பின்னர் 5 வருடத்திற்கு குறையாத திருப்திகரமான சேவையினைக் கொண்ட, வகிக்கும் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவராக இருக்க வேண்டும்.

2ஆம் வகுப்பின் 11ஆம் தரத்திற்கு பயிற்சிக்குப் பின்னர் 10 வருடத்திற்கு குறையாத சேவையினைக் கொண்ட பயிற்றப்பட்ட ஆசிரியராக அல்லது பட்டதாரி ஆசிரியராக 5 வருட திருப்திகரமான சேவையினைக் கொண்ட வகிக்கும் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவராக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ஆம் வகுப்பின் 1ஆம் தரத்திற்கு பயிற்சிக்கு பின்னர் 12 வருடத்திற்கு குறையாத திருப்திகரமான சேவையினை உடைய பயிற்றப்பட்டவராக அல்லது பட்டதாரி ஆசிரியராக 7 வருடத்திற்கு குறையாத திருப்திகரமான சேவை உடைய சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியராக இருக்க வேண்டும்.

இலங்கை அதிபர் சேவையின் முதலாம் வகுப்பிற்கான போட்டிப்பரீட்சைக்குத் தோற்ற பயிற்சியின் பின்பு 15 ஆண்டுகளுக்குக் குறையாத பயிற்றப்பட்ட ஆசிரியராக திருப்திகரமான சேவைக்காலத்தை அல்லது, பட்டதாரி ஆசிரியராக 10 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைக்கொண்ட, சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட ஆசிரியராக இருக்க வேண்டும். இதிலிருந்து 2-11,2-1,1 ஆம் வகுப்பு ஆசிரியர்களே இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என்பது தெளிவாகக் கொள்ளலாம். சம்பளத்திட்டங்கள் தற்போது ஊடகங்களில் தெளிவாக வெளியிடப்பட்டு வருகின்றன. பதவிகளைப் பெற்றுக்கொண்டால் ஒரு போதும் பெற்றுக் கொண்டிருக்கும் சம்பளம் குறையாது. ஆனால் பதவிகளைப் பொறுத்து வருடாந்த சம்பள ஏற்றங்கள் குறைவதற்கு வாய்ப்புண்டு.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 410 வெற்றிடங்களில் பின்வருமாறு நிரப்பப்படும்.

| வீதம் | தொகை | தகைமை |
|---|---|---|
| 25% | 103 | 26 வயதுக்குக் குறைந்த பட்டதாரிகள் |
| 45% | 184 | 10 வருட பயிற்றப்பட்டஅல்லது 5 வருட பட்டதாரிசேவைக்காலத்தைக் கொண்டவர்கள் |
| 30% | 123 | 3 வருட சேவையை பூர்த்தி செய்த 1 ஆம் வகுப்பு அதிபர்கள் |

மேற்காட்டப்பட்டுள்ளவாறு சிறந்த, மட்டுப்படுத்தப்பட்ட, திறமை, சேவைமூப்பு என்ற அடிப்படையில்தான் மூன்றாம் வகுப்பு வெற்றிடங்கள் நிரப்பப்படும். ஆசிரியர் நிபுணத்துவ அல்லது ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் மூன்றாம் வகுப்புக்கு 22 வயதுக்கும் 30வயதுக்கும் இடைப்பட்ட கல்வி தொடர்பான முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு (மேல்) பட்டம் பெற்ற அல்லது அதற்கு மேல் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். இதே தகைமை கொண்ட 40 வயதுக்குட்பட்ட இலங்கை கல்வி நிர்வாகச்சேவை, இலங்கை அதிபர் சேவை, ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். இவ்வாறு கல்விச்சேவைக்குள் பதவிஉயர்வுவாய்ப்புக்கள் உண்டு. கடமை நிறைவேற்றும் அதிபர்கள், உதவிப்பணிப்பாளர்கள், பாடஇணைப்பாளர்கள் போன்ற பதவிகளிலும் பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் கடமை ஆற்றுகின்றார்கள். கடந்தகாலங்களில் சில பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டார்கள். 2009.11.13 அன்று மூன்று வருடகாலம் கடமை பார்த்த அதிபர்களுக்கு நியமனம் வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இவை தொடர்பான கருத்துக்கள் இங்கு சொல்வது இந்த ஆக்கத்திற்குப் பொருத்தமாக அமைய மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009.11.13 தொடக்கம் வழங்கப்பட்ட 2-11, 3ஆம் வகுப்பு நியமனங்கன் தொடர்பான வழக்குக்களின் தீர்ப்புக்கள் ஜனவரி 24,26 திகதிகளில் வெளியிடப்பட்டன. இதன் பின்னர் 21.02.2012 வரை மீள்பரிசீலனை விண்ணப்பத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டு இருந்தது. இதன்படி நேர்முகப்பரீட்சை முடிந்து சுமார் 3000 தொடக்கம் 4000 வரையிலானநியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்சொல்லப்பட்ட தகவல்களையும், சம்பள நிலைகளையும் வைத்து ஆசிரியர்கள் கல்விச்சேவையில் உள்ள வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். புதிய ஆசிரியர் சேவை அமுலானால் சம்பளதிட்டங்கள் மாறுவதோடு சேவையிலுள்ள 2,15,638 மொத்த ஆசிரியர்களின் 78,412 பேர்கள் பட்டதாரிகள் ஆவர். இது 2010 ஆம் ஆண்டு புள்ளிவிபரம். 2011 ஆம் ஆண்டு 7,000 க்கு மேற்பட்ட ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. இவர்களிலும் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் பட்டதாரிகள். இன்னும் இரண்டொரு மாதங்களில் 3,000 பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள். ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இடைப்பட்ட காலத்தில் கல்விமானி பட்டப்படிப்பை தொடர்ந்து கொண்டு இருக்கின்றார்கள். அல்லது முடித்துள்ளார்கள்.

புதிய சேவையில் இவர்களுக்கே பதவி உயர்வு வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. இத்தகவல்களை ஆசிரியர்கள் தமது தொழிற்துறை முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளாம்.


திகதி :- 12.03.2012

---

# எமது நாடு

இலங்கை நாடு எம் நாடு.
இதுவே எங்கள் தாய் நாடு.
இது இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள தீவாகும்.

இதனை ஸ்ரீலங்கா, ஈழம், இரத்தினதுவீபம், தப்ரபேன், செரன்டிப், சிலோன் என பல பெயர்களால் அழைப்பர். இலங்கையில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர்கள் என பல இனத்தவர்கள் வாழ்கின்றனர். சிங்களம், தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிகளைப் பேசுவோர் இங்குள்ளனர். பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற சமயத்தை சேர்ந்தோர் இங்கு உள்ளனர். எமது நாடு இயற்கை வளங்கள் பல கொண்டது. இலங்கையில் உயர்ந்த மலைகள் பல உள்ளன. ஆறுகள், வாவிகள், குளங்கள் பல உள்ளன. நாற்புறமும் கடலால் சூழப்பட்டு கடல் வளம் கொண்டது எம் நாடு. இலங்கையில் பல புனிதஸ்தலங்கள் உள்ளன. இலங்கை இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படுகிறது.




**லக்ஷிக்கா நந்தேஸ்வரன்**
தரம் - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரி பார்ப்போம்

முகாமு மன்சூர்
B.sc PGDE M.Ed (Canada)
SLEAS -II

பாடசாலை ஒன்றின் இருப்பை உறுதிப்படுத்தும் புத்தக வெளியீட்டில் வெளியிடப்படும் கட்டுரைகளை அதனை எழுதியவரும் அச்சிட்டவரும் தவிர ஏனையோரையும் வாசிக்கத்தூண்டுவது ஒரு எழுத்தாளனின் அவாவாகும். அவ்வாறு தூண்டப்படும் எனும் நம்பிக்கையுடன் எழுதுகிறேன்.

உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கும் முறை தொடர்பான ஒரு உரையாடலுக்குள் உங்களை அழைத்துச் செல்ல விரும்புகின்றேன்.

நம் பகுதியில் உயர்தர வகுப்புகளுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் எடுப்பவர்களை சற்று அவதானியுங்கள்.

குறிப்பிட்ட பாடத்திற்கு பல சந்தர்ப்பங்களில் 25 வருடத்திற்கும் மேலாக ஒருவரே பிரபல்யமாக இருப்பார். அவ்வாறெனின் 25 வருடங்களாக பல்கலைக் கழகங்களில் இருந்து வெயியேறிய 25 Batch பட்டதாரிகள் குறித்த பாடத்தில் அவரை வீழ்த்தி விட்டு தனது பெயரை நிலைநாட்ட முடியாமைக்கான காரணம் என்ன? குறித்த பிரபல்ய ஆசிரியர் நோய் காரணமாக அவரே பாடத்தை நிறுத்துதல், உயர் பதவிகளுக்குச் செல்லுதல், வெளிநாடு செல்லுதல், திடீரென இறத்தல் போன்ற காரணங்களினால் மட்டுமே அவரது இடம் வேறொரு ஆசிரியரால் நிரப்பப்படுகின்றது. இதற்கான காரணங்கள் என்ன? நாம் விரும்பினால் சிந்திக்கலாம். சில A/L பாடங்களுக்கு பட்டதாரி அல்லாதவர்களும் பல வருடங்களாக பிரபல்ய ஆசிரியர்களாக இருப்பதும் உண்டு. இது எவ்வாறு சாத்தியமாகின்றது? சில பாடங்களுக்கு கல்வித் திணைக்களத்திற்கு வெளியேயுள்ளோர் கற்பிக்கின்றனர். அவர்களை நம்பி, விரும்பி மாணவர்கள் கற்க செல்கின்றனர் ஏன்?

புலமைப் பரிசில் பரீட்சை தாய்மார்களின் பரீட்சை எனவும், GCE(O/L) தாய், தந்தையரின் பரீட்சை எனவும், GCE(A/L) மாணவர்களின் பரீட்சை எனவும் நான் அடிக்கடி கூறுவதுண்டு. உயர் தரம் கற்கும் மாணவர்கள் தமது பொறுப்பை நன்கு உணர்ந்திருக்கின்றார்கள். தமது தாய் தந்தையின் பணச் செலவை நினைத்துக் கவலை கொள்கின்றார்கள். நான் நல்ல பெறுபேற்றைப் பெற வேண்டும் என முயற்சிக்கின்றார்கள். பரீட்சை வினாக்களில் இரவு பகல் பாராது பயிற்சி செய்கின்றார்கள். தமது எதிர்காலம் இப் பரீட்சையில் தங்கியுள்ளது என நன்கு விளங்கியுள்ளார்கள். தங்கள் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பயன்படும் பாடக் குறிப்புகளை பிரதி பண்ணி ஒப்பிட்டுப் படிக்கின்றார்கள். நல்ல பெறுபேற்றைப் பெற்று பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்த வேண்டுமென நினைக்கின்றனர்.

சில கற்பிக்கமுடியாத ஆசிரியர்கள் கூறுவது போல் உயர்தர வகுப்பு மாணவர்கள் விளையாடித் திரியவில்லை, பணத்தை வீண் விரயம் செய்யவில்லை, எதிர்பாலாரைக் கவர்வதற்காக வகுப்புகளுக்குச் செல்வதில்லை என்பேன்.

கட்டிளமைப் பருவத்தின் இறுதிப் பருவத்தில் இருக்கின்ற அப்பாவி மாணவர்கள் தம் உணர்வுகளை அடக்கிக் கொண்டு தமது 3 பாடங்களையும் அவர்கள் கற்கப் பாடுபடும் விதத்தை தயவு செய்து உன்னிப்பாகக் கவனியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் சிறப்பான ஆசிரியர்கள் எனின் நீங்கள் கொடுத்த Note ஐ திடீரென அவர்களிடம் வாங்கிப் பாருங்கள். அது நேர்த்தியாகவும், இடைவெளியின்றியும் ஒழுங்காகவும் காணப்பட்டால், அதுவே சிறந்த காட்டியாகும் நீங்கள் சிறந்த ஆசிரியர் என்பதற்கு.

உயர்தர வகுப்புக்கு கற்பிக்கக் கிடைப்பது ஓர் அதிஷ்டமே. அம் மாணவர்களை ஆசிரியரின் பாட அறிவால் மட்டுமே தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். இப்பாட அறிவு ஆசிரியர் தேடிப் பெற்றுக் கொள்ளவேண்டிய சொத்தாகும். இதை மறுத்து வகுப்புகளுக்குச் சென்று மாணவர்களுக்கு ஏசிக் கொண்டிருப்பதன் மூலமோ, பிரத்தியேக வகுப்புகளில் கற்பிப்பவரை நக்கல் அடித்துக் கொண்டிருப்பதன் மூலமோ பாடசாலை நடைமுறைக்கெதிராக மாணவர்களை திசைதிருப்புவதன் மூலமோ, ஒரு நல்ல ஆசிரியர் உருவாகிவிட முடியாது. இவ்வாறான ஆசிரியரின் பண்படாத நடத்தைகள் அக் கணத்தை மகிழ்ச்சியாக்குமே தவிர மாணவர்களின் எதிர்காலத்தை சீராக்க உதவாது என்பேன்.

தமது கற்பித்தல், அதிகாரிகளை திருப்திப்படுத்துவதற்காகவோ, அதிபரை திருப்திப்படுத்துவதற்காகவோ மேற்கொள்ள வேண்டியதொன்றல்ல. இது மாணவர்களை திருப்திப்படுத்துவதொன்று.

உயர்தர வகுப்புக்கு கற்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய விடயங்களை சற்றுப்பார்ப்போம்.

A. பாட Notes தயாரித்தல்
B. ஒண்மையாக்கம் (Expository teaching)
C. பரீட்சைக்கான ஆயத்தம்

**A. பாட Notes தயாரித்தல்**

உயர்தரக் கற்பித்தலின் மிக அடிப்படையான விடயம் மாணவர்களுக்கான Notes ஆகும். எல்லா மாணவர்களும் பரீட்சைக்குச் செல்லும் முன் வாசிப்பது தமது கையெழுத்திலுள்ள Notes ஐ மட்டுமே. ஒரு ஆசிரியரின் திறமையையும் மாணவர்கள் அதனூடாக மதிப்பிடுவர். குறிப்பை ஆசிரியர் தனது கையினால் தயாரிக்க வேண்டும். வேறு ஒருவரின் குறிப்பை பாவிக்கக் கூடாது. இவர் யாருடைய குறிப்பை பயன்படுத்துகின்றார் என மாணவர்கள் புரிந்து விடுவார்கள். அதன் பின்பு ஆசிரியர் அவர்களுக்கு ஜோக்கராகத்தான் காட்சியளிப்பார். குறிப்பை தயாரிக்க பயன்படுத்த வேண்டியவை.

1. TIM (ஆசிரியர் அறிவுரைத்தல் வழிகாட்டி) எல்லா A/L பாடங்களுக்கும் உண்டு. இதனை ஆசிரியர் முழுமையாக பயன்படுத்த வேண்டும்.
2. கடந்த கால வினாப்பத்திரத்தின் விடைகள் அந்தந்த தலைப்புகளுக்கு ஏற்ப குறிப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
3. புதிய தகவல்களைச் சேர்த்தல் - புத்தகம், சஞ்சிகை, இணையம்.
4. குறித்த விடயம் தொடர்பாக Past Paper ரில் வந்த வினா இலக்கம், ஆண்டு ரீதியாக சேர்த்துக் கொள்ளவேண்டும்.

**B. ஒண்மையாக்கம் ( Expository teaching)**

மாணவர்களுக்கு விடயத்தை முன்வைக்கும் போது கவனிக்க வேண்டிய முறையியல் ஒண்மையாக்கம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறந்த ஆசிரியருக்கு Chalk & Talk போதும் என்பேன்.

இன்று Multimedia, Projector, OHP, Flipchart, போன்ற பல வித Presentation சாதனங்கள் கிடைக்கக்கூடியதாக இருப்பினும் தொடர்ச்சியாக உயர்தர வகுப்பிற்கு பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இவற்றிற்கு செலவு செய்யும் நேரத்தை சிறந்த Notes உருவாக்க பயன்படுத்துவர்.

ஆசிரியர் விளக்கும் விதம், வரையரைகள், தெளிவு படுத்தும் விதம், சுருக்கமாக விளக்கும் பண்பு பாட ஆரம்பத்தில் முன்னர் கற்றவற்றை மீட்கும் உத்தி, மாணவர்கள் உறங்காமல் இருக்க அரிதாக சுருக்கமாக நகைச்சுவை (இதனை 2ம் தடவை கூறுவது தவிர்க்கப்படல் வேண்டும்) அவசியமான படங்கள், வரைபுகள் என்பவற்றை கூடுதலாக வழங்கி அதனை தேவையான இடத்தில் Notes கொப்பியில் ஒட்ட வைத்தல்.

குறித்த நேரத்தை ஒழுங்காக பின்பற்றுதல். வராமை பற்றி மாணவர்களுக்கு முன் கூட்டியே அறிவித்தல்.

உயர்தர மாணவர்கள் ஆசிரியர்களைப் பற்றி கேட்கப்பட்டபோது அவர்கள் வழங்கிய பின்னூட்டல் இதுவேயாகும்.

உயர்தரம் கற்பிக்கும் ஆசிரியர்களின் பண்புகள்.

1. சிறந்த பாட அறிவுள்ளவர்
2. பரீட்சை வினாக்களை ஆண்டுடன் ஞாபகமாக வைத்திருப்பார்.
3. சுறுசுறுப்பானவர்.
4. பாட ரீதியான உலக நடப்புகளை அறிந்திருப்பார்.
5. தனக்கென ஒரு Style யை கொண்டிருப்பார்
6. சித்தியடைந்த மாணவர்ளை தன்னிடம் படித்து சித்தியடைந்தவர்கள் எனக் கூறாதவர்.
7. உயர் பதவி அடைந்த தனது மாணவர்களிடம் உதவி கேட்காதவர்.
8. மாணவர்களுடன் ஓர் எல்லைக்கு மேல் கதைக்காதவர்.
9. தனது சாதனைகளைப் பற்றி வகுப்பிலோ, வெளியிலோ கூறாதவர்.
10. தன்னைப் பற்றிய விமர்சனங்களுக்கு பதில் கூறாதவர்.

அன்புள்ள ஆசிரியர்களே நீங்கள் இவ்வாறுதான் இருக்கின்றீர்கள் என்பது எனது எண்ணம்.

**C. பரீட்சைக்கான ஆயத்தம்**

மாணவர்கள் விரும்பும் மிக சிறந்த ஆசிரியரின் செயற்பாடு இது.

கடந்த கால வினாக்களுடன் எதிர்பார்க்கை வினாக்களையும் உள்ளடக்கக்கூடியதாக வினாப்பத்திரம் தயாரிக்க வேண்டும்.

அவை நடைபெறும் தினங்கள் அறிவிக்கப்பட வேண்டும்.
அதனை ஆசிரியர் தனது கையினால் திருத்த வேண்டும்.
மாணவர்களும் நேரம் குறிப்பிட்டு விடைகளை எழுத வேண்டும்.
பரீட்சை நடாத்தி உடனடியாக புள்ளிகளும், விடைகளும் வழங்கப்பட வேண்டும்.
மாணவர்களின் விடைப்பத்திரம் அவர்களிடமே வழங்கப்பட்டுவிட வேண்டும்.
இவற்றை பின்பற்றும் போது ஆசிரியர்கள் உயர்தர மாணவர்களுக்கு கடவுளாவார்கள்.

முயற்சிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பிசகு'

**சிறுகதை**

க. அருள்சுப்பிரமணியம்
திருகோணமலை

இளைப்பாறி ஏழெட்டு வருடங்களாகியும் ஆதியிலிருந்து எனக்கு ஆகிவந்த நல்ல பெயருக்கு இன்னும் பதினாறு வயசுதான். பொதுவில், ஒருவர் அரச சேவையிலிருந்து இளைப்பாறியதும் அவரிடமிருந்து மற்றவர்கள் பெற்று வந்த பயன்பாடுகள் அற்றுப் போக நேர்வதால் அவர் சார்ந்த ஈடுபாடு குறைவது அல்லது முற்றாக இல்லாமல் போவது வழமையான ஒன்று. என் விடயத்தில் இதற்கு மாறாக நடந்திருக்கிறது.

இன்றைக்கில்லை, வெள்ளைவேட்டி வாலாமணியில் படிப்பிக்கப் போய்வந்த அந்த ஆரம்ப நாட்களிலேயே மதிப்பும் மரியாதையும் அபரிமிதமாக வந்து அமைந்து விட்டது எனக்கு. அந்த மரியாதைப் பூவின் இதழ்கள் இன்னும் என் இல்லம் நாடி மணம் பரப்பியபடியே இருக்கின்றன. இதில் முக்கியமாக ஒன்றைச் சொல்ல வேண்டும். கிடைத்த கௌரவத்தை கட்டுக்குலையாமல் காத்துக் கொள்வது ஒன்றும் சாதாரணமான விசயமல்ல. சிறிது பிசகினாலும் சரிந்து விட வாய்ப்புண்டு.

இன்னமும், என்னைத் தெரிந்தவர்கள் எங்கே கண்டாலும் நின்று நாலு வார்த்தை சுகம் விசாரிக்காமல் விலகமாட்டார்கள். அவசர காரியமிருப்பின் போகிறபோக்கில் தலையாட்டி சிரித்துவிட்டுத்தான் போவார்கள். சிநேகமான சைகைகள் வழி தம் அன்பை வெளிப்படுத்துவதில் அவர்களுக்கு ஒரு திருப்தி.

சொந்த இடத்தில் மட்டுப்படாமல் வெளியூர்களிலும் என் கௌரவம் பாய்ந்து பரவியிருக்கிறது. நேற்றுக்கூட, நிலாவெளிப் பக்கமிருந்து கூட்டமாக வந்திறங்கினார்கள். எல்லாரும் வசதியாக இருக்க நாற்காலிகள் பத்தாமல் சிலர் முற்றத்திலும் நின்று கொண்டிருந்தார்கள். அடுத்த வாரம் அவர்கள் பகுதிப் பள்ளிக்கூடத்தில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி. மாவட்ட கல்வி அதிகாரி பிரதம விருந்தினராக வருவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார். விழாவைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி என்னை வற்புறுத்திக் கேட்டார்கள். வழக்கத்தில் நானாகத் தேடிப் போய் உதவி செய்கிற பழக்கமுள்ளவன், வீடு தேடி வந்து விண்ணப்பிப்பவர்களின் முகம் முறிப்பேனா? முன்னரைப் போல் உடம்புக்கு முடியாவிடினும், வருகிறேன் என்றதும் வந்தவர்கள் அத்தனை பேர் முகங்களிலும் முழுநிலவு!

என் வாழ்க்கை முழுக்கவும் இப்படித்தான். பிள்ளைகளுக்குப் படிப்பித்தது போக, மிகுதி நேரத்தில் பெரும்பகுதி மற்றவர்களின் கஷ்டங்களைக் கேட்பதிலும் நிவர்த்திகள் சொல்வதிலும் கழிந்திருக்கிறது. படிப்பித்தலை வெறும் தொழிலாகக் கொள்ளாமல் பிள்ளைகளை உயர்த்திவிடும் ஏணியாகவே கருதி வாழ்ந்திருக்கிறேன்.

இந்தக் குணம் என் தாயாரிடமிருந்து கிடைத்த பாரம்பரிய முதுசம். பத்து வருடங்களுக்கு முன் பரமபதம் அடைந்துவிட்ட என் அம்மா ஒரு இளம் வயதுக் கைம்பெண். இரத்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதிப்பென பின்னாளில் புரிந்து கொண்ட சுகவீனத்தில் தந்தையார் நித்திரைப்பாயிலேயே மூச்சு அடங்கிவிட, பிரச்சனைகளின் மத்தியில் தட்டத்தனியாக கஷ்டம் தெரியாமல் என்னை வளர்த்தாள் அம்மா. எழுத்துக்கூட்டி வாசிக்கும் படிப்பறிவை மட்டும் வைத்துக் கொண்டு எப்படி முடிந்தது இது என்று இன்று நினைத்தாலும் ஆச்சரியமாக இருக்கிறது. அயலாரோடும் மிக அன்னியோன்யமாக இருக்க முடிந்திருக்கிறது அவளால். யாரையும் மனம் நோக விடமாட்டாள். தராசைப் பிடித்துக்கொண்டு அளந்து பேசுவது போல் ஒரு நிதானம். சொல்லின் சிக்கனம் செயலின் தாராளத்தை மட்டுப்படுத்தாமல் பார்த்துக் கொள்வது அவளது சிறப்பு. நல்லது கெட்டதுக்கு முதலாளாய் ஓடிப்போவாள். அவசியத்துக்கு ஐஞ்சுபத்து கைமாற்றுக் கொடுக்கவோ அவசரத்துக்கு காப்புச்சங்கிலி இரவல் அளிக்கவோ தயங்கமாட்டாள். ஒருவிதத்தில் அம்மா அயலில் சம்பாதித்து வைத்த மரியாதை என் பெயருக்கு எருவாயிற்று என்றே சொல்ல வேண்டும்.

அம்மா சமைத்து நீங்கள் பார்த்திருக்க வேண்டும். கறிச்சட்டி அடுப்பில் ஏறி இறங்குகிற இடைவெளியில் அம்மாவின் அசைவுகளை கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருப்பது எனக்குப் பிடித்தமான விசயமாக இருந்திருக்கிறது. சாம்பலில் கழுவி மூடி வைத்த பாத்திரங்களில் காய்கறிகளை அதனதன் அளவுகள் மாறாமல் நறுக்கிப் போடுவாள். தேங்காயை சிதிலமாக்காமல் சரிபாதி பிளந்து பூ துருவி முதல்பால் கடைசிப்பால் என கறியின் தேவைக்கேற்ப அதற்குண்டான பாத்திரங்களில் பிரித்து வைத்துக் கொள்வாள். அம்மி முன்னால் கால்நீட்டியிருந்து பக்குவம் குறையாமல் அரைத்து வைத்துக் கொண்ட பலசரக்குத் திரணையை கொதிக்கும் குழம்பில் நேரம் அறிந்து இடுவாள். உப்புப்புளி பார்க்க அகப்பையில் துளியளவு கிள்ளி உள்ளங்கையில் விட்டு நாக்கிடம் ருசி கேட்கும் தோரணையில் கண்களை மேல்நிறுத்தி தனக்குள்ளே ரசிப்பாள். கொதித்துவரும் குழம்பில் முதல்பாலை விட்டு கறியின் கொதிப்பை அடக்கி இறக்கிவிட்டு அடுத்த கறிக்கான ஆயத்தங்களை தொடர்வாள். அம்மாவின் அசைவுகள் எல்லாமே ஒரு நேர்த்தியான சடங்கிற்குண்டான பொலிவோடு திகழ்வதைப் பார்த்திருக்கிறேன்.

மேகத்துள் மிதக்கும் பால்நிலவும் மெழுகு தந்தம் காட்டி தத்துபுத்தென நடந்து வரும் யானையும் அன்னையிடம் வயிறுமுட்ட பால் குடித்து மழலை உதிர்க்கும் குழந்தையும் என்றுமே அலுக்காத காட்சிகள் எனக்கு. அம்மாவின் சமையலுக்கு இவற்றோடு சேர்ந்து கொள்வதற்கான அத்தனை அருகதையுமுண்டு. கொய்யக மறைவில் குழந்தைக்குப் பாலூட்டும் தாயின் அக்கறையை அம்மாவின் ஒவ்வொரு அசைவிலும் நான் ரசித்திருக்கிறேன். அந்த ஈடுபாட்டுணர்வு என் இரத்தத்தில் ஊறிவிட்டது.

இதற்கு முன்வரிசை பின்வரிசை என்கிற வித்தியாசம் பாராத மனப்பாங்கு தேவை. வகுப்புகளில் வெறுமனே படிப்பித்தலோடு மட்டுப்படாமல் பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க என்னால் முடிந்திருக்கிறது. குறிப்பாக, பின்வாங்குப் பிள்ளைகளின் ஓவ்வாமையை மனங் கொள்வது முக்கியமெனக் கருதினேன். அவர்களில் ஒளிந்திருக்கும் பலதரப்பட்ட திறமைக்கூறுகளை வெளிக்கொணர வேண்டியது ஆசிரியனின் கடமையென உணர்ந்தேன். படிப்பு தவிர்ந்த ஏனைய காரியங்களில் சிதறுகிற அவர்களது கவனத்தை ஒருமுகப்படுத்தி விட்டால் அவர்களது சிறப்பான எதிர்காலத்தை உறுதிப்படுத்தி விடலாம்.

வீட்டுக்கணக்கு செய்ய புத்தகம் வாங்கமுடியாத பிள்ளைகளின் வறுமை கண்டு நான் உதவியிருக்கிறேன். மந்தமான மாணவர்களை பள்ளிக்கூடம் விட்டபின் நிற்பாட்டி சொல்லிக் கொடுப்பேன். விடுதலை நாட்களில் பாடம் எடுப்பேன். வகுப்பில் கடைசி மாணவன் எனக் கருதப்படுகிறவன் கூட என் பாடத்தில் சித்தியடைந்துவிடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைப்பாறிய பின் உடல் நலம் சற்று குன்றிவிட்டது உண்மைதான். ஓடியோடி ஊருக்கு உழைத்ததால் அல்சர் நீரழிவு என்று நானாவித உபாதைகளின் ஊற்று நிலமாக ஆகிவிட்டீர்கள் என்று திடகாத்திரமான உடலைக் கொண்ட இளைப்பாறிய நண்பர் ஒருவர் சொன்னார். காலாகாலத்தில் கல்யாணம் பண்ணியிருந்தால் ஏலாத காலத்தில் மனைவிமக்கள் கையில் ஏந்தியிருப்பார்களே என்றும் ஆதங்கப்பட்டார்.

என்ன செய்வது - திருமண உறவில் கவனம் தீவிரமாகாமலே என் காலம் கடந்து விட்டது. தயாராயிருந்த போது பெண் பொருந்தி வரவில்லை. பொருந்தியபோது நான் தயாராயில்லை. அம்மா சதா சண்டை போட்டுக் கொண்டுதான் இருந்தாள். அவளுக்காகவாவது ஒப்புக் கொண்டிருக்கலாம். கடைசிவரை மாமிமருமகள் சண்டை அனுபவம் கிட்டாமலே அவள் காலமாகிப் போனாள். பார்க்க எடுக்க பக்கத்தில் ஆளில்லாமலிருப்பது ஒரு விதத்தில் கஷ்டந்தான். ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அரக்கப் பரக்க ஓடித் திரிகிற சம்சாரிகளைப் பார்க்கிறபோது அந்தச் சாகரத்திலிருந்து தப்பிப் பிழைத்ததும் புரியவே செய்கிறது.

இப்போது என் சேவை வேறு தோற்றப்பாடுகளை எடுத்திருக்கிறது. ஆலோசனை கேட்டு வருபவர்கள் பெருகிவிட்டார்கள். ஐயாவிடம் போனால் நிச்சயமாக இதற்கு ஒரு புத்தி சொல்வார் என்கிற நம்பிக்கையோடு வருகிறார்கள். நானும் என்னாலான நல்லதுகளை சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

நேற்றுக்காலை ஒரு தகப்பன் மகளைக் கூட்டி வந்தார். பத்தாம் வகுப்பு அரசு பரீட்சையை நல்ல தரத்தில் சித்தியெய்தியிருந்தாள் அவள். புதிய வகுப்பில் ஒரு குறிப்பிட்ட பிரிவை அவள் தேர்ந்தெடுக்க வேண்டும். அது கலையா வர்த்தகமா பொறியியலா அல்லது மருத்துவமா என்பதை என் மூலமாகத் தீர்மானித்துக் கொள்வதே அவரது வருகையின் நோக்கம். விசயத்தைச் சொல்லிவிட்டு என்னைப் பார்த்தார். அவர் இதே கேள்வியை வகுப்பாசிரியரிடம் கேட்டிருக்கலாம். ஒருவேளை இதற்குள் கேட்டுமிருப்பார். இருக்கச் சொல்லிவிட்டு முதலில் அவரிடமே பேச்சுக் கொடுத்தேன்.

எல்லாரையும் போல, மகள் டாக்டராக வரவேண்டும் என்று விரும்புவதாகச் சொன்னார். முடியாவிட்டால் எஞ்சினியர் என்று ஒரு படி மட்டும் கீழிறங்க அவர் தயாராயிருந்தார். பின்னர் பெண்ணிடம் பேசினேன். நாலைந்து பதில்களில் அவளைப் புரிந்து கொள்ள முடிந்தது. நான் அவரிடம் சொன்னேன். உங்கள் மகள் பாடங்களில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் - நீங்கள் விரும்புகிற துறைகளில் அவளுக்கு நாட்டமில்லை என்று தெரிகிறது. பிரகாசிக்கும் வாய்ப்பும் அரிது. கஷ்டமானதை திணிப்பதிலும், இலகுவாகக் கைவரக்கூடியதை ஊக்கப்படுத்துவதே வெற்றியைத் தரும். இவளை வர்த்தகத் துறையில் விடுங்கள். இன்றைய நவீன யுகத்தில் வேறெதையும் விட பரந்துபட்ட வாய்ப்புகளை அளிக்கும் துறை இது. நீங்களே வியக்கிற அளவிற்கு சிறப்பாக வருவாள் என்றேன். அவரும் நிம்மதியாகப் போய்ச் சேர்ந்தார்.

இப்படிப் பல பேர் வருகிறார்கள். வருகிறவர்களின் மனங்களை அவற்றின் நுன்னிய தளங்களில் நின்று கூர்ந்து படிக்கிறேன் முதலில். பிரச்சனைகளின் ஆழஅகலம் புரிந்து கொண்டு அவர்களை அணுகுகிறேன். இந்த மாதிரி கவுன்சிலிங் செய்வதில் என் நேரமும் உபயோகமாகக் கழிகிறது. வந்தவர்களுக்கும் நன்மையாகிறது.

படித்தவர்களிடம் ஒரு குணம் இருக்கிறது. எல்லாம் தெரிந்த மனப்பான்மை. குறுக்குமறுக்காக கேள்விகள் கேட்பார்கள். அவர்களை ஆறுதல்ப்படுத்துவதற்கு சிறிது நேரம் எடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்காதவர்களிடம் அந்தக் கஷ்டமில்லை. கேட்டுக் கேள்வியின்றி ஏற்றுக் கொள்வதை அவர்களின் முகத்தெளிவில் கண்டிருக்கிறேன். இதிலுள்ள சுளிவுநெளிவுகள் எல்லாம் ஒரு கலையாகவே எனக்குக் கைவந்துவிட்டது அம்மாவின் சமையலைப் போலவே. வந்தவர்களின் முகம் அளந்து மனம் படித்து பொருத்தமாகப் பேசுகிற நுட்பத்தில்தான் கவுன்சிலிங் கலையின் வெற்றியே தங்கியிருக்கிறது என்பேன். அவரவருக்குப் பொருந்துகிற வார்த்தைப்பிரயோகம் மிகவும் முக்கியம், இன்னொன்று பொறுமையும்.

நேற்றுமாலை ஒரு பெண் வந்திருந்தாள். ஆடுகள் மேய்த்த சிறுவயதில் மழைக்கு மட்டும் பள்ளிக்கூடம் ஒதுங்கியதாகச் சொன்னாள். பிறந்து வளர்ந்தது தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு குக்கிராமம். வாழ்க்கைப்பட்டது தூரத்து உறவில் மலைநாட்டின் தலவாக்கொல்லையில். புருசன் திருகோணமலைக்கு வேலை தேடி வந்ததில் சீவியம் இங்கேயே அமைந்துவிட்டது. ஒரேயொரு மகன். வயசு பதினைந்து. பையனுக்கு எட்டு வயசில் தகப்பன் வயற்காட்டில் பாம்பு கடித்து நேரத்துக்கு வைத்தியம் கிடைக்காமல் காலமாகிவிட்டார். ஏனோ தெரியவில்லை மனுசி இங்கேயே தங்கிவிட்டது.

பையன் ஒன்பதாவது படிக்கிறான். பள்ளிக்குப் போகாத நாட்களே அதிகம். கூடாத கூட்டம் வேறு, படிக்காமல் ஊர் சுற்றுகிறான். எப்படியாவது புத்தி சொல்லி பள்ளிக்குப் போக வைக்கும்படி கேட்டுக் கொள்ள வந்திருந்தவள் மரியாதைக்காக எட்டத்தில் நின்றே பேசினாள். நாலு சாத்து சாத்துங்கய்யா என்று அடிக்கிற உரிமையும் அளித்தாள். இதுதான் படிக்காதவர்களின் பண்பு.

பையன் எங்கே என்று கேட்க, இன்றைக்குக் கூட்டி வருகிறேன் என்று போயிருக்கிறாள். அநேகமாக இப்போது வருகிற நேரந்தான். கைம்பெண்ணின் வலிகள் அம்மாவிடமிருந்து எனக்கு அனுபவப்பாடம். முகம் தெரியாத அந்தப் பையனில் என்னையே இனம் கண்டது போல ஒரு பிடிப்பு உண்டாயிற்று. இவனை மடக்கி வழிக்குக் கொண்டு வருவது பெரிய விசயமில்லை. அவனது உள்ளத்தைத் தொட்டுவிட்டால் எதிர்காலம் உறுதிப்பட்டுவிடும்.

கதவு தட்டிக் கேட்கிறது. அவர்கள் தான, மகனை எனக்கு இரண்டடி தூரத்தில் தேவையானால் எட்டி அடிப்பதற்கும் வசதியாக நிறுத்திவிட்டு அவள் பத்தடி தள்ளி குறுகிப் போய் நின்று கொண்டாள்.

என்னான்னு கேளுங்கய்யா?

நீங்க அப்பிடி கதிரைல இருங்கம்மா.

சொன்னவுடன் அவள் கதிரைப் பக்கமாகப் போனாள், இருக்கவில்லை. நான் பையனைப் பார்த்தேன். குளிக்க வார்த்து கன்னஉச்சி புறித்து தலை இழுத்து பவுடர் அப்பி தோய்த்த உடுப்பு உடுத்தி கூட்டி வந்திருக்கிறாள் தாய். தாயே எல்லாம் செய்திருக்கிறாள் என்பதற்கு முகத்தில் கூடுதலாக அப்பியிருந்த பவுடர் சாட்சி சொன்னது. ஐயாவுக்கு முன்னால் கையைக் கட்டி நின்று பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லிக் கொடுத்திருப்பாள். பையன் கறுப்பு, தாயின் நிறம். தகப்பனுடைய மூக்காக இருக்கலாம். முழிப்பாக இருந்தான்.

கண்டிப்பக்கம் நாலு வருடங்கள் வேலை பார்த்ததில் அங்கு புழக்கத்திலிருக்கும் மொழி அசைவுகள் எனக்குப் பழக்கம். அவர்களோடு அவர்களது இழுவைகளுக்கு இசைவாகப் பேசமுடியும் என்பதே எனக்கு பலந் தருகிற விசயம். முகத்தில் மேலதிக கனிவு காட்டி பையனை உன்னிப்பாகப் பார்த்தேன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தம்பி இப்ப என்ன படிக்கிறே?

ஒம்போது. .. .. .. அவன் தலை நிமிராமல் நிற்க அம்மா பதில் சொன்னாள்.

எங்க படிக்கிறே?

சந்திப்பள்ளியில படிக்கிறான்யா. நடைதூரத்தில வூடு இருக்குதுங்கய்யா....

இப்போதும் பதில் சொன்னது அவள்தான்.

அம்மா நீங்க சும்மாயிருங்க பையன் பதில் சொல்லட்டும்.

சரீங்கய்யா என்று சொன்னவள் நாலு விரல்களை வாயில் வைத்து மன்னிப்புக் கோருவது போல சற்றுப் பின்வாங்கி நின்றாள்.

போன பரீட்சையில கணிதத்தில் எத்தனை மார்க் வாங்கினே?

வலதுகால் பெருவிரலால் நிலத்தில் அரைவட்டம் போட்டுக் கொண்டிருந்தான் குனிந்த தலை நிமிராமல். அடுத்ததெரு சந்தி மில்லில் அரிசி அரைக்கும் ரீங்காரம் மட்டும் மிகக் கிட்டத்தில் கேட்ட அளவிற்கு அமைதி நிலவிற்று.

பத்தோ பதினைஞ்சு மார்க்குதான்ய்யா. .. .. .. எனக்குச் சங்கடம் நேராதிருக்க தாய்தான் இப்போதும் மெல்லிய குரலில் சொன்னாள்.

உங்க கணக்கு வாத்தியார் பெயர் என்ன?

இப்போ ஒம்போதாவது வகுப்பு சிலபஸ் மாத்தியிருக்காங்கன்னு சொல்றாங்களே உண்மையா?

அடுத்த வருசம் ஜீசீஈ பரீட்சை வருதே அதுக்கு ஒன்னை சேத்துப்பாங்களோ?

அவனிடமிருந்து பதிலில்லை. தாய் ஏதாவது சொல்ல முயற்சித்திருப்பாள். இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் அவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. சங்கடத்தில் நெளிந்ததைத் தவிர அவளால் எதுவும் செய்ய முடியவில்லை.

அவன் பக்கமாக இருந்த சுவரில் திடீரென முளைத்த ஒரு பல்லி, அதனைத் துரத்திய இன்னொரு பல்லி, அந்தந்த இடத்திலேயே தரித்து நின்றன. பையனது பார்வை பல்லிகளின் பக்கம் படர்ந்தது. எனக்கு முன்னால் நிற்கிற பயம் அற்றுப் போய் அடுத்து நிகழப்போவதை ஆர்வம் துளிர்க்கப் பார்த்தான். எங்கள் இருப்பைச் சட்டை செய்யாத இரண்டாவது பல்லி முதலாவது பல்லிக்குப் பக்கத்தில் ஊர்ந்து அதன் மேல் ஏறிக் கொண்டது. பையன் வைத்தகண் எடுக்காமல் நின்றான். நான் தாயைப் பார்த்தேன். உங்களைத்தான் நம்பி வந்திருக்கிறேன் என்று கேட்கும் அதே வேண்டுதல் முகம். நிலைத்து நின்ற பல்லிகளைக் கலைக்கவும் பையனது கவனத்தைத் திருப்பவுமாக, சுவர்ப்பக்கம் கையை விசுக்கி நான் சப்தமிட, எதையும் காதில் போட்டுக் கொள்ளாத பல்லிகள் வெகு சாவதானமாக சிறிது நேரம் கழித்து தம்பாட்டில் எங்கோ மறைந்து கொண்டன.

சரி படிப்பை விடு. அப்பனில்லாம ஒன்னை கஷ்டப்பட்டு வளர்த்திருக்கிறாவே உங்க அம்மா அதை நெனைச்சுப் பாத்தியா தம்பி.

இப்போது காலை மாற்றி மீண்டும் அரைவட்டம் போடுவதில் முனைப்பாக இருந்தான்.

காலை ஆட்டாம கொஞ்ச நேரம் சும்மா நில்லு.

காலை ஆட்டாதடா என்று தாயும் அதட்டினாள்.

ஆட்டம் சட்டென்று நின்றது. நான் ஆத்திரப்பட்டுவிட்டதாக அவன் நினைத்திருப்பான். எனக்கு ஆத்திரம் இலேசில் வராது. இது தேவை கருதிய ஒரு சிறு நடிப்பு. கடிதோச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல எறிக - வள்ளுவப் பெருந்தகை சொன்னது - அடிக்கிற மாதிரி கத்து, கடிச்சு உதறுகிற மாதிரி நெருங்கு ஆனா அடி மட்டும் மெதுவாகப் படட்டும் என்று. பிள்ளையை பள்ளிக்குப் போக வைக்கத் துடிக்கும் இந்த ஏழைத்தாயை எப்படியாவது ஆறுதல்ப்படுத்த வேண்டும்.

கடைசியா எப்போ பள்ளிக்குப் போனே?

போய் பத்து நாளாச்சய்யா - தாய்.

கடைசிமணிக்கு காத்திருக்கிற மாணவனாக அவன் தெரிந்தான். தாயை திரும்பிப் பார்த்துவிட்டு தலை குனிந்தான்.

எனக்கு மூளை நரம்பில் மெலிதான துடிப்பு உண்டான ஒரு உணர்வு! இது அதிகம். முளைத்து மூனு இலை விடாத பையனுக்கு வயசுக்கு மீறிய கொழுப்பு. இத்தனை கேள்விகள் கேட்டும் ஒரு தலையாட்டல் கூட இல்லாமல் கல்லுளிமங்கனாய் நிற்பது நிச்சயமாக அதிகம்.

வாயில கொழுக்கட்டையா வைச்சிருக்கே? அவன் திடசங்கற்பம் சிறிதும் குறையாமல் அப்படியே நின்று கொண்டிருந்தான்.

களவாணிப்பயலே, இப்போ வாய தெறக்கப் போறியா இல்லையா?

எனக்குச் சதிரம் கொஞ்சமாக நடுங்கிற்று.

வாயைத் திறக்காட்டி ஒன்னை உண்டு இல்லைன்னு ஆக்கிப்போடுவன் களவாணிப்பய புள்ளை.

அவன் முகத்தில் முறைப்பு உருவானது போல் ஒரு அசைவு தோன்றிற்று. உறுதிப்படுத்திக் கொள்ள கண்ணாடியைப் போட்டுக் கொண்டேன். இல்லை அவன் முறைக்கவில்லை. முறைத்திருந்தாலாவது ஏதோவொரு விதத்தில் பதில் சொல்ல ஆயத்தமாகிறானெனக் கொள்ளலாம். ஒருவித சலனமுமற்று எப்படி இவனால் ஒற்றைப்பிடியில் நிற்க முடிகிறது!

டேய் கள்ளப்பயலே ஒன்னை

அப்போதுதான் நான் எதிர்பாராத அந்த இடி என் தலையில் நேராக இறங்கிற்று. அவனிடமிருந்தல்ல, அவளிடமிருந்து.

நானும் வந்ததிலிருந்து பாக்கிறேன். களவாணிப்பயமவனே கள்ளப்பயலேன்னு விடாம கத்திக்கிட்டிருக்கியே, இதுதான் நீ புத்தி சொல்ற லெச்சணமா? மத்தவங்க பொருளுக்கு ஆசைப்படாத ஆளய்யா என் புருசன். குடிப்பாருதான். களவுக்கெல்லாம் போகமாட்டாரு. எம் புள்ளை படிக்காம ஊர் சுத்துறவன்தான். களவெல்லாம் எடுக்கமாட்டான். அப்படிப்பட்ட புள்ளையை இப்பிடித் திட்றியே நீயெல்லாம் பெரிய மனுசனாய்யா?

நான் உறைந்து போய் அவளைப் பார்க்க, உரு வந்தவள் போல, நீ வாடா மவனே, பெரிய மனுசனாம் பெரிய மனுசன், பெரிசா பேச வந்துட்டாரு என்றவாறே மகனின் கையை தறதறவென இழுத்தாள்.

திடீரென உண்டான குழப்பத்தில் கண்மூடித் திறக்குமுன் தெருக்கதவை தடாரெனச் சாத்துகிற சத்தம் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FUTURE LEADERS





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SOCIAL BOND

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பதைக் கற்றுக்கொள்ளல்

திருமதி.ச.சௌந்தரராஜன்
ஆசிரியர்
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி

சமூக இருப்பிலிருந்து சிந்தனை முகிழ்தெழுகின்றது. எவ்வது உறைவது சமூகம் அவ்வது எழுவது சிந்தனை. மனித சமூகம் சிக்கலடைந்து வளர்ந்து பன்முகப்படுத்தப்பட்டு எழுச்சி கொள்ளும் போது அவனது சிந்தனைகளும் சிக்கல் பொருந்திய தொடர்ச்சிகளை நோக்கி நகர்ந்து செல்கின்றது. எனவே அறிவுக்கட்டமைப்பு விஸ்த்தரிக்கப் படுகின்றது. அறிவொழுக்கமும் பரந்து காணப்படுகின்றது. அறிவொழுக்கம் குறிப்பிட்ட சிந்திக்கும் முறையையும் தரிசன முறைமையையும் உலகை வியாக்கியானம் செய்யும் முறைமையையும் உள்ளடக்கி தொடர்ந்து வளர்ச்சியுறும் செயன்முறையைக் கொண்டுள்ளது. எனவே அறிவுத்தொகுதி மிக விரைவாகவே இரட்டிப்பாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. இந்த மிலேனிய



யுகத்தில் அறிவே ஆற்றல் என்பதைவிட தகவலே ஆற்றல் என்பது மூன்றாவது ஆயிரத்தின் நுழைவாயிலுக்குப் பொருத்தமாக உள்ளது. எனவே தற்போதுள்ள தகவல் சமூகம் ஒன்றை நோக்கி நடைபயில வாசிப்பின் முக்கியத்துவம் இன்றியமை யாததாக உள்ளதென்பதே உண்மையாகும்.

இன்றைய "கல்வி உளவியலில்" "கற்றல் உளவியல்" விரிவாக்கம் பெற்றுள்ளது. கற்பதைக் கற்றுக்கொள்வது என்பதே இதன் கருவாக அமைகின்றது. கற்றல் உளவியலின் அடிப்படைக் கூறாக, உயிர்ப்புத்தனமாக "வாசிப்பு" அமைகின்றது. வாசிப்பின் பன்முகச்சாத்தியப்பாடுகள் ஒருவரை மேம்பட்ட ஆளுமைப்பண்புகளுடன் தொழிற்படும் ஒருவராக உருமாற்றுகின்றது. தனி மனித வளர்ச்சிக்கு மட்டுமல்ல சமூக வளர்ச்சிக்கும் வாசிப்பு முக்கியமாக அமைகின்றது. இச் சமூகம் ஆக்கமலர்ச்சி சிந்தனையில் புதிய கண்டுப்பிடிப்புக்களில் முனைப்பாக இருக்கும். பரந்துபட்ட வாசிப்பால் மட்டுமே அறிவுக்கான அடித்தளம் போடப்படும். வாசிக்கும் சமூகமே அறிவுச்சமூகமாக விருத்தி பெறும். சுயதேடல், சுயகற்றல்,சுயமரியாதை போன்ற உயரிய பண்புகளை வாசிப்பு வழங்குகின்றது. ஆனால் இன்று இந்த வாசிப்பு ஆசிரியர்கள் மாணவர்களிடம் எந்தளவிற்கு உள்ளது? அறிவுக் கையளிப்பு எந்தளவிற்கு உள்ளது என்றால்? வெட்கப்படவேண்டிய ஒன்றாக உள்ளது. தகவல் யுகம் தகவலே என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயையின் காரணமாக புத்தகங்கள் எல்லாம் இறுக மூடியனவாக உள்ளன.

இன்றைய கல்வி முறை வெறுமனே மதிப்பெண்களையும், சமூக அந்தஸ்தினையும் கொண்டனவாக இருப்பதன் காரணமாக மாணவர்களிடம் போட்டி நிலைமையே வலுப்பெற்றுள்ளது. அறிவை அளவீடு செய்யும் கருவிகளாக பரீட்சைகள் காணப்படுவதன் காரணமாக மாணவர்கள், குறித்த பாடப்பரப்புகளிலேயே அதிக கவனம் செலுத்துகின்றனர். தவிர பாடப்பரப்புகளுக்கு அப்பாலும் அறிவுத் தேடலை விருத்தி செய்து கொள்வதில் அலட்சியப் போக்கினையே காட்டுகின்றனர். இத்தகைய பரீட்சைகளை மட்டும் நோக்காகக் கொண்ட குவியப்படுத்திய கல்வி முறையின் காரணமாக மாணவர்களும் குவிந்த சிந்தனை உடையவர்களாகவே காணப்படுகின்றனர். மாணவர்களிடம் சுயதேடல், சுயவாசிப்பு என்பன அறவே இல்லாமல் போய்விட்டன. ஆகவே அவர்களது படைப்புகளும் கீழ்நிலையிலேயே உள்ளன. எனவே பாடசாலைகளில் மாணவர்களது படைப்பாற்றல்களை விருத்தி செய்யக்கூடிய விரிந்த சிந்தனைக்கான களங்கள் திறந்து விடப்படுதல் வேண்டும். பாடசாலைகள் கற்பிக்கும் நிறுவனங்களாக அன்றி கற்கும் நிறுவனமாக மாறவேண்டும். கற்றல் ஒரு முடிவில்லாத நீண்ட பயணமாக இருப்பதன் காரணமாக வாசிப்பின் முக்கியத்துவம் வலுவாக உள்ளது. பாடசாலைகளில் வாசிப்பை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள், செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மாணவர்களின் வாசிக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கப்படுதல் வேண்டும். வாசிப்பின் மீதான ஆர்வம் தூண்டப்படுதல் வேண்டும். மாணவர்கள் வாசிப்பதை கைப்பற்றிக்கொள்ளும் பட்சத்தில் அவர்களிடம் உயர்ந்த அறிவு, சமூக, மனஎழுச்சி, ஆன்மீகத்துறை வளர்ச்சி என்பன ஏற்படுகின்றன.

சிறுபிள்ளைகளிடம் ஆரம்ப காலத்திலிருந்தே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். பிள்ளையின் ஆர்வத்தை அவனுடைய அறிய விரும்பும் ஆவலை நிலைநாட்ட வாசிப்புக்கு கருத்துக் கொடுக்கும் தன்மையை ஏற்படுத்த வேண்டும். புத்தகங்கள் தகவல்களையும் நற்கருத்துக் களையும் வழங்குவதோடும் இல்லாமல் ஒருவரை சீர்திருத்தவும், மானிட உதவியை விருத்தி செய்யவும் உதவுகின்றன. இவ்வுணர்வுகள் நாகரீக சமூகத்தில் மூலக் கதைகளாக அமைகின்றன.

குழந்தைப் பருவத்திலிருந்தே பிள்ளைகளை மடியில் வைத்துக் கொண்டு கதைகளைக் கூறி புத்தகங்கள் மீது குழந்தைகளுக்கு கவர்ச்சியினை ஏற்படுத்துவதன் மூலம் புத்தகங்கள் இன்பம் நிறைந்தவை என்பதை குழந்தைகள் உணர்ந்து கொள்வார்கள். குழந்தைகளுக்கும், சமூகத்திற்கும் உட்புக முன்பு பிற்கால வாழ்வுக்குரிய பயிற்சியையும் அனுபவத்தையும் பெற வாசித்தல் துணை புரிகின்றது. சிறுபராயத்திலேயே இத்தகைய வாசிப்பார்வம் தூண்டப்படும் பட்சத்தில் அவர்களது அடிப்படை ஆற்றல்கள், தூண்டப்படும் சிந்திக்கும் திறன் வளர்க்கப்படுகின்றது. நினைவில் கொள்ளும் திறனும் வளர்க்கப்படுகின்றது.

ஆங்கிலத்திலும் சரளமாக வாசிக்கும் திறன் வளர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். நீண்ட சொற்களை பகுதி பகுதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்துவாசித்தல் வேண்டும். சொற்களின் கருத்துக்களை உடனுக்குடன் அறிவதற்கு "பொக்கற் அகராதிகளை" பயன்படுத்தலாம். இந்த ஆண்டினை மும்மொழி ஆண்டாக நமது மாண்பு மிகு ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார். ஆகவே தமிழ், ஆங்கிலத்துடன் சிங்கள மொழியினையும் இலங்கை வாழ் அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது அண்மைக்காலமாக வலுப்பெற்று வருகின்றது. ஆகவே சிங்கள நூல்களை தேடி வாசிக்கும் பழக்கத்தையும் அதன் கருத்துக்களை அறிந்து பயன்படுத்தும் ஆர்வத்தையும் தூண்டுதல் வேண்டும்.

மொழிப்புலமையை வளர்ப்பதற்கு அந்தந்த மொழியில் உள்ள புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பவற்றை வாசித்தல் வேண்டும். வகுப்பறை நூலகங்கள் நடமாடும் நூலகங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். புத்தக உலகத்தின் இன்பத்தை அனுபவிக்கப் பழகினால் அறிவுப் புதையலின் கதவுகள் தானாகத் திறக்கும். பிள்ளைகளுக்குப் பொருத்தமான புத்தகங்களைத் தெரிவு செய்வதற்கு உதவுதல் வேண்டும். அறிவுப் பிரவாகம் ஏற்பட்டமையால் புத்தகங்கள் பெருகி விட்டன. பரிணாமத் தத்துவப்படி அறிவு புதிது, புதிதாக வளர்கின்றது. படைப்புகள் அதிகரித்து வருகின்றன. எனவே வாசிப்பதற்குரிய வழிமுறைகளை வழங்குதல் வேண்டும்.



"சும்மா வாசிக்கக் கூடிய புத்தகங்கள் உண்டு. வாசித்து விளங்கக் கூடிய புத்தகங்கள் உண்டு" என்கின்றார் பிரான்சிஸ் பேக்கன். எனவே புத்தகங்களின் தன்மைக்கு ஏற்ப அவற்றை வாசித்து நுகர்வதற்கு பெரியவர்கள் வழிகாட்டுதல் வேண்டும். முதலில் பிள்ளைகளுக்கு அமைதியான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். அமைதியான சூழலுக்கு பழக்கப்படுத்திக் கொண்ட பிள்ளை தொலைக்காட்சியில் அடையும் பயன்கள் குறைவென்பதை உணர்ந்து கொள்ளும். ஏனெனில் இலத்திரனியல் ஊடகங்கள், தொலக்காட்சி, சினிமா போன்றவையே இன்று இளைஞர்களின் கவனத்தை ஈர்க்கின்றன. அதனால் வருங்கால சமுதாயமே அறியாமை மிகுந்த சமுதாயமாக தோற்றம் பெறும் அவல நிலை களையப்படுதல் வேண்டும். புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் தேடி வாசிப்பதற்கான திட்டங்கள் வகுத்தல் வேண்டும். பொருத்தமான மலிவான நூல்களை வழங்க வழிவகுத்தல் வேண்டும். நூல்நிலையங்கள் பரவலாக விஸ்தரிக்கப் படுதல் வேண்டும். நடமாடும் நூலக வசதிகளும் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். பல்வேறு மட்டங்களில் ஆசிரியர் வட்டம், வாசகர் வட்டங்களை ஏற்படுத்தி கலந்துரையாடுதல் வேண்டும். வாசிப்பின் மூலமே அறிவார்ந்த சமூகம் கட்டியெழுப்பப் படும். இதற்கான அடித்தளத்தை உரிய பருவத்தினருக்கு அமைத்துக் கொடுப்பதற்கு பாடசாலைகளும் பெற்றோரும் தவறும் பட்சத்தில் இருள் சூழ்ந்த சமுதாயமொன்றே உருவாகும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றமுறும் ஆசிரியம்

**அ.வா.முஹ்சீன்**
ஆசிரியர்
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி

ஆசிரியம் என்பது கற்பித்தல் செயற்பாடுகளையும், கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அவசியமான அறிவு, ஆற்றல் மற்றும் பண்புகளையும் உள்ளடக்கிய முறைமை என சுருக்கமாக வரையறுக்கப்படுகின்றது. ஒரு ஆசிரியரிடம் பொதிந்துள்ள துறைசார்ந்த அறிவு கற்பிக்கும் ஆற்றல் மற்றும் திறமை என்பவற்றோடு, அவரிடம் காணப்படுகின்ற (அல்லது இருக்க வேண்டியவை என எதிர்பார்க்கப்படுகின்ற) நடத்தைக் கோலங்களையும் உள்ளடக்கியதாக ஆசிரியம் என்ற கருத்தாக்கம் அமைந்திருக்கின்றது.

இன்று நமது நாட்டில் ஆசிரியர்கள் கடுமையான சவால்களையும் நெருக்குதல்களையும் எதிர்கொள்கின்ற ஒரு பிரிவினராக இருக்கின்றார்கள். கல்வித்துறையில் மிக அடிக்கடி ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்களினால், ஆசிரியர்கள் தம்மை சுதாகரித்துக் கொள்ள முடியாதவர்களாக இருந்து வருகின்றார்கள். கல்விக் கொள்கை, பாடத்திட்டம், கற்பித்தல் முறைமை என்பவற்றோடு, பதிவாக்கம் மற்றும் ஆவணப்படுத்தல் சார்ந்த செயற்பாடுகளும் தொடர்ச்சியாக மாற்றங்களுக்குள்ளாக்கப்பட்டு வருவதால், தமக்கான ஒரு செயற்பாட்டு முறைமையை வகுத்துக் கொள்ள முடியாத இக்கட்டான நிலைக்கு ஆசிரியர்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.அரசகொள்கை, நிர்வாகஇறுக்கம், பெற்றோரின் எதிர்பார்ப்புக்கள்.... போன்ற புறநிலை நெருக்குதல்களினால், ஆசிரியர்கள் கடுமையான மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றவர்களாக இருக்கின்றார்கள்.

வரலாற்று ரீதியாகப் பரிசீலிக்கும்போது, ஆசிரியம் என்பது காலத்திற்குக் காலம் மாற்றங்களுக்குள்ளாகி வந்திருப்பதை அறிய முடியும். பண்டைய சமூகங்களில், ஆசிரியர்கள் என்பவர்கள், மிக உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டு, மதிக்கப்பட்டவர்களாகவும், சுயாதீனம் நிறைந்தவர்களாகவும் இருந்தார்கள். அன்றைய சமூகங்களின் அதிகாரப் படிநிலை அமைப்பில் அரசனுக்கு அல்லது அரசத் தலைவர்களுக்கு அடுத்த இடம், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. நடைமுறையில், அரசர்கள் அல்லது அரசத் தலைவர்கள் ஆசிரியர்களை மரியாதைக்கும் மேன்மைக்கும் உரியவர்களாகக் கருதினார்கள். பல சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களின் அல்லது குருவின் சொற்களை மீறாதவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள்.

இவ்வாறு ஆசிரியர்கள் உயர்ந்த ஸ்தானத்தில் மதிக்கப்பட்ட பண்டைய சமூகங்களில், ஆசிரியர்களின் அறிவு, புலமை, ஆளுமை, பண்புகள் மற்றும் சுயாதீனம் என்பவை பரந்தவையாகவும் பின்பற்றத்தக்கவையாகவும் அமைந்திருந்தன, அத்தோடு அவை மரியாதையுடன் பின்பற்றப்பட்டன. பண்டைய ஆசிரியர்கள், கற்பித்தலை மட்டுமே மேற்கொள்பவர்களாக இருக்கவில்லை. கூடவே, கல்வித் திட்டத்தை வகுத்தல், கற்பித்தல் முறைமையை தீர்மானித்தல்..... போன்றவற்றை தாமே வடிவமைப்பவர்களாகவும் இருந்தார்கள். புறச் சக்திகளின் அல்லது புறத்தலையீடுகளின் நிர்ப்பந்தங்களின்றி செயற்படுவதற்கான பூரண சுயாதீனத்தை அவர்கள் கொண்டிருந்தார்கள். இவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக, தமது அறிவு, புலமை, ஆற்றல் மற்றும் ஆளுமையை தடையின்றி விருத்தி செய்வதற்கான சுதந்திரம் அவர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் தமது பிரதேசம் அல்லது பிராந்திய வாழ்நிலைமைக்குப் பொருத்தமான பாடப்பரப்புக்களையும், கற்பித்தல் முறைமைகளையும் உருவாக்கி, செயற்படுத்துபவர்களாக விளங்கினார்கள். **பண்டைய சமூகங்களில், ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. மாறாக அவர்கள் உருவாகினார்கள், அல்லது உருவாக்கப்பட்டார்கள்.**

எனினும் காலப்போக்கில், இந்த நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படுவதைக் காண்கிறோம். குறிப்பாக 16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இடம்பெற்ற மறுமலர்ச்சி யுகமானது, அறிவுத்துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. இதற்கேற்ப கல்வித்துறையானது, பாரம்பரிய நடைமுறைகளிலிருந்து பிரிக்கப்பட்டு, முற்றிலும் புதிய முறைமைக்குள் அது உட்படுத்தப்பட்டது. அச்சு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை, நூல்கள் பெரும் எண்ணிக்கையில் பதிப்பிக்கப்பட்டமை... போன்றவற்றாலும், கல்விக் கூடங்கள் அதிகளவில் உருவாக்கப்பட்டதாலும், கற்பித்தல் முறைமையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. பிராந்திய ரீதியிலான தனித்தனி கல்வித் திட்டங்கள், போதனை முறைமைகள் போன்றவை மாற்றப்பட்டு, அனைத்து இடங்களுக்கும் பொதுவான திட்டங்களும் முறைமைகளும் உருவாக்கப்பட்டன. மரபு ரீதியாக ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டு வந்ததற்கு மாறாக, கல்விக் கூடங்களில் கற்பிப்பதற்கென ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவற்றின் விளைவாக, ஆசிரியர்களின் சுயாதீனம் படிப்படியே அகற்றப்பட்டது. **இறுதியில் கல்விக் கொள்கைகளையும், பாடத்திட்டங்களையும், கற்பித்தல் முறைமைகளையும் தீர்மானிக்கின்ற செயற்பாடுகளிலிருந்து ஆசிரியர்கள் முற்றாகவே விலக்கி வைக்கப்ட்டார்கள்.**

16ம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பியர்களின் காலனித்துவ ஆதிக்கம் தொடர்ச்சியாக விரிவடைந்து வந்திருக்கின்றது. இதைத் தொடர்ந்து கல்வித்துறையானது, ஐரோப்பிய கண்ட எல்லையையும் கடந்து, முழு உலகும் தழுவிய 'பொதுத்தன்மை' கொண்டதாக மாற்றப்பட்டது. ஐரோப்பியர்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளின் பாரம்பரிய கல்வி முறைமைகள் முற்றாகக் கைவிடப்பட்டன. பதிலாக அந்நாடுகளில் எல்லாம், ஐரோப்பிய கல்வி முறைமை புகுத்தப்பட்டது. காலனித்துவ ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளின், கலாசாரம், பாரம்பரியம், அவற்றின் வாழ்வியல் தனித்துவம்.... போன்ற எந்த அம்சங்களையும் கவனத்தில் கொள்ளாது, ஐரோப்பிய கல்வி முறைமை பலவந்தமான முறையில் அந்நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

ஐரோப்பிய கல்வி முறைமை புகுத்தப்பட்டதிலிருந்து, இந்நாடுகளில் பின்பற்றப்பட்டு வந்த பாரம்பரிய கல்வி முறைமைகள் படிப்படியாகவும், பின்னர் முற்றாகவும் கைவிடப்பட்டன. இதன் பின்னர் ஆசிரியம் என்பது, அதன் மரபுவழித் தன்மையை இழந்தது. ஆசிரியர்களின் சுயாதீனம், அவர்களின் கௌரவம், அவர்களிடம் நிறைந்திருந்த புலமை மற்றும் பன்முக அறிவுநிலை... போன்றவை அகன்றன. முக்கியமாக, **மரபுவழியிலான ஆசிரிய உருவாக்கம் என்பது மறைந்து, ஆசிரியர்கள் என்பவர்கள் நியமிக்கப்படுகின்றவர்கள் என்ற நிலை உறுதியாக நிலைபெற்றது.**

இன்று இலங்கை அடங்கலாக, உலகெங்கும் கல்வி முறையானது, மேற்கின் கொள்கைகளுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படுவதாக மாறிவிட்டது. கல்விக் கொள்கை என்பது மிக அடிக்கடி மாற்றப்படுகின்ற ஒரு அம்சமாக ஆகிவிட்டது. இத்தகைய மாற்றங்களுக்கேற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களின் வகிபாகமும் தொடர்ச்சியாக மாற்றமுறுவதாக அமைந்திருக்கின்றது. நவீன உபகரணங்கள், சாதனங்கள் போன்றவற்றின் அறிமுகத்தின் விளைவாக, கற்பித்தல் முறைமையானது மிக வேகமாக மாறிக் கொண்டிருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட கற்பித்தல் முறைமைக்குள் ஆசிரியர்கள் தம்மைத் திடப்படுத்திக் கொள்வதற்கு முன்னமே, மற்றொரு கற்பித்தல் முறைமை அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனால், எந்தவொரு கற்பித்தல் முறைக்குள்ளும் தம்மை முழுமையாக உட்படுத்திக் கொள்ள முடியாத இக்கட்டான நிலைமைக்குள் ஆசிரியர்கள் தள்ளப்படுகின்றார்கள். நவீன சாதனங்களின் அறிமுகமும், அவற்றின் பயன்பாடுகளும் மிக வேகமாக அதிகரித்து வருவதால், பல ஆசிரியர்கள் அவற்றை முறையாகக் கையாள முடியாதவர்களாகவும், அவற்றுடன் தம்மை இணக்கப்படுத்திக் கொள்ள முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள்.

அதேநேரத்தில், **கற்றல் என்பது, கற்பித்தலை விட மேலோங்கியும், வினைத்திறன்மிக்கதாகவும் இருக்க வேண்டும்** என்ற மாணவர் மையக் கொள்கையின் காரணமாக, கற்றல் செயற்பாட்டில் ஆசிரியர்களின் வகிபாகம் எல்லைப்படுத்தப்பட்டிருக்கின்றது. மாணவர்களிடையே சுயகற்றல் ஊக்குவிக்கப்படுவதாலும், ஆசிரியர்களை விட மாணவர்கள், புதிய சாதனங்கள் பற்றிய அறிவிலும், அவற்றைக் கையாளும் திறனிலும் சிறந்த நிலையில் இருப்பதாலும், இன்று கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது ஒரு புதிய பரிமாணத்தை அவசியமாக்கியுள்ளது. இன்று கற்றல் தொடர்பில் மாணவர்களுக்கு அதிகளவான சுயாதீனம் வழங்கப்பட்டிருக்கின்றது. **வகுப்பறை என்ற எல்லையைக் கடந்து, வகுப்பறைக்கு வெளியே, பல்வேறு விதமான சாதனங்கள் மற்றும் மூலங்களின் துணையுடன் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய சுயாதீனத்தையும் பொறுப்பையும் இன்று மாணவர்கள் பெற்றிருக்கின்றார்கள்.** ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடு என்பது, மாணவர்களை வழிகாட்டல், நெறிப்படுத்தல், மதிப்பிடுதல் என்ற பொறுப்புக்கள் சார்ந்ததாக பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதோடு, அவர்களின் கடமைகள், பதிவு செய்தல், மற்றும் ஆவணப்படுத்தல் என்ற பணிகளையும் உள்ளடக்கியதாக மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது.

மேற்கத்தைய கல்வி முறைமை என்பது அந்த நாடுகளில் அறிவியல் மற்றும் தொழிற்துறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களோடும் அவற்றுக்கேற்ப அந்த சமூகங்களின் குடும்ப, மற்றும் சமூக உறவுகளில் ஏற்படுகின்ற மாற்றங்களோடும் இணைந்ததாக வடிவமைக்கப்படுகின்றது. நவீன தொழில்நுட்பங்களின் தொடர் வளர்ச்சி காரணமாக மேற்கு நாடுகளில் பதிவு செய்தல், ஆவணப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் மிக இலகுவான வழிமுறைகளின் மூலமாக எளிதான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் இலங்கை போன்ற நாடுகளில், பதிவுகள் மற்றும் ஆவணப்படுத்தல் போன்றவை இன்னமும் பெருமளவில், ஆசிரியர்கள் தமது சொந்தக் கரங்களினால் செய்து முடிக்க வேண்டிய பணிகளாகவே இருக்கின்றன. இதனால் இச்செயற்பாடுகள் சிரமமும், நேர விரயமுமிக்கவையாக இருக்கின்றன. பல பாடசாலைகள் கணினிகள் போன்ற நவீன உபகரணங்களைக் கொண்டவையாக இருக்கின்ற போதிலும் அவற்றைப் பயன்படுத்தல் என்பது ஒரு குறைவான செயற்பாடாகவே இருக்கின்றது. பெரும்பாலான பாடசாலைகள், குறிப்பாக கிராமப்புறப் பாடசாலைகள் இத்தகைய உபகரணங்களைக் கொண்டிராத நிலையில் அங்குள்ள ஆசிரியர்கள், தமது பணிகளைச் செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய புதிய சூழலில், மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில், ஆசிரியர்களோடு, பெற்றோர்களின் பங்களிப்பும் மிக அவசியமாகின்றது. இன்னும் துல்லியமாகக் கூறினால், ஒரு பிள்ளையின் கற்றல் செயற்பாட்டில், ஆசிரியர்களை விடவும் பெற்றோர்களின் வகிபாகம் முதன்மைத்தன்மை பெற வேண்டிய தேவை இன்று அவசியமாகியிருக்கின்றது. ஒரு நாளின் பெரும்பகுதியை தமது வீட்டில் கழிப்பது மட்டுமின்றி, சுய கற்றலையும், அத்தகைய கற்றலுக்கு அவசியமான தேடல்களையும் அதிகளவில் கொண்டிருக்க வேண்டியுள்ள ஒரு பிள்ளைக்கு பெற்றோரின் துணையும், அவர்களின் ஊக்குவிப்பும், வழிகாட்டலும் அதிகம் தேவைப்படுகின்றன.

எனினும் பெரும்பாலான பெற்றோர்களும், மற்றும் கல்வி அதிகாரிகளும் கூட, மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் ஏறக்குறைய முழுமையாக ஆசிரியர்களின் பங்களிப்பை மட்டுமே எதிர்பார்க்கின்றவர்களாக இப்போதும் இருக்கின்றார்கள். **மாணவர்களின் நாளாந்த துலங்கல் வெளிப்பாடுகளையும், அவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களின் திறமையையும் அவர்களின் கடமைகளின் நேர்மைத் தன்மையையும் மதிப்பிடுகின்ற நிலை இன்றும் அழுத்தமாகக் காணப்படுகின்றது.**

இத்தகைய எதிர்பார்ப்புக்களும், மதிப்பிடுதலும் ஆசிரியர்கள் மீது மேலும் அதிக சுமையையும் மன அழுத்தங்களையும் ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றன. கற்றல் செயற்பாடானது ஆசிரியர்களிடமிருந்து பெருமளவில் இடமாற்றப்படுவதாக அமைந்திருக்கின்ற இன்றைய கல்வி முறைக்கேற்ப, மாணவர்களும் பெற்றோர்களும் கற்றல் தொடர்பாக தமக்கிருக்கின்ற பொறுப்புக்களின் முக்கியத்துவத்தை தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியமாகின்றது. இத்தகைய புரிதலானது மாறிக் கொண்டிருக்கின்ற இன்றைய கல்விச் சூழலில், ஆசிரியர்கள் தமது கடமையையும், பாத்திரத்தையும் உரிய முறையிலும், நிர்ப்பந்தங்களின்றியும் நிறைவேற்ற பெருமளவில் வழிவகுக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர நிலைக் கல்வி *(Emergency Education)*

திருமதி. நகுலேஸ்வரி குணசேகரம
(B.A.HONS)
ஆசிரியை
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி

இன்றைய அவசரம் நிறைந்த சிக்கலான உலகில் இயற்கையினாலோ அல்லது மனித நடவடிக்கைகளின் விளைவாகவோ செயற்கையாகவோ பல்வேறு அனர்த்த நிலைமைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய நிலைமைகளின் போது தேசிய ரீதியான கல்விச் செயற்பாடுகளில் சிறுவர்கள் ஈடுபட முடியாத நிலையொன்று காணப்படுகின்றது அல்லது அக்கல்வி வாய்ப்புக்கள் குறைந்த மட்டத்திலேயே காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் முன்னெடுக்கப்படுகின்ற கல்வியே அவசர நிலைக் கல்வியாகும். இக் கல்வியானது முறை சார் கல்வியினூடாகவோ (Formal Education) ,முறை சாராக் கல்வியினூடாகவோ (Nonformal Education), முறையில் கல்வியினூடாகவோ (Informal Education), முன்னெடுக்கப்படலாம். இதனை ஒரு மாதத்திலோ அல்லது ஒரு வருடத்திலோ செயற்படுத்தி முடிக்க இயலாது. இயல்பான கல்வி அபிவிருத்தி நிலைமை ஏற்படும் காலம் வரைக்கும் அவசரகாலக் கல்விச் செயற்பாடுகள் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பது காலத்தின் கட்டாயமாகும்.

முரண்பாடு அல்லது அனர்த்த நிலைமையின் பின்னரான சமூகத்தின் புனர்வாழ்விற்கு அடிப்படையாக இக் கல்வி அமையும் என்பதோடு சிறார்கள் எதிர் நோக்கும் அச்சுறுத்தல் நிலைமையிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதும் இதன் பிரதான நோக்கமாகும். அவசரகால நிலைமைகளின் போது நிகழ்கின்ற கல்விச் செயற்பாடுகள் சிறார்களின் உயிர் பிழைப்பதற்கும் அவர்கள் உடல், உள ரீதியான பாதிப்புக்களிலிருந்து விடுபட்டு ஆதரவு நிறைந்த காப்புணர்வுடன் வாழவும் வழி வகுக்கின்றது. அத்துடன் சிறுவர்களின் கல்வி வாய்ப்புக்களை அதிகரிக்கவும் கற்பதற்கேற்ற சிறந்த சூழலை ஏற்படுத்தவும், தரமான கல்வி வழங்கவும் முழு முயற்சி எடுக்கப்பட்டு வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். மேலும் விசேட தேவைகளை வழங்க வேண்டிய சிறுவர்களை இனங்காணவும், அவர்கள் மீது அதிக அக்கறை செலுத்தி அவர்களையும் சமூகத்திற்கு ஒத்திசைவானவர்களாக மாற்றி சமூகத்துடன் இணைந்து செல்லக்கூடியவர்களாக மாற்றுவது இக்கல்வியின் ஒரு சிறப்பம்சம் என்றே கூறலாம்.

அவசரகாலக் கல்வியில் நாளாந்த வாழ்க்கையில் கிடைக்கும் அனுபவங்கள், மரபு ரீதியான கலாச்சாரச் செயற்பாடுகள், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற தொடர்பாடல் சாதனங்கள் என்பவற்றின் மூலம் பெறப்படும் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை சிறுவர்கள் பெற்றுக் கொள்வதற்கான ஒரு செயலொழுங்கே முறையில்கல்வியாகும். இது ஒரு செயற்றிறன் வாய்ந்த கல்வி முறையாகவே காணப்படுகின்றது.

முறைசாராக்கல்வி என்பது சாதாரண முறை சார்ந்த பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளுக்கு அப்பால் ஒரு நெகிழ்வுத் தன்மை வாய்ந்த மாற்றுக் கல்வி வழங்கும் செயற்பாடாகும். இது பாடசாலையிலோ பாடசாலைக்கு வெளியிலோ எழுத்தறிவூட்டலுக்கும், ஆரம்பக்கல்விச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளுக்கும் சிறுவர்களை உட்படுத்தும் ஒரு கல்விச் செயற்பாடாகும். அதாவது எழுத்தறிவு, எண்ணறிவு, வாழ்வதற்கான கற்றல் பயிற்சிகள், சுகாதாரம், கண்ணிவெடி பாதுகாப்புக்கள் போன்றவை இக்கல்வியூடாக தெரியப்படுத்தப்படுகின்றன.

முறைசார் கல்வியில் சிறுவர்களுக்கு ஆரம்பம் முதல் வகுப்பு ரீதியாக குறித்த கால ஒழுங்கில் கல்வி வழங்கப்படுவதுடன் தேர்ச்சிகளை அளவிடுவதற்கான மதிப்பீட்டு முறைகளும் பின்பற்றப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும் அவசரகாலக் கல்வியானது இம்மூன்று முறைகளினூடாகவும் காலத்தின் தேவை கருதி முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இதன் மூலம் சிறார்கள் சிறந்ததொரு சமூகமயப்படுத்தப்பட்ட பிரஜைகளாக எதிர்காலத்தில் திகழ்வதற்கு அடித்தளம் இடப்படுவதுடன் சேவை மனப்பாங்கும் மேலோங்கும்.

அவசரகால நிலைமைகளில் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு பாதுகாப்பான ஒரு இடத்தை வழங்குவதும், மீளசுதாகரித்தலுக்கான கல்விசார் செயற்பாடுகளும் மிக முக்கியம் பெறுபவையாகும். பாதுகாப்பான, அமைதியான, நிம்மதி நிறைந்த இடமானது அவர்களிடம் சமாதான நிலைமையைத் தோற்றுவிக்கவும், விளையாட்டுகளில் ஈடுபடவும், ஏனையோரிடம் இணைந்து பழகவும், தமது தேவைகளைத் தாமே வெளிப்படுத்தவும் சந்தர்ப்பங்களை அளிக்கும்.

அவசரகாலக் கல்வியின் பயனாக சிறார்கள் உடல் ரீதியான பாதிப்புக்களில் இருந்தும், பாலியல் வன்முறைகளிலிருந்தும், வேலைக்கு அமர்த்தப்படுவதிலிருந்தும், போதைப் பொருள் பாவனையிலிருந்தும் பாதுகாக்கப்படுவது அவர்களது சிறந்ததொரு எதிர்காலத்திற்கான அடிப்படை என்றே கூறலாம். அத்துடன் மட்டுமன்றி சிறார்கள் நேர்மனப்பாங்கு கொண்டவர்களாகவும், புரிந்துணர்வு உள்ளவர்களாகவும், தமது கருத்துக்களைத் தயங்காமல் வெளிப்படுத்தக் கூடியவர்களாகவும், மகிழ்ச்சிகரமான நிலையில் இருப்பவர்களாகவும் இந்த அவசர நிலைக்கல்வி அவர்களை நல்லதொரு நடத்தை மாற்றத்திற்கு இட்டுச் செல்கின்றது. மேலும் சுயநம்பிக்கை உடையவர்களாகவும், குழுக்களாக இயங்கும் மனப்பாங்கு உடையவர்களாகவும், தலைமைத்துவப் பண்புகளுடன் சமாதானத்தை விரும்புபவர்களாகவும் சிறுவர்களை மாற்றுவதற்கு அவசர நிலைக் கல்வி அவசியம் தேவையான தொன்றாகவே காணப்படுகின்றது.



இன்றைய காலகட்டத்தில் பல்வேறு வகையான அனர்த்தங்கள் உலகில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அனர்த்தம் என்பது உயிர்களையும் உடைமைகளையும் அழிக்கவல்ல ஒரு நிகழ்வாகும். இது அதிகரிக்கும் போது பேரழிவுகள் ஏற்படும் என்பது அனுபவ ரீதியாகவும், ஊடகங்கள் மூலமாகவும் நாம் அறிந்த உண்மையே. இது இயற்கையாகவோ அல்லது மனித செயற்பாடுகள் காரணமாகவோ ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பௌதீக ரீதியான சேதங்களையும், பொருளாதார ரீதியிலான இழப்புக்களையும், சமூக ரீதியான பாதிப்புக்களையும் ஏற்படுத்த வல்லது. இயற்கையான இடர்கள் என்பவை உயிரியல், புவியியல், நீரியல், வளிமண்டலவியல் சார்ந்த செயற்பாடுகளின் விளைவாக ஏற்படும் நிலநடுக்கம், மண்சரிவு, வெள்ளப்பெருக்கு, எரிமலை, வறட்சி போன்றனவாகும். மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தமானது தொழினுட்ப வளர்ச்சியின் விளைவாக சூழலில் மனிதனின் தலையீடுகள் அதிகரிக்கும் போது ஏற்படுகின்றது.

முற்பாதுகாப்பு நடவடிக்கைகளினால் அனர்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம். அல்லது அதனால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளலாம். இதற்காகவே பாடசாலைகளிலும், ஏனைய அலுவலகங்களிலும் மட்டுமல்லாது கரையோரப் பிரதேசங்களிலும் அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களில் அனர்த்தம் ஏற்படும் முன்பே முன்னறிவிப்பு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழு, பாதுகாப்பாக மக்களை வெளியேற்றும் படையணி, அனர்த்தம் நடைபெற்றவுடன் முதலுதவி செய்யும் குழு, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் சார்ந்த ஆலோசனை கூறும் பிரிவினர் என பல பிரிவினர் காணப்படுகின்றனர்.



அனர்த்த நிலைமைகளில் கல்வியை இழந்த சிறார்களுக்கு கல்வியூட்டுவது மிக முக்கியமான விடயமாகும். அவசர நிலைமைகளின் போது சிறார்களுக்கு கல்வி வழங்குவது என்பது வழமையான கற்றல் செயற்பாடுகளை விட மேலதிகமாக விசேட கவனத்துடன் அதிகளவு கற்றல் சந்தர்ப்பங்களை வழங்குவதையே கருதும். மாணவர்கள் தாமாகக் கற்பதுடன் ஏனைய மாணவர்களிடமிருந்தும் கற்கின்றனர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. கற்றலுக்கான சந்தர்ப்பங்களை ஆசிரியர்கள் உருவாக்குவதன் மூலம் மாணவர்களைத் தமது சுயசெயற்பாட்டினூடாகக் கற்பதற்குச் சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். அவசரநிலைக்கல்வியில் சுதந்திரமான தொடர்பாடல் ஊக்கப்படுத்தப்படுவது மிகச்சிறந்ததாகும். அத்துடன் சிறார்கள் மத்தியில் காணப்படும் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவரவருக்குப் பொருத்தமான செயற்பாடுகள் மூலம் கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

ஆகவே அவசரநிலைக்கல்வியின் அவசியம் உணர்ந்து அனைத்து சிறுவர்களுக்கும் அவசரகாலக் கல்வியை வழங்கவேண்டியது அறிவு சார்ந்த சமூகத்தின் தார்மீகக் கடமையாகும்.

---

# The Parrot



*The parrot is a very beautiful bird. It likes to eat fruits and grains. It is green in colour. The parrot has a red beak. It can fly very well. It has a long tail. Some parrot can talk. The parrot can turn the upper part of the beak but the other birds can not do it. I love parrots very much.*

**Yathursha shithravel**

Gr - 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# Annual Events
















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# TO SERVE WITH LOVE



GIRL SCOUTS



KITTIES



ST JOHNS' AMBULANCE

INTERACT CLUB






GIRL GUIDES



ENVIRONMENTAL CLUB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பாடல் நடத்தையும் - ஆசிரியரும்

**திருமதி.க.சத்தியநாதன்**
ஆசிரியர்,
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி

உலகில் இயற்கையின் படைப்புக்களான மனிதர், விலங்குகள், பறவைகள், யாவும் தமக்குள்ளே தொடர்பாடலைக் கொண்டுள்ளன. விலங்குகள், பறவைகள் தாம் எழுப்புகின்ற ஒலிகள் மூலம் ஒன்றுடனொன்று தொடர்புறுகின்றன. ஆனால் சிந்தனை ஆற்றல் மிக்க மனிதன் மொழி மூலம் சிறப்புத் தொடர்பாடலை மேற்கொள்கின்றான்.

தொடர்பாடல் என்பது ஒரு சிக்கனமான கலை. மற்றவர்களுடன் உரையாடும் போது மற்றவர்களின் தோற்றப் பொலிவுகளையும், அவர்களின் நிலையையும் மனதில் வைத்து உரையாடல் வேண்டும். உரையாடும்போது தொனி, சொல்லப்பட வேண்டிய கருத்து என்பவற்றை முன்னதாகவே சிந்தித்து வெளியிடல் வேண்டும். பலரிடம் திறமையான யோசனைகள், தகவல்கள் வசதிகள் இருந்தும் அதனை தக்க முறையில் சொல்லவோ, பிரயோகிக்கவோ முடியாத நிலையில் உள்ளனர். எனவே சிறந்த தொடர்பாடலின் அவசியத்தை அனைவரும் அறிந்திருத்தல் அவசியமாகின்றது

இன்றைய சமூகத்தின் மதிப்புக்குரிய ஆசிரியப்பணியை மேற்கொள்ளும் அனைவரும் சிறந்த தொடர்பாடலைப் பேணுதல் அவசியமாகும். எதிர்காலம் மேன்மையுற, சிற்பிகளை சமூகத்திற்கு வழங்கும் கடப்பாடும், ஆசிரிய சமூகத்தையே சார்ந்தது. இன்றைய சமூக, கலாசார, பண்பாட்டுக் காரணிகள் பல்வேறு வழிகளில் சிதைவுறுவதால் மாணவச் சமூகமும் பல்வேறு தீய நடத்தைகளில் ஈடுபடுகின்றது. இவற்றில் இருந்து மாணவர்களை திசை திருப்பி கல்வியில் நாட்டமுடையவர்களாக ஆக்குவதற்கு ஆசிரியர் சிறந்த தொடர்பாடலைப் பேணுவது அவசியமாகின்றது. பல்வேறு நடத்தையுடன் பாடசாலைக்கு வரும் பிள்ளை, ஆசிரியரைப் பார்த்து பின்பற்றும் பழக்கத்தை வளர்க்கின்றான். எனவே ஆசிரியன் சிறப்பான இனிமையான சொற்பிரயோகத்தை மேற்கொள்ளுதல் விரும்பத்தக்கதாகும். எனவே ஆசிரியப் பணியை மேற்கொள்ளும் அனைவரும் மாணவர்களை கல்வியில் நாட்டம் உடையவர்களாக செய்வதற்கு சிறந்த மொழித் தொடர்பாடலை மேற்கொள்வது சாலவும் சிறப்பாகும்.

Bert decket என்னும் அறிஞர் தொடர்பாடலுக்குரிய நடத்தை அம்சங்களை தொடர்பாடல் சந்தர்ப்பங்களாக முன்வைத்துள்ளார்.

1. விழித்தொடர்பாடல்
2. அங்கத்தோரணையும், அசைவும்
3. முகத்தின் வெளிப்பாடு
4. உடையும் தோற்றமும்
5. தொனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மொழி

7. கேட்போரை விடயத்துடன் சம்பந்தப்படுத்தல்

8. நகைச்சுவை

9. உங்கள் பார்வையில் நீங்கள்

மேற்கூறிய அனைத்து அம்சங்களையும் ஓர் ஆசிரியன் கற்றல்- கற்பித்தலின் போது பிரயோகிப்பானேயாகில் கற்றல்-கற்பித்தலை மிகவும் சிறப்படையச் செய்து அதி உயர் பயனையும் அடையலாம். இவற்றை மிகவும் சுருக்கமாக ஆராய்வோம்.

**01. விழித்தொடர்பாடல்:- (Eye communication)**

இது தொடர்பாடலில் மிகமுக்கிய நடத்தைப்பண்பாகும். நரம்புத் தொகுதியுடன் நேரடியான தொடர்புடையது. விழித்தொடர்பாடலில் எமது கருத்துக்களை உணர்வதுடன் கேட்போரையும் தொடர்பாடலில் ஈடுபடுத்தலாம்.

மாணவர்களை கற்றலில் விருப்புடன் அவதானிப்பை மேற்கொண்டு கிரகித்துச் செயல்படுவதற்கு இத்தொடர்பாடல் மிகவும் முக்கியமானதாகும்.


**02. அங்கத்தோரணையும் அசைவும்:- (Posture & movement)**

கற்றல் கற்பித்தல் செயலில் இம்முறை மிகவும் முக்கியமானதாகும். ஆசிரியனின் நடிபங்கு வகுப்பறைச் செயற்பாட்டிற்கு மிகவும் அவசியமாகும். ஒவ்வொருவருக்குமென ஒரு பாணி உரையாடும் போது அமைந்திருப்பது மிகவும் இலகுவாகின்றது.

தற்போதைய புதிய கல்விச் சீர்திருத்த நடைமுறையின்படி ஓர் ஆசிரியன் கற்றல் கற்பித்தலின் போது பாடச்செயன்முறைக்கு அமைவாக தன்னை உருவாக்குதல் வேண்டும் என்பது கட்டாயமாகின்றது. இதற்கமைய ஆசிரியன் தனது அங்கத்தோரணையும் அசைவையும் சீராக அமைத்து வழிகாட்டியாக செயற்படலாம்.

**03. முகத்தின் வெளிப்பாடு:- (Facial expression)**

இங்கு நடைத்தைத்திறமை ஓர் ஆசிரியனுக்கு வகுப்பறையிலோ, பாடசாலையிலோ மிகவும் முக்கியமாகும். பாடசாலை மாணவ சமூகத்துடன் சுமூகமான உறவைப் பேண இவ் நடத்தை உதவுகிறது. முகத்தின் வெளிப்பாடு இயற்கையாகவும் சிரித்த முகபாவத்துடனும் இருத்தல் நன்று. அசௌகரியமான சந்தர்ப்பங்களிலும் சிரித்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகபாவத்துடன் இருக்க ஆசிரியர் கற்றுக் கொள்ள வேண்டும்.

வகுப்பறையில் ஆசிரியனின் முக வெளிப்பாடு மிகவும் இன்றியமையாததாகும். கற்பித்தலின் போது பொருத்தமான முகபாவனையை பேணுவானேயானால் மாணவர் மனங்களை கவர்ந்து கற்றலை மிகவும் சிறப்பாக்கும் ஆசிரியராவார்.

**04. உடையும் தோற்றமும்:- (Dress & appeareance)**

ஒருவனை சமூகத்தின் பார்வையில் உயர்வடையச் செய்வது உடையும், தோற்றமும் ஆகும்.

ஆசிரியரைப் பொறுத்தவரை எமது நாட்டின் கலாசார, பண்பாட்டு காரணிகளுக்கு அமைய தனது உடையை அமைப்பதன் மூலம் தனது தோற்றத்தைச் சிறப்படையச் செய்யலாம். அவனது தோற்றத்திற்கு ஏற்றதாகவும், முன்மாதிரியாகவும், தோற்றத்திற்கு நேர்த்தியாகவும் பொருத்தமாகவும் உடையை அமைத்து பாடசாலை, சமூக, மாணவர் மத்தியில் தன்னை உயர்வடையச் செய்யலாம்.

**05. தொனி :-**

ஆசிரியப் பணியில் மிகவும் இன்றியமையாதது குரல் வளமாகும். கற்பித்தலின் போது மாணவர் மனதைக் கவரக்கூடிய வகையில் குரலானது உயர்ந்து இனிமையாக இருத்தல் விரும்பத்தக்கது. தகவல்களை வெளியிடும் போது ஏற்ற இறக்கங்களுடன் கூறுவதனால் எல்லோரையும் கற்றலில் ஈடுபடுத்தக்கூடிய வாய்ப்பும் உருவாக்கப்படுகிறது.

தொடர்பாடலில் தொடர்தொனி வெளிப்பாடு சிறப்பன்று. குரலில் தொனி வேறுபாட்டில் தனித்தன்மை பேணுதல் கவர்ச்சியாகும். எந்தக் கருத்தையும் வெளியிடும் போது இயற்கையாகவும், உயிர்த்துடிப்பாகவும் வெளியிடப்படல் ஆசிரியப் பணிக்கு சிறப்பு சேர்ப்பதாக அமையும்.

**06. மொழி :-**

கற்றல் கற்பித்தலின் மிக முக்கியமானது மொழித்தொடர்பாடல் ஆகும். மொழி நடையானது பொருத்தமானதாகவும், தெளிவானதாகவும் இருப்பதுடன் திட்டமிட்ட நிறுத்தங்களுடன் இருத்தல் நன்று. தேவையற்ற வார்த்தை பிரயோகங்களை நீக்குவதுடன் சொல் வளத்தை கூட்டுவதிலும் ஆசிரியர் அக்கறையுடன் செயற்படல் விரும்பத்தக்கதாகும்.

பல்வேறு சமூகப் பழக்க வழக்கங்களிலும் மன அழுத்தங்களுடனும் கூடிய பிள்ளை பாடசாலைக்கு வரும் பொழுது பிள்ளையை நுட்பமான, ஈர்ப்பான வசனங்களைப் பேசி கவருவதுடன், விளங்கக்கூடியதாகவும், இன்சொல்லாகவும் பேசி மாணவர் மனங்களை கொள்ளை கொண்டு கற்றல் கற்பித்தலை நேர்த்தியுடன் செயற்படுத்தி வெற்றியீட்டலாம்.

**07. கேட்போரை விடயத்துடன் சம்மந்தப்படுத்தல் :-**


இந்நடத்தை கற்றல் கற்பித்தலில் மிகவும் அவசியமாகும். கற்றலில் மாணவர்களை ஈடுபடுத்தி சிறப்பாக்குதல் ஆசிரியனின் நடத்தையிலேயே தங்கியுள்ளது. கற்றல், கற்பித்தலின் போது நவீன கல்விச்செயற்பாட்டின் படி விடயத்துடன் ஈடுபடுத்தல் முக்கியமாக கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு மாணவனுக்கு விளங்கக்கூடிய வகையில் செயற்படுவதுடன் செய்துகாட்டல், நடித்துக் காட்டல், மாதிரிகளைக் காட்டல், மூலமும் விடயத்தினுள் ஈர்க்கலாம். மேலும் சாதுரியமான விளக்கங்களைக் கேட்பதன் மூலம் அவர்களை சுறுசுறுப்பாகவும், சிந்திக்கவும் வைத்து கற்றலை மேன்மையுற செய்யலாம். இவ்வாறான பண்புகளைப் பேணி மாணவ சமூகத்தை விடயத்துடன் சம்மந்தப்படுத்தி கற்றல் கற்பித்தலை சிறப்படையச் செய்யலாம்.

**08. நகைச்சுவை :-**



நகைச்சுவையை ரசிக்காத மனிதனே இல்லை எனலாம். மனிதன் "ஒரு சிரிக்கும் விலங்கு"என கூறப்படுகின்றது. நகைச்சுவை உணர்வுபூர்வமானது. ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தும் பாலமாக அமைகின்றது. கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியன் தனக்கென நகைச்சுவையுடன் கூடிய நடை, பாணி, சொல்லும் விதம், சொல்லப்படும் சந்தர்ப்பம் என்பவற்றைக் கொண்டு செயற்படுவானேயானால் கற்பித்தலை மிகவும் சிறப்பிக்க முடியும். பாடங்களை நகைச்சுவை உணர்வுடன் கற்பிக்கும் ஆசிரியன் மாணவர் மனங்களைக் கொள்ளை கொள்பவனாகின்றான்.

**09. உங்கள் பார்வையில் நீங்கள் :-**

இத்தொடர்பாடல் நடத்தையானது தொடர்பாடல் சந்தர்பங்களில் நடத்தைத் திறமைகளைப் பாவிக்கவும், பலவீனமானதை பலப்படுத்தவும் உதவுகின்றது.மேற்சொன்ன 8 நடத்தைத் திறமைகளிலும் பலமானதை வரிசைப்படுத்தியும், தொடர்பாடலுக்கு முன்செல்ல வேண்டிய கருத்தை ஆயத்தம் செய்யவும், சொல்லும் கருத்தில் ஞானம் ஏற்படுத்தவும் உதவுகின்றது. வகுப்பறையில் கற்பிக்கும் பாட சம்மந்தமான கருத்தை ஆயத்தப்படுத்தவும், திறமையாக கற்பிக்கவும் இந் நடத்தைத் திறன் ஆசிரியருக்கு உதவுகின்றது.

மேற்சொன்ன 9 தொடர்பாடல் நடத்தைத் திறன்களையும் ஓர் ஆசிரியன் பின்பற்றுவானேயானால், மாணவர் மனங்களைக் கவர்ந்து கற்றலில் முழுமையாக ஈடுபடுத்தி, கற்றல், கற்பித்தல் செயன்முறையை வெற்றியுடன் இட்டுச்செல்வதுடன் மாணவராலும், பாடசாலைச் சமூகத்தாலும் விரும்பக்கூடிய ஒருவராகத் தன்னை ஆக்கிக் கொள்ளலாம் என்பது திண்ணமாகும். இந்நடத்தைத் திறமைகளை மேற்கொண்டு மனித உள்ளகத் தொடர்பை மேம்படுத்துவதுடன், சிறந்த ஆசிரியனாகவும், சிறந்த மனிதனாகவும் வாழ்வதற்கு ஒருவன் தன்னை வளப்படுத்தலாம் என்பது மிகவும் உறுதியான முடிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையும் சமூகமும்

**திருமதி.வாசுகி நற்குணம்**
ஆசிரியர்
தி.மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

நாட்டின் தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக பல்வேறு விதமான நிறுவனங்கள் அரசியலமைப்பு விதிகளினூடாக ஏற்படுத்தப்படுகின்றன. பாடசாலையென்ற நிறுவனமும் இவ்வாறு சட்டரீதியான விதிகளுக்குட்பட்டு உருவாக்கப்பட்டதேயாகும். பாடசாலைக் கட்டமைப்பானது தேசியக் கல்விக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக செயற்படுத்துவதற்கு நிதிசார்ந்த நடைமுறைகள், ஆளணிவளம் சார்ந்த நடைமுறைகள், பௌதீக வளத்தேவைகள், ஒழுங்கமைக்கப்பட்ட மாணவர்கள் போன்ற இன்னோரன்ன நடைமுறைகளைத் தன்னகத்தே கொண்டது. எதிர்கால நாட்டிற்காக நல்ல பிரஜைகளை உருவாக்கிக் கொடுக்கும் பாரிய பங்களிப்பின் பெருமளவு பகுதியினை பாடசாலை நிறைவேற்றிக்கொடுக்கின்றது

கட்டமைப்புகள், ஒழுங்கு விதிகள் போன்ற அம்சங்கள் ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கான உள்ளீடாக கொள்ளப்பட்ட போதிலும் இவை யாருக்காக உருவாக்கப்படுகிறது, யாருக்காக செயற்படுகிறது என்ற வினாவை எழுப்புவோமேயானால் பாடசாலைச்சமூகம் என்ற விடை எமக்குக் கிடைக்கிறது. அவ்வாறெனின் சமூகத்தின் பல்வேறு தேவைகளை வழங்கும் ஒரு நிறுவனமாக பாடசாலை விளங்குகின்றது என்பது புலனாகின்றது.

ஒரு சமூக மாதிரியை நோக்குவோமாயின் சம்பிரதாயங்கள், வழக்காறுகள், மரபுகள், மொழிரீதியான, சமயரீதியான, பிரதேசரீதியான அடித்தளங்களைக் கொண்டதாகக் காணப்படும். இந்தச் சமூகத்தின் இளம் வயதுப் பிரிவினரை பாடசாலை தனது அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. சமூகம் தனது பிள்ளைகளுக்குத் தரமான கல்வியை ஒழுங்கான முறையில் வழங்க வேண்டுமென எதிர்பார்ப்பதுடன் சமூகத்தில் அமைதியான உயிர்த்துடிப்புள்ள செயற்பாட்டிற்கு பாரியளவு பங்களிப்பினை பாடசாலை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கின்றது. பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு வெளியேறும் ஒரு மாணவன் சமூக நீரோட்டத்துள் இணைந்து கொள்வது மட்டுமன்றி சமூக முன்னேற்றத்திற்கு அவன் தனது பங்களிப்பினை வழங்கக்கூடிய கல்வியை பாடசாலை வழங்கவேண்டுமென சமூகம் எதிர்பார்க்கின்றது. இந்த வகையில் நோக்கும் போது குறிப்பிட்ட சில பாடசாலைகளே நல்ல பெயரையும், நல்ல மதிப்பையும் சமூகத்திடமிருந்து பெற்றுக் கொள்வதுடன் அவ்வாறான பாடசாலைகளிலே தங்களுடைய பிள்ளைக்கான நல்ல கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற எதிர்ப்பார்ப்புடன் குறிப்பிட்ட பாடசாலைச் சமூகம் தன்னாலான பங்களிப்பினை வழங்க முன்வருகின்றது. அதேபோன்று பாடசாலைக்கான ஒழுங்குவிதிகள், சட்டங்கள், ஏனையவிதிகள் போன்றன மட்டும் நல்லதொரு பாடசாலையை உருவாக்கி விடுவதில்லை. இவ்வாறான சட்டஒழுங்கு விதிகளை பாடசாலை அமைந்துள்ள சமூகம் முற்றுமுழுதாக மதிப்பளித்து கௌரவிப்பதன் மூலமாகத்தான் பாடசாலை சமூகத்தின் எதிர்பார்ப்பினை வழங்கக்கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறி வரும் உலக ஒழுங்கில் கல்வியின் புதிய பரிமாணங்களை உள்வாங்கி ஒழுங்கு முறையாக அதனை வழங்கும் நிறுவனம் என்ற வகையில் பாடசாலையின் முக்கியத்துவம் சமூகத்தினால் இன்று நன்கு உணரப்பட்டுள்ளது. பொருளாதார மாற்றங்களை உள்வாங்கி மாறிக்கொண்டிருக்கும் சமூகத்தின் மாற்ற மாதிரிகளுக்கு ஏற்ற கட்டமைப்பு ரீதியிலான கற்றோர் சமூகம், ஒன்றினை இன்றைய பாடசாலைகள் முற்று முழுதாக வழங்கி விட்டனவா? என்ற கேள்வி சமூகத்தினரால் வினாவப்படுவதில் நியாயமுண்டு.

தொழிற்கல்வி, நவீன தொழில் நுட்பக் கல்வி, சமூக அமைதிக்கான கல்வி போன்ற நவீன கல்வி முறைகள் பாடசாலைகளினால் முன்னெடுக்கப்பட்ட போதிலும் சமூகம் அமைதியற்று, ஒழுக்கச் சீர்கேடு நிறைந்ததாக மாறிக்கொண்டு இருப்பதற்கு யார் பொறுப்புக் கூறவேண்டும். பாடசாலையா? சமூகமா? என்ற பாரிய வினாவிற்கு விடையளிக்க முடியாமல் திணறிக் கொண்டு இருக்கின்றோம். அவ்வாறாயின் பாடசாலைக் கல்வியை முடித்து சமூகம் என்ற கட்டமைப்புக்குள் நுழையும் தொகுதியினரால் சமூகத்தின் அமைதி பாதிக்கப்படுகிறதா? அல்லது சமூகத்தினரால் பாடசாலைக் கல்வியை முடித்து வரும் தொகுதியினருக்கு சரியான இடத்தை சமூகம் வழங்கத் தவறிவிட்டதா? இதற்கான விடையினை இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைச் சமூகத்தினரிடமே விட்டுவிடுகின்றது.

சமூகத்தின் கண்ணாடிகளாக விளங்கும் இத்தகைய பாடசாலைகளின் பணி பரந்துபட்டதாக 21ம் நூற்றாண்டு அறிவுக்கட்டமைப்பிற்கு ஈடு கொடுக்கக்கூடியதான மாணவ பிரஜைகளை மாற்றியமைக்கக்கூடியதான சவால் மிக்க இலக்கு நோக்கிய பயணத்தில் இணைந்துக்கொள்ள வேண்டிய தேவை அவசியமாக உள்ளதையும் நாம் மறந்து விடக்கூடாது.

இத்தகைய அறிவியல் மாற்றங்களை உள்வாங்குவதில் பின்னடைவுகளைக்காட்டும் பாடசாலைகள் சமூகத்தின் விமர்சனத்திற்கு உட்படுவதும் நன்மதிப்பை இழப்பதும் கண்கூடாகும். எனவே பாடசாலைகள் மாற்றங்களை மட்டுமே நிஜமாகக்கொண்டு கொள்கைப்பிரகடனங்களை வகுப்பதும் அவற்றைக் கொண்டு நடத்துவதற்கான வழிமுறைகளை தீட்டுவதும் அதனை நோக்கிப் பயணிப்பதையுமே சமூகம் எதிர்ப்பார்க்கின்றது.

தரமான சமூகத்திற்கும் தரமான வாழ்க்கைக்குமான தரமான கல்வி எனப்படுகின்ற தூரநோக்குடன் இயங்குகின்ற தற்கால கல்வியின் நோக்கு வெற்றியடைய பல்வேறு பிரயத்தனங்களை பாடசாலை மேற்கொள்வதையே ஒரு அறிவு சார்ந்த சமூகம் எதிர்பார்க்கின்றது. இதன் வெற்றிக்காக ஆசிரியர்களினதும் அதிபர்களான பாடசாலையின் முதல் தர முகாமையாளரையும் சார்ந்ததாகவே அமைகின்றது என்பது ஒரு சமூகம் கண்ட கண்கூடான உண்மையாகும். பாடசாலையினது முறைமையினுள் காணப்படுகின்ற பலம் பலவீனம் போன்றவற்றை இனங்கண்டு வினைத்திறன் மிக்கதோர் பாடசாலையாக மாறுவதற்கு சமூகத்தின் தேவை பின்புலம் என்பதை கல்வியின் தேசிய நோக்கினைத் தீர்மானிப்போர் நன்கு உணர்ந்துள்ளனர். கல்வித்துறை அபிவிருத்தி சட்டத்தின் கூறுகளாகக் கருதப்படுகின்ற மிகப் பிரதானமான விடயங்களான சமவாய்ப்பு, பண்புத்தரம், வினைத்திறன் மிக்க வளப் பகிர்வுகள் ஆளுமை ஆகிய துறைகளினூடாக ஒரு பாடசாலை மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்பதும் பாடசாலையின் அனைத்து வளங்களுமே கல்வியின் நோக்கை அடைவதற்கு உதவ வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் சமூகத்தின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. உண்மையிலேயே ஒரு பாடசாலையை உருவாக்கிய சமூகமேஅப் பாடசாலைச் சமூகத்தை உருவாக்குகின்றது. அது கண்ணாடி போன்றது. பிரதி விம்பமாக காட்டும் வல்லமை மிக்கது.

மிலேனிய நூற்றாண்டில் உலகம் பூகோளக் கிராமமாக மாறியதன் விளைவு கற்றல்- கற்பித்தல் என்ற கருவியினுடாகவே அனைத்துச் சவால்களையும் வெற்றிகொள்ளும் ஆற்றல்களை உரிய பருவத்தினருக்கு உரிய காலத்தில் வழங்கும் ஒரு முதல்தர நிறுவனமாக பாடசாலை காட்டப்படுகின்றது. மிலேனிய இலக்குகளை அடைவதற்காக தேசிய கல்வி இலக்குகளை வகுத்து அதனூடாக பரந்துபட்ட உலகில் புறந்தள்ளிப் போகாமல் இணைந்து முன்னேற்றத்தை நோக்கி நகர பாடசாலைகளின் நடவடிக்கைகள் காத்திரமானதானதாக அடைய வேண்டும்என்பதே சமூகத்தின் அதீத நம்பிக்கையாகும். இதற்கு சமூகத்தின் பங்கு எந்தளவு உள்ளது? இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலையும், சமூகமும் தான் பதில் கூற வேண்டும்.

## வெற்றி வேண்டுமா?

சுவாமி விவேகானந்தர் ஒருநாள் ஆற்றங்கரையில் நின்று கொண்டிருந்தார். அருகே சில இளைஞர்கள் ஆற்று நீரில் மிதந்து சென்ற முட்டை ஓடுகளை சுட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களில் ஒருவராலும் முட்டை ஓடுகளை குறிபார்த்து சுடமுடியவில்லை.

அவர்களை விவேகானந்தர் புன் முறுவலுடன் கவனித்துக் கொண்டிருந்தார். அவரின் சிரிப்பைக் கண்ட இளைஞர்கள் அவரைப்பார்த்து, "கேலியாக பார்க்கிறீர்களே உங்களால் சுட முடியுமா"? என்று சவால் விட்டனர். முயற்சி செய்கிறேன் என்றார் விவேகானந்தர் அடக்கமாக நீங்கள் நினைப்பது போல் அவ்வளவு சுலமான காரியம் இல்லை என்றனர் இளைஞர்கள்.

விவேகானந்தர் அவர்களிடமிருந்து துப்பாக்கியை வாங்கினார். ஒரு நிமிட அமைதிக்குப் பிறகு ஒவ்வொன்றாக 12 முட்டை ஓடுகளைச் சுட்டார். ஒருமுறை கூட அவரது குறிதவறவில்லை. இளைஞர்களுக்கோ ஒரே வியப்பு. உங்களால் இது எப்படி முடிந்தது என்று கேட்டனர்.

விவேகானந்தர் பதிலளித்தார். "நான் இப்போதுதான் முதல் தடவையாக துப்பாக்கியை கையில் எடுத்துள்ளேன். எதைச் செய்தாலும் மனதை ஒருமுகப்படுத்தி செய்யவேண்டும். அப்படி செய்தால் எதையும் சாதிக்கலாம். ஒன்றைச் செய்யும் போது இன்னுமொரு விடயத்தில் கவனம் செலுத்தக் கூடாது". என்றார்.

**நாமும் வெற்றி பெற மனதை ஒரு முகப்படுத்துவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சு பொறுக்குதில்லையே!

**திருமதி. தமிழ்ச்செல்வி வசந்தகுமார்**
ஆசிரியை
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்தகுடி தழிழ்க்குடி" என்று இலக்கியங்கள் கூறுகின்றன. **"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா"**என்ற கூற்றுக்கமைய தமிழர் புகழ் உலகெங்கும் பரவிச் சிறப்புற்று விளங்கியது. கங்கை முதல் கடாரம் வரை அவன் புகழ் பரவியது. கடல் கடந்து மாற்றரசைக் கலக்கியது தமிழர் தம் வீரம். முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்து மிகைபட வாழ்ந்தவன் தமிழன். எட்டுத்திக்கும் வெற்றிக்கொடி நாட்டி விண் முட்டும் புகழுடன் வாழ்ந்தவன் தமிழன் என்று சொன்னால் அது மிகையாகாது. **"தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர திறம் உண்டு"** என்பதற்கமையப் பல்திறம் வாய்ந்த வீரனாக ஒளிவீச வாழ்ந்தான் தமிழன். வீரத்தில் புலியாகவும், கொடையில் விண்ணாகவும், அன்பில் அன்னையாகவும், அறிவில் மந்திரியாகவும் பல்திறம் பெற்று விளங்கினான் மறத்தமிழன். ஆண்மை நிறைந்தவன் தமிழன். அந்நாளில் அவன் வாளாண்மையால் பகைவரை வென்றான், தாளாண்மையால் வன்னிலத்தை நன்னிலமாக்கினான், வேளாண்மையால் வளம் பெருக்கினான்.

ஆண்கள் மட்டும் அன்றித் தமிழ்ப் பெண்களும் வீரம் வாய்ந்த நெஞ்சினராய் விளங்கியமையை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. பாய்ந்து வரும் புலியினை முறம் கொண்டு விரட்டியவீரப் பெண்ணாகத் தமிழ்ப் பெண் திகழ்ந்தாள். தன் மகவிற்குப் பாலுடன் அன்பையும், வீரத்தையும் ஊட்டி வளர்ப்பவளாகத் தமிழ்த்தாய் விளங்கினாள். "சென்று வா மகனே போர்க்களம் சென்று பகைவர் தமை வென்று வா" என்று வெற்றித் திலகமிட்டு அனுப்பியவள் வீரத்தமிழ்த் தாய். போர்க்களத்தில் தன் மகன் புறமுதுகு காட்டி ஓடினான் என்று அறிந்த தாயானவள், "என் மகன் பேடியாய் புறங்காட்டி ஓடியது உண்மையாயின் அவனுக்குப் பாலூட்டிய மார்பை இவ் வாளால் அறுத்திடுவேன்" என்று மனம் கொதித்துக் கூறினாள். ஆனால் மகன் கழுத்து அறுபட்டுக் கிடந்த நிலையைக் கண்டு அவனைப் பெற்ற போது அடைந்த இன்பத்திலும் அப்போது பெரியதோர் இன்பமுற்றாள் என்று தமிழ்த் தாய் வீரத்தைச் சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

இத்தகைய வீரமும், விவேகமும் நிறைந்த தமிழர் தம் மொழியே தமிழ் மொழியாகும். இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டுளுக்கு முன்பு தோன்றி வளர்ந்த மொழியாக எம் தமிழ்மொழி சிறப்புப் பெறுகின்றது. தமிழ் என்றால் இனிமை என்று பொருள்படும். **"இனிமையும் இளமையும் நீர்மைத்தனவே"** என்று நிகண்டு கூறுகின்றது. தமிழின் இனிமை காரணமாகவும், தமிழர் தம் உயிருடனும், உணர்வுடனும் கலந்தது என்பதனாலும் **"தமிழுக்கு அமுதென்று பெயர்"** என்றும் **"இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"** என்றும புரட்சிக்கவி பாரதிதாசன தமிழ்மொழியின் சிறப்பினை எடுத்துப் பாடியுள்ளார். **"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்."** என்று தமிழ்மொழியின் இனிமையினை மகாகவி புகழ்ந்து பாடுகின்றார். எம் தமிழ்மொழி இயல்,இசை,நாடகம் என்னும் முத்தமிழையும் தம்முட் கொண்டு என்றும் இளமையுடனும், செம்மையுடனும் சீர்பெற்று விளங்குகின்றது. இதனால்தான் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மொழியானது கன்னித்தமிழ், தெய்வத்தமிழ், வண்டமிழ், செந்தமிழ் என்றெல்லாம் சிறப்புப் பெயர் பெற்று அழைக்கப்படுகின்றது.

நீண்ட காலத்திற்கு முன் தோற்றம் பெற்று இன்றும் இளமையும், இனிமையும் குன்றாது புதுப்பொலிவுடன் வாழ்ந்து வருவது எம் தமிழ்மொழி. தொல்காப்பியம், பதினெண் மேல்கணக்கு கீழ்க்கணக்கு நூல்களையும், தமிழ்த்தாயை அலங்கரிக்கும் ஐம்பெருங் காப்பியங்களையும் தம்மகத்தே கொண்டு சீரும் சிறப்பும் பெற்று விளங்குவது நம் தமிழ் மொழி. **"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவில"** என்பதற்கமைய பழமைப் பண்பைப் பேணியும் புதுமையினை ஏற்றும் கால ஓட்டத்திற்கு அமையப் புதுப்பொலிவுடன் பூத்துக் குலுங்குவது எம் தமிழ்மொழி. தனித்துவமான தோற்றத்தையும், நீண்ட ஆயுளையும், எண்ணற்ற இலக்கியங்களையும் தம்முட் கொண்டு விளங்குவதனால் தமிழ்மொழி செம்மொழிகளில் ஒன்றாகச் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. வள்ளுவன், இளங்கோ, கம்பன், பாரதி என்னும் மகாகவிகளை உலகிற்குத் தந்த பெருமை எம் தமிழ்மொழியையே சாரும். **"யாதும் ஊரே யாவரும் கேளீர்"** என்ற கனியன் பூங்குன்றனாரின் தேச ஒற்றுமையினையும், விழுமியக் கருத்துக்களையும் தம்முள்வாங்கி சிறப்புற்று உயர்ந்து நிற்பது நம் தமிழ்மொழி என்றால் அது மிகையாகாது. எனவே தமிழர் தம் பெருமையினையும், அவர் தம் மொழியாம் தமிழ் மொழியின் சிறப்பினையும் எடுத்துரைப்பதற்கு வார்த்தைகள் எண்ணிலடங்கா.

தமிழர் தம் வீரமும், சிறப்பும் உலக நாடுகள் பூராகவும் அன்று தொட்டு இன்று வரை அணையா ஜோதியாக ஒளிவீசிக் கொண்டிருக்கின்றது. **"தோன்றிற புகழுடன் தோன்றுக."** என்றார் திருவள்ளுவர். இதற்கமைய புகழுடன் தோன்றிச் சிறப்புற்று விளங்கிய தமிழர் தம் வீரத்தையும், தீரத்தையும் எடுத்துக் கூறும் பண்டைய புற இலக்கியங்களாக புறநானூறு, கலிங்கத்துப்பரணி, களவழி போன்ற இலக்கியங்கள் விளங்குகின்றன. புறநானூறு எனும் இலக்கியம் தமிழன் புறமுதுகிட்டோடாது பகைவர் தமை வென்று வெற்றி வாகை சூடிய பெருமைதனைப் பாடுகின்றது. கலிங்கத்துப் பரணி ஆயிரம் யானைகளைக் கொன்றொழித்த தலைவனான குலோத்துங்க சோழனின் வீரத்தைப் பாடும் சிற்றிலக்கியமாக விளங்குகின்றது. **"ஆயிரம் யானையை அமரிடை வென்றவன்"** என்று குலோத்துங்க சோழன் சிறப்பிக்கப்படுகின்றான். இவ்வாறு அஞ்சா நெஞ்சம் கொண்ட வீரர்களாகத் தமிழர்கள் அன்று விளங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தம் சிறப்பினையும், தமிழ்மொழியின் சிறப்பினையும் பாராட்டாத பாவலர்கள் இல்லை என்றே கூறலாம். தமிழர் தம் கலை, கலாசாரம், பண்பாடு போன்றன மேன்மையுற்று விளங்கின. இதனால் பல மேனாட்டு அறிஞர்கள் கூடத் தமிழ்மொழியை விரும்பிக்கற்றதோடு தமிழ்மொழிக்குப் பல இலக்கியங்களையும் எழுதி வளம் சேர்த்தனர். தமிழ்மொழியின் தலை சிறந்த நீதி நூலான திருக்குறளை உலகம் எல்லாம் **"உலகப்பொதுமறையாக"** ஏற்றுக்கொண்டது. இதில் இருந்து தமிழ்மொழியின் ஒப்புயர்வற்ற சிறப்பினை எல்லோராலும் உணரமுடியும்.

இவ்வாறு அன்று நாற்றிசையும் போற்ற ஏற்றமுற்று வாழ்ந்த தமிழர் இன்று ஊக்கமிழந்து உறங்குகின்றனர். மன்னரும் மதிக்க வாழ்ந்த மறக்குலம் இடைக்காலத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டது. மாற்றார் தலை பறித்த மறவரது நெடுங்கரம் இன்று தளர்வுற்றுக் காணப்படுகின்றது. தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வர்கள் இன்று தவியாய்த் தவிக்கும் நிலையில் உள்ளார்கள். வெற்றிக்கொடியேற்றி, வீறுகொண்டு எழுந்து நான்கு திசையும் நல்லாட்சி புரிந்த நற்றமிழர் இன்று நாடு இழந்து, நாதியற்று, நடைப்பிணமாய் வாழும் அவல நிலையில் உள்ளனர். தமிழர் தம் இந்நிலைதனை எண்ணிப்பார்க்கையில் என் நெஞ்சு பொறுக்குதில்லையே!

தித்திக்கும் தீந்தமிழாம் எம் தமிழ் மொழியின் பெருமைதனை உணராதும், உணர்ந்தும் அதன் சிறப்பை ஏற்கமறுத்து மாற்றான் மொழியை மனம்விரும்பிக் கற்றும், பேசியும் வரும் தமிழ்த்தாய் பெற்றெடுத்த மாந்தர்களும் இன்று நம்மிடையே வாழ்கின்றனர். இச்செயல் பெற்ற தாயை விடுத்து மாற்றானின் தாயை "அம்மா" என்று அழைக்கும் செயலல்லவா! நாகரீக மோகம் கொண்டு தாய்மொழியை மறந்து மாற்றானின் மொழியைப் போற்றுகின்றனர். **அம்மா** என்று அழகு தமிழில் அழைக்காது **மம்மி** என்று மாற்று மொழியில் அழைப்பதால் சிறப்புண்டு என்று நம்புகின்றனர். மாணவர் சமுதாயம் கூட தமிழ்மொழியின் சிறப்பினை உணரவும், தமிழ்மொழியை மனம் விரும்பிக் கற்கவும் மறுக்கின்றனர். இதனால் எம்மொழி பெருமை குன்றி நலிவடைந்து செல்கின்ற நிலை ஏற்பட்டு வருகின்றது.

அரியணையில் வீற்றிருந்து ஆனந்தமாய் அரசோச்சிய எம் தமிழ்த்தாய் இன்று கண் கலங்கிக் கையேந்தி நிற்கின்றாள். கையணைத்துத்தனை அரியணையில் ஏற்ற யார் வருவார்? என்று. சீர் பெற்ற தமிழ்மொழி சீர்குலைந்து சிறிதுசிறிதாக அருகிச்செல்கின்ற அவல நிலையை உணர்ந்து என் நெஞ்சு பொறுக்குதில்லையே.!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக் கட்டுப்பாட்டின் இன்றியமையாமை

**திருமதி. கலையரசி பரணிதரன்**
(மாணவ ஆலோசக ஆசிரியர்)
தி. மெதடிஸ்த மகளிர் கல்லூரி

அறிவு வளர்ச்சியின் உச்சநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் சமூக மயமாக்கலும், சமூகக் கட்டுப்பாடும் இன்றியமையாத ஒன்றாகும்.

ஒரு மனிதன் சமூகத்தில் ஓர் உறுப்பினராக இணைந்து கொள்ள அவன் எடுத்துக் கொள்கின்ற முயற்சி அல்லது அவனுக்குத் தரப்படுகின்ற பயிற்சி சமூகமயமாதல் (Socialization) எனப்படும். மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையே ஒரு சரியான இணக்கத்தை உருவாக்குவதே சமூகமயமாதலின் நோக்கமாகும். ஒரு சமூகம் அல்லது குழுவிற்குள் வாழ்வதற்காக அதனுடைய வழிமுறைகளை மனிதர்கள் கற்கின்ற செயற்பாங்கே சமூகமயமாதல் எனப்படுவதாக பிரட்ரிக்எல்கின் (Frederick Eikin) கூறுகின்றார்.

எனவே அதிகளவில் குடும்பம், பாடசாலை, கோயில், நண்பர்கள் , ஒப்பார்குழு, மக்கள் தொடர்புச்சாதனங்கள் போன்றவற்றின் மூலமே ஒரு மனிதன் சமூகமயமாதலை பெறுகிறான். சமூகமயமாதல் நான்கு வகையான செயற்பாடுகளை கொண்டிருப்பதாக எச்.எச்.நியூமன் எனும் சமூகவியலாளர் கூறுகிறார். அதாவது,

1. புதிய உறுப்பினர்களுக்கு அவன் வாழும் சமூகத்தின் மீது நம்பிக்கை, அச் சமூகத்தின் இலட்சியங்களில் பிடிப்புக்கொண்டு சமூகத்துடன் இசைவான நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளல்.

2. ஒரு தலைமுறையினர், அடுத்த தலைமுறையினருக்குத் தங்கள் சமூகத்தின் பண்பாடுகளைக் கற்பித்தல்.

3. ஒரு சமூகத்தில் வாழ்பவர்கள் அதனுடைய கோட்பாடுகள் பிடிக்காததால் வெறுப்பு மனப்பான்மையுடன் வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டுத் தங்களை மாய்த்துக் கொள்வதை தடுத்தல்.

4. ஆளுமை வளர்ச்சிக்கு உதவுதல்

போன்ற நான்குமாகும்.

பொதுவாக குழந்தை வளர்க்கப்படும் முறை, (Rearing) பெற்றோரின் இரக்கம் காட்டும் தன்மை, (Sympathy) பிறரிடம் ஒன்றுதல் தன்மையினை தனக்குத்தானே வளர்த்துக் கொள்ளுதல், (Identification) பிறருடைய பழக்க வழக்கங்களை பின்பற்றுதல், (Imitation) சமூகப் போதனைகள், சூழ்நிலையை உணர்ந்து நடத்தல், புதிய சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு எதிர்வினை புரிதல், ஒருவருக்கொருவர் கொண்டுள்ள நடத்தை, பிறரின் ஒத்துழைப்பு, கருத்தேற்றம், பாராட்டுக்கள், தனிநடத்தைகள் போன்ற சமூகமயமாதற் செயற்பாங்குகள் ஒரு மனிதனிடம் மிகுதியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமயமாக்கலில் முக்கிய இடம் வகிப்பது சமூக கட்டுப்பாடாகும். சமூகக் கட்டுப்பாடு என்பது மனிதன் பண்பாட்டின் விதிப்படியும் சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வழிமுறைகளின் படியும் நடந்து கொள்ள ஊக்குவிக்கும் ஒரு சக்தி என்று திரெசுவர் (Dressler) வில்லிசு (Willis) ஆகிய சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இக்கண்ணோட்டத்தில் நோக்கும் போது சமூகக் கட்டுப்பாட்டின் இன்றியமையாத தன்மையும், அதை நிலைநிறுத்தக் கையாளப்படும் வழிமுறைகளும், அதனுடன் இயைந்த நெறிமுறைகளும் சமூக உறவுகளைச் சீர்படுத்திச் சமூகத்தினை வழிநடத்திச் செல்வது புலப்படும். மேலும் இவ்வாறு செம்மைப்படும் சமூக உறவுகள் சமூக மாற்றம் ஏற்படவும் அதன் மூலம் ஒரு சிறந்த சமூக அமைப்பு உருவாகவும் வழிகாட்டுகின்றன.

சமூககட்டுப்பாடு பலவித விதிமுறைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அந்த விதிமுறைகளிலிருந்து விலகிச் செல்பவர்களைத் தண்டிப்பதற்கும் (Punishment) ஆனால் அதே சமயத்தில் மற்றவர்களைச் சமூக விதிமுறைகளின் பால் ஒத்துப்போகச் செய்வதற்கும் (Conformity) உதவுகிறது.

மனித சமுதாயம் தோன்றிய காலத்திலிருந்தே சமூகக் கட்டுப்பாடு சமுதாயத்தின் ஓர் அம்சமாகவே விளங்கி வருகின்றது. தொன்மைச் சமுதாயத்தில் எவ்விதமான சமூகக்கட்டுப்பாடும் நிலை கொள்ளவில்லை. மனித உறவுகள், அதன் நிறுவனங்கள், அமைப்புக்கள் சமூகத்தின் தேவைகள் ஆகியவை பெருகியதாலும், காலத்தின் மாறுதலினாலும், சமுதாய நிலையும் ஒழுக்க நெறியும் வளர்ச்சியடைவதாலும் சமூகக்கட்டுப்பாடு அவசியமாகிறது.

ஒழுக்க நெறிகளும் சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பழக்கவழக்கங்களும் அரசுகளால் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களும், இன்றைய காவல் மற்றும் நீதித்துறை நிறுவனங்களும், மதச் சார்புடைய இயக்கங்களும் சமூக உறுப்பினர்கள் மீது அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறும், ஏற்றுக்கொள்ளாதவாறும் இரு நிலைகளில் கட்டுப்பாட்டை விதித்து சமூகத்தினை நிலை பிறழாமல் இயங்கச் செய்கின்றன.

இக்கண்ணோட்டத்தில் நோக்கும் போது சமூகக் கட்டுப்பாட்டின் இன்றியமையாத தன்மையும் அதை நிலைநிறுத்தக் கையாளப்படும் வழிமுறைகளும், அதனுடன் இணைந்த நெறிமுறைகளும் சமூக உறவுகளைச் சீர்படுத்தி சமூகத்தினை வழிநடத்திச் செல்வது புலப்படும். மேலும் இவ்வாறு செம்மைப்படும் சமூக உறவுகள் சமூக மாற்றம் ஏற்படவும், அதன் மூலம் ஒரு சிறந்த சமூக அமைப்பு உருவாகவும் வழிகாட்டுகின்றன.

சமூக மானிடவியலாளர்களும் சமூக உளவியல் அறிஞர்களும் சமூக கட்டுப்பாட்டின் தேவையை வலியுறுத்தி அதன் பண்புகளை விளக்குகின்றனர். குறிப்பாக

1. அகவயக் சமூக கட்டுப்பாடு (Internal Social Control)
2. புறவய சமூக கட்டுப்பாடு (External Social Control)

என இரு வகையாக நோக்கலாம்.

அகவய கட்டுப்பாடு என்பது மனிதனால் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலம் தனது சமூக உறவுகளையும் செயல்களையும் ஒழுங்குபடுத்திக் கொண்டு வாழ்வதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக ஒருவன் திருடுவதில்லை என்று தானாக முடிவெடுத்துக் கொண்டு தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றான் என்றால், தான் திருடுவதற்குத் தனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று கருத இயலாது. ஆனால் திருடுவது தவறு என்று உணர்ந்து தனக்குத் தானே ஓர் ஒழுக்கமான வாழ்க்கையை கொள்கிறான். இதுவே சமூகக் கட்டுப்பாட்டின் மூலம் ஏற்படும் மனித வாழ்க்கையின் சிறந்த பண்பாகும்.

புறவய கட்டுப்பாடு என்பது சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நிலை பெற்ற ஒரு சில நெறிமுறைகள் அல்லது வழிமுறைகள் மூலம் சமூக உறுப்பினர்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு கட்டுப்பாட்டுடன் வாழ்வதே புறவயச் சமூகக் கட்டுப்பாடாகும்.

இன்றைய சமுதாயத்தில் சட்டத்தின் மூலமும், பண்டைய சமுதாயத்தில் ஒழுக்க நெறியின் மூலமும் இவ்வகை புறவயச் சமூகக் கட்டுப்பாடு நிலை பெறுகின்றது. ஒரு மனிதன் திருடுகிறான் என்று வைத்துக்கொண்டால் அங்கே அகவயக் கட்டுப்பாடு தன் செயல் தன்மையை இழந்து விட்டதாகக் கருத முடியும். இச் சந்தர்ப்பத்தில் புறவய சமூகக் கட்டுப்பாடு மூலம் தண்டனை அளித்தல் அவனைத் திருடுவதிலிருந்து தடை செய்யலாம்.

இப்புறவய சமூகக்கட்டுப்பாடு முறைசார் கட்டுப்பாடு, முறைசாரா கட்டுப்பாடு என இருவகைப்படும். சுருக்கமாகக் கூறினால் கிண்டல், கேலி, அவப்பெயர், மரியாதைக் குறைவு, ஒதுக்கி வைத்தல் போன்றவை முறைசாரா சமூகக் கட்டுப்பாட்டிலும் பதவி, பதக்கம், பட்டம், பாராட்டு, புகழ், பெருமை, உயர்வு என்பன முறைசார் சமூகக்கட்டுப்பாட்டு முறையிலும் அடங்கும்.

இச்சமூகக் கட்டுப்பாட்டினை நிலைநிறுத்துவனவாக சமூக நிறுவனங்கள் விளங்குகின்றன. இச் சமூகநிறுவனங்கள் சமூகக் கட்டுப்பாட்டின் மீது செலுத்தும் பங்கு அளவிடற்கரியது. அத்துடன் இன்றியமையாத ஒன்றுமாகும்.

சமூகக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துபவை:-

குடும்பம்.
சாதிகள்.
ஒப்பார் குழு
சமயம்
கல்வி நிறுவனங்கள்.
சட்டமும் துணை நிறுவனங்களும்

திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, போன்ற மக்கள் தொடர்புச்சாதனங்கள் (Mass media) சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த வழிவகை புரிகின்றது.

சமூகக் கட்டுப்பாட்டில் பல வழிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் இணங்குவித்தல், கருத்தேற்றம், அழுத்தம், எச்சரிக்கை, கட்டாயப்படுத்தல், தண்டனை ஆகியவை முக்கியமானவை.

**இணங்குவித்தல**- சமூக உறவுகள் இன்றைய காலத்தில் சிக்கலாகவும் பின்னிப்பிணைந்தும் இருக்கின்றன. இத்தகைய உறவுகளினால் குழப்பங்களும் சிக்கல்களும் ஏற்படுவது இயற்கையே. இச்சிக்கல்களைக் கேட்டுக் கொள்ளுதல் அல்லது இணங்குவித்தல் (persuasion)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் நல்ல சமூகக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்தலாம். இம்முறை எளிமையானதும் இலகுவானதும் ஆகும்.

**கருத்தேற்றம்** - சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த மிகவும் இன்றியமையாததாக ஆலோசனை தெரிவித்தல் அல்லது கருத்தேற்றம் (suggestion) உதவுகின்றது. இதனால் சமூக உறவுகள் சீர் செய்யப்பட்டு சமூக நெறிமுறைகள் கட்டிக்காக்கப்படுகின்றன.

**அழுத்தம்** - இது சமூகக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்த உதவும் சிறந்த வழிமுறையாகும். இது முதல்நிலை உறவுகளை விட (Primary Relations) இரண்டாம் நிலை (Secondary Relations) உறவுகளில் தான் பெரிதும் பண்படுத்தப்படுகின்றது. இது சமூக உறவுகள் பாதிக்கப்படாமல் இருக்கவும் அதன் சீர்குலைவுகளை தடுக்கவும் துணைபுரிகின்றது.

**எச்சரிக்கை** - சமூக உறவுகளில் ஏற்படும் குழப்பங்கள் சிக்கல்கள், சீர்குலைவுகள் ஆகியவற்றை எதிர் நோக்கிச் சரிப்படுத்த, எச்சரிக்கை முறை (caution, warning) பயன்படுத்தப்படுகிறது. எச்சரிக்கை விடுத்தல் மூலம் ஒரு மனிதன் அல்லது குழு அல்லது சமூக உறவுகளில் தொய்வும் விரிசலும் ஏற்படாமல் தடுத்தல் செய்து சமூகத்தின் கட்டுப்பாட்டை மேன்மையடையச் செய்யும் என்பது தெளிவு.

**கட்டாயப்படுத்தல்** - சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த வற்புறுத்தல் அல்லது கட்டாயப்படுத்தல் முறை (Coercion) பின்பற்றப்படுகின்றது. இதன்படி சமூகஉறவுகளில் பிணக்கம். அதிக சீர்குலைவு போன்றவை சமன் செய்யப்படுகின்றது.

**தண்டனை** - சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த அன்றைய சமுதாயத்திலிருந்து இன்றைய காலம் வரை தண்டனை (Punishment) பயன்படுகின்றது. மற்றைய முறைகளினால் எவ்வித பயனும் ஏற்படாத பட்சத்தில் இம்முறை பயன்படுத்தப்படும். இதன் மூலம் சமூக உறவுகள் சீரடைகின்றன. தெளிவான சமூகப்போக்கும் உருவாகின்றது. சமூகத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கும் குழப்பங்களுக்கும் முடிவு ஏற்பட்டுச் சமூக அமைதி ஏற்பட தூண்டுகோலாகவும் துணையாகவும் அமைகிறது.

சமூகம் நிலைபிறழாமல் தனது போக்கினிலே வேலை செய்யச் சமூகக்கட்டுப்பாடு உறுதுணை புரிகின்றது. இதன் மூலம் சமூகத்தின் தகுதி நிலை (Status Quo) காப்பாற்றப்படுகின்றது. அத்துடன் சமூகத்தின் ஒழுக்க நெறிகளும், சமூக வழிமுறைகளும் பாதுகாக்கப்படுகின்றன. இதன் மூலம் தனி மனிதன் ஆளுமையும் (Personality) சமுதாயத்தின் நிலைத்தன்மையும் (Stability) வளர்க்கப்படுகின்றன.

கொலை ,கொள்ளை, குற்றம், போன்ற சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்படாத பலவகைச் செயல்கள் சமூகக்கட்டுப்பாட்டினால் முடிவுக்கு கொண்டு வரப்படுகின்றன. அல்லது தடுக்கப்படுகின்றன. இதனால் தனிமனித ஒழுக்கமும் சமூக உறவுகளும் மேம்பாடு அடைகின்றன. நற்செயல்கள் நற்பண்புகள் மதிப்பளிக்கப்படுகின்றன. தனிமனித நற்காரியங்கள் பாராட்டப்படுகின்றன. இதனால் சமுதாயம் கட்டுக்கோப்பாகச் சீரிய முறையில் இயங்குகின்றது. எனவே சமுதாயத்தில் பல்வேறு வளர்ச்சியும் மாற்றங்களும் ஏற்பட்டாலும் இன்றைய காலத்திற்கும் சமூகக்கட்டுப்பாடு அவசியமானதாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெபமே ஜெயம்

**திருமதி. சசிகலா பரமேஸ்வரன்**
N.R.C ஆசிரியை
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி

*தம்மை நோக்கி கூப்பிடும் யாவருக்கும் - உண்மையாய்*
*தம்மை நோக்கி கூப்பிடும் யாவருக்கும்*
*கர்த்தர் சமீபமாய் இருக்கிறார்.*

(சங்: 145:18)

அன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் மனிதனாக வாழ்ந்த போது அவரைச் சூழ்ந்து அநேக ஜனங்கள் எப்பொழுதும் இருந்த போதும் கூட அவர் தம் பிதாவை நோக்கிப் பார்ப்பதை, தனிமையில் ஜெபிப்பதை கை விடவே இல்லை அதிகாலையிலும் மற்றும் இரவிலும் பகல் நேரங்களிலும் தருணம் கிடைக்கும் நேரங்களில் எல்லாம் தம் பிதாவின் சமூகத்தை வாஞ்சையுடன் நாடிச் சென்றார். என்று வேதம் கூறுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நாங்கள் எவ்வளவு மணிநேரம் அவருடைய பாதத்தில் நேரத்தை செலவிடுகிறோம். ஜெபம் என்றால் என்ன? ஆண்டவருடன் பேசுவதே ஜெபமாகும். எங்கள் தனிப்பட்ட ஜெபங்கள் எப்படிக் காணப்படுகிறது சற்று எங்களை ஆராய்ந்து பார்ப்போமானால் (கிறிஸ்து+அவர்கள்) கிறிஸ்தவர்களாகிய நாங்கள் இயேசு கிறிஸ்துவிடம் எங்கள் தேவைகளைக் கூறும் போது தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படுவது எல்லாத் தடைகளும் உடைத்தெறியப்பட்டு வெற்றி கிடைப்பது நிச்சயம்.

*தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடு இருப்பவர்களுக்கு*
*தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும் படி*
*கருத்தருடைய கண்கள் பூமி எங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது.*

(11நாளா 16:09)

என்ற வசனத்திற்கேற்ப அன்பு ஆகார் எனும் அடிமைப் பெண் வனாந்தரத்தில் அழுத கூக்குரலின் சத்தம் கர்த்தருடைய சந்நிதானத்தில் எட்டிய படியால் அவளுடைய உடனடித் தேவை சந்திக்கப்பட ஒரு நீரூற்றை உருவாக்கினார். அவள் கண்ணீரைக் கண்ட தேவன் ஒரு தூதனை அனுப்பி அவள் மகனை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்று பதில் கொடுத்தார். எசேக்கியா ராஜா தனது மரணப்படுக்கையில் இருந்து கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்தார். உடனே அவருக்கு

*உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்*
*உன் கண்ணீரைக் கண்டேன் - இதோ*
*நான் உன்னைக் குணமாக்குவேன்*

(11ராஜா 20:5)

என்று கூறி 15 வருடத்தை வெனுக்கு கூட்டிக் கொடுத்த தேவன் எங்கள் விண்ணப்பத்தையும் கேட்டு எம் கண்ணீரை துடைக்க ஆவலாயுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பிதாவான யாக்கோபு ஓர் இரவு முழுதும் போராடி நீர் என்னை ஆசீர் வதித்தாலொழிய நான் உம்மை போக விட மாட்டேன் என்று விடா முயற்சியுடன் உறுதியாய் ஜெபத்திலே தரித்திருந்தபடியால் அவனுக்கு இஸ்ரவேல் என்று பெயர் கிடைத்தது. அன்று துக்கத்தின் மகன் எனும் அர்த்தம் கொள்ளும் யாபேஸ்! இவ்வாறு அறிக்கை செய்தார்.

*தேவரீர்!*
*என்னை ஆசீர் வதியும்*
*என் எல்லையை பெரிதாக்கும்*
*உமது கரம் என்னோடு இருக்கட்டும்*
*தீங்கு என்னை துக்கப்படுத்தாத படி காத்துக்கொள்ளும்*

(1நாளா 4:16)

என்று ஜெபம் பண்ணினார். அவன் வேண்டிக் கொண்டதை தேவன் அருளினார்.

தானியேல் என்ற பக்தன் ஒரு சிறந்த ஜெபவீரனாக வாழ்ந்த படியால் அவனது வாழ்க்கை முழுவதும் வெற்றியாக அமைந்தது. அவன் எதைச் செய்தாலும் அந்தக் காரியம் ஜெயமாக இருந்தது. மனிதருக்கு தோன்றிய சொப்பனங்களுக்கு உரிய அர்த்தத்தை தேவ சமூகத்தில் இருந்து வண்ணம் ஜெப ஆவியினால் ஒன்றிக்கப்பட்டவனாகக் காணப்பட்டான்.

ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவன் தாவீது அரசனாகக் காரணம் தனது துதிகளை, நன்றி பலிகளை தன் வாயினால் எப்பொழுதும் கடவுளுக்கு முன்பாக ஏறெடுத்துக்கொண்டிருந்ததை


*கர்த்தரை நான் எக்காலத்திலும் துதிப்பேன்*
*அவர் துதி எப்போதும் என் வாயில் இருக்கும்.*
*என்ற வசனத்தை நாம் சங்கீத புஸ்தகத்திலே காணக்கூடியதாக இருக்கிறது.*

"கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்" என்ற வார்த்தைக்கூடாகவும் "கேளுங்கள் உங்கள் சந்தோசம் நிறைவாயிருக்கும் படி பெற்றுக் கொள்வீர்கள்" என்ற வார்த்தையின் படியும் ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்திருந்து அவர் இதுவரை காலமும் செய்த நன்மைக்காக நன்றி கூறி ஜெபிக்கிற வீரர்களாக இருப்போமானால் நிறைவான சந்தோசத்தையும், சகல ஆசீர்வாதங்களையும், சுகத்தையும், பலத்தையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எமக்கிங்கு அருளுவார். எம் ஜெபவாழ்க்கையே இம்மையில் ஆசீர்வாதத்தையும், மறுமையில் ஜெயத்தையும் பெற்றுத்தரக் கூடியதாய் இருக்கிறது.

நீங்கள் எதிர் பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும் படி நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்

*அவைகள் தீமைக்கல்ல சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.*

(எரே 29:11)



ஆம் ஆண்டவர் நாம் எதிர்பார்த்திருக்கும் முடிவை நமக்கு கொடுக்க விரும்புகிறார். என்னென்ன காரியங்களை எதிர்பார்த்து அவருடைய பாதத்தில் அமர்ந்து காத்திருக்கிறோமோ அத்தனைக்கும் அவர் பதிலைத் தருகிறார். ஏனென்றால் அவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டிக் கொள்வதினிமித்தம் நாம் எதிர்பார்த்திருக்கும் முடிவை வழங்கி நம்மை கனப்படுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வளர்மதியாய் என் கல்லூரி



கலங்கி நிற்கிறேன்,
பாடசாலை வாழ்க்கையின் விளிம்பில்
திரும்பிப் பார்க்கிறேன்,
இவ்வினிய பயணத்தின் முதல் தடத்தை.

பதின் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்
பாதம் பதித்தேன் - என் பள்ளியில்
ஈன்றெடுத்த அன்னையின் கருவறையை
மீண்டும் அடைந்த களிப்புடனே.

அன்றைக்கும் இன்றைக்கும் இடையில்
அடடா எத்தனை மாற்றங்கள்
அவை அத்தனையும் முன்னேற்றமே.



சிறிதாய் இருந்த வகுப்பறைகள்
பெரிதாய் ஆனதென்ன மாயம்
குன்றாய் இருந்த கட்டிடங்கள்
கோபுரங்கள் ஆனதன்றோ

பூச்சிகள் பறந்திட
பூந்தோட்டமும் பூத்ததுவே
பிரதான மண்டபமும்
பிரகாசமாய் மிளிர்கிறதே.

என் கல்லூரி நூலகத்தில் குவிந்து கிடக்கும்
எண்ணிலடங்கா நூல்கள்.
நூற்று வீத அடிப்படையில் உயர்ந்து செல்லும்
மாணவர்களின் புள்ளிகள்.
விளையாட்டில் மாணவர் திறன் அதிகரிக்க
பன்முக போட்டிகளில் அவர்தம் ஆர்வமும் உயர,
வந்து குவிந்தனவே பல விருதுகள்
உயர் தேசிய விருதுகளும் உட்பட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப் பிரிவில் தாய்மையுடனும்
இடைநிலைப் பிரிவில் கண்டிப்புடனும்
உயர் பிரிவில் நட்புடனும்
அறிவை புகட்டும் ஆசான்களின்
அர்ப்பணிப்புச் சேவை
எட்டுத்திக்கும் எட்டிடவே
பல்கலைக்கழகம் சென்றிடும்
எம் மாணவர் எண்ணிக்கை
சீராய் என்றும் உயர்ந்திடவே - இங்கு
பயில வரும் மாணவர் தொகையும் - இன்று
பன்மடங்காய் உயர்ந்திற்றே.

இங்கு கற்று எங்கும் - சென்று
பாங்காய் வாழும் பண்பாளர் ஆயிரம்
மங்கா நினைவுடன் எம் உயர்வில் பங்கெடுக்கும்
பழைய மாணவரோ பல்லாயிரம்
தம் பிள்ளை கல்விக்காய்
தமைவருத்தும்பெற்றோரோஎண்ணிலடங்கா
எம் கல்வி வளர்ச்சிக்காய்
என்றும் உதவும் நலன் விரும்பிகளோ சொல்லிலடங்கா

கலைமகளின் சிலையுமதாய்
கண்டிப்பின் வடிவுமதாய்
தலைமையே ஆளுமையாய்
தாய்மையே சாயலுமாய் - கல்லூரி
நிலை உயர சதா உழைக்கும்
நிறைமாதே எம் அதிபர்

எத்தனை மாற்றந்தான் என்பள்ளியிடம்
அத்தனையும் சொல்ல வார்த்தையில்லை என்னிடம்
போற்றுகிறேன் இந்த மாற்றங்களை
வேண்டுகிறேன் என்றும் ஏற்றங்களை

**செல்வி. மதுமிதா வதனகுமார்**
தரம் 13 விஞ்ஞானப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GLOBAL WARMING

*Global warming is when the earth heats up. It happens when green house gases trap heat and light from the sun in the earth's atmosphere, which increases the temperature. This hurts many people, animals, and plants. Many cannot take the change so they die.*

*Global warming is affecting many parts of the world. Global warming makes the sea rise, and when the sea rises, the water covers many low lands, and islands. This is a big problem for many of plants, animals, and people on islands. The water covers the plants and causes some of them to die. When they die, the animals lose sources of food, along with their habitat. Although animals have a better ability to adapt to what happens than plants do they may die also. When the plants and animals die people lose two sources of food - plant food and animal food. They may also lose their homes. As a result, they would also have to leave the area or die. This would be called a break in the food chain, or a chain reaction, one thing happening that leads to another and soon. Global warming is doing many things to people as well as animals and plants. It is killing algae, but it is also destroying many huge forests. The pollution that causes global warming is linked to acid rain. Acid rain gradually destroys almost everything it touches. Global warming is also causing many more fires that wipe out whole forests. This happens because global warming can make the earth very hot. In forests, some plants, and trees leaves can be so dry that they catch on fire.*





*Many things cause global warming. One thing that causes global warming is electrical pollution. Electricity causes pollution in many ways, some worse than others. In most causes, fossil fuels are burned to create electricity. Fossil fuels are made of dead plants and animals. Some examples of fossil fuels are oil and petroleum. Many pollutants are sent in to the air when fossil fuels are burned. Some of these chemicals are called green house gases.*

*Another thing that makes global warming worse is when people cut down trees. Trees and other plants collect Carbon dioxide ($co_2$), which is a green house gas. Carbon dioxide is the air that*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*our body lets out when we breathe. With fewer trees, it is harder for people to breathe because there is more $co_2$ in the air, and we don't breathe $co_2$, we breathe oxygen. Plants collect the $co_2$ that we breathe out, and they give back oxygen that we breathe in. With less trees and other plants, such as algae, there is less air for us, and more green house gases are sent into the air. This means that it is very important to protect our trees to stop the green house effect, and also so we can breathe and live. This gas $co_2$ collects light and heat produced by the sun, and this makes the earth warmer. The heat and light from the sun is produced in the center of the sun.*

*People are doing many things to try to stop global warming. One thing people are doing carpooling. Carpooling is driving with some one to a place that you are both going to. This minimizes the amount of green house gases put into the air by car.*

*The government is doing many things to help to stop global warming. The government made a law called "The Clean Air Act" so there is less air pollution. Global warming is making people get very bad illnesses that could make them disabled, very sick and some of them even die. The Clean Air Act is making many companies change their products to decrease these problems.*

**Dilaxshini pathmanathan**
2013 COMMERCE

# படி படி

தம்பி, தங்கை வா இப்படி
நடப்பாய் மூத்தோர் சொற்படி
கல்விதான் வாழ்க்கை படி படி
கற்றுமே வாழலாம் படி படி.
உள்ளத்தை விடாதே எண்ணப்படி
உயர்வே இலக்கென எண்ணிப்படி
பிள்ளைப் பருவமே உயர்வெனப்படி
பின்னாளில் தலைவனாவாய் அப்படி.
கடவுளைத் தொழுவாய் தினப்படி
கடமை உணர்வைத் தரும்படி
மடமை அறவே நீ படி
மாநிலம் போற்றத்தான்படி.



**ரசோதரன் கிஷாளினி**
தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISLAM ASSOCIATIONS



CHRISTIAN ASSOCIATIONS



HINDU ASSOCIATIONS



MUTHTHAMIL MANDRAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணே உன்னை உணர்ந்து கொள்!

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது அதனிலும் அரிது மங்கையராய்ப் பிறத்தல் என்பது" என்று மார்தட்டி மெய்ச்சிக் கொள்ளும் விதமாய் மானிடப் பிறவியருள் மங்கையராய் உருவெடுத்த மாதவத்தாரே கேளுங்கள். உங்களுக்கான ஓர் பொன்னான செய்தியை சுமந்து வருகின்றது என் பேனா முனை.

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமாம்" அத்தகைய பெருமை பெற்றுள்ளது பெண்மை. பூங்கொடி என்று பெண்களை புலவர்கள் பாடிய காலம் போய் இன்று ஒவ்வொரு பெண்ணும் தேசத்தின் தேசியக் கொடிகளாய் மாறிவிட்டிருப்பதை எண்ணுகையில் உள்ளம் புளகாங்கிதம் அடைகின்றது. ஆயினும் கடந்து வந்த பாதையின் கண்ணீர்ச் சுவடுகளை நாம் யாரும் இலகுவில் மறந்து விட முடியாது. இன்று உலகம் போற்றத்தக்க நிலையில் உயர்ந்து வாழும் பெண்ணினம் முன்னைய காலங்களில் அனுபவித்த கொடுமைகளைச் சொல்ல என் ஒரு நாவு போதாது. உண்மை தான்! முன்னைய காலங்களில் மூடநம்பிக்கைகள் என்னும் பெயரில் ஆண்களின் அடிமைகளாகவும், உயிரற்ற ஜடங்களாகவும், அடிப்படை உரிமைகளைக் கூட பெற முடியாத நிலையில் பெண்மை பரிதவித்ததும், அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்றதும், பெண் புத்தி பின் புத்தி என்றதும், இன்னும் நீறுபூத்த நெருப்பாய் எம்மவர் நெஞ்சிடையே உள்ளது.

நாம் எப்பிறப்பில் செய்த நல்வினையோ? தெரியவில்லை எம்மவரிடையே காணப்பட்ட இழி நிலை சில பல ஆண் பெண் முற்போக்குவாதிகளால் சாபவிமோஷனம் கண்டது. அதன் பின்னர் உருவான படிப்படியான உரிமைப் போராட்டங்களின் விளைவாகத்தான் இன்று உலக நாடுகளின் அரங்கில் கூட பெண்களின் இருப்பு இருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

*சாத்திரங்கள் பல பல கற்பவராம்*
*சவுரியங்கள் பல பல செய்பவராம்*
*மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பாவராம்*
*மூடர் கட்டுக்கள் யாவும் தகர்ப்பவராம்*
*காத்து மானிடர் செய்கையனைத்தையும்*
*கடவுளர்க் கினிதாகச் சமைப்பாராம்*
*ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்பவராம்*

என்ற பாரதியின் எதிர்வுக் கூற்று பொய்யாகவில்லை. அன்று அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நால்வகைப் பண்பையும் மேற்கோள் காட்டி ஓங்கி எழும் குரல்களுக்கு மரண ஓலை எழுதிக் கொடுத்த மனுக்குலத்திற்கு "நாணும், அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்" என்று சவால் விட்டு சாதித்திருக்கிறார்கள் இன்றைய புதுமைப் பெண்கள். பெண்மை என்றால் மென்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பொருள் கூறும் மூடருக்கு மென்மை + வன்மை = பெண்மை என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

அன்று அடுப்படியில் சிற்றூண்டி செய்தவள் இன்று செயற்கை கோள் செய்கிறாள். அன்று அரச மரம் சுற்றியவள் இன்று அண்டவெளி சுற்றுகிறாள். சமூக வரைகளையும் சாத்திர வலைகளையும் தகர்த்து விட்டு சாதனைப் போருக்காய் இன்று களத்தில் நிற்கிறார்கள் பெண்கள். ஆண் வலியவன் என்பதும் பெண் எளியவள் என்பதும் உண்மை வாதமல்ல, உருவம் கொஞ்சம் மாற்றமே தவிர உணர்வில் ஏதும் பேதமில்லை என்பதே எம் பெண்களது மகுட வாசகம்.



சாதம் படைக்கவும் செய்வோம், தெய்வச்சாதி படைக்கவும் செய்வோம் என்று பெண்கள் புயலாய்க் கிளம்புகிறார்கள் புதுயுகம் படைக்க. அன்பின் பண்பாக, அறத்தின் வடிவாக, கற்பின் உயர்வாக, உயிரின் தோற்றுவாயாக இவ்வாறு பல வழிகளிலும் உயர்ந்து நிற்கிறாள் பெண். இத்தகைய பெண்ணின் பெருமையை மண்ணின் மாந்தர்கள் உணராதிருப்பது பெரிதல்ல மங்கையரே உணராதிருப்பது தான் கொடிது. ஆம், இன்று ஒரு வழியில் வீறு கொண்ட விருட்சமாய் பெண்மை ஓங்கி நின்றாலும், தம் உண்மை நிலையறியாது இன்னும் கள்ளிச்செடிகளாகவே ஒருசாரார் வாழ்ந்து வருதல் மிகவும் வேதனைக்குரியதே.

எத்தனையோ கிராம, நகரப்பகுதிகளில் இன்னமும் பெண்கள் புகைமண்டிக்கிடக்கின்ற அடுப்பங்கரைகளை தமது சொர்க்கபுரியாக எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அப்படி வாழ்வதை யாம் தவறெனக் கூறவில்லை. வெறுமனே ஆக்கி, வடித்து, அலம்பி, ஆறுவது மட்டுமல்ல பெண்களது வாழ்வு அதையும் தாண்டி வாழ வேண்டும். வீழ்ந்தாலும் எழுகின்ற அருவிகளாக வேண்டும். வாழ்ந்தோம் வீழ்ந்தோம் என இல்லாது வாழும் போது பேர் சொல்லும்படி வாழ வேண்டும் அதுதான் பிறவிப்பயன்.

ஆணினது இன்ப நுகர்ச்சிகளுக்கும் பணிவிடைகளுக்கும் மட்டும் உரித்தானவள் அல்ல பெண்; சக்தி இல்லையேல் சிவமில்லை, சிவமில்லையேல் சக்தியில்லை. என்னும் உண்மையை ஒவ்வொரு ஆணும் உணர வேண்டும். ஆகவே தான் இதுபற்றி பாரதியார்; "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்குமாம்;" என்று கூறிச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் முன்னோடிகளாய் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் அநீதிகளுக்கு எதிராகவும் ஆண்களின் வளர்ச்சிக்குத் துணையாகவும் எத்தனையோ பெண்கள் வாழ்ந்து காட்டியுள்ளனர். இவ் அடிப்படையிலே இராமனை இயக்கிய சீதை, துளசிதாசனைப் புகழ் பெறச்செய்த அவனது மனைவி, வள்ளுவனை உயர்த்திய வாசுகி, நான் என்னவானாலும் என் கணவனுடைய பெருமை மேம்பட வேண்டும் என்று விரும்பி நின்ற பட்டாங்கில் யானும் பத்தினியே யாமாகில் ஒட்டேன் அரசனோடு மதுரையை ஒழிப்பேன் என்று பெண்மைக்காகக் குரல் கொடுத்த கற்புக்கரசி கண்ணகி என்போரை மறந்து விட முடியாது.

ஆகவே பெண்களே பெண்ணினத்தைப்பாதுகாக்க எமது வழிகாட்டிகள் பல போராட்டங்களின் மத்தியில் எமக்குப் பெற்றுத்தந்துள்ள உரிமைகளையும் சிறப்புகளையும் கனவாய்க் கலையவிடலாமா? உன் ஓடும் உதிரத்திலும் வடிந்தொழுகும் கண்ணீரிலும் சாதனைத்தீப்பொறி சுடர்விட்டு எரியட்டும். பெண்களின் தொண்டு சீரிய சமுதாய நோக்கங்களைக் கொண்ட புரட்சி மனப்பான்மையோடு மிகுந்த அறிவுடன் உண்மையும் வீரமும் பொருந்தியதாக அமைய வேண்டும். அத்துடன் இல்லற வாழ்க்கையை இனிதே மென்மையுடன் செவ்வனே நடத்திச் செல்லலும் அவசியமாகிறது.

அமிழ்ந்து பேரிருளாம் அறியாமையில் அவலமெய்திக் கலை இன்றி வாழ்வது கவலை. உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறம் ஆகுமா?

ஆகவே ஒவ்வொரு பெண்ணும் மிகவும் துணிச்சலுடன் செயலாற்றி ஒவ்வொரு சமூகத்தையும் விழிப்புறச் செய்ய வேண்டும். பெண் விடுதலையோடும் ஆண்களுக்கு நிகராக ஆட்சி செய்வதோடும் எமது சாதனை நின்று விடாது சமுதாய மற்றும் நாட்டின் முன்னேற்றத்திலும் பங்கெடுக்க வேண்டும். இது ஒவ்வொரு பெண்ணினதும் தலையாய கடமை ஆகும். இதன் மூலமாய் நாடும் வீடும் ஏன் முழுஉலகமும் வளம் பெறும் என்பதில் துளியும் ஐயமில்லை. ஆகவே பெண்ணே இத்தனையும் செய்வதற்கு முதலில் உன்னை நீ அறிந்து கொள்ள வேண்டும். நான் சாகப்பிறந்தவள் அல்ல சாதிக்கப் பிறந்தவள் என்பதைப் புரிந்திருக்க வேண்டும். மற்றும்

*உன்னை அறிந்தால் - நீ*
*உன்னை அறிந்தால்*
*உலகத்தில் நீ வாழலாம்*
*உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்*
*தலைவணங்காது நீ வாழலாம*

எனவே பெண்களே மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டும் எனும் உண்மையை உணர்ந்து செயற்பட உங்களை வேண்டுகிறேன்,மற்றும்

*காதலொருவனை கைப்பிடித்து*
*அவன் காரியம் யாவினும் கைகொடுத்து*
*மாதர் அறங்களின் மேன்மை காட்டி*
*வாழவேண்டும் என வாழ்த்துகிறேன்.*

**செல்வி. பிரியதர்சினி வின்சன்ட் பீரிஸ்**
மாணவத் தலைவி 2011
13 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகளை காத்திட வாரீர்

இன்றைய சிறுவர்களே நாளைய தலைமுறையின் தலைவர்களாவார்கள். நாளைய சமூகத்தை சிறப்பாகக் கட்டியெழுப்பும் பொறுப்பு இன்றைய சிறுவர்களைச் சேர்ந்ததாகும். அத்தகைய சிறுவர்கள் சமூகத்தில் சுதந்திரமாகவும், பாதுகாப்புடனும் வாழ்வது முக்கியமானவிடயமாகும்.

சிறுவர்களுக்கான உரிமைகள் பல உள்ளன. அவற்றைக் காக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் பட்டயமானது. 1989ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டதுடன், 1991ம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினாலும் ஏற்று அங்கீகரிக்கப்பட்டது. இச் சிறுவர் உரிமைகள் பட்டயத்தில் சிறு பராயத்தின் முக்கியத்துவமும், சிறுவர்கள் மிக பாதுகாப்பாக வாழ்வதற்கு அவர்களுக்குள்ள உரிமைகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

சிறுவர் உரிமைகள் பட்டயத்தின் பிரகாரம் 18 வயதிற்குட்பட்ட அனைவரும் சிறுவர்களாகவே கருதப்படுகின்றனர். சிறுவர்களுக்கான உரிமைகளில் கட்டாயக் கல்வி முக்கியமானதாகும். அந்த வகையில் இலங்கையில் 14 வயதிற்கு உட்பட்ட அனைவருக்கும் கல்வி கற்கும் உரிமை உண்டு. அந்த வகையில் இலங்கையில் இலவசக் கல்வி முறை நடைமுறைப்படுத்தப்படுவதாலும் கட்டாயக் கல்வி முறை சிறப்பாகப் பேணப்படுகின்றது.

சிறுவர்களுக்கான உரிமைகளை பூரணமாக அனுபவிக்கும் உரிமை அனைத்துச் சிறுவர்களுக்குமே உள்ளது. அவ்வுரிமைகளை பாதுகாப்பதற்காகவும் பல அமைப்புகள் காணப்படுகின்றன. சிறுவர்களுக்கான உரிமைகள் ஏதேனும் மீறப்பட்டால் அல்லது மறுக்கப்பட்டால் அவ்வமைப்புகளின் ஊடாக மீறுபவர்களுக் கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் உரிமையும் சிறுவர்களுக்கு உண்டு என்பது மறுக்கமுடியாதவொரு உண்மையாகும்.



ஆனாலும் இன்றும் பல சிறுவர்கள் பல்வேறு விதமான துஷ்பிரயோகங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் சட்டப்படி குற்றமாகும். ஆயினும் வறுமையின் காரணமாக பல சிறுவர்கள் பல்வேறு இடங்களில் குழந்தைத் தொழிலாளிகளாக வேலைக்கமர்த்தப்படுகின்றனர்.

அதை விட இன்று சமூகத்தில் போதைவஸ்துக்களின் பாவனை அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. போதையூட்டிகளை உட்கொள்ளல் ஆகும். மற்றும் போதையூட்டி வியாபார நடவடிக்கைகளில் பிள்ளைகளை இணைத்துக் கொள்ளல். ஆயினும் இன்று பல குழந்தைகள் போதைப்பொருள் பாவனைக்குப் பலவந்தமாக உட்படுத்தப்படுவதோடு, போதைப் பொருள் விற்பனைக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக சிறுவர்களுக்கெதிராக நடைபெறும் துஷ்பிரயோகங்களிலே முதன்மையானது பாலியல் துஷ்பிரயோகமாகும். சிறுவர் உரிமைகள் பட்டயத்தில் சிறுவர்களை பாலியல் வன்முறைக்குட்படுத்தக் கூடாது என வலியுறுத்தப்பட்ட போதிலும் இன்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம் பெறுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.



எந்தவொரு பாலியல் சார்ந்த செயற்பாடுகளிலும் சிறுவர்களை ஈடுபடுத்தல் அல்லது அவற்றிற்கான தூண்டுதல்களை அளித்தலோ தண்டனைக்குரிய குற்றமாக காணப்படினும் இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகங்களிலே முதன்மையானதாக பாலியல் துஷ்பிரயோகமே காணப்படுகின்றது. இன்று சமூகத்தில் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையே அதிகமாக காணப்படுகின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களின் போது பிள்ளையின் குடும்பமும், அரசாங்கமும், அதன் சட்டங்களும் சிறுவர்களுக்கு எந்தளவில் பாதுகாப்பை அளிக்கின்றது என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

மேற்குறித்த அனைத்துவிதமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் பிள்ளைகள் பாதுகாக்கப்படல் வேண்டும். அனைத்துச் சிறுவர்களும் சமூகத்தில் சுதந்திரமாகவும் பாதுகாப்புடனும் வாழவேண்டும். அப்போதுதான் எதிர்கால சமூகம் சிறப்பானதாக அமையும். சிறுவர்கள் இன்றும் துஷ்பிரயோகிக்கப்படுகின்றனர். சிறுவர்களை துஷ்பிரயோகிப்பவர்கள் வேறு சமூகத்தை சார்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள் என்று முடிவாகக் கூறிவிட முடியாது. பல குழந்தைகள் தமது குடும்ப அங்கத்தவர்களினாலேயே வன்முறைக்குட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிறுவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு சமூகத்திடமே ஒப்படைக்கப்படுகின்றது.

குழந்தைகளுக்கு உரிய பாதுகாப்பினை வழங்கி பாதுகாக்கும் பொறுப்பு ஒரு குடும்பத்தையே சார்ந்ததாகும். சிறுவர்கள் சமூகத்தினால் வஞ்சிக்கப்படும் போது அச் சிறுவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திடமே ஒப்படைக்கப்படுகின்றது.

சமூகத்தின் அனைத்து நன்மைகளையும் பெற்றுக் கொள்ளும் உரிமை அனைத்துச் சிறார்களுக்குமே உண்டு. சிறார்களைப் பாதுகாத்து நாளைய சமூகத்தை சிறப்படையச் செய்வது இன்றைய தலைவர்களான எமது கடமையாகும். நாளைய தலைவர்களை உருவாக்குவதும் நமது கடமையே ஆகும். அந்த வகையில் சிறார்களுக்கெதிராக நடைபெறும் வன்முறை செயற்பாடுகளில் இருந்து அச்சிறுவர்களைப் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு நம் ஒவ்வொருவரையும் சேர்ந்தது என்று பூட்கை கொண்டு சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க ஓரணியாக ஒன்று திரளுவோம் வாரீர்.

**செல்வி வினுஜா விக்கிரமசிங்கம்**
2014 வர்த்தகப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Doll


*Doll is a man made thing*
*It doesn't know how to sing*
*One day, a boy bought it home*
*And went to his home in Rome*

*He kept the doll in a place to look*
*It was just as the doll, was reading the book*
*It wasn't much nice to keep there*
*So he searched a place to keep it where*

*At last, he found it*
*It was on top of a chair, to sit*
*He nicely decorated the doll*
*Which was very much in height and tall*

*He thought the doll would talk*
*And see the pleasure of its walk*
*But the doll did nothing*
*As it's a man-made thing*

*When the doll talks, it would be unpleasant*
*It would be much worse than the pheasant*
*Dolls are like women*
*As they think they live in a den!*




**R. Moshika**
Grade 10[B]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் ஆசான்



பாரினிலே பிறந்து பாலராய் பள்ளி சென்று
பண்டிதனாய் மாறிவிட பாடுபடுவது ஆசானே.
அல்லும் பகலும் அரும் பாடுபட்டு
அயராது உழைப்பவர் அவரே.

கற்பித்தலின் போது கடினமாகவும்,
இடைவெளி நேரம் இனிமையாகவும்,
மாதா போலவும் எமைக் காப்பவரே
மாண்புக்குரிய உம்மை வணங்குகின்றோம்.



அன்பினால் உருவான அன்னை போலவும்,
ஆக்கம் படைக்கும் ஆன்றோர் போலவும்,
கல்வி வழங்கும் கலைவாணி போலவும்,
கருணை படைத்தவரே ஆசான்.

வையத்துள் பிறந்த எம்மை
வாழ்வாங்கு வாழச்செய்பவரே
குற்றமில்லா குணம் படைத்தவரே - உம் புகழ்
குன்றின் மேலிட்ட விளக்காய் ஒளிரட்டும்.

ககனத்தின் கருமையைப்போல்,
கவியில் கம்பரைப் போல்,
காலத்தின் பெருமைதனை காண்பித்த ஆசானே,
என் ஆருயிரை அர்ப்பணிக்கிறேன் உனக்கு.

சுகந்தி அருள்
2013 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Importance of English

There are as many languages as there are races. Each race has a language of its own. Some languages are well developed and some are internationally renowned. Some others are equally developed but their influences outside their own frontiers are little. Still others like tribal languages are under developed and are even without scripts of their own to boast of. Again some languages are rich in literature but poor in other spheres of knowledge. English is the only language that occupies a unique place in the modern world and excels all the rest in the every sphere of human endeavour, whether it is in the field of Arts and Humanities or Science and Technology or Commerce and Diplomacy. It is the product of centuries of growth. It's international renown cannot be challenged by any on any ground.

There are many reasons for the increasing demand everywhere for more and better English. The most important reasons are that it is a language of world culture and utility. It is a treasure house of knowledge. The world's best and the richest gems of knowledge found in all the other languages of the world are translated in to English, so much, So anyone with a good knowledge of English can reach the pearls of wisdom found in all other languages. This is the greatest advantage of mastering English otherwise one has to learn as many languages as possible to share in the world's heritage which is not an easy task even for a linguist. In countries like Ceylon and India which is Multiracial, multi-lingual and multi-religious, English can serve as a common link and help to create amity while furthering the development of the national languages. The much spoken and much needed national unity in these countries can be easily achieved through a common language like English.

Eastern countries that had been under British rule for over a century and still following British practice in their judiciary and public administration will suffer if they neglect the teaching and learning of English. Eastern Nations are likely to become culturally barren , linguistically diluted, intellectually starved and aesthetically stunted if they discard English in haste to satisfy wrong national sentiments.

The above are some of the reasons why English is important to us. We must not neglect it. The need for good and better English for our future advancement is great. Very soon, we will have to share in the spoils of the Space Age where again English is holding sway because it is the first language spoken by man in another planet moon. English alone can lift humanity and lead it to the commonwealth of world heritage. English alone has the attributes of a world language that can make the twains of east west meet in our growing human family.

**Jemila Jainudeen**


10 B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Helpers

Doctor, doctor
What do you do?
I treat my patients to cure



Teacher, teacher
What do you do?
I teach my students to become bright

Fisherman, fisherman
What do you do?
I catch fish for you to cook

Baker, baker
What do you do?
I bake bun and bread for you to eat.

**Kuloshika Balthasar**
Grade:-04

---

# BALLOONS



*Balloons Balloons*
*Red blue Green*
*Come and Buy*
*Come and buy*
*Fifty rupees a balloon*
*Come and buy*
*Come and buy*
*Fifty rupees a balloon*
*Play and enjoy*

**Deepika Kanagathilakan**
**Grade:04**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

தன்னுயிரில் இன்னுயிராய்
கருவினிலே சுமெந்தெடுத்தாய்
உன் உதிரத்தை பாலாக்கி
தந்தாயே தாயவளே



முதல் மொழி 'அ' அதில்
முதலாய் பார்த்த பெண் அம்மா
எழுத்தறிவித்தாள் அன்னை
என்னையும் அறியவைத்தாள் அவளே

தன் பசியைப் பாராது எனக்கிங்கு
உணவளித்தாள்
உண்ட எனது எச்சிலினை
அமிர்தம் என்றே நினைத்தாள்

முகம் சுளித்தால் தாங்கிடுமோ?
அவள் மனது,
முற்றிலும் கலங்கிடுமே
அவள் உறவு



பசி தன்னை போக்கிவிடும்
பசு இவள் - பாசத்தால்
என்னை அள்ளி அணைத்திடும்
அன்னை இவள்

எட்டி உதைக்கும் காலை முத்தமிட்டும்
தன் வியர்வையால்
எமை வாழ வைக்கும் கண்கண்ட
தெய்வமே அம்மா

**லக்ஷீக்கா சுரேஸ்**
தரம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழிக்கு தொலைதூரமான ஒரு நட்பின் கடிதம்

பதின்மூன்று வருட பேறுகாலம்!
வகுப்பறையில் சுமந்தாள்
இறுதியில்
சுகப்பிரசவமாய்
ஈன்றெடுத்து விட்டாள்
ஈன்ற மகிழ்ச்சியில் அவள் இருந்தாலும்,
இதயம் முழுதும் இரணங்களுடனும்,
கண்கள் முழுதும் கண்ணீருடனும்,
கல்லூரி வாசலில் நாங்கள்.

நாட்கள் தோறும் நண்பர்கள் சூழ
நடைபோட்ட
கல்லூரி மண்ணிலே
எப்போதாவது ஒரு நாள்
நான் மட்டும்
தனிமையிலே அடியெடுத்து வைக்க!
நெஞ்சம் வலிக்கிறது
கண்கள் தேடுகிறது
நம் தடயங்களை

மீண்டும் ஒருமுறை மாணவியாக
வாழ்ந்திட துடிக்குது மனசு
இன்றெல்லாம் தனிமையிலே
உணர்கிறேன்
நம் பாடசாலை நாட்களின்
இனிமையை

அம்மாவின் கையை விட்டுப் போகப்
பிடிக்காமல் அழுத நாட்கள்

பிறந்த நாள் அன்று மட்டும்
பள்ளிக்கு முன்பே செல்லத்
துடித்த நாட்கள்

புலமைப் பரிசில் பரீட்சை முடிந்ததுமே
பெரிய வகுப்பிற்கு செல்லப் போகிறோம்
எனப் பெருமிதப்பட்ட நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமே இல்லாத நேரம்
வகுப்பறையை இரண்டாகப்
புரட்டிப்போட்ட காலங்கள்

இரண்டு நாள் விடா மழைக்காக
இரண்டு வார விடுமுறை விட்டபோது
குதித்த நிமிடங்கள்
வகுப்பறையில் பாடம் சொல்லிக்
கொடுக்கும் வேளையில்
நண்பியிடம் பேசிய ரகசியங்கள்
சட்டென எழுந்த சண்டைகளும்
சல்லடையாய் கொல்லும்
வேதனைகளும்
சின்னச் சின்ன குறும்புகளும்
செல்லமாய்ச் செய்யும் சேட்டைகளும்
விழிகளிலே நடை போடுகின்றன



மாணவ தலைவியாய் பதவியேற்ற நாட்களும்
முதல் தடவையாக மாணவர்களை
அதட்டியதும் - அதைச்
சொல்லிச் சிரித்த தருணங்களும்

அதிபருடன் சென்ற சுற்றுலாவும்
அவருடன் நண்பர்களாய் களித்த
சந்தோச தருணங்களும்

பரீட்சை நேரத்தில்
விழுந்து விழுந்து பாடங்களை
மீட்டிக் கொண்ட நாட்கள்

தேர்வின் முடிவுகளை
கையில் வாங்கி
உறைந்து போன நாட்கள்

செய்த தப்புகளுக்காக
அதிபரிடம் தலை குனிந்து நின்ற
நிமிடங்களும்
பரீட்சைக்கென ஆசீர்வாதம்
வாங்க தலை குனிந்து நின்ற
தருணங்களும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மூலைக்கு
சென்றிடுவோம் என சிந்திக்க வைத்ததும்
பெருமிதத்துடன் ஒருவர் முகத்தை
ஒருவர் பார்த்த
பிரியாவிடை நிகழ்வு



அடிக்கடி
புகைப்படங்களை எடுத்துப் பார்த்து
நண்பியின் முகத்தை
விரல்களால் வருடி
நினைவுகளை மீட்டிப் பார்க்கும்
தருணங்கள்.

பூக்கள் உதிர்ந்த பின்னும்
அதன் வாசம் மட்டும்
அம் மரத்தைச் சுற்றி நிற்பதாய்..
நினைப்புகள் முழுதும்
நம் கல்லூரியைச் சுற்றி வருகிறது தோழி
காயங்களின்றி கரைந்தோடும்
இரத்தங்களாய்
விழிகளிலே நம் நினைவுகள்
நிழலாடிக் கொண்டிருக்கிறது
நண்பி



எல்லாம் நடந்து
எல்லோரும் பிரிந்து
எங்கோ இருந்தாலும்
உன் அழைப்புக்காகவும்
உன் மின்னஞ்சல்களுக்காகவும்
காத்துக்கிடக்கிறேன் தோழி
உன்னுடைய அழைப்புகள் வாராதா
என ஏங்கும் மனங்களின் வரிசையில்
இப்போது நானும் காத்திருக்கிறேன்
நிஜமாய் உனக்கு மனம் வருந்தும் போது
என் வாசல் தேடி வா
அதே நட்பின் தோள் கொண்டு
காத்திருக்கிறேன்

**கீர்த்திகா சௌந்தரராஜன்**
முகாமைத்துவ பீடம்
யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My school life in India

*I think the period I spent in India is the very interesting and memorable part in my life. I like to share my experience in India with you.*

*I faced a difficult situation at the age of fifteen. In the second part of my teenage, I had to spend my life in India. Then, I did not know that this experience would be a turning point in my life. But today I understood that this experience was given me by God. It was not an incident, but a good chance to improve my talents.*

*Most people think that India is very famous for cinema actors, tourist places, and ancient temples. But in my memories my experience in India was not that, but something else. I lived in India just for three years but I felt it like thirty years. Yes, every moment in this three years, I enjoyed my life with happiness and full of satisfaction.*

*I studied in the English medium at Sri Karpaga Vinayagar Matriculation Higher Secondary School in Tamil Nadu, in India. Secondary students had to pay 20000 Indian Rupees as an annual fee and another 2000 Indian Rupees for other purposes such as monthly exam, functions, sports and so on.*

*Every teacher behaved like a mother to all the students. The principal was always ready to fulfil the needs of the students on time. She guided us in a good and correct way. Sometimes teachers spoke to students with very love like "come angel", "what is the problem dear?" But they never called the students "di" or "da"*

*There were many instances to show how the principal and the teachers helped the students in several ways. For an example, one day I missed my bus because of the Annual Day practice. It was too late. There was no way to go home. At that time, my principal took me in her car to my home.*

*During the class time, if a student could not understand a subject or a chapter, the teacher would explain again and again tirelessly until the student would clearly understand it. Further, all the teacher knew the characters of all the students. Each and every teacher worked hard to increase the result of the students. I must specially say that Indian students do not go to the tuition classes because they get all the knowledge from the school.*

*During my school life in India, I felt new changes in my talents, knowledge, and behaviours and I could analyse the talents between Indian and Sri Lankan students. I must say that the education I obtained in India is the main factor for me to write this article in English. I am very proud to thank my school and the teachers who guided me and I will never forget their encouragement in my life.*

*Thousands of Sri Lankan students have faced this kind of situation in India. I hope they too feel like me today. I would be thankful to the God for giving me this great opportunity.*

***Sabeshini Santhasivam***
*Grade 12 Bio.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தினமும் இன்றைய புதுமைப்பெண்களும்

International Women's Day

மனித வாழ்வில் இரண்டு சோகங்கள் மட்டுமே உள்ளன. "**ஒன்று நாம் ஆசைப்படுவது கிடைக்காமல் போவது, மற்றையது நாம் ஆசைப்படுவது கிடைத்து விடுவது**" என பெர்னாட்ஸா கூறுகிறார். மார்ச் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாகும். ஆண்டு தோறும் முழு உலகமுமே இத்தினத்தைக் கொண்டாடி மகிழ்கின்றது. பெண்களின் அடிப்படை உரிமை, மனித உரிமை, ஜனநாயக ரீதியிலான உரிமை, பொருளாதார உரிமை, சமூக அமைப்பு என்று பல வகைகளிலும் ஆணாதிக்கம் மேலோங்கி, விசேடமாக வறுமைக்கு உட்பட்ட பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் அவர்களின் உழைப்பில் ஏற்பட்ட சுரண்டல்கள் இவற்றிற்கெல்லாம் எதிராக கிளர்ந்த எழுச்சிப் போராட்டத்தின் வெற்றி நாளாகவே இந்த சர்வதேச மகளிர் தினம் மிக விமர்சையாக கொண்டாடப்படுகிறது.

பெண்களின் அனைத்து விதமான உரிமைகளைப் பாதுகாப்பது, ஆண்களுக்கு இணையாக மதிப்பு, மரியாதை, கௌரவம் வழங்குவது சம்மந்தமான ஒரு தீர்மானத்தை அமெரிக்க சோசலிஸக் கட்சி கொண்டு வந்து அதன் அடிப்படையில் பெப்ரவரி 28ஆம் திகதி பெண்கள் தினமாக கொண்டாடுவதற்கு அறிக்கை வெளியிடப்பட்டு இருந்தது. அந்த வகையில் 1910ஆம் ஆண்டு சோசலிஸத்திற்கான இரண்டாவது சர்வதேச மகாநாடு கோபேர்ன்கேகனில் நடைபெற்ற போது க்ளேரா செட்டிகன் என்ற தொழிலாளர் தலைவி சமத்துவத்திற்காகப் பெண்கள் நடாத்திய போராட்டத்தை ஞாபகப்படுத்த சர்வதே பெண்கள் தினத்தை பிரகடனப்படுத்துமாறு கோரினார். அதன் பிறகு மேற்கத்தேய மற்றும் ஐரோப்பிய நாடுகள் 1913இல் ஒன்று கூடி மார்ச் 8ஆம் திகதியை சர்வதேச பெண்கள் தினமாக கொண்டாட முடிவெடுத்தன. எனவே தொழிலாளர் போராட்டம், அரசியல் போராட்டம், பெண்கள் ஆண்களுக்கு எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை எடுத்தியம்புவதற்கு இச் சர்வதேச பெண்கள் தினத்தை நினைவில் நிறுத்துகின்றோம். இன்றைய காலகட்டத்தில் சமுதாயத்தில் எத்துறையினை எடுத்து நோக்கினாலும் பெண்கள் இல்லாத துறையே இல்லை எனலாம். ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்ட அடிமையாக பேச்சுரிமை மறுக்கப்பட்டிருந்தது.

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும் - மஞ்சள்
அழகும் அழகல்ல நெஞ்சத்து நலம் யாம் எனும்
நடுநிலைமையால் கல்வி அழகே அழகு."

எனும் நாலடியாரின் கூற்றுக்கிணங்க ஒருவருக்கு கல்வி அழகுதான் உண்மையில் அழகாகும். இந்தக் கல்வி அழகைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு காலத்தில் பெண்களுக்கு தடைவிதிக்கப்பட்டு இருந்தது. மேலும் திருமணம் முடிப்பதற்கான சுதந்திரத்திற்கு தடை, வழிபாட்டிற்குத் தடை விதிக்கப்பட்டு வீட்டு மூலைக்குள் பெண்கள் முடங்கிக் கிடந்தனர் எனலாம். ஆனால் இன்றைய காலகட்டத்தில் பெண்கள் சகல துறைகளிலும் சுதந்திரமான முறையில் செயற்பட்டு இன்று எல்லாத்துறைகளிலும் பணிபுரிகின்றனர். மண்ணில் இருந்து விண்வரை சகல துறைகளிலும் பெண்களின் பெருமையும், புகழும் பெருகிக் கொண்டே செல்கின்றன. இவ்வாறு பெண்கள் சகல துறைகளிலும் தமது பெருமையையும் புகழையும் நிலை நாட்ட ஒரு முன்னோடியாக விளங்கியவர் பாரதியார் எனக் கூறினால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் வாழ்ந்த சமுதாய சூழலில் பெண்களுக்கு எதிராக செயற்பட்ட அடக்கு முறைகளையும், அடிமைத்தனங்களையும் வேரோடு அழிக்க வேண்டும் என்பதற்காக பல புரட்சிப் பாடல்களின் ஊடாக எடுத்துக் காட்டினார். உதாரணமாக புதுமைப் பெண்கள், பெண்கள் விடுதலைக் கும்மி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான பாரதியாரின் முயற்சியின் பயன் என்றே நாம் தற்காலத்தில் பெற்றுக் கொண்டுள்ள சுதந்திரத்தைக் கூறலாம்.

அடக்கு முறைகள், அடிமைத் தனங்கள் என்பவை நீங்கி பெண்கள் சுதந்திரமாகக் காணப்பட்டாலும் இன்று வரையும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஓயவில்லை என்றே கூறலாம். அதாவது பெண்கள் எவ்வளவு தான் உழைத்து முன்னேறினாலும் குடும்பத்திலும், சமுதாயத்திலும் அவளுக்கு மறைமுக இரண்டாம் பட்ச நிலைதான் கிடைக்கிறது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் உலகளவிலும் அதிகரித்த வண்ணமே இருக்கிறது. படிக்கின்ற, பணிபுரிகின்ற பெண்களில் ஐம்பது சதவீதமானவர்களுக்கு அத்துமீறல்கள் நடைபெறுகின்றன என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இன்று பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பல கோணங்களில் உருவாகி இருப்பதைக் காணலாம். குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை, பாலியல் தொல்லைகள், உடல், உளரீதியிலான துன்புறுத்தல்கள், உணர்வுத் துஷ்பிரயோகம் எனத் தொடர்ந்து விரிவாக நோக்கினால் சீதனப் பிரச்சினை, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்களின் பிரச்சினை, அகதி முகாம்களில் உள்ள பெண்களின் நிலமை, சிறைச்சாலையில் வாழும் பெண்களின் பிரச்சினை, விதவைகளின் நிலமை என அடுக்கிக் கொண்டே போகலாம்.

உலகில் நடாத்தப்பட்ட ஐம்பது ஆராய்ச்சிகளின் அடிப்படையில் மூன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் அவர்கள் உடல், உள, பாலியல் ரீதியான வன்முறைக்கு உள்ளாக்கப்படுவது தெரிய வந்துள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மிகமிக அடிப்படைக்காரணம் ஆண்கள் மீது பெண்கள் பொருளாதார ரீதியில் தங்கியிருத்தல, பெண்களின் பொருளாதார சுதந்திரத்திற்கு ஆண்களின் விரோதத்தன்மை, மற்றும் வாழ்நாள் முழுவதும் கடினமான வேலையில் ஈடுபட்டிருக்கும் இயந்திரமாகவே பெண்கள் கணிக்கப்படுவது என நாம் அடுக்கிக்கொண்டே செல்லலாம். இன்றும் நாளுக்கு நாள் பெண்கள் மீதான பிரச்சினைகள் அதிகரிக்கின்றனவே தவிர குறைந்த பாடில்லை. பாதையில் செல்லுவது தொடக்கம் பணிபுரியும் நிறுவனம் வரை பெண்கள் பாதிக்கப்படாமல் இல்லை என்றே நாம் கூறலாம். இவற்றிற்கு காரணம் பெண்கள் உரிமை, மரியாதை தொடர்பான தெளிவின்மை ஆண்கள் மத்தியில் நிலவுவதுடன் தமது அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் சகலவழிகளிலும் பிரயோகிக்க முற்படுவதால் தன்நிலை மறக்கும் நிலை ஏற்படுகிறது. பெண் சம்மந்தமான பக்கங்களிலும் இவர்களுக்கு ஒருமயக்க நிலை உள்ளது.

இவ்வாறு பெண்களின் உரிமை விடயத்தில் தேடல்கள் தொடர்கின்றன. அதே நேரம் மேற்கத்தேய நாகரீக மோகத்தில் விழுந்து அல்லற்படும் இன்றைய எமது பெண்களின் நிலமையை எடுத்துப் பார்த்தால் இன்றைய பெண்ணின வாதிகளின் உரிமையில் அளவுக்கு மீறிய யதார்த்தம் அற்ற தன்மையே மிகையாகக் காணப்படுகிறது. நாம் கண் கூடாக பார்க்கின்ற பல விடயங்களை எடுத்து நோக்கினால் மகளிர் உரிமை, சுதந்திரம் என்ற போர்வையை போர்த்திக் கொண்டு கட்டுப்பாடு, பண்பாட்டை இழந்து நாகரீகத்தின் விளைவால் பல விதமான அநாகரீக



International Women's Day



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரங்களுக்குப் பாதை அமைக்கப்படுகின்றது. ஆணும் பெண்ணும் வித்தியாசம் தெரியாத அளவுக்கு "ஒன்று கலந்த உரிமைகள்" வென்றெடுக்கப்படுகின்றன. பெண்ணும் பெண்ணும் சேர்ந்து வாழ ஒரு போராட்டம், விபச்சாரத்துக்கு சட்ட அங்கீகாரம் தேவை என இன்னுமொரு குரல், சில நாடுகளில் நினைத்த நேரத்தில் கற்பை ஏலம் விடுவதற்கு ஜனநாயக ரீதியிலான உரிமை என்ற பேரில் போராட்டம், மணம் முடித்தாலும் முடிக்கா விட்டாலும் சேர்ந்து வாழவும் பிரிந்து வாழவும் ஒரே சமயத்தில் பல கணவன்களுடன் சேர்வதும் மாற்றுவதுமான ஒரு புரட்சிகரம். மேலும் பொருளாதார (பணம்) கவர்ச்சி விளைவாக ஊடக விளம்பரத் துறையை எடுத்துக் கொண்டால் எந்த விளம்பரம் என்றாலும் பெண்ணில்லாத விளம்பரம் இல்லை எனலாம். ஒரு வாகன விளம்பரம் என்றாலும் கூட பெண்ணின் அங்க அசைவு, ஒட்டி உரசி கவர்ச்சிகரமான முறையில் இருந்தால் தான் வாகன விற்பனைக்கு ஓர் உத்வேகம் வருகிறது. ஆண்கள் சேற்றைக் கண்டால் மிதிப்பார்கள், தண்ணீரைக் கண்டால் கழுவி விடுவார்கள். ஆனால் பெண் பூஜிக்கப்பட வேண்டியவள். கையெடுத்து கும்பிடும் அளவிற்கு பெண் இருக்க வேண்டும்.

பெண் சார்பாக பல சாதகமான விடயங்கள் இருப்பதால் அவற்றை இவள் தான்தோன்றித்தனமாக பயன்படுத்திக் கொள்வதை மற்றும் செயற்பாடுகள், நடத்தைகள், சமூக விரோத செயல்களை, வன்முறைகளை தூண்டுவதாக அமையக் கூடாது. பெண் என்பவள் குடும்பத்தையும், சுற்றாடலையும் சீரழிக்கக் கூடிய ஒரு நாசகாரச் சக்தியாக இருக்கக் கூடாது. எல்லாவற்றிறகும் ஒரு சுயகட்டுப்பாட்டை அவளே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறாக பெண்களுக்கு எதிராக இடம் பெறும் வன்முறைகளைக் குறைப்பதற்கு நாட்டில் சட்டங்களை ஏற்படுத்துவதன் மூலமும், பெண்களும் ஆண்களும் பாராபட்சம் இன்றி ஒரே சமமாக மதிக்கப்படுவார்களாயின் இன்றைய புதுமைப் பெண்களின் வளர்ச்சி இன்னும் பல்வேறு துறைகளில் மிக உயர்ந்த வளர்ச்சியைப்பெற்றுக் கொள்ளும்.

**துஷ்யந்தி செல்வராசா**
2012 கலைப் பிரிவு

# Our Principal



Our principal is Mrs.U.Jothinathan. She is very smart. She is always kind and firm. She wears sari nicely. She spends most of the time in the school for the development of the school. She always think about the improvement of the students. She takes care of each child. She is the gift to us from the God. I love her very much and wish her well.

**Fathima Ajeefa Mohamed sitheek**
Grade 07^A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A National Festival

There are several National festivals in SriLanka. Among them the Sinhala and Hindu New Year is regarded as the most important national Festival.

The New Year festival is held in the month of April every year. The date is fixed by the astrologers. In most of the years it falls on the 13th of April. This is a festival of culture, social and national importance. All the activities connected with this festival are done according to auspicious times under traditional customs. There is an almanac in every house. All the auspicious times are mentioned in it.




Before this great day, people do so many things. They colour their houses and prepare sweet meats. They go shopping and buy new clothes in lucky colours. They buy gifts too.

First of all the hearth is lit at the auspicious time and the traditional milk rice is cooked. Then they partake the first meal of milk rice. After partaking the first meal, people engage in other activities. They wear new clothes and exchange money with others. The children offer sheafs of betel and worship their elders.

Anointing oil too is done at an auspicious time. This is usually done at the village temple. The first bath and setting out to work are also done at an auspicious time. New Year competitions are held on village level.

**People in all walks of life spend the New Year Joyfully.**

**Diluxsha Senapathy**

(Gr:- 8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய விளைவை ஏற்படுத்தும் ஓசோன் துவாரம்

இன்று உலக ரீதியாக ஏற்பட்டு வரும் பாரிய பிரச்சினைகளுள் ஓசோன் துளைப் பிரச்சினை முக்கியமானதாகும். இந்த ஓசோன் படையானது வளிமண்டலத்திலுள்ள படைமண்டலத்தில் காணப்படுகின்றது. வளிமண்டலமானது பூமியிலுள்ள உயிரினங்கள், தாவரங்கள் எல்லாவற்றையும் நேரடியான தாக்கம் மூலம் ஒரு குறுகிய காலப்பகுதிக்குள் அழித்துவிடக்கூடிய தீவிர புற ஊதா நிறக் கதிர்களையும், பிற கதிர் வீச்சுக்களையும் கொண்ட சூரிய ஒளியை வடிகட்டி உயிர் வாழ்வதற்கு ஏற்றதாக மாற்றி வழங்குவது இந்த வளிமண்டலம் தான்.




வளிமண்டலத்தில் காணப்படும் ஓசோன் மண்டலம் பூமியிலுள்ள உயிரினங்களை பாதுகாக்க இயற்கை தந்துள்ள பாதுகாப்பு கவசமாக விளங்குகின்றது. இந்த ஓசோன் மண்டலமானது உலகில் வாழும் உயிரினங்களுக்கு இருபெரும் நன்மைகளை புரிந்து வருகின்றது. ஒன்று பூமியில் வாழும் உயிரினங்களின் தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்ப சூரியனில் இருந்து பூமியை நோக்கி வரும் புற ஊதாக்கதிர்களை வடிகட்டிக்கொடுக்கின்றது. இரண்டாவது, சூரியனில் இருந்து பூமியை நோக்கி வரும் தொலைதூர சிவப்பு கதிர்களை ஈர்த்துப் பூமியின் வெப்பநிலையை ஒழுங்குபடுத்துகின்றது. மேற்படி இரு பணிகளின் காரணமாகத்தான் பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பூமிக்கு பாதுகாப்பாக இருக்கும் ஓசோன் படைக்கு தற்போது அழிவு ஏற்படத் தொடங்கியுள்ளது. ஓசோன் மண்டலத்தில் வடஅந்தாட்டிக்காப் பகுதிக்கு மேலாக துவாரம் ஏற்பட்டு விட்டதாக ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். ஆய்வுகளின் படி இத்துவாரம் ஏற்படுவதற்கு முக்கிய காரணி குளோரோ புளோரோ காபன் எனப்படும் இரசாயன பொருளே என்பது கண்டறியப்பட்டுள்ளது. உலகெங்கும் விரிவடைந்துள்ள தொழிற்சாலைகளின் விளைவே இதுவாகும்.

பூமியில் தொழிற்சாலைகள் உருவாக்கிய வாயுக்கள் புவிச்சூழலில் இருந்து விடுபட்டு வளிமண்டலத்தை சென்றடைகின்றது. மேலும் குளிர்சாதனப்பெட்டிகளில் இருந்து வெளியேறும் வாயுவும் ஓசோன் படையை தாக்குகின்றது. இந்த வாயு வளிமண்டலத்தில் நீண்ட காலம் தங்கி இருப்பதால் ஓசோன் படையின் இரசாயன அமைப்பு சிதைவடைகின்றது. இங்கு அவை புற ஊதாக்கதிர்களை உறிஞ்சி குளோரின் அணுக்களை வெளியிடுகின்றன. அவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்படும் ஒரு குளோரின் அணு ஆயிரக்கணக்கான ஓசோன் மூலக்கூறுகளை அழித்து விடும் சக்தி வாய்ந்தது. எனவே நம்மை இன்று தாக்கியுள்ள இந்த நிகழ்வானது இன்னும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தாட்டிக்காவில் மட்டுமன்றி தென்னாபிரிக்கா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து போன்ற இடங்களிலும் ஓசோன் துவாரம் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஓசோன் மண்டலத்தில் 10% அழிந்து விட்டது. இந்த நிலை இன்னும் தொடர்ந்தால் பூமியின் வெப்பநிலை மேலும் அதிகரித்து பூமியிலுள்ள உயிரினங்கள் அழிய நேரிடும். பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் சோலை நிலங்கள் பாலைநிலங்களாக மாறுவதுடன் முனைவுப்பகுதிகளிலுள்ள பனிக்கட்டி மலைகள் உருகத்தொடங்கும். இதனால் சமுத்திர நீர் மட்டம் உயரும். மாலைதீவுகள் முற்றாக நீரில் மறைந்து விடக்கூடிய நிலைமை தோன்றி விடும்.

ஓசோன் படை அழிவதால் மனிதர்களுக்கு தோல் புற்றுநோய், கண்வியாதிகள், நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடைதல் போன்ற விளைவுகள் ஏற்படும். இந்த ஓசோன் துவாரமானது உலகில் ஏற்படவுள்ள பாரிய இயற்கை அனர்த்தத்திற்கு அறிகுறியாக விளங்குகின்றது என கூறப்படுகின்றது.

ஓசோன் படையில் ஏற்பட்டிருக்கும் துவாரத்தை அடைப்பதற்கு வாய்ப்புண்டா? என விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். தற்போது வாயுக்களை திட்டமிடாத வகையில் உற்பத்தி செய்வதை மட்டுப்படுத்தும் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. உலகளாவிய ரீதியில் தற்போது வளிமண்டலம் மாசடைவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் மனித முயற்சியினால் ஓசோன் துவாரத்தை சீர் செய்ய முடியாது என ஒரு சாரார் நம்புகின்றனர்.

ஓசோன் துவாரம் முன்பே ஏற்பட்டிருக்கலாம். ஆனால் ஆரம்பத்தில் அது கண்டறியப்படவில்லை. அண்மையில் அந்தாட்டிக்காவிற்கு ஆய்வுகள் மேற்கொள்ள சென்றதால் இத்துவாரங்கள் பற்றி கண்டறியப்பட்டுள்ளது. இயற்கையின் ஒரு நிகழ்வான ஓசோன் துளைகள் வளிமண்டலத்தில் ஏற்படுவதை தடுக்கமுடியாதுள்ளது. மனிதன் விஞ்ஞானத்தில் முன்னேறி எத்தனையோ கண்டுபிடிப்புக்கள், பலவிதமான ஆராய்ச்சிகள், செயற்கரிய சாதனைகள் என்பவற்றைச் செய்தாலும் கூட இயற்கையின் பிடியில் இருந்து மனிதனால் தப்பவேமுடியாது. எனவே நாம் ஓசோன் துளை பிரச்சினையை முற்றுமுழுதாக தீர்க்க முடியாவிட்டாலும் இயன்றளவு இப்பிரச்சினையை குறைத்து எமது எதிர்கால சந்ததியினரை பாதுகாப்போம் என உறுதி கொள்வோம்.

**செல்வி. பிரசாந்தினி பரராசசேகரம்**
2013 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE USES OF A COCONUT TREE



*The coconut tree grows well in tropical countries. It grows well in coastal areas because salty soil is suitable for its growth. The trunk is so sturdy that it is used as rafters for houses. The leaves are woven and used to thatch roofs. The young leaves are used for decorations. The ekels of the leaves are used to make brooms. The tender coconuts are a delicious drink and it has medicinal value too. Ripe coconuts are used for cooking purposes. The shell of the coconut is used as pots, spoon and various ornanments. The coconut husks are used for making ropes, door, mats, &brooms. Since the coconut tree & its products are very useful to us, we can say it is one of the God's best creations.*

**Julien Emart Mary Elginiya**
Grade 07A

---

# Good Manners

As children we should learn good manners. It is said that manners maketh a man. When a person does a favour, we should say "thank you". We should never offend the minds of others. When we have hurt or offended some one, we must say "I'm sorry".

When we make a request, we should use word "please". When we want to borrow a ruler from our friend it is good to say, "Could you please lend me your ruler?" This is certainly a politeform of request. Courtesy does not cost us anything. On the other hand, it will go a long way in making people feel happy. Thus, a little word could bring immense pleasure to the person spoken to.

We should always respect our elders. We must be kind to blind people. We must help beggars and paupers. We must share our food with them. We must never speak ill of others in their absence at school. We must obey our teachers.

**Fathima Rasitha Bahar**
Grade - 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொடர்புகளில் எழுத்துக்களின் வளர்ச்சி

ஆரம்ப கால மனிதர் ஒருவருக்கொருவர் சைகைகளின் மூலமே செய்திகளை பரிமாறிக் கொண்டனர். இதனைப் புரிந்து கொள்ள பெரும் சிரமம் ஏற்பட்டதோடு கால தாமதமும் ஏற்பட்டது. சில தகவல்கள் தவறாகவும் புரிந்து கொள்ளப்பட்டது. நாட்கள் செல்லச் செல்ல ஒலியின் மூலம் செய்திகள் தெரிவிக்கப்பட்டன. அந்நிய நாட்டு படையெடுப்பின் போது அச்செய்தியை பொது மக்களுக்கும் படை வீரர்களுக்கும் தெரிவிக்க கொமபு எனும் ஊதுகுழல் பயன்படுத்தப்பட்டது. அக்காலகட்டத்தில் செய்திகள் படங்களாக வரையப்பட்டு பரிமாறப்பட்டன. இவை ஓவிய எழுத்துக்கள் எனப்பட்டன. ஒரு நாட்டிலிருந்து அடுத்த நாட்டு மன்னருக்கு செய்தி அனுப்ப ஓவியங்களாக செய்திகள் வரைந்து அனுப்பப்பட்டன. அதற்கமைய மூன்று நாட்களில் மன்னன் வருவதாக இருந்தால் மூன்று சூரியன்கள் வரையப்பட்டிருக்கும்.

அவ்வாறே குதிரை மீது ஒருவன் அமர்ந்திருப்பது போல தோற்றமளித்தால் குதிரையில் வருவதாகும். கடல் வழியாகவோ, ஆறு வழியாகவோ வருவதாக இருந்தால் படகில் ஒருவன் அமர்ந்திருப்பது போல தோற்றமளிக்கும். இவ்வாறே ஓவிய எழுத்துக்கள் மூலம் அக்காலத்தில் செய்திகள் அறியப்பட்டன.

பழங்கால இந்துக்களும் சமணர்களும் எழுத்துக்கள் பிரம்மாவினால் படைக்கப்பட்டன என்றே கருதினர். இதைப் பின்பற்றியே பிரம்ம தேவன் தன் கரங்களில் ஓலைச் சுவடியை வைத்திருப்பது போல உருவாக்கப்பட்டார். சீனநாட்டிலிருந்து இந்தியா வந்த யுவான் சுவாங் மற்றும் சீன நாட்டு புத்த பிக்குவான பாவான், ஃவ் ஆகியோர் தமது நூல்களில் இடது புறத்திலிருந்து வலது புறமாக எழுதப்படும் எழுத்துக்கள் பிரம்மாவினால் உருவாக்கப்பட்டது என்ற கருத்தை உறுதிப்படுத்தினர். இதுவே பிராமி எனும் லிபியாகக் (எழுத்தாக) கருதப்படுகின்றது. இந்த லிபியையே பழங்கால மன்னர்கள் தங்கள் கல்வெட்டுக்களில் பயன்படுத்தி வந்தனர். அதற்கமைய கி.பி 350 ஆண்டுக்கு முற்பட்ட காலத்தை அறிந்து கொள்ள பிராமி எழுத்துக்களே பெரிதும் உதவின. தற்போதும் அவை பிராமி எழுத்துக்கள் என்றவாறே அழைக்கப்படுகின்றன. வட மொழியில் எழுத பழங்காலந்தொட்டே பயன்படுத்தி வரும் லிபிய எழுத்தே கிரந்த எழுத்துக்கள் எனப்படும்.

கி.பி 7ம் நூற்றாண்டளவில் இருந்துதான் கிரந்த எழுத்துக்கள் கல்வெட்டில் கண்டறியப்பட்டன. வளைந்த கோடுகளை அதிகமாக பயன்படுத்தியதால் இவ்வகை எழுத்துக்கள் வட்டெழுத்து எனப்பட்டன. இவ்வகை வட்டெழுத்துக்கள் தெக்கன், மலையாளம், நானாமோ என்ற பெயரில் அழைக்கப்பட்டன.

தென்னாட்டு எழுத்துக்கள் பெரும்பாலும் இடது புறத்திலிருந்து வலது புறமாக ஒரே நேர்கோட்டில் எழுதப்படும். இவ்வாறு ஒரே கோட்டால் எழுதப்படும் எழுத்துக்களையே பிரதட்சணம் மற்றும் அபிரதட்சணம் என இரு முறைப்படுத்தினர்.

புராதன காலத்தில் பாறைகள், விலங்குத் தோல்கள், பனை ஓலை முதலியவற்றில் கூரிய எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டன. பிற்காலத்தில் கடதாசி போன்ற மெல்லிய பொருட்களில் எழுதுமளவிற்கும் வளர்ச்சி பெற்றது. தற்போதைய அதி நவீன வளர்ச்சி முறைக்கேற்ப எழுத்துக்கள் கணினி விசையை தட்டியவுடனே அச்சடிக்கும் முறை வரை வளர்ச்சி பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினி இப்போது அனைவராலும் அதிகளவில் பயன்படுத்தப்படும் சாதனமாகவும், அதன் மூலம் அச்சடிக்கும் முறையும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரபல்யமான முறையாகவும் வளர்ச்சி பெற்று வருகின்றது. கணினியை இலகுவாக உங்களால் இனங்காண முடியும் எனினும் நாம் தற்போது காணும் கணினி உருவாக்கப்பட நீண்டகாலம் சென்றுள்ளது, இதற்கென பலர்தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

கணினி கண்டுபிடிக்க அடிப்படையாக அமைந்தது எண்சட்டம் ஆகும். இதன் மூலமே பல்வேறு வகைப்பட்ட தொழில்நுட்பங்களை பிரயோகித்து வளர்ச்சி பெற்ற சாதனமாக கணினி உருவாக்கப்பட்டது. இதன் தந்தை சார்ளஸ் பபேஜ் ஆவார் கணினிகள் தனது வினைத்திறனைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றது. கூடியளவு வேகமும் கூடியளவான விடயங்களை தேக்கி வைக்கும் தன்மையுமான கணினியையே அனைவரும் விரும்புகிறார்கள்.

கணினி உள்ளீடு, முறைவழியாக்கம், வருவிளைவு, தேக்கல், கட்டுப்படுத்தல் பணிகளை மேற்கொள்கின்றது. இவற்றிற்கான உள்ளீடுகள் எண்செய்முறை மூலம் கணினிக்கு சமர்பிக்கப்படுகின்றது. ஏதேனுமோர் அளவு சார் பெறுமதியே எண் எனப்படும். எண்களை ஆக்க அடிப்படையாக அமைந்த கூறுகளே இலக்கம் எனப்படும். தனிநபர்களிடையே தோன்றிய வெவ்வேறு குறிகளின் பேறாகவே மனிதனால் பயன்படுத்தப்படும் எண்கள் உருவாகின. தரவுகளை இலக்கங்கள் அடிப்படியாகக் கொண்டே சேமிக்கப்படும் , கையாளப்படும்.

மின்னியல் உபகரணமான கணினிக்கு மின்வலு வழங்கப்பட்டால் மட்டும் தொழிற்படும். அதாவது இங்கு மின்னோட்டம் உண்டு/இல்லை என்பன கருத்தில் கொள்ளப்பட்டன. மின்னோட்டம் உண்டு எனின் 1 இல்லை எனின் 0ம் கொள்ளப்படும். இதன் அடிப்படையில் 2 இலக்கம் கொண்ட எண்முறைமை பெற்றுக்கொள்ளலாம். இவை இரும எண் எனப்படும். இவ்வாறே எண்மஎண் பதின்மஎண், பதினறுமஎண் என்பனவும் கணினி செயற்பாட்டில் பயன்படுத்தப்பட்டது.

தமிழ் மொழி, சிங்கள மொழி என்பன தட்டச்சு செய்வதற்குரிய வசதி பதினறும எண் பயன்பாட்டிலே வந்தது எனலாம்.காரணம் துவிதஎண் (இரும எண்) தரவுகள் அடக்கப்படும் போது அளவில் பெரியதாகவும் தொழிற்பாடு சிக்கலாகவும் மாறியதால் சேமிக்கப்படும் தரவுகளில் குழப்பம் ஏற்படும். இதனாலே பதினறும எண் பயன்பாட்டிற்கு வந்தது.

கணினியில் ஊட்டப்பட்ட தகவல்களை வெளிப்பெற கணினித் திரை மட்டுமே பயன்படுத்தப்பட்டது. காலப்போக்கில் வருவிளைவு பெற அச்சுப் பொறியும் விசேட இடம் வகித்தது. அச்சுப்பொறியிலிருந்து பெற்றுக் கொள்ளும் பிரதிகள் மென்பிரதிகள் எனப்படும்.

தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி அச்சுகையை இரு வழியாகப் பிரிப்பர். மோதுகை பயன்படுத்தி தக்க அழுத்த அச்சுப்பொறி, வேறுவித தொழிநுட்ப முறை பயன்படுத்தி அச்சிடும் அச்சுப்பொறி. மை நாடாவை பயன்படுத்தி அச்சிடும் அச்சுப்பொறி ஒரு குறித்த விதத்தில் தட்டுவதன் மூலம் அச்சீடு நடைபெறுகின்றது. தாக்கத்தைப் பயன்படுத்தி செயற்படும் பலவகை அச்சுப்பொறிகள் இருப்பதை காணலாம். டெய்சி சில்லு அச்சுப் பொறி, புள்ளி அமைவுறு அச்சுப்பொறி, வரிஅச்சுப்பொறி என்பன சிலவாகும். வேறுவகை தொழிநுட்பவியல் பயன்படுத்தி அழுத்த அச்சுப் பொறிகள் பல உருவாகி விட்டன. இவை சிற்சில வளர்ச்சிகளே இவற்றை விட கணினியுடன் கூடிய லேசர் தொழிநுட்பத்தின் வழிகாட்டிலான பல அச்சுப் பொறிகள் வளர்ந்து விட்டன. எழுத்துக்களில் தொடர்பாடல் வளர்ச்சியானது தற்போது செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தும் விதத்திலான பல்வேறு கணினிக்கான வழிகாட்டல்கள் கிடைத்துவிட்டன. ஆயினும் அவற்றை உருவாக்க தேவையான வளமும் திறமையும் மட்டு மட்டாகவே உள்ளன. எதிர்காலத்தில் இவை வளர்ச்சி பெறலாம் என நம்பப்படுகின்றது.

**செல்வி. எழிலினி அருள்நேசன்**
தரம் 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு தீபங்கள்

அந்த குளிரூட்டப்பட்ட அறையில் சுழலும் நாற்காலியில் அமர்ந்து தன் முன் இருந்த அந்த கணனியைக் இயக்கிக் கொணடிருந்தான் கார்த்திகன். எதிரே இருந்த அந்த கண்ணாடி கதவை நோக்குகின்றான். அங்கே ஒருவர் பின் ஒருவராக வரிசையில் முந்தியடித்துக்கொண்டு நிற்கும் கூட்டத்தை பார்க்கிறான். அக்கூட்டத்தில் இருந்து சற்று விலகி ஓர் ஒதுக்குப்புறமாக இருந்த ஓர் நாற்காலியில் அமைதியாக இருந்த உருவத்தை அவன் எதேர்ச்சையாக நோக்குகின்றான். ஆமாம் சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க பெண்ணுருவந்தான் அது.

***அன்பென்னும் மண்ணெடுத்து***<br>
***பொறுமையென்னும் உருவமைத்து***<br>
***தியாகமென்னும் உயிர்கொடுத்து***<br>
***மென்மையென்னும் ஒன்றையே***<br>
***பெண்மையாகப் படைத்தானோ?***

என ஏங்க வைக்கும் அந்தப் பெண்ணுருவம் யாருமல்ல அவனது மானசீகக் குரு அருந்ததி ஆசிரியை தான். தன்னை யாரென்று இனம் காணாமல் இருக்கின்றாரா? சற்று சிந்தித்தவனாய் தன் மேசை மீதிருந்த அழைப்பு மணியை அழுத்தவே சிற்றூழியன் ஒருவன் மின்னல் வேகத்தில் வந்து நிற்கின்றான். அந்த சிற்றூழியனைப் பார்த்து அங்கே அந்த மூலையில் இருக்கும் அந்த அம்மாவை முதலில் அனுப்பிவை எனக்கூறி அந்த திசையைப் பார்த்துக்கொண்டிருக்கிறான் கார்த்திகன். சற்று நேரத்துக்குள் அந்த அம்மா அதுதான் கார்த்திகனின் குரு அவன் எதிரே வந்து கூனிக் குருகி நிற்கிறாள். அதற்குள் கார்த்திகன் எழுந்து தனது ஆசிரியருக்கு மரியாதையை கொடுத்து பின்பு "ரீச்சர் எப்படி இருக்கிறிங்க" என்றான் உடனே அந்த அம்மணி முகத்தில் ஒரு ஆச்சரிய உணர்வு தோன்றவே ஒரு கணம் கார்த்திகனை உற்று நோக்குகிறார்.

"என்ன ரீச்சர் என்ன மதிக்கலயா?" எனக் கேட்டான் அவன், ஒரு கணம் கார்த்திகனின் முகத்தை உற்று நோக்கிய அம்மணி தனது கைப்பையில் இருந்த மூக்கு கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டு மீண்டும் தன் பார்வையைச் செலுத்துகிறார். அருந்ததி அம்மாவின் பதிலுக்காக காத்திருப்பவன் போல் இருக்கிறான். கார்த்திகன்

***ஏணியாக ஏற்றி வைத்தாய்***<br>
***உலகில் நான் உயர – மாலை***<br>
***போடக் காத்து நின்றாய்***<br>
***மாணவன் நான் ஜெயிக்க***<br>
***கோபுரம் நானாக – எனைத்***<br>
***தாங்கிடும் நிலமானாய்***<br>
***வெளிச்சத்தில் நான் வாழ***<br>
***உன் விழிகளில் தீபம் வைத்தாய்***

அவனது கடந்த கால வாழ்க்கைச் சக்கரத்தை மெதுவாக நகர்த்துகிறான் அன்று அவன் தரம் ஐந்தில் கல்வி கற்கும் ஒரு மாணவன் அவனது வகுப்பில் மொத்தம் நாற்பது மாணவர்கள் அதில் இருபது ஆண்களும் இருபது பெண்களும் இதில் போட்டி போட்டு படிப்பவர்கள் பத்து பேர் மட்டுமே அதில் கார்த்திகனும் ஒருவன் ஆனாலும் அவர்கள் அனைவரும் (கார்த்திகனை தவிர) பெரிய இடத்துப்பிள்ளைகள் எந்தக் குறையும் இன்றி வாழ்பவர்கள் பாடசாலை முடிந்ததும் தனியார் கல்வி நிலையத்திற்கு பணம் செலுத்தி படிக்க செல்பவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செல்வர்கள் இல்லத்தில்*
*சீராட்டும் பிள்ளைக்குப்*
*பொன் வண்ணக் கிண்ணத்தில் பாற்கஞ்சி*
*கண்ணீர் உப்பிட்டு*
*காவேரி நீர் இட்டு*
*கலயங்கள் ஆடாது சோறின்றி!*

ஆனால் கார்த்திகன் வறுமையின் பிடியில் சிக்கி தவிப்பவன். ஒரு வேளை உணவுக்காக ஏங்கும் நிலையில் உள்ள குடும்பப்பின்னணியில் வசிப்பவன் கால தேவனின் கோரப்பிடியில் சிக்கித் தன் தந்தையை இழந்தான். அவனது தாய் ரேவதியோ தனது மூன்று செல்வங்களையும் வளர்ப்பதற்காக போராடுபவள். குடும்பத்தின் மூத்த பிள்ளை கார்த்திகன் பத்து வயதை தாண்டாத அவனால் எதைத்தான் செய்ய முடியும். தினமும் தாய் படும் கஷ்டத்தைப் பார்த்து கலங்கிப்போவான.

*பூவிழியோரம் ஓர் துளி நீரும்*
*நீ வடித்தால் மனம் தாங்காது*
*பொன் முகம் கொஞ்சம் வாடி நின்றாலும்*
*நான் துடிப்பேன் வலி தாளாது*
*பத்து மாதம் சுமந்து பட்ட பாடும் அறிந்து*
*பிள்ளை செல்வம் சிறக்க*
*அள்ளிக் கையில் எடுத்தாய்.*

கார்த்திகன் தினமும் பாடசாலைக்கு பிந்தியே செல்வான். இதனால் தண்டனை பெறுவதும் இவனது கற்றலில் ஒரு அம்சமாக அவனுக்கு இருந்தது. அது மட்டுமா? சக மாணவர்களின் பரிகாசமும், பொறாமை கலந்த வார்த்தைப் பிரயோகங்களும் அவனை அரித்துக்கொண்டே இருந்தது. பாடசாலையில் மட்டுமே அவனது கற்றல் செயற்பாடுகள் இருந்தது. இருந்த போதிலும் பரீட்சை என்று வந்தால் கூடுதலான புள்ளிகளைப் பெறும் மீத்திறன் மாணவனாக கார்த்திகன் காணப்படுவான். தினமும் அவனது வகுப்பாசிரியை அருந்ததி கார்த்திகனைப் பாராட்டி உற்சாகப்படுத்துவார். "தம்பி கார்த்திகன் நீ கெட்டிக்காரன் ஒழுங்காகப் பாடசாலைக்கு வர வேணும். அதோட நேரத்திற்கு வர வேணும்." இது அவனது ஆசிரியை பாடும் பழைய பல்லவி தான். கார்த்திகனின் சக மாணவர்களில் ஒருவன் ஆசிரியரைப் பார்த்து "ரீச்சர்....ரீச்சர்கார்த்தி பின்னேரத்தில் எங்களோட ரியுசனுக்கு வாரது இல்ல" என்று கூறினான். அதற்கு அருந்ததி ஆசிரியர் "ஏன் கார்த்தி நீரும் ரியூசனுக்கு போகலாம் தானே" எனறார். கார்த்திகன் அதற்கு அந்த ஆசிரியை முன்னால் நின்ற கோலம்

**நனைந்த நயனமோ**
**நாணத்தால் சிவக்க**
**நாளை தன் நிலை**
**நாவால் இயம்பிட**
**நாதியற்ற நின் நிலையை**
**என்ன வென்பேன்.**

கார்த்திகனின நிலையுணர்ந்த அந்த ஆசிரியை அருந்ததி அவனுக்காக இரங்கினார். அவனைத் தன் வீட்டிற்குத் தினமும் வருமாறு கூறினார். ஆனால் கார்த்திகனோ தன் குடும்ப நிலையை எடுத்துக் கூறினான். ரீச்சர் "பாடசாலை விட்டுப் போனதும் அம்மா எனக்காக காத்திருப்பார். நானும் அம்மாவும் பக்கத்துக் காட்டிற்கு விறகு எடுக்கப் போக வேணும். பின்னேரம் ஐந்து மணிக்குத்தான் வீட்டிற்கு வருவோம். அதனை அளவாக வெட்டிக் கட்டிக் கொண்டு விடியவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா விறகு விற்கப் போவார், நான் பாடசாலைக்கு வருவேன். நான் போகாவிட்டால் அம்மா பாவம் தனியாவப் போவாங்க" என விழி கலங்க பேசி முடித்தான்.

அவன் கதையை கேட்ட அருந்ததி ஆசிரியைக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. "ஆ..... கடவுளே இந்த பிஞ்சு உள்ளத்தில் இத்தனை வேதனைகளா?" என ஏங்க வைத்தது. ஒருவாறு தன்னை சுதாகரித்துக் கொண்ட அந்த ஆசிரியை அருந்ததி கார்த்திகனைப் பார்த்து கார்த்தி நீ இரவில் என் வீட்டிற்கு வரலாம்தானே என வினவினாள். இரவிலா?......... ஆ என்று அரைகுறைச் சம்மதத்தை தெரிவித்தான். அவன் வதனம் அவனது அகத்தின் உண்மையை வெளிப்படுத்தியது. தன் தாய் ரேவதி தனிமையில் இருப்பாளே என்ற உணர்வுதான். இதனைப்புரிந்து கொண்ட அருந்ததி "உன் அம்மாவைப் பற்றி சிந்திக்கிறியா? பரவாயில்லை அம்மாவும் உன்னுடன் வரட்டுமே" என்றார். அவன் தன் பார்வையால் ஆசிரியை அருந்ததிக்கு நன்றி கூறினான்.

நாட்கள் நகர்ந்தன. கார்த்திகன் தினமும் இரவு 7.00மணிக்கு தன் தாயையும் அழைத்துக் கொண்டு அருந்ததி ஆசிரியை வீட்டிற்குச் சென்று கல்வி கற்பதில் தவறவில்லை. இதன் விளைவை அவனது புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு காட்டியது. நூற்றுத்தொண்ணூறு புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதல் நிலையில் இருந்தான். கார்த்திகனின் பெறுபேற்றையும் குடும்ப நிலையையும் ஆசிரியை அருந்ததி அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். அதிபர் உதவி புரியும் நிறுவனங்களின் மூலம் கார்த்திகனின் படிப்பிற்கு உதவி புரியுமாறு வேண்டியதன் பேரில் கார்த்திகனின் படிப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

கார்த்திகன் நகரப் பாடசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டான். கால தேவன் கை கொடுக்க கார்த்திகன் கற்றலில் சிறந்த விளங்கியதன் பயனாக இன்று அவனது நிலை இப்படி மாறும் என்று அவன் கனவில் கூட காண மாட்டாதவனாய் இருந்தான். அருந்ததி அம்மாவின் குரல் அவனை மீண்டும் சுய நினைவிற்கு கொண்டு வந்தது. நீங்க யார் தம்பி? எனக்கு உங்களைத் தெரியாது என்றாள்.

நீங்கள் அருந்ததி ரீச்சர் தானே எனக் கேட்டான் கார்த்திகன் ஆமாம் நீங்க..... யாரு......... என்னை எப்படித் தெரியும்? என வினாக்களை எழுப்பினார் அந்த ஆசிரியை அதற்கு நான் தான் ரீச்சர் கார்த்திகன் ஐந்தாம் ஆண்டில் உங்களின் வீட்டில் வைச்சு என்னைப் படிப்பிச்ச நீங்க மறந்துட்டிங்க போல? எனக் கேட்டான் அடடே..... நம்ம கார்த்தியா? இவ்வளவு பெரியாளாயிட்டாப்பா நீ அது சரி உன் அம்மா எங்க? எனக் கேட்டார் அருந்ததி ரீச்சர் அதையேன் கேட்கிறீங்க ரீச்சர் என்ட வாழ்க்கையில துன்பத்தில பங்கெடுத்த என்ற அம்மா இன்பத்தில் பங்கு சேர்க்க முடியாமல் போச்சு காலதேவன் பிரிச்சிட்டான் எனக்கூறி கார்த்திகனின் கண்களிலிருந்து விழுந்த கண்ணீர்துளிகள் விழுந்த கண்ணீர்துளிகள் மேசைமீதிருந்த காகிததாள்களை நனைத்தன.

நீ அழாதப்பா என்ன செய்வது உன் அம்மா உன்னை உயர்த்தி விட்டு தன்னுடலைக் கொண்டு மறைந்திட்டா ஆனாலும் உன் உயிரில் எப்போதும் உன் அம்மா வாழ்த்திட்டே இருப்பா உன் உள்ளத்தில வைச்சு அந்த தெய்வத்தை நீ பூசித்துவாப்பா என ஆறுதல் கூறினார் அருந்ததி ரீச்சர் அதற்கு கார்த்தி என் அம்மா மட்டுமல்ல ரீச்சர் என்னுள்ளத்தில் இரண்டு தீபங்கள் எரிகின்றன. ஒன்று அம்மா மற்றது என் உயர்வுக்கு வழிகாட்டிய அந்த ஆசான் அருந்ததி என்ற அறிவுச்சுடர் எனக்கூறி அந்த ஆசிரியையின் கரத்தைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

**எதற்கும் ஒரு காலமுண்டு**
**பொறுத்திருமகனே!**
**இன்பத்திலும் துன்பத்திலும்**
**சிரித்திரு மகனே!**

**சப்தபாலினி குணகுலதாஸ்**
2013 கலைப்பிரிவு

# அம்மா நீ போகாதே!

அம்மா நீ வெளிநாடு போகாதே!
அற்புதமாய் வாழாமல் சாகாதே
சும்மாவும் ஜோர்தானுக்கு போகாதே
சுத்தமாய் எனக்கு பிடிக்காதே,



பாலோடு பழம் கேட்டு அழவில்லை நாமிங்கு
ஊரோடு தம்மை படிக்கவைத்துப் பார் இங்கு
தோளோடு தோளாக நின்றாலே
தொல்லைகள் எமைத் தொடராதே,

அன்பற்றவன் பிள்ளை ஆவோம் நாம்
அம்மா நீ இருந்தும் அநாதை ஆவதோ!
கண் இருந்தும் குருடராய் ஆக்காதே நீ – நம்
மண் விட்டுப் போய் எம்மை மண்ணாக்காதே!

**டிலுஷா யோகநாதன்**
தரம் - 5

---

# Health – Very Very Important Tips


Answer the phone by **LEFT** ear.
Do not drink coffee **TWICE** a day.
Do not take pills with **COOL** water.
Do not have **HUGE** meals after 5pm.
Reduce the amount of **OILY** food you you consume.
Drink more **WATER** in the morning, less at night.
Keep your distance from hand phone **CHARGES**.
Do not use headphones/earphone for **LONG** period of time.
Best sleeping time is from **10pm** at night to **6am** in the morning.
Do not lie down immediately after taking **Medicine** before sleeping.
When battery is down to the **LAST** grid/bar,
do not answer the phone as the radiation is 1000 times.
Forward this to those whom you **CARE** about.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Graph for Grade 5 Scholarship





# Graph for G.C.E. (O/L)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Graph for G.C.E. (A/L)




# பொன் மொழிகள்



- நல்லதை எண்ணுவது அரிது, எண்ணியதை முடிப்பதே முயற்சி
- அதிகம் பேசுபவர்கள் அதிகம் சிந்திக்க மாட்டார்கள்
- அமைதியே அறிவின் அடிப்படை
- பொறுமை காத்தாயானால் எதிலும் வெற்றிக்கொள்வாய்
- செயலுக்கு துணிந்தால் புயலும் பின்வாங்கும்
- முயற்சி இல்லாத மனிதன் முச்சு இல்லாத மனிதனை போன்றவன்
- பணிவு என்பது தாழ்மையின் சின்னம் அல்ல, உயர்ந்த பண்பின் அறிகுறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்



எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவை முன்னிட்டு பல்வேறு சுவையான அம்சங்களுடன் மலரும் இம்மலரின் வெளியீட்டுடன் இணைந்து விட்ட அனைவரையும் நன்றி பாராட்டும் வேளை இதுவாகும். ஆசியுரைகளைத் வழங்கிய மதத்தலைவர்களுக்கும் வாழ்த்துச் செய்திகளைத் தந்துதவிய கல்விப்புல அதிகாரிகளுக்கும் ஏனைய அறிவாளர்களுக்கும் மேலும் பல ஆக்கங்களைத் தந்துதவிய ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் மனங்கனிந்த நன்றிகள். விருதுகளைப்பெற்ற மாணவர்களுக்கென புத்தகங்களையும், பதக்கங்களையும், வெற்றிக்கேடயங்களையும் தாமாகவே முன்வந்து தந்துதவிய அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகள். விளம்பர அனுசரணை வழங்கிய வங்கிகளுக்கும், விளம்பரதாரர்களுக்கும் நன்றிகள். மேலாக நிதியுதவி வழங்கி மலர் மலர பக்கபலமாக துணைநின்ற பெற்றோர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். மலர் மணங் கமழ அயராது உழைத்த பாடசாலை அபிவிருத்தி செயற்குழுவினருக்கும், பழைய மாணவர் சங்கத்தினருக்கும் பெற்றோர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும், கல்வி சாரா ஊழியர்களுக்கும், அட்டைப்பட வடிவமைப்பாளர்களுக்கும் அழகாய் அச்சேற்றிய அச்சுக்கூடத்தார்களுக்கும் ரம்மியமான புகைப்பட வசதிகளைச் செய்து தந்த புகைப்பட கலைஞர்களுக்கும், எல்லா வேளைகளிலும் எல்லா வகையிலும் ஒத்துழைப்புக்களை வழங்கிய அனைவருக்கும் மனமுவந்து நன்றிகளை நவில்கின்றோம்.

***அதிபர்,***

***ஆசிரியர்கள்,***

***மாணவர்கள்***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Abishaath

# Two Decades of Inspiring & Unique Professional Skin & Hair Care Service



## Services Available

Bridal Dressing - Hindu, Catholic, Buddhist [Udarata & Pahatharata] and Musli Facial, Manicure, Pedicure, Waxing and Floral & Artificial Bouquets

## Eyebrows Shaping- Facials:

Cleaning up & Deep Cleansing
Acne Treatment
AHA Treatment for Pigmentation and Freckles
Whitening Treatment
Skin Glow Treatment
Anti– Tan Facial
Anti Wrinkle [ Agening ] Treatment (Rejuvenation)
ace lifting & Tightening
nti Fungal Treatment
alvanic and High frequency Treatment

## )ther Treatments:

Under Eye Dark Circle Treatment
Black Neck Treatment

## reatment for all kind of Hair related Problems:-

air Coloring, Perming, Straightening
air Styling & Hair-Cuts [ Fashions ]

ll kinds of Make-ups
ommercial Make-ups
hotographic Make-ups

Clients' Satisfaction is our Utmost Satisfaction

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org